# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 224 ஆனி 24ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 08 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## களத்தில் குதிக்கிறார் சட்டம் ஒழுங்கு அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத் >> 53

# தமிழுரைக் காக்கும் தெய்வமே எங்கள் பிள்ளைகளை மீட்டுத்தா

நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் உறவுகள் கதறல்



>> 49

## தமிழ் அரசுக்கு முதல் ரெலோவின் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூலை 8
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் 31, செப்ரெம்பர் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந் >> 53

## களவாக மாடு வெட்டியோர் விபத்தால் வசமாகச் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 8
ஊர்காவற்துறைப்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் களவாகமாடுவெட்டி இறைச்சியாக்கியோர், பொலிஸாரிடமிருந்து தப்பித்துச் செல்லும்போது விபத்தில் மாட்டினர். காய >> 06

## முள்ளியவளையில் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 8
முள்ளியவளைப் பகுதியில்74வயதுடையவயோதிப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட் >> 53

## தெப்பம் கவிழ்ந்து கடற்றொழிலாளி நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவில் சம்பவம் >> 06

## வடக்கு மாகாணத்துக்கு 15 தங்க விருதுகள்

முதலமைச்சரின் ஊடகப் பிரிவு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்குமாகாணத்தில்உள்ள 15 நிறுவனங்களுக்கு தங்க விருதுகள் கிடைக்கவுள்ளன. அந்தத் திணைக்களங்களின் செயலாற்றுகைகளின் அடிப்படையில் அரச கணக்குகள் குழு >> 53

# வான் பயணத்துக்கு மட்டும் விக்கி ரூ. 22 லட்சம் செலவு

4 ஆண்டுகளில் 48 பயணங்கள்

வேறெந்த முதல்வருக்கும் இல்லாத சலுகை

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தன்னுடைய தனிப்பட்ட உதவியாளரையும் அழைத்துக் கொண்டு கொழும்புக்குச் சென்றுவர கடந்த 4 ஆண்டுகளில் 22 லட்சம் ரூபாவை வான் பயணங்களுக்காக மட்டும் செலவிட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் வானூர்திச் சேவையை வழங்கும் ஹெலிருவர்ஸ் நிறுவனம் கொழும்பு சென்று யாழ்ப்பாணம் திரும்புவதற்கு தற்போது 29 ஆயிரம் ரூபாவை இருவழிக் கட்டணமாக அறவிடுகின்றது. >> 53

## டெனீஸ்வரன் வழக்கில் விக்கி மேன்முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடக்கு மாகாண அமைச்சரவை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை நிறுத்தவேண்டும் என்று உயர் நீதி மன்றத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சின்னத்துரை சுந்தரலிங்கம் பாலேந்திரா சட்ட நிறுவனத்தின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வடக்கு மாகாண >> 52

## ஆவணங்களை தொலைத்தோருக்கு நடமாடும் சேவை பூநகரியில்

கிளிநொச்சி, ஜூலை 8
இறுதிப்போரில் இழந்த அரச ஆவணங்களைப் பெற்றுக் கொள்வ >> 53

டிசெம்பரில் மாகாணசபைத் தேர்தல்

## கட்சித் தலைவர்களை பேச்சுக்கு தலைமை அமைச்சர் அழைப்பு

கொழும்பு, ஜூலை 8
டிசெம்பர் மாதத்தின் இறுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்க, கட்சித்தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி இறுதி முடிவொன்றை எடுக்குமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களுடன் தலைமை அமைச்சர் நேற்றுமுன்தினம் நடத்திய சிறப்புக் கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு ஆலோ >> 53

## விஜயகலாவின் எம்.பி. பதவியும் பறிபோகலாம்?

கொழும்பு, ஜூலை 8
சர்ச்சைக்குரிய கருத்தால் இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய விஜயகலா மகேஸ்வரனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் கேள்விக்குறியாகியுள்ளதாக அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறிய >> 53

வவுனியாவில்

## சிலையை சேதமாக்கியோர் நேற்றுக் கைது

வவுனியா, ஜூலை 8
வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆறுமுக >> 53

## நல்லாட்சி அரசு மக்களுக்கு நன்றாகச் செயற்படுகிறதாம்

பதவிபறிக்கப்பட்ட விஜயகலா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 8
மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நாம் கொண்டுவந்த நல்லாட்சி அரசு எமக்குச் சார்பாகச் செயற்பட்டு வருகின்றது. மக்களுக்குத் தேவையான பல நல்ல >> 53

## கட்டுவனில் வாள்வெட்டுக் குழு அட்டகாசம் மக்களின் முறைப்பாட்டால் மூவர் கைது

>> 53


SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புக்களுக்கு,
13 மாதங்களுக்கு
13.00%
வ.தே.வ. 12.93%
05 வருடங்கள்
14.00%
வ.தே.வ. 11.20%
06 மாதங்கள்
11.00%
வ.தே.வ. 11.30%
அழையுங்கள்: 0115 411 411
கவர்ச்சிகரமான வட்டி
SDB வங்கி

# வடக்கை முன்னேற்ற அரசு தயார்

## அமைச்சர் தயா கமகே யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 8

**வடக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம். ஏனைய மாகாணங்களைவிட இங்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கின்றது. முதியவர்களுக்கான மாதாந்த உதவிப் பணம் தற்போது 75 வயதை கடந்தவர்களுக்கே வழங்கப்படுகின்றது. அந்த வயதெல்லையை 70 வயதாக மாற்றுவதற்கு ஆலோசித்துள்ளோம். மாற்றுத் திறனாளிகளுக்கும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.**

இவ்வாறு சமூகநலன்புரிமற்றும்ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் சமூகநலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மாங்கன்றுகள், பெரிய வெங்காய விதை வழங்கும் நிகழ்வு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்டவிவசாயப்பயிற்சிநிலையத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது:

எமது அரசு பொறுப்பேற்றதும் மகிந்த ராஜபக்சவால் உருவாக்கப்பட்ட கடன்களை அடைப்பதில் சில காலம் கழிந்துள்ளது.

இதனால்இனிமேல்தான் இங்குஉள்ள வளங்களை பயன்படுத்தி தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். இங்கே விவசாயச் சங்கத் தலைவர்கள்தெரிவித்தமைக்குஅமைவாக உருளைக்கிழங்கு உற்பத்திக்கு விதை கிழங்கை மானிய விலையில் வழங்கநடவடிக்கைஎடுப்போம்.நாற்று மேடைப் பயிர்களை நாமே கொள்வனவு செய்யத்தயாராக உள்ளோம்.

ஏனைய தொழில் முயற்சிகளுக்கும் உங்கள் பிரதிநிதிகள் நல்ல ஒரு திட்டத்தையும், செயற்படுத்துவதற்கான குழுவையும் ஏற்படுத்தினால் அந்ததொழிற்சாலை நிறுவுதல் மற்றும் ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளை எடுப்போம் - என்றார்.

அமைச்சால்வடக்குமாகாணத்தில்ஒரு பயனாளிக்கு 25 மா மரக்கன்றுகள் வீதம் 820 விவசாய குடும்பங்களுக்கு 20ஆயிரத்து 500 கன்றுகளும், ஆயிரத்து 100 கிலோ கிராம் பெரிய வெங்காய விதைகளும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின்ஒருபகுதியாகநேற்று நடைபெற்றநிகழ்வில்50 மாமரக்கன்றுகள் , 900 கிலோ பெரிய வெங்காய விதைகள் வழங்கப்பட்டன. விவசாய நடைமுறைகளைப் பின்பற்றிய விவசாயிகளுக்குச் சான்றிதகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாணமாவட்டச்செயலர் நா.வேதநாயகன், மாகாண விவசாய அமைச்சர் கெ.சிவநேசன், நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உள்பட அரச அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்வடக்குமாகாணத்துக்கான மாற்றுவலுவுள்ளோர் தொழில் பயிற்சி நிலையத்தையும் சமூக நலன்புரி அமைச்சர் தயாகமகே நேரில் சென்று பார்வையிட்டார்.

பிற்பகல்பூநகரிகடற்றொழிலாளர்சங்க சமாசக்கட்டடத்தில்நடைபெற்றகூட்டத்திலும் அமைச்சர் கலந்துகொண்டார். பூநகரிகடற்றொழிலாளர்கள்மேற்கொண்டு வரும்கடல்அட்டைவளர்ப்புதொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடினார்.

கடல் அட்டை வளர்ப்பாளர்களுக்கு உதவிதிட்டங்கள்வழங்கப்படும் என்று அமைச்சர்தெரிவித்தார். கலந்துரையாடலில்கிளிநொச்சிமாவட்டமேலதிகஅரச அதிபர்எஸ். சத்தியசீலன் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (ரி4,7,35,214,6)

---

## குளவி கொட்டியதில் பத்தனைவாசி சாவு

நுவரெலியா,ஜூலை 8

திம்புள்ள பத்தனை தோட்டத்தில் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலை மலை அடிவாரத்தில் இருந்த குளவிக்கூடு கலைந்து குளவிகள் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கின. அங்கு மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த நபரை குளவிகள் மொய்த்துக்கொட்டியதில் அவர் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்காகிய நபர் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டார். எனினும்சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார். (ரி4)

---

## மதங்களை மதித்தாலே நல்லிணக்கம் வந்துவிடும்

### யாழ். மாவட்ட செயலர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஜூலை 8

தனது மதத்தை மதிப்பவரே ஏனைய மதங்களையும் மதிக்க முடியும். அதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறுயாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடனான நல்லிணக்க நிகழ்வு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் முஸ்லிம் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே மாவட்ட செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது;

நாம் அனைவரும் ஏனைய மதங்களை மதிக்க வேண்டும். அனைத்து மதங்களும் அன்பையும், உண்மையையும்தான்போதிக்கின்றன. தனதுமதத்தை மதிப்பவராலேயே ஏனையை மதங்களையும் மதிக்க முடியும். நல்லிணக்கம் பேச்சால் வரப்போவதில்லை. இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஏற்படவேண்டும். அப்போதுதான் நல்லிணக்கம் ஏற்படும். ஒருவர் தவறாக நடந்தால் அவர் பின்பற்றும் ஒட்டுமொத்த மதத்தையும் குற்றம் கூறக் கூடாது - என்றார்.

நிகழ்வில் அனைத்து மதங்களையும் பிரதிபலிக்கும் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-7)

---

## மாதிரி கிராமத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு



வவுனியா,ஜூலை 8

வவுனியாமாவட்டத்தின்37ஆவதுமாதிரிக்கிராமத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு தரணிக்குளம் புதியநகரில் நேற்று நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரிக்கிராமத் திட்டத்துக்கு அமைவாக இந்த வருடத்தில் 100 கிராமங்களை உருவாக்கும்செயற்றிட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது. தரணிக்குளம் அம்மன் ஆலயத்தில் சிறப்புப்பூசைவழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ராகுல் தலைமையில் நடைபெற்றநிகழ்வில்மீள்குடியேற்றஅமைச்சின்வவுனியா மாவட்ட இணைப்பாளர் வி.சிவலிங்கம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசபைத் தலைவர் து.நடராஜசிங்கம், பிரதேச சபை உறுப்பினர்களான மங்களநாதன், விஸ்வநாதன், வீடமைப்பு அதிகார சபையின் உதவிமுகாமையாளர் சந்திரசேகரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராமசேவகர் அஞ்சலிதாஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்யோர்ச் ஆகியோர் கலந்துகொண்டனர். கிராமத்தில் 17 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான பயனாளிகள் பிரதேச செயலகத்தினூடாக ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ரி4,110)

---

## 12 கல்வி வலய மாணவருக்கு மாகாண நிலைப் போட்டிகள்

சாவகச்சேரி,ஜூலை 8

வடமாகாணக் கல்விச் சமூகத்தால் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மாகாண நிலை சித்திரம், வினாடிவினா, விரைவுகணிதம்ஆகியபோட்டிகள்நேற்றுநடத்தப்பட்டன. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போட்டிகளில் 12 கல்வி வலயங்களைச்சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

பாடசாலை நிலை, கோட்டநிலை ஆகியவற்றில் வெற்றி பெற்று வலய நிலைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி,கிளிநொச்சி,முல்லைத்தீவு,மன்னார்,மடு,வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கலந்துகொண்ட போட்டிகளில் உதவிக் கல்விப்பணிப் பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும்சான்றிதழ்களும்எதிர்வரும்ஒக்ரோபர்மாதம்வழங்கப்படும் என்று மாகாண ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சண்முகரசா தெரிவித்தார். (ரி4.9)



---

## வவுனியாவில் இரும்புப் பெட்டகம் மீட்பு

வவுனியா,ஜூலை 8

வவுனியா மரக்காரம்பளையில் இரும்புப் பெட்டகம் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

தனியார் காணி ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் நிலத்தைத்தோண்டிஅதிலிருந்து இரும்புப்பெட்டகம்ஒன்றை எடுக்க முயற்சித்தனர். அயலவரின் நடமாட்டத்தைஅவதானித்ததும்அங்கிருந்து தப்பிச்சென்றனர்.



அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கியதகவலையடுத்துஇரும்புப்பெட்டகமும் அதனைத் தூக்கிச் செல்லப் பயன்படும்சட்டகமும்பொலிஸாரால் மீட்கப்பட்டன.

நீதிமன்ற உத்தரவின் பின்னரே இரும்புப் பெட்டகம் திறக்கப்படும் என்றும் விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்றும் வவுனியாப் பொலிஸார்தெரிவித்தனர். (ரி4,110)

---

## வர்த்தக நிலையத்தில் திடீர்த் தீ

கொழும்பு,ஜூலை 8

கொழும்பு புறக்கோட்டையில் உள்ள் வர்த்தக நிலையம் ஒன்றில் திடீரெனத் தீப்பரவியது. நேற்று இடம்பெற்ற இந்த விபத்தால் துணிக்கடை மற்றும் அதற்கு அருகில் இருந்த பெண்களுக்கான கைப்பைக் கடை என்பன தீயால் கருகின. 6 தீயணைப்பு பிரிவு வாகனங்களைப் பயன்படுத்தி தீ கட்டுப்படுக்குள் கொண்டு வரப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. மின்ஒழுக்குக் காரணமாகவே தீ ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ரி4)

# மைத்திரி தலைமையில் கூட்டுறவுத் தின நிகழ்வு

## மட்டு. வெபர் மைதானத்தில்



மட்டக்களப்பு,ஜூலை 8
96ஆவது பன்னாட்டுக் கூட்டுறவு தினம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது.
பன்னாட்டுக் கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவால் மட்டக்களப்பிலுள்ள இரண்டு இடங்களில் சிறப்பு பூசை வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.
இந்தப் பூசை வழிபாடுகள் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு ஸ்ரீமாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றன.
அத்துடன் மட்டக்களப்பிலுள்ள மங்களராமய விகாரையில் சிறப்புப் பூசை வழிபாடு இடம்பெற்றது.
இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கூட்டுறவுத் திணைக்களங்களின் அதிகாரிகள், ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.
கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு தின நிகழ்வில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அலிசாஹீர் மௌலானா, ஏ.எல.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி4)



## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது

கிளிநொச்சி,ஜூலை 8
கிளிநொச்சி கல்லாறில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபர்நேற்றுமுன்தினம்கைதுசெய்யப்பட்டார்என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் மற்றும் முறை தவறல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர். சிறீவர்த்தனவின் வழிகாட்டலின் கீழ் உப பொலிஸ்பரிசோதகர் சதுரங்க தலைமையில் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கானபொலிஸ்குழுஒன்றுஅண்மையில் அமைக்கப்பட்டது.
அந்தக் குழுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.
45 லீற்றர் கசிப்பு, 565 லீற்றர் கோடா, கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.
கிளிநொச்சி நீதிமன்றில் ஏற்கனவே சந்தேகநபர் மீது இதேபோன்ற வழக்கு இருக்கின்றமை விசாரணைகளின் போதுதெரியவந்துள்ளது. சந்தேகநபரைநீதிமன்றில்முற்படுத்துவதற்கானநடவடிக்கைகளைக்கிளிநொச்சிமாவட்டப் போதை ப்பொருள் மற்றும் முறைதவறல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (ரி4.6)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஜூலை 8
ஒரு தொகை கேரளக் கஞ்சாவுடன் பேலியகொடவில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
களனி குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
களனியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.
இவரிடமிருந்து 8 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.
சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)



தொண்டைமானாறு அச்சுவேலி ஆற்றோரத்தில் நேற்றுத் திடீரென முதலை தென்பட்டதால் பரபரப்புஏற்பட்டது. அங்குநின்றபொதுமக்களால் அந்த முதலை பிடிக்கப்பட்டு அங்கிருந்த நீர்நிலையில் விடப்பட்டது. (ரி4,26)

## மாற்றுத்திறனாளிகளோடு ஒரு நடைபயணம் இன்று

யாழ்ப்பாணம்,ஜீலை.8
தமிழ் மாற்றுத்திறனாளிகளால் முன்னெடுக்கப்படும் "ஒருநடை மாற்றுத்திறனாளிகளோடு" என்னும் நடைபயணம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, லண்டன் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.
தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழாவைமுன்னிட்டுஇந்தநடைபயணம்முன்னெடுக்கப்படவுள்ளது.
நடைபயணம் யாழ்ப்பாணத்தில் யாழ். மையப் பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி துரையப்பா மைதானம் வரை செல்லவுள்ளது.
மட்டக்களப்பில் போதனா மருத்துவமனை; கல்லடிப்பாலம், தொடருந்துநிலையம், தாண்டவன்வெளி, தேவாலயம் ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமாகி காந்தி பூங்கா வரையும் செல்லவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி4,113)



## சுத்தமும் பசுமையும் துப்புரவு வவுனியாவில்நேற்றுத்தொடக்கம்

வவுனியா,ஜூலை 8
வவுனியா நகர சபையின் "சுத்தமும் பசுமையும்" துப்புரவு வார ஆரம்ப நிகழ்வு கூசைபிள்ளையார் குளத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.
இதுதொடர்பாகநகரசபையால்விடுக்கப்பட்டுள்ளஅறிக்கையில் உள்ளதாவது;
நகர சபைக்குட்பட்ட பகுதியைச் சுத்தமாகவும் பசுமை நிறைந்தாகவும் வைத்துக்கொள்ள வேண்டியது மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.
இன, மத , மொழி, சாதி, பிரதேச, அரசியல் வட்டங்களுக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டி இருக்கிறது.
நமது நகர சபைப் பகுதிகளைச் சுத்தமாகப் பேணுவதோடு இலங்கையில் ஒரு முன்னுதாரணமான பிரதேசமாக வவுனியாவை மாற்ற வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு. அனைவரையும் இந்தப் பணியில் இணையுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.
தொடக்க நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன், உப தவிசாளர் வே.குமாரசாமி, நகரசபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன், றசூல்லரிப், பாலபிரசன்னா, ரி.கே.ராஜலிங்கம், அப்துல்பாரிமற்றும்பிரதேசசெயலாளர் கா.உதயராயா பொலிஸ் பொறுப்பதிகாரி மகிந்த வில்வஆராட்சிசமூக மட்ட அமைப்புகள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். சுமார் ஆறு வாரங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு நகரசபைக்குட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும்ஒவ்வொருகிழமையும்நடைபெறவுள்ளதுஎனத் தெரிவிக்கப்பட்டது. (ரி4,110)

## காணாமற்போன மீனவர்களை மீட்டுத் தரக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை 8
மீன்பிடிப்பதற்காக ஆழ் கடலுக்குச் சென்று காணாமல் போன 7 மீனவர்களையும் படகு ஒன்றையும் மீட்டுத் தரக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதனால் ஹிக்கடுவை காலி வீதியில் போக்குவரத்தில் நெரிசல் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த மாதம் 4 ஆம் திகதி காலி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிப்பதற்காகக் கடலுக்கு சென்ற மீனவர்கள் 7 பேர் காணாமற் போயிருந்தனர்.
அது தொடர்பில் மீட்டியாகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.
இது தொடர்பில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி4)

## கல்விக்கானஒத்துழைப்பை முழுமையாகவழங்குவேன்

### இம்ரான் மகரூப் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 8
தமிழ் பேசும் மக்களின் கல்வி அபிவிருத்திக்கு அரச அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.
கல்வி அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இம்ரான் மகரூப் நேற்று பொறுப்பேற்றார்.
அதன்பின்ஊடகங்களுக்குகருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். அவர்தெரிவித்ததாவது;
கடந்தசிலவருடங்களாகவெளியாகிய பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து நோக்கினால் சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
இந்த நிலையைப் போக்கப் பாடசாலைச் செயற்பாடுகள் முறையாகக் கண்காணிக்கப்படவேண்டும். பாடசாலைகளில் கணிப்பீட்டு முறை சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இதைச் சரியாகச் செய்தாலே சித்தியடையும் வீதத்தை அதிகரிக்கலாம்.
தமிழ் பேசும் மக்களின் கல்வி நிலையை விருத்தி செய்ய அமைச்சால் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களை சுதந்திரமாக முன்னெடுத்துச்செல்ல அதிகாரிகளுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்படும்.
ஆனாலும் இதை பயன்படுத்தி வியாபாரம்செய்யநினைக்கும்அரசியல்வாதிகள், அதிகாரிகளுக்கு இனிமேலும் இடமளிக்க முடியாது - என்றார். (ரி4)

## விளையாட்டு நிகழ்வு



அளவெட்டி, ஜூலை 8
யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் முன்பள்ளி மாணவர்களின் மகிழ்வூட்டும் விளையாட்டு நிகழ்வு முன்பள்ளி மைதானத்தில் அண்மையில் நிலையத் தலைவர். அ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் பனை, தென்னைவள அபிவிருத்திகூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி பொது முகாமையாளர் க.சுதாகரனும், மதிப்புறு விருந்தினராக சாந்தை சிற்றம்பல வித்தியாலய அதிபர் சிறி கமலநாதனும் கலந்து கொண்டனர். (63)

# குண்டும் குழியுமான வீதியால் 150 குடும்பங்கள் பாதிப்பு

சுதுமலை,ஜூலை 8
யாழ்ப்பாணம் சுதுமலை சாவல்கட்டு 100 வீட்டுத்திட்டத்துக்கான வீதிகள் மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இது தொடர்பில் அதிகாரிகளை உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வீட்டுத்திட்டத்தில்150க்குமேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் வயது முதிர்ந்தோர் இந்த வீதியால் பயணிப்பதில் பல்வேறு துன்பத்தை எதிநோக்கி வருகின்றனர்.
எந்தவொரு அதிகாரிகளும் வீதி சீரமைப்பு தொடர்பில் கவனமெடுக்காதது மிகவும் வேதனை அளிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.
இது தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசனை தொடர்பு கொண்டு உதயன் கேட்டது. "அந்தப்பகுதி வீதியை சீரமைப்பதற்கு சபையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. சுமார் 800 மீற்றர் தூரமுடைய அந்த வீதி பகுதி பகுதியாகத் திருத்தப்படவுள்ளது. மாகாணசபை நிதி ஒதுக்கீட்டின் மூலமே குறித்த வீதி சீரமைப் புக்காக எதிர்பார்த்திருந்தோம். எனினும் நிதி இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தால் எமது சபை நிதியிலிருந்தே அதைச் செய்யவுள்ளோம்" என தெரிவித்தார். (147,114)



## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஜூலை 8
யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 124 ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அதிபர் மு.செல்வநாதன் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவக்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவ நிபுணர் எஸ். மகாதேவன் கலந்து கொண்டார். (113)

## மாணவர் நாடாளுமன்ற அமர்வு



அச்சுவேலி,ஜூலை 8
புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்த அமர்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் திணைக்கள பிரதி ஆணையாளர் த.அகிலன் யாழ்ப்பாணம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (11)

## றொசாரியன் ச.ச நிலையத்துக்கு புதிய நிர்வாகம்

கொழும்புத்துறை, ஜூலை 8
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சென். றொசாறியன் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவு ஜெ/62 கிராம அலுவலர் எஸ்.குருதர்சன் செபமாலை அன்னை ஆலய பங்குத் தந்தை அருட்பணி எரிக் றொசான் அடிகள் முன்னிலையில் அண்மையில் 'தெரிவுகள் இடம்பெற்றன.
தலைவர் எஸ்.யேசுதாஸ், செயலாளர் த.ஜெயரூபன், பொருளாளர் ஜோ.ஜெனஸ் கனோஜி, உபதலைவர் செ.ஜெயா, விளையாட்டுப் பொறுப்பாளர் எஸ். எக்ஸ்.மயூரன், உள்ளக கணக்காய்வாளர் சு.நிசாந்தன், காப்பாளராக அருட்தந்தை எரிக் அடிகளார் தெரிவுசெய்யப்பட்டனர். (135)

## மூத்தோர் மதிப்பளிப்பு நிகழ்வு

பிரான்ஸ் வாழ் நாரந்தனை மக்கள் நல்வாழ்வுச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நாரந்தனை தெற்கைச் சேர்ந்த மூத்தோர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மஞ்சுளா தேவி சதீசன் கலந்து கொண்டார். (138)



## விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம்,ஜூலை 8
யாழ்ப்பாணம் தென்மராட்சி வலய மட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வு கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலாளர் வினோஜிதா கணேசநாதனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் கந்தையா வாமதேவனும், மதிப்புறு விருந்தினராக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரனும் கலந்து கொண்டனர். (159)



மாணவர்களது செயல் திறன் ஆற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியால் செயல்முறைக் கண்காட்சி பாடசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (161)

## பண்பாட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம்,ஜூலை 8
வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், உடுவில் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெரு நிகழ்வு மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் உடுவில் பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெற்றது.
நிகர்வில் விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அபிராமி பாலமுரளி, யாழ். மாவட்டக்கலாசார உத்தியோகத்தர்மா.அருள்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
கலைநிகழ்ச்சிகள், மூத்த கலைஞர்கள் மதிப்பளிப்பு என்பன இடம்பெற்றதுடன், 'கலைநிலம்' நூல் வெளியீடும் இடம்பெற்றது.
நூலை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் வெளியிட்டு வைக்க, வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பெற்றுக் கொண்டார்.

## குருதிக்கொடை முகாம்

சுதுமலை,ஜூலை 8
சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் வழிகாட்டலின் கீழ் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அந்தப் பகுதி இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பன இணைந்து குருதிக்கொடை முகாம் ஒன் றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் குருதிக்கொடை வளங்க விரும்பும் கொடையாளிகள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது விவரங்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (147)

## வணிகர் நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 8
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வணிகர் நிகழ்வு கல்லூரியின் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் ல.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்முதன்மைவிருந்தினராக சாவகச்சேரி தொழிலதிபர் த. ஜெயந்தன் கலந்து கொண்டார். (9)

## தென்னையில் ஏறியவருக்கு குளவிக்கொட்டு

தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்க ஏறிய குடும்பத் தலைவர் கருங்குளவிகளால் தாக்குப்பட்டு காயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மிருசுவில் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை சுப்பிரமணியம் ( வயது -42 ) என்பவர் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் .
மரத்தில் தேங்காய்கள் நிறைய காணப்பட்டதால் ஓலைக்குள் மறைந்திருந்த கருங்குளவிக் கூட்டை எவரும் அவதானிக்கவில்லை. இந்த நிலையில் மரத்தில் ஏறிய குடும்பத் தலைவர் தொங்கிக் காணப்பட்ட ஓலைகளை அகற்ற முற்பட்ட வேளையில் அதில் இருந்த கூடு கலைந்து புறப்பட்ட குளவிகள் மரத்தில் இருந்தவரின் முகம் தலைஎன உடல் முழுவதும் தாக்கியுள்ளன. தெரிவிக்கப்பட்டது. (9 - 159)



## கவிதைப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜூலை 8
யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பிரதேச சிறுவர்களுக்கான தேசிய கலை இலக்கியப் போட்டிகளின் பிரதேச நிலை கவிதைப் போட்டிகள் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.
நடுவண் கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிறுவர் மற்றும் இளநிலைப் பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படுவதாகப் பிரதேச கலாசாரப் பிரிவினர் தெரிவித்தனர். (9)

## விளையாட்டு நிகழ்வு

சங்கானை, ஜூலை 8
சங்கானைப் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் 30ஆவது வருடாந்த விளையாட்டுநிகழ்வு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சம்மேளனத்தின் தலைவர் அ.இன்பராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தநிகழ்வில்முதன்மைவிருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் கலந்துகொள்ளவுள்ளார். (126)

## சன்மார்க்க முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு

அளவெட்டி, ஜூலை 8
யாழ்ப்பாணம் மல்லாகம் சன்மார்க்க சனசமூக நிலையம் நடத்தும் சன்மார்க்க முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மக்கள் மன்ற விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நிலையத் தலைவர் பெ.தனராசா தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை யூஜின் பிரான்சிஸ் மற்றும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (36)

## சாரதிகள் இருவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 8
அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய கெற்பேலி வாசிக்கு 75 ஆயிரம் ரூபாவும், வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்ட வழித்தடத்தில் மாற்றம் ஏற்படுத்திய சாரதிக்கு 5 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளும் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.
கெற்பேலிப் பகுதியில் ரோந்து சென்ற வேளையில் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தைச் சோதனையிட்டபோது அனுமதிப் பத்திரமின்றிக் காணப்பட்டதால் அவருக்கு எதிராகவும் கச்சாய் பகுதியில் மணலுடன் வந்த லொறியைச் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட வழித்தடத்துக்குப் பதிலாக வேறு மார்க்கத்தில் வந்த சாரதிக்கு எதிராகவும்வழக்குகள்தாக்கல்செய்யப்பட்டன.
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த சாரதிக்கு 75 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்தத் தவறின் 10 மாதங்கள் சிறைத்தண்டனையும், வழித்தடம் மாறி மணல் ஏற்றி வந்த லொறியின் சாரதிக்கு 5 ஆயிரம் ரூபாவும் தண்டமும் விதிக்கப்பட்டது. (9)

### வலி.கிழக்கில்

# பொதுச் சொத்துக்களை தனியார் ஆக்கிரமிக்கும் நிலை

அச்சுவேலி,ஜூலை 8
அண்மைக்காலத்தில் பொதுச் சொத்துக்களை தனியார் ஆக்கிரமிக்கும் நிலை வலி. கிழக்குப் பிரதேசத்தில் அதிகரித்து வருகின்றது.

யாழ்ப்பாணம் அச்சுவேலி வட கோவை சபாபதி நாவலர் சனசமூக நிலையம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீண்டும் செயற்படத் தொடங்கியது. இந்த மீள் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சபாபதி நாவலர் சனசமூக நிலையம் 1952ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டுவந்தது.
மேற்படி சனசமூக நிலையத்தை அண்மையில் தனியார் ஒருவர் ஆக்கிரமித்து பயன்பாட்டுக்கு விடாமல் தடுத்துவந்தார். இது தொடர்பான முறைப்பாடு பொதுமக்கள் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகளால் பிரதேச சபைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தது.
பிரதேச சபை சார்பாக சம்பந்தப்பட்டவரிடம் உரிமை தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தோம். உரிய வேளையில் சமர்ப்பிக்கவில்லை. அண்மையில் வெளிப்படுத்தல் உறுதியை சமர்ப்பித்து உரிமை கோரியிருந்தார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே வலி. கிழக்கு பிரதேசத்தில் அதிகரித்து வரும் பொதுச் சொத்துக்களை தனியார் ஆக்கிரமிக்கும் நிலையை அனுமதிக்க முடியாது - என்றார். (11)



## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

அளவெட்டி, ஜூலை 8
யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் கதிர்காம சேகரம் நிறந்தவெளி அரங்கில் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு அதிபர் நா. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீடம் முகாமைத்துவக் கற்கைகள் முன்னாள் பீடாதிபதி, வடக்கு மாகாணசபை சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் பேராசிரியர் க.தேவராசாவும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் ச.சிவானந்தராசாவும், மதிப்புறு விருந்தினராக செ. மகேந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (36)

## அலங்கார உற்சவம்

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டி மருதடி அற்புத விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. திருவிழா 10 தினங்கள் நடக்கும். எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும் என ஆலய் தர்மகர்த்தா தெரிவித்தார். (159)

## இருபடி சமன்பாடுகள் நூல்வெளியீடு

மானிப்பாய், ஜூலை 8
மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கணித ஆசிரியர் சி.சசிகுமாரின் இருபடி சமன் பாடுகள் எனும் கணித நூல்வெளியீட்டு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கல்லூரியின் கணித பாட இணைப்பாளர் கு.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.
நூலின் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளர் எஸ். குகன் ஆற்றினார்.
முதல்பிரதியை பழைய மாணவர் சங்க தலைவர் ரி.பிரதீபன் பெற்றுக்கொண்டார்.



## "புள்ளிகள் கரைந்த பொழுது" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 8
யாழ்ப்பாணம் திருநெல்வேலி தூண்டி இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளரும், கவிஞருமான ஆதிலட்சுமி சிவகுமார் எழுதிய "புள்ளிகள் கரைந்த பொழுது" என்னும் நூல்வெளியீட்டு நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யேசுராசா தலைமையில் நடைபெற்றது.
நூலின் வெளியீட்டுரையைதி.செல்வமனோகரனும் மதிப்பீட்டுரையை ந.குகபரன் மற்றும் கை.சரவணன் ஆகியோரும் ஆற்றினர். தலைமையுரையில் யேசுராசா கருத்துத் தெரிவிக்கையில் வடமொழி பல உருவாகிய காரணத்தால் தமிழ் எழுத்துக்கள் அழிந்து போகின்றன. இதனால் புத்தகங்களை வீடு சென்று வாசிப்பதற்கே மிக வேதனையாக இருக்கின்றது இந்த நிலை மாற வேண்டும் - என்றார். (113)





யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்தத் திருவிழாவின் 10ஆம் நாளான நேற்று முன்தினம் எம்பெருமான் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருட்காட்சியளித்தார்.

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 8
சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் தலைமைத்துவ இருநாள் பயிற்சிப் பட்டறை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் சேவை உத்தியோகத்தர் லோ.இரஜீவன் வழிநடத்தலில் இடம்பெறும் பயிற்சிப் பட்டறையானது "இளைஞர் சமூகப் பொறுப்பாளராகும்" எனும் தலைப்பில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களைச்சேர்ந்த சுமார் 60 இளையோர்கள் பங்கு பற்றினர். (147)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்பாணம் நவாலி மதிஒளி முன்பள்ளியும் மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கமும் இணைந்து நடத்தும் பிரசாத் குபாகாந்த முன்பள்ளிச் சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கத் தலைவர் ஞா.பிரதீபன் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நவாலி அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் க.ஸ்ரீநந்தகோபன் கலந்துகொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (63)

## போதை ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல்

வடக்கு- கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பின் 'போதை ஒழிப்போம் வன்முறை தவிர்ப்போம்' எனும் தொனிப் பொருளிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ரீதியில் தற்போது இடம்பெறும் வன்முறைசார் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் பாவனையின் தாக்கம் குறித்து இடம்பெறவுள்ள கலந்துரையாலில் மாவட்ட ரீதியில் செயற்படும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூகத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், கட்சிப் பிரமுகர்கள் மற்றும் மதகுருமார்கள், பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில், பிரதேசமட்ட விழிப்புக் குழுக்களை நிறுவுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.
எனவே மேற்படி சந்திப்பில் பங்கேற்று ஆலோசனைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். (எ)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3053 திகதி: 2018.07.07 சனிக்கிழமை

ශනිදා වාසනාව SATURDAY FORTUNE

பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 23 | 33 | 42 | 54 | B

போனஸ் இலக்கம்: 40

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 31,540,890/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB இடைவெளி LOT இடைவெளி AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## VACANCIES

- ஆயுர்வேத ஊழியர் ஆண் / பெண் தகுந்த தகைமை உடையோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- Food and Beverage waiters
- House Keeping Trainees

Send your CV to **The Thinnai** hr@thethinnai.com

86, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

076 752 8628 / 021 203 0400

## Audit/ Account Trainees Wanted

New Uthayan Publication (Pvt) Ltd, a leading newspaper publisher in Jaffna is looking for self driven & motivated young individuals, to join its finance department team as Audit/Account Trainees.

**The ideal candidate must be:**

- A registered student of CA Srilanka, CIMA, ACCA, CMA or AAT
- Graduate or undergraduate / technical college students or diploma holders who pursue a career in accounting and auditing.
- Fluent in written and spoken English
- Able to work with Microsoft office
- Knowledge in accounting package such as quickbook will be an added advantage
- Able to prioritize and manage multiple tasks

Selected Trainees will be given a comprehensive training in all spheres of Accounting, Auditing & Taxation plus an attractive Training Allowance above the industry norm.

If interestd, Please forward a detailed CV, including names and contacts of two non-related references to reach us, within 10 days of email CVs to acct@uthayan.com

**Finance Manager,**
**New Uthayan Publication (Pvt) Ltd.**
**361, Kasturiar Road, Jaffna. 021 493 4444**
**E mail: acct@uthayan.com**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம் ▶ 158

சீட்டிழுப்பு திகதி ▶ 07.07.2018 சிவப்பு

ஆங்கில எழுத்து: I

வெற்றி இலக்கங்கள்: 12 31 55

விதி எண்: 09

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31, 191, 492/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| அம்பாறை | 5880146 |
| மொனறாகலை | 1429793 |
| மன்னார் | 5087310 |
| கொழும்பு | 6732129 |
| கேகாலை | 1820908 |

2018.07.12 ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

தொலைபேசி: 011 333 5464 7 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


## களவாக...

மடைந்த இரு இளைஞர் களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களவாக மாடு வெட்டப்படுவதாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. பொலிஸார் தேடுதல் நடத்தினர். 107 கிலோ சட்டவிரோத இறைச்சியுடன் இளைஞர்கள் இருவர் உந்துருளியில் செல்வதைப் பொலிஸார் அவதானித்துள்ளனர். இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் விரட்டினர்.

மண்டைதீவுச் சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் காவல் அரணின் மேசையுடன் உந்துருளியில் வேகமாக வந்த இளைஞர்கள் மோதுண்டுள்ளனர். காயமடைந்த அவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். வைத்தியசாலையில் பின்னர் சேர்ப்பித்தனர். (5,8)

## தெப்பம்...

முல்லைத்தீவு, ஜூலை 8

முல்லைத்தீவு மாத்தளன் கடற் பகுதியில், கடல் தொழிலுக்குச்சென்ற தொழிலாளி ஒருவர் உயிரிழந்த நிலையில் நேற்றுச் சடலமாகக் கரைஒதுங்கியுள்ளார். அவரது தெப்பம் கடலுக்குள் கவிழ்ந்ததில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் அடைக்கலமாதா வீதியைச் சேர்ந்த தாவீது செல்வரத்தினம் (வயது-60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

காலையில் தெப்பத்தில் தொழிலுக்குச் சென்றுள்ளார். கடல் அலையில் தெப்பம் அடிபட்டுக்கவிழ்ந்துள்ளது. தெப்பத்திலிருந்து கடலில் வீசப்பட்டு வலைக்குள் வீழ்ந்துள்ளார். கடல் பகுதியில் தெப்பம் தனியே ஒதுங்குவதை கடற்றொழிலாளர்கள் அவதானித்துள்ளனர். அங்கு வலையில் சிக்குண்ட நிலையில் சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (5,ரி3)


## கதிர்காமம் பஸ் சேவை

யாழ்ப்பாணம் ⟷ கதிர்காமம்

கதிர்காமம் ⟷ யாழ்ப்பாணம்

"சிங்ககிரி எக்ஸ்பிறஸ்"

கட்டணம் 950/-

யாழ்ப்பாணத்திலிருந்து பிற்பகல் 3.50 மணி

கதிர்காமத்திலிருந்து இரவு 11.00 மணி

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். வரணி ஆசனப் பதிவகம்

077 791 7691
077 604 8921
021 222 2868

கதிர்காமம் - தொடர்புகளுக்கு
071 838 2916
077 529 9015
077 978 7824


## மரண அறிவித்தல்



தோற்றம் 16 03 1927 — மறைவு 06 07 2018

### திருமதி இராசமணி மாசிலாமணி


பெரியமதவடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி மாசிலாமணி 06.07.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மாசிலாமணி (C.T.B. சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம் - இளையபிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், குலராஜா, சரோஜினிதேவி (றஞ்சி - Australia), சிவராசா (சின்ராசா - மினிபஸ் உரிமையாளர் - Pirathap Travels), ராகினிதேவி (ராதா), மாலினிதேவி (றதி), தர்மபாலன் (பாலன் - Mascon Co. Ltd) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற மனோகரன் (Australia), சித்திரா, உதயணன் (C.T.B. சாரதி), யோகேந்திரகுமார், ஜெயரஞ்சினி (யா/வசாவிளான் மத்திய கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரதீபா (Australia), பிரபா (London), பிரதாப் (Australia), பிரசாந்தினி (ஜேர்மனி), மயூரன் (Australia), நிரூபன் (NIRU Fancy, Chunnakam), அனோஜன், அங்கஜன், கபில்ராஜ், பிரவிண்ராஜ் ஆகியோரின் பேர்த்தியும், லையினி, டியியா ஆகியோரின் பூட்டியும், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான சிவமணி, நேசமணி மற்றும் தயாளமணி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, நடராஜா, மதியாபரணம், துரைராஜா படைவீரசிங்கம் மற்றும் மகேஸ்வரி (London) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் சாந்தநாயகி, தவராஜா ஆகியோரின் சிறியதாயும், புஸ்பகலா, சரஸ்வதி, கௌரிதேவி (Canada), கதிர்காமசேகரம், கிருஸ்ணசேகரம் (France) ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.06.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**

### முத்து சின்னமணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.07.2018) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 11.07.2018 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**எமது துயரத்தைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

தோற்றம் 08.10.1939 — மறைவு 11.06.2018

**குடும்பத்தினர்.**
**உதயசூரியன் வீதி, உடுவில்.**

(CS/18026)(11,17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 08.06.2018 அன்று இறைபதமடைந்த

**அமரர்**

### சுவாம்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை (றஞ்சன்)

(முன்னாள் அதிபர் C.C.T.M.S - வவுனியா)

விஞ்ஞானத்துறையில் கற்று வித்தைகள்
பல புரிந்து ஆசானாய், அதிபராய்
கல்வியில் கலங்கரை விளக்காய்
சாதனை பல புரிந்தீர்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவில் துயருறும்
1979 A/L கணித
விஞ்ஞானப் பிரிவு நண்பர்கள்.
புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்.

(00375)(11,17)

## கந்தபுராண படிப்பு

யாழ்ப்பாணம்.ஜீலை 8
யாழ்ப்பாணம் நீர்வேலி தெற்கு முருகையா ஆலயத்தில் கந்த புராணத் தொடர் படிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சிறப்பு அபிஷேகப் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்படவுள்ளதுஎன்றுஆலயமுதன்மைக் குருக்கள்தெரிவித்தார். (17)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம்.ஜீலை 8
யாழ்ப்பாணம் நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தின் கார்த்திகை உற்சவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல்3.30மணிக்கு அபிஷேக பூசை வழிபாடுகளுடன் இடம் பெறும். தொடர்ந்து தீப வழிபாடும் இடம்பெறும். (17)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்.ஜீலை 8
யாழ்ப்பாணம் நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட திருவாசக அரண்மனையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருவாசகமுற்றோதல்ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
சைவப்பிரகாசப்பேரவையின் ஏற்பாட்டில் நெல்லியடி மருதம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் நிகழ்வில் பங்குபற்ற விரும்பும் அடியவர்களின் வசதி கருதிநல்லூர்கந்தசுவாமிகோவில் முன்றிலில் காலை 6 மணிக்கு வாகன வசதி செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# காணி பறிப்புக்கு நல்லாட்சி வகுத்த புதிய உத்தியே திணைக்களங்கள்

### தொண்டை கிழியக்கத்தியும் பயனில்லை என்று மக்கள் விசனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 8**

**வடக்கு மாகாணத்தில் அரச திணைக்களங்களால் அபகரிக்கப்படும் நிலங்களை மீட்பதற்காகப் போராடுவது என்பது எப்போதும் பயனற்றதே. வடக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் தொண்டை கிழியக்கத்தினால்கூட அரசு இவற்றை நிறுத்தப் போவதுமில்லை. மீண்டும் எமது இனம் நசுக்கப்படப் போகிறது என்பது திண்ணம் என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கவலை தெரிவித்தனர்.**

உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்தில் மூலை முடுக்கெங்கும் நிலைகொண்ட முப்படையினரும் தமிழ்மக்கள் பூர்வீகமாகவாழ்ந்தநிலங்களில் தங்களுக்காகப் பெரிய படை முகாம்களை அமைத்து அகலக் காலூன்றிப் பெருமளவு நிலங்களை அபரித்துள்ளனர்.
அவற்றுக்கு எதிராக மக்கள் போராடும்போது உலகநாடுகளின் அழுத்தங்களால் அவற்றில்சிலவற்றைவிடுவித்தார்கள். உலகமும்அமைதியானது. எனினும் மக்களோ விடுவதாக இல்லை. தமது பூர்வீக நிலங்களை விடுக்கும் வரை போராடுவதாகமுடிவுசெய்துபோராட்டங்கள் இடம்பெறுகின்றன.
இந்த நிலையில் அரசு புதிய உத்தியைக் கையாண்டு அரச திணைக்களங்களூடான நில அபகரிப்பை ஆரம்பித்தது. இது கடந்த ஆண்டுகளிலே அந்த உத்தி கையாளப்பட்டது. முல்லைத்தீவில் மகாவலி எல் வலயம்என்றபோர்வையில்தமிழர்களுடைய பல ஏக்கர் காணிகள் அபரிக்கப்பட்டுள்ளன. அடுத்து சிறுபான்மையிலும் சிறுபான்மைஎன்றுகூறப்படும்முஸ்லிம் மக்கள் கடந்த ஆண்டு இலக்குவைக்கப்பட்டனர். முஸ்லிம் தலைவர்கள் அரசிலே அமைச்சுப் பதவிகளில் உள்ள போதும்கூடமுஸ்லிம்களுடைய காணிகள் இலக்குவைக்கப்பட்டன.
மன்னாரில்முசலிப்பிரதேசசெயலர் பிரிவு மற்றும் மடுப் பிரதேச செயலர் பிரிவுகளில் முஸ்லிம் மக்களுக்குச்சொந்தமானசுமார் ஒரு லட்சத்து 7 ஏக்கர் காணி 'மாவில்ல' என்ற பெயரில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. முஸ்லிம் தலைவர்கள்அரசுடன்பேசினர். வடக்கு மாகாணசபையில் உறுப்பினர் அஸ்மின் இரண்டு பிரேரணைகளைக் கொண்டு வந்தார். அரசதலைவரின் கவனத்துக்கும் விடயம் கொண்டுவரப்பட்டது. பிரச்சினைபூதாகரமானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடனடியாக நிலமைகளை ஆராய்வதற்குக்குழு ஒன்றை நியமித்தார். அந்தக் குழு விசாரணைகளில் ஈடுபட்டது.
அரச தலைவருக்கு அறிக்கை சமர்ப்பித்தது. காணி அபகரிப்பு பற்றியவிடயம்தூர்ந்துபோனது. அந்தக் காணிகள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டு வர்த்தமானிஅறிவித்தலும்வெளியிடப்பட்டுள்ளது.
எவர்பேசிஎன்னநடந்தது. அரசு தனது முயற்சியில் வெற்றியையேகண்டது. ஆனால்அந்த முஸ்லிம் மக்களுடைய நிலை பற்றிஎவரும்கரிசனைகொள்ளவேயில்லை. முஸ்லிம் அமைச்சர்கள் உட்பட வடக்கு மாகாண சபையினர் கூட பொம்மைகளாகவே இருந்தனர். இன்று எமக்கும்அந்தநிலையேவந்துள்ளது.
முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர்பிரிவில்தனியாருக்குச் சொந்தமான நிலத்தை அபரித்தபடையினர்அங்கிருந்த பிள்ளையார் ஆலயத்தை மறைத்து பௌத்த ஆலயத்தை நிறுவி வழிபட்டனர்.
உரிமையாளர் தனது நிலங்களைவிடுவிக்குமாறுபலமுயற்சிகளைமேற்கொண்டார். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அவர்சென்றிருந்தார்.
நீண்ட நாள்களின் பின்னர் ஆணைக்குழுஅந்தக்காணியை விடுவிக்க வேண்டும் என்று அறிவித்திருந்தது. படையினர் காணியை விடுவிக்கும் போது காணியில் தொல்பொருள்கள் இருக்கின்றன என்று தொல்பொருள் திணைக்களத்துக்குத் தகவல் வழங்கினார்களாம்.
அதன்படி இராணுவம் காணிகளைக் கையளித்த அதேநேரம் தொல்பொருள் திணைக்களம் அந்தக் காணியைப் பற்றிக் கொண்டது.
எனவே அரசு மக்களுடைய காணிகளை அபகரிப்பது என்று முடிவு செய்துள்ளது.
முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்என வனஇலாகா, வனஜீவராசிகள், தொல்பொருள்போன்ற திணைக்களங்களின் நில அபகரிப்புகள் தொடர்கின்றன. எமது பிரதிநிதிகளும் பேசுகின்றனர். அறிக்கைகளை விடுகின்றனர். ஆனால் நிலங்களை அரசு எடுக்கும்என்பது உறுதி. (எ-21)

*பளை சோரன்பற்றில்*

## தொடர் மணல் அகழ்வால் விவசாய நிலங்கள் பாதிப்பு

*கிராம மக்கள் கவலை*





கிளிநொச்சி, ஜீலை 8
பளைசோரன்பற்றுக்கிராமத்தில்உள்ளமூன்று குளங்களில் அனுமதியின்றி தொடர்ச்சியாக மணல் ஏற்றப்படுவதால் விவசாய நிலங்கள் பாதிப்படைவதாகக்கிராமமக்கள்குற்றஞ்சாட்டுகின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமமே சோரன் பற்றுக் கிராமம்.
குறித்த கிராமத்தை அண்டி கொத்திப்பள்ளக் குளம், வட்டக்குளம், மண்ணவுண்டான்குளம் போன்றவை காணப்படுகின்றன. குறித்த குளங்களைஅண்டியபகுதிகளிலும்வயல்மேட்டுக் காணிகளிலும் தொடர்ச்சியாக மணல் வெட்டிஉழவியந்திரங்களில்ஏற்றப்படுகின்றது. இவ்வாறுஏற்றப்படும்மண்ஒருஇடத்தில்கொட்டப்பட்டுடிப்பர்வாகனத்தில்ஏற்றிஏனையஇடங்களுக்கும் கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் கிராமத்தில் எதிர்காலத்தில் பெரிய பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.
வயல்நிலங்கள் நெற்செய்கைசெய்ய முடியாத அளவுக்கு உவர்த் தன்மை அடையக் கூடும். அத்தோடு அணைகளும் வெட்டப்படுவதால் குளங்களின் நீரும் கிராமங்களுக்கு வருவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.
இவற்றை விட அருகான பிரதேசங்களில் காணப்படுகின்றஉவர்நீரும்அணை இல்லாத காரணத்தால்குளத்துக்குள்வரும்அபாயநிலையும் காணப்படுகின்றது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு இயற்கை வளங்களையும் விவசாயத்தையும் பாதுகாப்பதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து செயற்பட வேண்டும் எனப் பாதிக்கப்பட்டகிராமமக்கள்தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்வே.ஆயகுலனிடம்கேட்டபோது. மாவட்டத்தின் சில பிரதேசங்களில் குளங்கள் மற்றும் வயல் நிலங்களில் மணல் அகழப்படுவதுதொடர்பாகமுறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன. கமக்கார அமைப்புக்கள் ஊடாக இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்என்று தெரிவித்தார். (எ-6)

*மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு*

## மகப்பேற்று, பெண்ணியல்நோய்க்கு நிரந்தர மருத்துவ நிபுணர் நியமனம்

*வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*




மன்னார், ஜீலை 8
நீண்ட காலமாக மகப்பேற்று பெண்ணியல் நோய் மருத்துவநிபுணர்இல்லாது, நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்குத் தற்போது நிரந்தரமாகமகப்பேற்று, பெண்ணியல்நோய் மருத்துவ நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றுவடமாகாணசுகாத்ரஅமைச்சர் ஜீ. குணசீலன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் நீண்ட காலமாக மகப்பேற்று, பெண்ணியல்நோய்மருத்துவர் நிபுணர் இல்லாமையால் கர்ப்பிணித் தாய்மார்கள்பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.
குறிப்பாக இங்குவரும்கர்ப்பிணித்தாய்மார்கள், மருத்துவர் இன்மையால்வவுனியா மற்றும் பிற மாவட்டப் பொது வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு வந்தனர்.
மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில்இருந்துவவுனியாமருத்துவமனைக்கு அம்புலன்ஸ் வண்டி மூலம் அழைத்துச் செல்லப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் சிலர் அம்புலன்ஸ் வண்டியிலேயே குழந்தைகளைப் பிரசவித்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.
இந்த நிலையில் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர்.
குறித்த பிரச்சினை தொடர்பாகப் பல தடவை கொழும்பு சுகாதார அமைச்சுக்குத்தெரியப்படுத்தியதோடு, தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்தோம். இந்த நிலையில் நிபுணர் ஒருவர் தற்போது நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும்இந்தமருத்துவமனைக்குமயக்க மருந்து வழங்கும் மருத்துவ நிபுணர் இன்னும்நியமிக்கப்படாமலேஇருக்கின்றார். அவரையும் நிரந்தரமாக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன-என்றார். (எ-56)

# கடைசித் தருணத்தில் பாடசாலைக் கதவு அடைப்பு
# அமைச்சர் மஸ்தானின் வரவேற்பில் பரபரப்புக் காட்சி

**மன்னார், ஜூலை 8**

**பிரதி அமைச்சராகப் பதவியேற்ற காதர் மஸ்தானுக்கு வரவேற்பு வழங்குவதற்கு மன்னர் முசலியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வு முசலியில் உள்ள பாடசா லையில் நடப்பதாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஆனால், நிகழ்வுக்குச் சில மணி நேரங்களின் முன்பாக பாடசாலைக் கதவுகள் இழுத்து மூடப்பட்டன. காப்பாளரையோ அதிபரையோ தொடர்புகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து பூட்டப்பட்ட பாடசாலைக்கு வெளியிலேயே தீடீர் கொட்டகைகள் அமைத்து நிகழ்வை நடத்தினார்கள். இந்தப் பர பரப்பான காட்சிகள் நேற்று அரங்கேறின.**



கடந்தஅமைச்சரவைமாற்றத்தின்போதுபிரதிஅமைச்சுப்பதவி காதர் மஸ்தானுக்கு வழங்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு மன்னார்முசலிப்பிரதேசமக்களால்வரவேற்புநிகழ்வுஏற்பாடு செய்யப்பட்டது.

அங்குள்ளபாடசாலைமண்டபத்தில்வரவேற்புநிகழ்வைநடத்துவதற்காக ஏற்பாட்டுக் குழுவினர் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் அனுமதி பெற்றிருந்தனர். வரவேற்பு நிகழ்வுக்கான அலங்கார ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்தும் செய்து முடிக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில்வரவேற்புநிகழ்வுக்குசிலமணிநேரங்களுக்கு முன்னர், பாடசாலையின் வெளி வாயில் கதவு பூட்டப்பட்டது. பாடசாலையுடன் தொடர்புடையோருக்கு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு எடுத்தபோதும், அவர்களின் தொலைபேசிகள் அணைக்கப்பட்டிருந்தன. இதனால்அங்குபதற்றம்ஏற்பட்டது. அமைச்சரின்ஆதரவாளர்கள்பூட்டியகதவினைஉடைப்பதற்கு முன்வந்தனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்திய அமைச்சர் மாற்று ஏற்பாடுகளைச்செய்யுமாறுபணித்துஅவர்களைஅமைதிப்படுத்தினார். உடனடியாக பூட்டப்பட்ட பாடசாலை வாயிலுக்கு முன்பாகவே தற்காலிகக்கொட்டகைஅமைக்கப்பட்டுநிகழ்வுநடத்தப்பட்டது.

முருங்கன் அருவியாற்றுப் பாலத்தில் இருந்து பிரதி அமைச்சர் மஸ்தான் அவரது ஆதரவாளர்களால் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். நிகழ்வில் பேசிய அவர், அரசியல் காழ்ப்புணர்வு காரணமாகவே தனது நிகழ்வு நடக்க இருந்த இடம் கடைசி நேரத்தில் பூட்டப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

"இவ்வாறான செயல்கள் மூலம் நான் மக்களுக்கு ஆற்ற இருக்கும் சேவைகளை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இத்தகைய அநாகரிகமான செயலை யாரினது தூண்டுதலின் பேரில் செய்திருந்தாலும் அதற்கான தக்க தண்டனையை மக்கள் வழங்குவார்கள்" என்றும் தெரிவித்தார். (உ-5,213)

### கிராஞ்சிக் கிராமத்தில்
# நிறுத்தப்பட்டுள்ள படகுகளால் மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்பு

கிளிநொச்சி, ஜூலை 8

கிராஞ்சிப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய இழுவைப் படகுகளால் உள்ளூர் மீனவர்கள் 300 பேரின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இது பேசப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தபோதும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாதுள்ளதால் மீனவர்கள் தொடர்ந்துபாதிக்கப்படுகின்றனர்என்றுஸ்ரீ முருகன் கடற்றொழிலாளர் சங்க சமாசப் பிரதிநிதி சி. கிருஸ்ணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்தியஇழுவைப்படகுகளில்சிலவற்றைக் கடற்படையினர்கைப்பற்றுகின்றனர். அவ்வாறு கைப்பற்றிய இந்திய இழுவைப்படகுகளில் 38 படகுகள் நீண்டகால மாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சிக் கரையில் கடற்படையினரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகப் படகுகள் நிறுத்தி வைத்திருக்கும்இடத்யுதையும்அதனைஅண்டிய பகுதிகளையும்நம்பிவாழ்ந்தமீனவர்களின் வாழ்வாதாரம்இன்றுபெரும்கேள்விக்குறியாக மாறியுள்ளது.

குறிப்பாகஇதனை அண்டியபகுதியில்கடற்படைத் தளம் ஒன்று உள்ளது.

அதற்கு ஓர் இடம் பிடிக்கப்பட்டுள்ள நிலையில்இந்தியஇழுவைப்படகைநிறுத்திவைக்கவும் நாம் தொழில் புரிந்த இடங்களே அபகரிக்கப்பட்டுள்ளன. இந்தியப் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு உள்ளூர் மீனவர்கள் செல்லவே முடியாது. குறித்த படகுகளை நிறுத்து வதற்கு முன்பு அங்கு10 இங்கு மீனவர்க ளின் பாடுகள் இருந்தன. படகுகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தற்போது அந்தத் தொழில்முற்றாகக்கைவிடப்பட்டுள்ளது.

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 38 படகுகளில் 10க்கும் மேற்பட்ட படகுகள் கடலில் மூழ்கியுள்ளன. அந்தப் படகுகளின் இயந்திரங்களில் காணப்பட்ட எரிபொருள்கள் கடலில் சேர்கின்றன.

கடல்மாசடைகின்றது. இதேபகுதியில்எமது உள்ளூர் மீனவர்களின் இரு கடலட்டை உற்பத்திநிலையங்கள்குறித்தும்உள்ளன. அங்கே காணப்படும் கடலட்டைகள் தற்போது இறக்கும் சூழல் காணப்படுகின்றது. இந்திய மீனவர்கள் எமது கடலுக்கு வரும் போதும் நாமே பாதிக்கப்பட்டோம். அவர்களின்படகுகளைநிறுத்திவைத்திருப்பதாலும் நாமே பாதிக்கப்படுகின்றோம்.

எனவே இதற்குப்பொருத்தமான ஒருபொறிமுறையைக் கையாண்டு இந்தப் பகுதியை நம்பிவாழும்300மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு வழி ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

இதுதொடர்பாகபூநகரிப்பிரதேசசெயலரிடம் உதயன் வினவியது. "இது தொடர்பாக பிரதேசஅபிவிருத்திக்குழுக்கூட்டத்தில்கலந்துரையாடப்பட்டது. படகுகள் மன்னார் திணைக்களத்தையும் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அந்த மாவட்ட அதிகாரிகளுக்கே இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளப்பணிப்பாளரால்கடிதம்அனுப்பப்பட்டுள்ளது. எமக்கும் அதன் பிரதி வழங்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாகமன்னார் மாவட்ட கடற்றொழில்நீரியல்வளத்துறைதிணைக்களத்தையும் தொடர்புகொண்டு உதயன் கேட்டது.

"இந்தியமீனவர்களைக்கைதுசெய்துபாரப்படுத்துவது மட்டுமே எமக்கு உரித்தான வேலை. அதைத்தவிர்த்து அவர்களது உடமைகளான படகுகள் போன்றவற்றை நீதிமன்ற உத்தரவின் பேரில் கடற்படையினர் பாதுகாப்பான இடங்களில் கட்டிவைக்க வேண்டும். அதனாலேயேகுறித்தகுடாவில் படகுகள் கட்டி வைக்கப் படுகின்றன.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பான உரிய நட வடிக்கைகளுக்கான உரிய தரப்பினருக்குஅறிவிக்கப்பட்டுள்ளது"எனத்தெரிவிக்கப்பட்டது.

(எ-105,6,114)

# விஜயகலா தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிக்க வேண்டும்

### வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவிப்பு

தமிழர்களின் வேணவாவை தெரிந்தோ, தெரியாமலோ உரக்கச்சொன்னமைக்காக, பதவியைப்பறித்த செய்நன்றி மறந்த சிங்கள பேரினவாதக்கட்சியில் இருந்து விலகி முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா, தமது எதிர்கால அரசியலை தமிழ்த்தேசியப் பாதையில் முன்னெடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நூற்றுக்கு நூறுவீதம் தமிழ்மக்கள் வாழும் எங்களுடைய கிராமங்கள் வரை பல்வேறான உத்திகளைப் பயன்படுத்தி சிங்கள தேசியக்கட்சியைக் கொண்டு வந்து சேர்த்து, நச்சுவிதையை எமது தூய வளமான மண்ணிலே ஊன்றி, தன்னால் முடிந்தவரை சிங்கள மேலாதிக்கத்தை எமது மக்களை ஏற்கச்செய்வதற்குக்கடுமையாக உழைத்தமைக்கான சிறு நன்றி கூட இல்லாமல், சிங்களப் பேரினவாதமானது தனது கோர முகத்தை விஜயகலா மீது தோலுரித்துக் காட்டியுள்ளது.

இதன்பின்பும், நீங்கள் அந்த அணியிலேயே தான் தொடருவீர்களேயானால் உங்கள் மீது இன்றைக்கு, உண்மையைத் தெரிந்தோ, தெரியாமலோ உரக்கச்சொன்னீர்கள் என்பதாக உருவாக்கியுள்ள நல்லபிப்பிராயம் மண்ணாகிப்போய்விடும் - என்றுள்ளது.

இதேவேளை, திருநெல் வேலியில் நேற்று இடம்பெற்றநிகழ்வில்உரையாற்றிய வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், "எமது தமிழ் பெண் அமைச்சர் தவறுதலாக ஒருவார்த்தைகூறியதற்காகஅவரைப்பதவியில் இருந்து விரட்டுவதற்குச் சிந்திப்பது நல்லது இல்லை. அவர் தொடர்ந்தும் அமைச்சராக இருக்க வேண்டும் என்றுநாம்நினைக்கிறோம்" என்று தெரிவித்தார். (எ-105)

# சொந்த மண்ணான பலாலியில் எம்மை குடியமர்த்துங்கள்

### அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

போர்காரணமாகச்சொந்தமண்ணைவிட்டு இடம்பெயர்ந்து கிட்டத்தட்ட 27 வருடங்களுக்கு மேலாக நிர்க்கதியாகியுள்ள தம்மை, தமது சொந்த மண்ணில் மீள்குடியமர்த்துமாறு பலாலி அகதிகள் மறுவாழ்வுக் கழகம் வடக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் ஆளுநருக்கு கழகத்தின் தலைவர் அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1990ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி போர் காரணமாக் நாம் எமது சொந்த மண்ணாகிய பலாலியை விட்டு வெளியேறி ஊர் ஊராக அகதிகளாகச் சென்று படாத துன்பமெல்லாம் பட்டு வாழமுடியாமல் வாழ்கின்றோம். எமது போராட்டங்கள், கோரிக்கைகளை அடுத்து இன்று எமது சொந்த இடத்தில் இருந்து கால் பங்கு விவசாய நிலத்தை இராணுவத்தினர் விடுவித்துள்ளனர். மிகுதிப் பங்கை விடுவிக்கவில்லை. நிலமின்மையால் நாம் சொல்லொணாத் துன்பங்களைத் தினமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் எங்கள் சொந்த நிலத்தில் இராணுவத்தினர்விவசாயம்செய்கின்றனர். நாங்கள் வேறு இடங்களில் வேறு மக்களின் காணிகளில் விவசாயம் செய்து குத்தகை கொடுக்கின்றோம். இதுஎந்தவகையில்நியாயம்? எனவே எமது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு எங்களை எமது சொந்த இடத்தில்உடனடியாகமீளக்குடியமர்த்துமாறு மிகமிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (எ)


HOT LINE: 011 5 999 000
சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.
LG Life's Good
TOSHIBA Leading Innovation >>>
பெரிய திரை
தொலைக்காட்சிகளுக்கு
பிரம்மாண்ட
தள்ளுபடிகள்!
ரூ.100,000/-
வரையான தள்ளுபடிகள்
இச்சலுகை ஜூலை 15 ம் திகதிவரை மட்டுமே!
நாடளாவிய அபான்ஸ்
காட்சியறைகளில் பெற்றிடுங்கள்!
55" Full HD TV ரூ.99,999/- மாத்திரமேயாகும்!
60 மாதங்களுக்கு
வட்டியில்லா தவணைகள்
Nations TrustBank
Sampath Cards
Standard Chartered
HNB
SEYLAN
PAN ASIA BANK
DFCC BANK
Abans
அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்
உங்களுக்கு உகந்த மடிக்கணினிகள்
தேசத்தின் முதலாம் நிலை மடிக்கணினி வழங்குனரிடமிருந்து!
hp acer Lenovo Haier DELL
எந்த இடத்திலும்
எந்த வேலைக்கும்
Core i3 Laptops
HP 15 BS 588 i3
i3 7th Gen
4GB RAM | 1TB HDD
15.6" Display
ரூ. 85,900
விசேட விலை ரூ.72,900
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
ACER 572G i3
i3 7th Gen
6GB RAM | 1TB HDD
15.6" Display
ரூ. 90,990
விசேட விலை ரூ. 75,990
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
ACER 576G i3
i3 8th Gen
6GB RAM | 1TB HDD
Linux | 15.6" Display
ரூ. 93,990
விசேட விலை ரூ.78,990
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
சிறியது ஆனால்
பலமானது
Dual Core Laptops
HP 15 BS 629 DC
Intel Celeron Dual Core
4GB RAM | 500GB HDD
15.6" Display | Windows 10
ரூ. 61,900
விசேட விலை ரூ. 51,900
இலவசம் 2 வருட உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
ACER 533QC
INTEL Quad Core
4GB RAM
1TB HDD | 15.6" Display
ரூ.62,900
விசேட விலை ரூ.52,900
இலவசம் 2 வருட உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
Lenovo IP320 Cel
Intel Celeron Dual Core
4GB RAM | 1TB HDD
15.6" Display | Windows 10
ரூ. 55,990
விசேட விலை ரூ. 48,990
3 வருடம் வரையிலான உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
Core i5 & AMD Laptops
ACER 576G i5
i5 8th Gen
4GB RAM | 1TB HDD | 2GB VGA
15.6" Display
ரூ. 110,990
விசேட விலை ரூ. 95,900
இலவசம் 2 வருட உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
ACER A6-A3
AMD A6 9220
4GB RAM | 1TB HDD
Linux | 15.6" Display
ரூ. 69,990
விசேட விலை ரூ. 58,990
3 வருடம் வரையிலான உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
HP 15 BW 504
AMD A9 9420
8GB RAM | 1TB HDD | 2GB VGA
Windows 10 | 15.6" Display
ரூ. 91,500
விசேட விலை ரூ.79,990
3 வருட உத்தரவாதம்
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
பெரிய இடங்களில் இருக்கும் சிறந்த
வேலைக்காரர்களுக்கு
High-End Laptops
Pavilion x360
Core i5 8th Gen
8GB RAM | 1TB HDD
2GB NVidia VGA | Windows 10
14" HD Slim Touch Screen
ரூ.150,000 இலிருந்து
Spectre x360
Core i7 8th Gen
8GB / 16GB RAM | 256 GB / 512GB SSD
Windows 10
13.3" FHD Ultra Slim Touch Screen
ரூ.285,000 இலிருந்து
acer Swift 3
i5 8250U
4GB RAM | 256GB SSD
Windows 10
14" FHD Display
Finger Print
i7 8250U
8GB RAM | 256GB SSD
Windows 10
14" FHD Display
2GB GFMX150 VGA
Finger Print
ரூ. 125,990 இலிருந்து
Core i7 Laptops
HP Pavilion CC154
i7 8th Gen
ரூ. 163,990
விசேட விலை ரூ.137,990
12 மாதங்களுக்கு வட்டி இல்லை
Lenovo IP320 i7
i7 8th Gen | 8GB RAM | 1TB HDD
ரூ. 152,990
விசேட விலை ரூ.130,990
/abansit
For Credit card Holders
60 Months Instalment Plans
16% Off
HNB
Standard Chartered
Nations TrustBank
Abans

# பலவீனத்தை மறைக்கவே தேர்தல் முறைமை மீது பழி

## குற்றஞ் சுமத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 8

அரசின்பலவீனத்தைமூடி மறைக்க தேர்தல்முறைமைமீதுபழிசுமத்துவது ஏற்றுக்கொள்ளமுடியாததாகும். புதிய தேர்தல்முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் செலவுகள், அடாவடித்தனம் குறைந்த தன்மை காணப்படுகின்றது. அரசு தனது அதிகாரத்தைத் தக்கவைக்க மீண்டும் தேர்தல் முறைமையை தமக்குச்சாதகமாகப் பயன்படுத்துவது மோசமானதாகும். இவ்வாறு மக்கள்விடுதலைமுன்னணியின்தலைவர் அனுரகுமாரதிசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தின்போதே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர்தெரிவித்ததாவது:

தேர்தல்உரியநேரத்தில்இடம்பெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். தேர்தல் முறைமைகுறித்துப்பலவேறுவிமர்சனங்கள்எழுந்துள்ளன. 2012ஆம் ஆண்டு தேர்தல் முறைமை முன்வைக்கப்பட்டது. அது பொருத்தம் இல்லாத ஒன்று என்பதும், மாற்றம் ஒன்று வேண்டும் என்பதையும் நாம் அப்போதே தெரிவித்தோம்.

நாடாளுமன்றில் எம்மை விமர்சித்தபலர்மக்கள்விடுதலைமுன்னணிக்குப்பாதிப்புஏற்படும்என்பதால் தான்தேர்தல்முறைமையைஎதிர்ப்பதாகக்கூறினார்கள். நாம்கூறியது இன்று சரியாக உள்ளது.

இந்தத் தேர்தல் முறைமையின் செலவுகள், அதனால் ஏற்படும் அநீதிகள் என்பன மிகவும் மோசமானவையாகும். இன்று மிகவும் இலகுவான வியாபாரமாகத் தேர்தல்கள் மாறியுள்ளன.

அமைச்சர்கள், அமைச்சர்களாவதற்கு முன்னர் அவர்களது சொத்து விபரங்களையும் அவர்கள் பதவிகளைப் பெற்ற பின்னர் அவர்களது சொத்துக்களையும் பாருங்கள். தேர்தல் எவ்வளவு இலாபமான வியாபாரம் என்பது தெரியும்.

பிரதேச சபைகளின் உறுப்பினர்களின்எண்ணிக்கையைக்குறைக்க வேண்டும். அதனை நாமும் ஏற்றுக்கொண்டுள்ளோம். இந்தமுறைமையில் மாகாணசபைகள் பலவீனம் அடையப்போவதில்லை.

இன்றுஎல்லைநிர்ணயம்மூலமாக சிலமுரண்பாடுகள்ஏற்பட்டுள்ளன. 50க்கு50முறையில்சிலகுறைபாடுகள் ஏற்படுகின்றன.

தேசிய ரீதியில் இயற்றும் சட்டத்தில் முஸ்லிம்மற்றும்தமிழர்கள்என்ன கூறுவார்கள், சிங்களவர் என்ன கூறுவார்கள்என்றுகருதமுடியாது. ஒட்டுமொத்தமாக நாட்டுக்கான சட்டமாகவே அமைய வேண்டும். தேர்தல்முறைமையும் அவ்வாறே அமைய வேண்டும்.

பலமான அரசை மக்கள் உருவாக்கிய போதும் நீங்கள் அரசை அழித்துவிட்டு, இறுதியில் தேர்தல் முறைமை மீது பழிபோட்டுள்ளீர்கள். இந்தத் தேர்தல் முறைமை சிக்கலானது அல்ல. விருப்புவாக்கு இல்லாது போவது எமக்குச் சிக்கல் இல்லை. கட்சியாக நாம் இதன் விளைவுகளை அவதானித்துள்ளோம்.

இலங்கை வரலாற்றில் குறைந்த மோதல்கள், இழப்புகளுடன் இடம்பெற்றதேர்தல் உள்ளூராட்சித்தேர்தலாகும். தெரிவானவர்கள் மோசடிக்காரர் என்றாலும் கூட முரண்பாடுகள் இல்லாத தன்மை இருந்தது. செலவுகளைப்பார்த்தாலும்மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

புதிய அரசியல் முறைமை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. மீண்டும் அதனைக் குழப்புவதற்கு நாம் தயார் இல்லை. இன ரீதியான சில முரண்பாடுகள் ஏற்படும் என்றால், மேலதிக ஆசனங்கள் குறித்தும் கலந்துரையாடமுடியும். பலஆலோசனைகள்உள்ளன. அவற்றைநாம் ஆராய முடியும். ஆனால் மீண்டும் பழைய சிக்கல்களைக் கையாள வேண்டாம். குறுகிய திருத்தங்களுடன் தேர்தலைச் சந்திப்போம் -என்றார். (ரி2.5.31)

# பழைய தேர்தல் முறைக்கு மீண்டும் செல்ல முடியாது

## துறைசார் அமைச்சர் விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 8

புதிய தேர்தல் முறைமையினால் எந்த இனத்துக்கும் கட்சிக்கும்அநீதிஏற்படாது. தேர்தலில்தாமதம்ஏற்படும் என்பதற்காகப் பழைய முறைமைக்குச் செல்வது நியாயமில்லை. மோசடிமிக்கபழையமுறைமைக்குச்சென்றால்அதுமக்களுக்குச்செய்யும்துரோகமாகும். பழைய தேர்தல் முறைமை இனவாதத்தைத் தூண்டும். இவ்வாறுமாகாணசபைகள்மற்றும்உள்ளூராட்சிஅமைச்சர் பைசர் முஸ்தபா சபையில் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால் எல்லை நிர்ணயஏற்பாடுகளைஒருமாதத்தில்முடித்துக்கொண்டு உடன்தேர்தலுக்குச்செல்லமுடியும்என்றும்அவர்குறிப்பிட்டார்:

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அனைத்துக்கட்சிகளுடனும்பேசியதன்பின்னர்எல்லை நிர்ணயம்தொடர்பான அறிக்கையைவெளியிடுவோம் என்று குழுவிடம்கோரினேன். தேர்தல்கண்காணிப்பு அமைப்பை நான் கடந்த (வியாழக்கிழமை) சந்தித்தேன். இதன்போது அவர்கள் தேர்தல் முறைமையை மாற்ற வேண்டாம். கலப்பு முறைமையைக் கொண்டு செல்லுங்கள் என்றே என்னிடம் கோரினர்.

பழைய முறைமைக்கு நாம் செல்ல மாட்டோம். புதிய முறைமையினால் உள்ளூராட்சித் தேர்தல் அமைதியாக நடந்தது. ஊழல்மோசடிகளும்பணப்பரிமாற்றங்களும்முழுமையாகக் குறைவடைந்தன.

புதியமுறைமைக்குவாக்களித்துவிட்டுத்தற்போதுஇந்த முறைமை சரியில்லை என்று விமர்சிக்கின்றனர். இதன்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கை தூக்கினார். ஆனால் தற்போது விமர்சனம் செய்கின்றனர். எந்தவொரு ஆலோசனையோ அல்லது மாற்றுவழிமுறைகளையோ கூறுவதில்லை.

சிறுப்பான்மைக்கட்சிகள்தேசியக்கட்சிகளுடன்சேர்ந்து இனவாத அரசியல் நடத்தி வருகின்றன. இதன் ஊடாக உறுப்பினர்களை அதிகரித்தனர். சிறுப்பான்மையினக் கட்சிகள்தனித்துப்போட்டியிட மாட்டார்கள். போட்டியிட்டால் ஒரு உறுப்பினர்கள் கூடக் கிடைக்காது. இந்த முறைமையினால் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறையாது. ஆரம்ப காலங்களில் தேசியக் கட்சியிலேயே சிறுப்பான்மையினர் இருந்தனர். தற்போது அவ்வாறு இல்லை. தற்போதும் முஸ்லிம்கள் பெரும்பான்மையானோர் தேசிய கட்சிகளுக்கே வாக்களிக்கின்றனர்.

தேர்தல் தாமதம் ஏற்படும் என்ற காரணத்துக்காக பழைய முறைமைக்குச் செல்வது நியாயமில்லை.

நான் அழைக்கும்கூட்டங்களுக்குச்சிறுபான்மைக்கட்சிகளின் தலைவர்கள் சிலர் வருவதில்லை. சமூகத்தை விற்கும் அரசியல்செய்கின்றனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் என்னுடன் பேச்சு நடத்தி நல்ல ஆலோசனைகளை எனக்குவழங்கினர். ஆனால்ஏனையோர் அவ்வாறு செய்வதில்லை.

பணத்தை மையமாகக் கொண்ட அரசியல் எமக்குத் தேவையில்லை. மோசடி மிக்கபழையமுறைமைக்குச் சென்றால் அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும்.

கிழக்குமாகாணத்தில்அதிகளவில்பணம் விநியோகித்தமை யார் என்று அனைவருக்கும் தெரியும். சிறுபான்மைக் கட்சிகளுக்கு ஆட்டம் ஆடுவதற்குத் தேசிய கட்சிகள் இடமளித்தமையேபெரும்தவறாகும். பழைய முறைமைக்குச்செல்வது இனவாதத்தைமென்மேலும் அதிகரிக்கும் - என்றார். (ரி2.5.31)

புதிய தேர்தல் முறைமை

# சிறுபான்மைச் சமூகத்துக்கு அநீதி அதை ஒதுக்கி வைத்துவிடுங்கள்

## இப்படிக் கோருகிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூலை 8

புதிய தேர்தல் முறைமையானது சிறுபான்மையின மக்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் அமைந்துள்ளதால் அதை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டுப் பழைய முறையில் மாகாணசபைத் தேர்தலைநடத்தவேண்டும். இவ்வாறு சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம்இடம்பெற்றமாகாணசபைத் தேர்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் தெரிவித்ததாவது.

சர்வஜன வாக்குரிமை கிடைக்கப்பெற்ற பின்னர் இலங்கையில் பல முறைகளில்தேர்தல்கள்நடைபெற்றிருந்தாலும்இன்னும்சாதகமானதொரு தேர்தல் முறைமையைத் தெரிவுசெய்ய முடியாதுள்ளது. எவ்வாறான தேர்தல் முறைமை அவசியம் என்பது இன்றுவரை பரிசீலனை மட்டத்திலேயே இருக்கின்றது.

தேர்தல் முறைமையை பரிசீலிக்கும் ஆய்வுகூடமாக இலங்கை மாறியுள்ளது என்றே கூற வேண்டும். உள்ளூராட்சித்தேர்தலுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல்முறைமையால்எதிர்மறையான விடயங்கள்நீங்குமெனஎதிர்பார்க்கப்பட்டாலும் அது நிலைமையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியது.

மாகாணசபைகளுக்கானஎல்லை நிர்ணய அறிக்கையில்உள்ள குளறுபடிகளை நிவர்த்தி செய்வதற்குப் புதிய குழுவொன்றை அமைத்து மீண்டுமொரு அறிக்கையைப் பெற்றுப்புதியமுறையிலேயேதேர்தலை நடத்தலாம் என்ற நிலைப்பாட்டில்சிலகட்சிகள்இருக்கின்றன. இந்த நிலைப்பாட்டில் இருந்தால் உரிய காலத்தில் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். புதிய தேர்தல் முறைமையை ஓரமாக ஒதுக்கிவைத்துவிட்டுப் பழைய முறையிலேயேதேர்தலைநடத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். இதன்மூலம்தான்நியாயம்கிடைக்குமென நம்புகின்றோம்.

விருப்புவாக்குமுறைமைக்குப்பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறையின் கீழ் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போதுபெரியமோசடிகள்இடம்பெற்றன. அவற்றை எம்மால் தடுக்க முடியாமல் போனது. தொகுதிகளைக் கைப்பற்றுவதற்காகப் பணம் அள்ளி வீசப்பட்டது.

இதற்கு முன்னர் இருந்த முறைமையை விடவும் அறிமுகப்படுத்தப்பட்டமுறையானதுசிக்கல்களை உருவாக்கியது.

எதிர்வரும் டிசெம்பரில் தேர்தல் நடைபெற வேண்டுமானால் பழையமுறையேசிறந்ததேர்வாக இருக்கும்என்பதேஎமதுகட்சியின் நிலைப்பாடாகும். அதுமட்டுமல்ல எல்லைநிர்ணயஅறிக்கையானது தமிழ்பேசும் மக்களுக்குப் பாதகமாகவுள்ளது - என்றார். (ரி2.5.31)

# காலத்தைக் கடத்தாது தேர்தலைநடத்துங்கள்

## சபையில் சுமந்திரன் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 8

உரிய நேரத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாது காலத்தைக் கடத்துவதானது ஜனநாயகக் கட்டமைப்பின் அடிப்படையை மீறும் செயலாகும். மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிக்க வேண்டாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மாகாணசபைத்தேர்தல்சட்டவரைவில் திருத்தங்களைக் கொண்டு வந்து இரண்டு மாதங்களுக்குள் தேர்தலை நடத்தாவிட்டால் 2017 ஆம்ஆண்டுமாகாணசபைத்தேர்தல் சட்டத்தில் 17ஆவது சட்டத்தை அரசு நீக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம்மாகாணசபைத்தேர்தல்கள் தொடர்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசுஆட்சிக்குவந்தவுடன். தேசிய பிரச்சினைக் கான நிரந்தரத் தீர்வு ஒன்றை வழங்குவது, மாகாண சபைஅதிகாரங்களைப்பலப்படுத்தி அதன் மூலமாக ஜனநாயகத்தைப் பெற்றுக்கொடுப்பது, நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கி நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவது, தேர்தல்முறைமையில் மாற்றங்களை உருவாக்குவது போன்ற முக்கிய மூன்று வாக்குறுதிகளைக் கொடுத்தது.

தேர்தல் முறைமைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளபோதும், தேர்தல் நேர்த்தியாக இடம்பெறவில்லை. மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலங்கள் முடிவடைந்துள்ளன. எதிர்வரும் ஒக்ரோபரில் மேலும்மூன்றுசபைகளின்பதவிக் காலம் முடிவடையவுள்ளன.

எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் கடந்தபோதும் அது சபையில் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

மாகாணசபைத்திருத்தச்சட்டவரைவுக்கு அமைய எல்லை நிர்ணய அறிக்கைஅமைச்சரிடம்கையளிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் சபையில்சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்த அறிக்கை நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டுமூன்றில்இரண்டு பெரும்பான்மையுடன்நிறைவேற்றப்படவேண்டும். நிறைவேற்றப்படாத பட்சத்தில் சபாநாயகர் த்லைமையில்மீளாய்வுக்குழுநியமிக்கப்பட வேண்டும். இதுவரை எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் தேவையான மறுசீரமைப்புக்களைச்செய்யாவிட்டால்2017ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தல் சட்டத்தில்17ஆவதுசட்டத்தைஅரசு நீக்க வேண்டும்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிடைத்த அனுபவத்துக்கு அமைய 50க்கு 50 கலப்பு முறையில்தேர்தல்நடத்தப்பட்டால் நிச்சயமாக எந்தவொரு கட்சியும் உறுதியான ஆட்சியை அமைக்க முடியாது. இந்த விகிதாசாரமானது 70 க்கு 30 ஆக மாற்றப்பட வேண்டும் - என்றார்.

(ரி2.5.31)

# ஊடகவரையறைகள்மீது உடன்பாடு கிடையாது

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜீலை 8

ஊடகங்கள் மீதான வரையறைகளில் தமக்கு உடன்பாடு கிடையாது என்று ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொழும்பு ஊடகமொன்றுக்குக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் தெரிவித்ததாவது:

இணையத்தளங்களோஅல்லது வேறு ஊடகங்களின் மீதோ கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் விதிக்கப்படுவதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

கூட்டரசின் கீழ் முழுமையான ஊடக சுதந்திரம் உறுதி செய்யப்படவேண்டியதுஅவசியமானது. ஊடக நிறுவனம் ஒன்று பொய்யான, சேறுபூசும்வகையிலான அல்லது மோசமான முறையில் செய்திகளை வெளியிடுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் செய்திகள் சரியானதா அல்லதுதவறானதாஎன்பதைப்பிரித்துஅறிந்து கொள்ளும் அளவுக்கு மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு அறிவு உண்டு.

ஊடகவியலாளர்கள்அச்சுறுத்தப்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மகிந்த ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை எனச் சீனா சான்றிதழ் வழங்கக்கூடாது.

நியூயோர்க் ரைம்ஸ் ஊடகம் தவறானசெய்திகளைவெளியிட்டிருந்தால்அதற்குஎதிராகமகிந்த ராஜபக்ச வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டும்-என்றார்.(ரி2)

# எந்தப் பிள்ளைக்கும் கல்வியில் அநீதி இழைக்கப்படமாட்டாது

## அரசதலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜீலை 8

நாட்டில்எந்தவொருபிள்ளைக்கும்கல்வியில்அநீதிஇடம் பெற இடமளிக்கப்படமாட்டாது இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.


சைட்டம் நிறுவனத்தின் மாணவர்கள் அவர்களது பெற்றோருடன் கொழும்பு தாமரைத் தடாகக் கலையரங்கில் அரசதலைவரைச்சந்தித்தனர். இதன்போதே அரசதலைவர் இதனைத்தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

பல்வேறு அரசியல் நோக்கங்களைக் கொண்டவர்கள் சைட்டம் பிரச்சினையின் பின்னணியில் இருந்து அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சித்தனர். எனினும், அனைத்துப்பிள்ளைகளினதும்எதிர்காலம்குறித்துஉரிய கவனஞ் செலுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தற்போதைய அரசால் முடிந்திருக்கிறது.

நாட்டின் இலவசக் கல்வியைப் பலப்படுத்தி அரச பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தேவையான அனைத்து மனித மற்றும் பௌதீக வளங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இதுபோன்ற அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களையும் பலப்படுத்தும் கொள்கையை அரசு என்ற வகையில் ஏற்றுக்கொண்டிருக்கின்றது-என்றுள்ளது.

(ரி2)





மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க:0788 79 79 79

ASIA ASSET FINANCE PLC
The Unconventional Finance Company

துரித அழைப்பு:
0769 966 355
0788 79 79 79

| | | | |
|---|---|---|---|
| தலைமை காரியாலயம் | 0773135804 | செங்கலடி | 0773597310 |
| நகர காரியாலயம் | 0772247095 | மொரட்டுவ | 0773868316 |
| வெள்ளவத்தை | 0710979164 | களுத்துறை | 0777130557 |
| வென்னப்புவ | 0773856545 | காலி | 0771750911 |
| கம்பஹா | 0772250523 | யாழ்ப்பாணம் | 0777555826 |
| குருணாகல | 0772341794 | மட்டக்களப்பு | 0777242912 |
| கிளிநொச்சி | 0776120953 | சாவகச்சேரி | 0770344374 |
| மாத்தறை | 0773930440 | பருத்தித்துறை | 0773671967 |
| திருகோணமலை | 0773688063 | திகன | 0777533326 |
| சிலாபம் | 0728994395 | ஹட்டன் | 0775997986 |

இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. Tel - 0115 66 99 22
Fax - 0112 577 477 Web - www.asiaassetfinance.com

DPMC

## டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் பாரிய வாகன நிறுவனம் என்பதுடன் டேவிட் பீரிஸ் குழுமத்தின் உறுப்பு நிறுவனமாகும். இந்தக் குழுமமானது வாகன உற்பத்திகள், நிதிச் சேவைகள், சரக்குப் பரிமாற்றம், களஞ்சிய செயற்பாடுகள், சூழல் நட்பான விவசாயம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் முதலீடுகளைச் செய்துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள பஜாஜ் வாகனப் பாவனையாளர்களுக்கு விற்பனைக்குப் பின்னரான சேவையை தரமான முறையில் வழங்கும் குழுவில் நீங்களும் பங்காளராகுங்கள்.



### விற்பனை பிரதிநிதிகள் (யாழ்ப்பாணம், வவுனியா)

**பொறுப்புக்கள் :**

- விற்பனை இலக்குகளை அடைதல்
- வழங்கப்பட்ட கால அட்டவணைக்கு அமைய ஓடர்கள் மற்றும் கொடுப்பனவுகளை சேகரித்தல்
- இருப்புக்களை கண்காணித்தல்
- போட்டியாளர்களின் தகவல்களை சேகரித்தல்

**தகுதி :**

- க.பொ.த உயர்தரத்தில் இரண்டு சித்திகள்
- க.பொ.த. சாதாரணதரத்தில் ஆங்கிலம் மற்றும் கணிதபாடங்கள் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி.

அழுத்தமான சூழலில் பணியாற்றுதல், உயர்ந்த மட்டத்திலான தனிப்பட்ட ஒழுக்கம், நேர்மை என்பன தெரிவுக்கான அடிப்படைகளாகும்.

எமது எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யக் கூடிய நபராக நீங்கள் உணர்ந்தால் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் மின்னஞ்சல் மூலம் அல்லது தபால் மூலம் விண்ணப்பத்தை அனுப்பிவையுங்கள். உறவுமுறையற்ற இரண்டு உறுதிப்படுத்துனரின் விபரங்களுடன், தபால் உறையின் வலது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்

**பிராந்திய முகாமையாளர் - மனித வளம்**
**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட்**
இல.75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02.
மின்னஞ்சல் : careers@dpmco.com

David Pieris Group of Companies



## அமைச்சரவை அனுமதிக்காய் காத்திருக்கும் வானூர்தித் தளம்

கொழும்பு, ஜூலை 8
அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததன் பின்னர், மத்தள பன்னாட்டு வானூர்தித் தளத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டுத் திட்டமாக முன்னெடுக்க உள்ளதாகப் போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார். (ரி2)




# தேர்தல் முறைமை மாற்றத்தால் சிறுபான்மையினருக்குபாதிப்பு



கொழும்பு, ஜூலை 8
மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் சிறுபான்மையின மக்களுக்குப் பெரும் பாதிப்பாக அமையும். மாகாண சபைகளில் தற்போது 43 முஸ்லிம்உறுப்பினர்கள்தான்இருக்கின்றனர். புதிய எல்லை மீள் நிர்ணயம் மூலம் அந்த எண்ணிக்கை 13 அல்லது17 ஆகக்குறைவார்கள். இதனால், சிறுபான்மைஇனமக்களைப் பிரநிதிநிதித்துவப்படுத்துபவன்என்ற வகையில் முற்றாக நிராகரிக்க வேண்டும் எனக் கருதுகின்றேன். இவ்வாறு முஸ்லிம் சமயம் கலாசாரம்மற்றும்தபால்த்துறைஅமைச்சர் எம். எச். ஏ. ஹலீம்தெரிவித்தார்.

மாகாணசபைமீள்எல்லைநிர்ணய அறிக்கைதொடர்பில்நாடாளுமன்ற விவாதத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,

1987ஆம்ஆண்டுஇலங்கைஇந்திய ஒப்பந்தத்தின் மூலம் தான் மாகாண சபைத் தேர்தல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாகாண சபை உருவாக்கத்துக்குஎதிராககருத்துக்கள்இருந்தன. மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்போதுஅந்தத்தேர்தலில்வேட்பாளராகக் களமிறங்கியவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தது. தொடர்ச்சியாக அரசியல் மேடைகளில் மாகாண சபையை இல்லாமல் செய்யுமாறு பேசிவந்தனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, நல்ல பாடம் ஒன்றைப் படிக்கக் கிடைத்தது. அதில் பல சிக்கல்கள் காணப்பட்டன. அந்தத் தேர்தல் முறை மிகவும் சிக்கலுக்குள்ளான தேர்தல் முறையாகவே நான் பார்க்கின்றேன்.

இந்தத் தேர்தலின் போது போட்டியிட்டுத் தோல்வியடைந்தவேட்பாளரே அந்த சபையின் தவிசாளராகக் கடமையாற்றுகின்றார். இப்படியான மிகவும் மோசமானநிலையில்தான்கடந்தஉள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது.

எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாக நியமிக்கப்பட்டகுழுவினர்என்னைச் சந்திக்க வந்தனர்.

சிங்களம் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றித்து வாழுகின்ற பிரதேசமாகையால், நான் பிரதிநிதுத்துவப்படுத்தும் தேர்தல் தொகுதி இரட்டைத் தேர்தல் தொகுதி ஆகும்.

தற்கால சூழலையைக் கருத்திற் கொண்டு இந்தத் தேர்தல் தொகுதியை உடைக்க வேண்டும் எனக் கூறினேன். ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியைஇரண்டாகஉடைப்பதே அவர்களது நோக்கமாகவிருந்தது-

இது தொடர்பாக நான் அமைச்சர் என்றவகையில்சிங்களமக்கள்என்னைப்பற்றித்தவறான எண்ணங்களைக்கொண்டுள்ளனர். சமூகநல்லிணக்கத்துக்கு பன்முகத் தொகுதி முறையேதற்காலத்திற்குஅவசியமாகும் என்று எதிர்பார்க்கின்றேன்.

சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லை நிர்ணயம்மேற்கொள்ளும்போதுபன்முகத் தொகுதிகளை அமைக்குமாறு எல்லைமீள்நிர்ணயசபையினரிடம் நான் கோரிக்கை விடுத்த போதிலும் பெரியளவில் கவனத்தில் கொள்ளவில்லை. இனத்துக்கிடையிலான உறவை சீர்குலைக்க வேண்டாம் என்ற கோரிக்கையை விடுக்கின்றேன் - என்றார். (ரி2)






அம்பாள் துணை

யாழ் புன்னாலைக்கட்டுவன் வடக்கு
(கடவத்தறை)
திருவருள்மிகு
ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம்

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

காலம் : இன்று (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 11.30 முதல் 12.30 மணிவரை

குறிப்பு : அன்று பகல் மகேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

தேர்த்திருப்பணி உபயம் : கதிரேசு கனகசபாபதி குடும்பத்தினர்.

தேர் சிற்பாசாரியார் : சரவணமுத்து ஜெயமோகன் ஆசாரியார் (கொழும்பு)

ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர்

# மாடிக்கட்டடத்தின் இரு பகுதிகள் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, 187ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டடத் தொகுதியில் ஒவ்வொன்றும் தலா 1350 சதுர அடி பரப்பு கொண்ட மின்தூக்கி வசதியுள்ள 2ஆம், 3 ஆம் மாடிகள் வாடகைக்கு உண்டு. பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கிழமை நாள்களில் முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை மேலே உள்ள விலாசத்தில் நேரடியாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# பதவி வெற்றிடங்கள்
## எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

இலங்கை எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு- பூரண பராமரிப்பை 134 சர்வதேச நாடுகளிலும் இலங்கையில் 37 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற சமூகசேவை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரச, மதசார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவி வெற்றிடங்கள்

1. **FSP இணைப்பாளர் (35 வயதிற்கு உட்பட்டோர்) – மல்லாவி**
2. **சிற்றூழியர் - Labour (ஆண் 35 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்**
3. **அன்னை (28 - 45 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்**

### தகைமைகள்

**பதவி 1**
- சமூகப்பணி/ சமூகவியல் (Diploma) கற்கைநெறிச் சான்றிதழினை அல்லது க.பொ.த உ/தர சித்தியுடன் கூடிய சமூகவியல்ப் பணியில் முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- சமூகமொன்றில் வெளிக்களவேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ள ஒருவர் சாரதி அனுமதிப்பத்திரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கிலமற்றும் சிங்களமொழியறிவுகொண்டிருப்பதுவிரும்பத்தக்கது.
- வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**பதவி 2**
- சமையல் வேலைகளில் அனுபவமுள்ள நற்பழக்க வழக்கம், பணிவு, தேக ஆரோக்கிமும் கொண்டவராக இருத்தல்.
- சாரதி அனுமதிப் பத்திரத்தினைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

**பதவி 3**
- திருமணமாகாத, ஆகியிருப்பின் விதவையான/ விவாகரத்துப் பெற்றிருப்பதோடு தனக்கெனப் பிள்ளைகள் கொண்டிராதிருப்பதோடு குடும்ப சுமைகள்/ பொறுப்புக்களற்றவராகவும், சிறுவர்களுக்கான அன்பு ஆதரவளித்து நல்வழிகாட்டும் பொருட்டு நற்தேகாரோக்கியமும் நற்பண்புகளையும் கொண்டுள்ளவராகவும், எழுத்தறிவாற்றலுள்ளவராக இருத்தல்.

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) 18.07.2018 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும். இப் பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
**இல:219,நாயன்மார்கட்டு,**
**நல்லூர்,யாழ்ப்பாணம்.**

**தொ.பே:-**
**021-221 1101**
**077-3733711**

**மின்னஞ்சல்:**jaffna@soscvsrilanka.org

(J/9903/11.7)

# யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட யாழ் வைத்தியசாலை



**24 மணிநேர சேவை**

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

**✔ General Surgeries**
- **Vericosevein** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)
- **Hernina** (ஹேணியா சிகிச்சை)
- **Appendectomy** (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை)
- **Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- **Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)
- **Anal Fissure**
- **Anal Fistula**
- **Haemorrhoids (Piles) Surgery**

**Laser Surgeries**
- **Laser Vericose Surgery** (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

**Eye Laser Treatment**
நீரிழிவு நோயாளர்களுக்கான லேசர் சிகிச்சை

**✔ Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)
- **Hernia** (ஹேணியா)
- **Appendectomy** (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை)
- **Hysterectomy** (கருப்பை அகற்றல்)
- **Cholecystectomy** (பித்தப்பை அகற்றல்)
- **Lap & Dye Examination**

**✔ E.N.T சத்திர சிகிச்சை**
- **Nasal** (மூக்கு)
- **Septoplasfy** (மூக்கு சீராக்கள்)
- **Ear** (காது)
- **Myringoplasy** (காது சௌவு துவாரம் அடைத்தல்)
- **Mastoidectomy**
- **Thyroidectomy** (தைரொட்டு சுரபி அகற்றல்)
- **Parotidectomy** (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்)

**✔ Endocopy** (அதிநவீன என்டர்ஸ்கொப்பி )

அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

- வெளிநோயாளர் பிரிவு O.P.D
- மருந்தகம் Pharmacy
- ஆய்வுக்கூட சேவை Laboratory



மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் வைத்திய சாலை, வைத்திய நிபுணர், ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(நிபந்தனைக்குட்பட்டது)

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

## VISA

**Canada, USA, UK, Australia** மற்றும் **Europe** நாடுகளுக்கான **Schengen Visa** (செங்கன் விசா) உங்கள் தேவைக்கு ஏற்றவாறு **Visa** கள் செய்து தரப்படும்.

**071 958 0073, 072 331 1178**

## விற்பனைக்கு

பொற்பதி வீதியில் 2 பரப்புக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.

### நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

1 1/2 மாதம் நிரம்பிய ஊசி போட்ட Rich Back Labrado குட்டிகள் விற்பனைக்குண்டு.

14, ஸ்ரீவேங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்பு - 077 7730 567**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் காணி உடனடி விற்பனைக்குண்டு. நீங்கள் விரும்பிய பரப்பளவின் படி பிரித்துக்கொடுக்கப்படும்.

(தரகர் வேண்டாம்)

**077 690 3287** (ACD/265) (11.17)

## நியத ජය நியத்த ஜய Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம் : 682 வர்ணம் : நீலம்

திகதி 2018.07.06

வெற்றி இலக்கங்கள்: 26 37 59 64 ஆங்கில எழுத்து: N

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,993,884/-

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk


1919 இற்கு அழையுங்கள் - 0114 824 824, 0112 333 778

## கல்லீரல் பாதிப்பிலிருந்து மீட்சி

கல்லீரல் கொழுப்பு, ஹெபடைடீஸ், மஞ்சள் காமாலை, கல்லீரல் இளைநார் வளர்ச்சியடைதல், கல்லீரல் புற்றுநோய் போன்ற கல்லீரல் பாதிப்புகள், மதுபானப்பாவனையினால் அல்லது வேறுகாரணிகளினால் உருவாகும் வைரஸ் தொற்று அல்லது வீக்கத்தினால் ஏற்படும்.

அறிகுறிகள்: கல்லீரலில் ஏற்படும் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், கண்கள் மஞ்சள் நிறமாதல், நிறை குறைதல், நீர்க்கோவை, அரிப்பு

எமது நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உட்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட கல்லீரல் கலங்கள் மீளமைக்கப்படும்.




**Hotline:**
**0777555600**
**0777708310**
**0777708330**

**FAIR PHARMA (PVT) LTD**

செலிங்கோ ஹவுஸ்,10வது மாடி கிழக்கு, இல:60, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## வேலைவாய்ப்பு

நாவற்குழி சந்தி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்குகின்ற பிரபல தனியார் நிறுவனத்துக்கு

- சந்தைப்படுத்தல் அதிகாரிகள்
- சேகரிப்பு அதிகாரிகள்
- பட்டா வாகனங்கள்
- சாரதிகள்

ஆகியோருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் விரும்பத்தக்கது. (CS/18013) (11.17)

Reg.No.pv61840

**Shafic - 077 372 8107**
**Ananthan - 072 502 9966, 011 438 4120**

## SARUKAYA CONSTRUCTION (PVT) LTD (CIDA Grade C4 )

வடமாகாணத்தில் கட்டட நிர்மாணத்துறையில் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு பின்வரும் அலுவலர்களுக்கும் வேலையாள்களுக்கும் வெற்றிடம் உள்ளது.

**அலுவலர்கள்:**
1. பொறியியலாளர் (Civil)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Civil, Electrical)
3. கணிய அளவையாளர்கள் (QS)

**வேலையாளர்களும் உப ஒப்பந்தகாரர்களும்**
1. மேசன் வேலை
2. கம்பி வேலை
3. தச்சு வேலை
4. கூலியாள்கள்
5. அலுமினிய பொருத்து வேலைகள்
6. குழாய் பொருத்துனர்கள்
7. மின் இணைப்பாளர்கள்

தொடர்புகளுக்கு: **நிர்வாக உத்தியோகத்தர்**
Sarukaya Construction (pvt Ltd
**இல.09, நந்தாவில் ஒழுங்கை, தாவடி.**
Email:- vacancynsc@gmail.com
077 712 0945, 021 221 3663, 076 826 4864 (CS.18073) (13.17)

## வளர்ப்பின கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

வான்கோழி, கினிக்கோழி, ஊர்க்கோழி,பண்டம், தாரா, போலிஸ், கழுத்து வெட்டிக்குஞ்சு, சேவல்குஞ்சு என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**மொத்த விற்பனைக்கு மிகுந்த விலைக்கழிவு உண்டு.**

மல்ரி பாம் பெட் பரடைஸ்
941, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
**021 221 7600, 075 988 0000,** (CS/17969)(11.17)

## ஜெயக்குமார் திருமணசேவை

1986 வெளிநாட்டு பெண் கேட்டை. பாவம் 70 படித்த மணமகன் தேவை
1994 வெளிநாட்டு பெண் ஆயிலியம். பல்கலைகழகம் படித்த மணமகன் தேவை
1984 வெளிநாட்டுப் பெண். திருவோணம் படித்த மணமகன் தேவை
1984 பட்டதாரி வெளிநாட்டு கிறிஸ்றியன் பெண். படித்த பட்டதாரி மணமகன் தேவை.

இலங்கையில் படித்த மணமகன், மணமகள் தேவை (cs.13061) (13.17)

077 535 3289, 075 568 5766, 076 178 7848
வைபர் - 009 476 725 0144

## காணி விற்பனைக்கு

நெல்லியடியில் இருந்து மாலிசந்திக்குச் செல்லும் பிரதான வீதியில் ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்துக்கு அருகில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CH/323)(11.17)

தொடர்பு :- **076 186 1178**
மின்னஞ்சல் :- a.theva19@gmail.com
Viber :- **0047 4739 9537 / 0047 4131 4061**

## விநியோகஸ்தர்கள் தேவை

உயர் தர தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்டதும், இலங்கைச் சந்தையில். 15 வருடங்களுக்கு மேலாக நம்பிக்கையானதுமான

**போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் நிறுவனத்துக்கு**

விநியோகஸ்கதர்கள் பின்வரும் இடங்களுக்கு தேவை

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்.

தேவை - Bank Gurenty
Vehicle, Store Facility

Contact - 077 330 5036/ 077 253 2591
info@clearwater.lk

CLEAR WATER



(Cs.18012) (13.17)

# INVITATION FOR BIDS (IFB)

## MINISTRY OF MEGAPOLIS & WESTERN DEVELOPMENT WORLD BANK FUNDED STRATEGIC CITIES DEVELOPMENT PROJECT (Cr. No. 5800-LK)

## REINSTATEMENT OF EXISTING DRAINS IN JAFFNA

1. The Government of Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the World Bank towards the cost of Strategic Cities Development Project including the city region of Jaffna. It is intended that part of the proceeds of this credit will be applied to eligible payments under the Contract for Reinstatement of Existing Drains in Jaffna.
2. The Project Director, Strategic Cities Development Project (SCDP) invites sealed bids from eligible and qualified bidders for the following works contract.

| Contract Title &No | Non-Refundable Bid fee per of Bidding documents | Duration | Engineering Estimate LKR Mn | Amount of Bid Security |
|---|---|---|---|---|
| Reinstatement of Yamuna Road Drainage &Grusolt Veethy to Mathews road drainage SCDP/WB/JF/WK/13 | Rs. 4,000.00 | 120 Days | 13.60 | Rs. 150,000,00 |
| Reinstatement of Kachcheri Forest Lane Drainage. SCDP/WB/JF/WK/14 | Rs. 5,000.00 | 150 Days | 18.70 | Rs. 200,000.00 |

The work consists of site clearing, renovation and re-construction of existing drains and other connected structures.

3. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements.

| Contract Title &No | CIDA Minimum Grade & Field of Specialization | Qualification requirement | Minimum liquid assets or credit facilities |
|---|---|---|---|
| Reinstatement of Yamuna Road Drainage &Grusolt Veethy to Mathews road drainage SCDP/WB/JF/WK/13 | C6 or above Highway/ Irrigation and Drainage canals. | • Experience in the construction of at least three contracts of similar nature, value and complexity equivalent to the proposed works during last five years. • A Technical Officer qualified in NCT (Civil) or equivalent with 15 years' relevant experience. | Rs 1.5 Mn |
| Reinstatement of Kachcheri Forest Lane Drainage. SCDP/WB/JF/WK/14 | | | Rs 2.0 Mn |

5. Interested bidders may obtain further information from Additional Project Director (Jaffna), Project Implementation Unit, SCDP, 3rd floor (A16), District Secretariat, Jaffna, Tel.021 2216383, email: scdpjf@gmail.com and inspect the bidding documents at the same address during normal working hours from **05.07.2018until 25.07.2018** from 09.00hrs to 15.00hrs on week days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application addressed to Project Director, (SCDP), 4th floor, Sethsiripaya (Stage 01), Battaramulla and could be collected at Project Implementation Unit, SCDP, 3rd floor(A16), District Secretariat, Jaffna from**05.07.2018**until **25.07.2018** from 09.00 hrs to 15.00 hrs upon payment of a non-refundable fee. The method of payment will be cash payment.
7. Bids shall be delivered in duplicate to the address: Additional Project Director (Jaffna), Project Implementation Unit, SCDP, 3rd floor(A16), District Secretariat, Jaffna on or before 2.00 pm on **26.07.2018.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid up to **25.10.2018.**
9. All Bids shall be accompanied by a Bid-Security as mentioned above by cash deposit or a bank draft issued by a commercial bank, which shall be valid up to **26.11.2018.**
10. The pre-bid meeting will be held on **13.07.2018** at 2.00 pm at the office of Additional Project Director (Jaffna), SCDP, 3rd floor(A16), District Secretariat, Jaffna. Bidders should arrange their own site visit prior to the pre-bid meeting.

Project Director,
Strategic Cities Development Project (SCDP),
4th floor,
Sethsiripaya (Stage 01),
Battaramulla.

## வீட்டு வேலையாள் தேவை

யாழ். நகர பகுதியில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.

தொடர்பு இல: 076 120 2765

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : 076 9646 185

## சிறுநீரகம் தேவை

34 வயதுடைய சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O,A குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை.

(CS/18023)(11,17)

**077 562 1613, 076 304 7716**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முதல்தர விருந்தினர் விடுதிக்கு யாழ்ப்பாண உணவுவகை தயாரிக்கக் கூடிய ஆண்/ பெண் பணியாளர் தேவை.
சம்பளம் 35,000/ தொடக்கம் 50,000/- ரூபா வரை.

**077 251 4981** (CS/18039) (11,17)

## வீடு வளவு விற்பனை

சுன்னாகம் K.K.S. வீதியில் வீட்டுடனும் தனிக் கிணற்றுடனும் 9½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. அத்துடன் T.V.32" LED (Sony) சிங்கர் பிறிஜ் உம் விற்பனைக்கு உண்டு.

(CS/18063)(11,17)

**077 691 3059, 077 513 2261**

## பூசகர் தேவை

**மகா கணபதி ஆலயம், எட்மண்டன், கனடா**

மேற்கண்ட ஆலய குருக்களுடன் சேர்ந்து பூசை செய்ய, ஸமார்த்த சம்பிரதாயத்தில் தகுதி பெற்றவரும், இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள காமிகம் மற்றும் காரண ஆகம முறையில் தேர்ச்சி பெற்ற ஒரு பூசகரின் சேவை தேவைப்படுகின்றது.
தகுதியுள்ளவர்கள் தங்களைப் பற்றிய விவரங்களுடன், அனுபவங்களையும் கொண்ட விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலம் albertamgsa@gmail.com இற்கு அல்லது தபால் மூலம் **MGSA, P.O.Box 62035, Yellowbird PO,Edmonton AB T6J 4VO. Canada** என்ற விலாசத்துக்கு **ஜூலை 31, 2018** இற்கு முன் கிடைக்கும்படி அனுப்புமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**Board of Trustees,**
Maha Ganapathy Society of Alberta,
Edmonton, Canada,
www.mahaganapathytemple.com

(IN/6024)(11)

## விற்பனைக்கு

தெமட்ட கொடையில் தொடர்மாடி விற்பனைக்கு.
Condomonium Apartment
**Hultsdorf Steet, Colombo 12**
**077 734 6002** (ACO/264) (11,17)

## ஸ்கூட்டர் விற்பனைக்கு

**154 - XXXX** பஜாஜ் ஸ்கூட்டர்
**CLASSIC (SL)**
விற்பனைக்குண்டு.

**077 949 1129** (CS/18067) (11,17)

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L - பொருளியல்
A/L - வணிகக்கல்வி
O/L - குடியியற் கல்வி
தனியாகவும் குழுவாகவும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்

**077 900 7597** (CS/18032) (11,17)

## அனுபவம் மிக்க தொழிலாளர் தேவை

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மாபிள் வியாபார நிலையத்துக்கு மாபிள் வியாபாரத்தில் அனுபவமுள்ள தொழிலாளர் தேவை.

**071 818 6803, 021 205 9455**

## வீடு வாடகைக்கு உண்டு

சுண்டுக்குழி பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு அனெக்சாக சிறிய குடும்பத்துக்கு மாத வாடகைக்கு விடப்படும். சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**077 777 7384**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதியில் இரு கடைகள் வாடகைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்கு உண்டு. புடவை / பான்சி / செருப்புக் கடைக்கு உகந்தது. வாடகை 30,000/-

**077 361 1282**

## விற்பனைக்கு

**Hino** லொறி டிப்பர் 2 கியூப் விற்பனைக்கு.
**227 XXXX** இலக்கமுடைய வாகனம் ( 27½ லட்சம்)
**நிசான் கார் FB15 GZ XXXX** இலக்கமுடைய கார் ஒன்று விற்பனைக்கு ( 27½ லட்சம்)

**076 184 8698**

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் சந்திக்கு அண்மையில் A9 வீதியுடன் இணைந்த 25 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தேவையில்லை)

**077 108 2365** (ACH/412) (11,17)

## கார் விற்பனைக்கு

**TOYOTA** கொறிலா **2009**
**141 Model** கார் **43000 km** ஓடியது.
அலுமினிய நிற கார் உடன் விற்பனைக்கு.

**077 318 6842** (C3/971) (11,17)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 இல் பிறந்த, அனுசம், செவ்வாய் குற்றமற்ற கிரகபாவம் மூன்று சுற்றும் 24 உடைய, BSc Engineer (Q.S) ஆக அபுதாபியில் கடமையாற்றும் மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை.
அபுதாபியில் குடும்பமாகவும் வசிக்கலாம்.

(CS/17958)(11,17)

**021 222 5175**

## காணிவிற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு கிழக்குப் பக்க மதிலுக்கு அண்மித்ததாக அமைதியான சுற்றாடலில் இரண்டு வீடுகள் கட்டக் கூடிய மின்சார வசதியுடன் இரண்டேகால் பரப்புக்காணி (2¼) உடன் விற்பனைக்குண்டு.

புரோக்கர் சின்னத்தம்பி
**077 284 0537** (CS/17998) (11,17)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 4 அங்கத்தவர்களை உடைய அரச சேவையில் கடமையாற்றும் குடும்பத்துக்கு உகந்தவீடு தேவைப்படுகிறது.

**077 136 0734**

## ஆட்டோ தேவை

பொறுப்பான சாரதியுடன் ஆட்டோ மாதாந்த வாடகைக்கு தேவை.

**யாழ்பாடி**
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868, 077 736 0353**

## FOOD SALES VACANCIES
**(ஆண் /பெண்) வெற்றிடம்**

உணவு விற்பனைக்கு முழுநேர பகுதிநேர (Full Time/ Part Time) வெற்றிடங்கள் உள்ளன.அரச/ தனியார் சேவையில் உள்ளவர்களும் பல்கலைக் கழக கல்லூரி மாணவர்களும் ஏனையோரும் விண்ணப்பிக்கலாம்.

**யாழ் பாடி**
49 - 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868/ 077 736 0353**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ( Tusker Ashok Ley Land ) 41 XXXX இலக்கமுடைய புதிய மரபொடி அடிக்கப்பட்ட லொறி விற்பனைக்குண்டு.

**077 251 4981** (CS/18040) (11,17)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள கட்டட வேலைகளுக்கு மேசன் மற்றும் கூலியாள்கள் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. மேலதிக கொடுப்பனவு ( OT) வழங்கப்படும்.

**075 474 3151** (CS/18014) (11,17)

## தளபாடங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள England Raleigh Bicycle (சைக்கிள்) சோபா செற், கதிரை செற், ஸ்கிறீன் விற்பனைக்கு உண்டு.

**077 841 1895** (CS/18035) (11,17)

## வேலைவாய்ப்பு

வென்னப்புவ தும்புத் தொழிற்சாலைகளுக்கு பொதுவான தொழிலாளிகள் 1000/= லிகிதர்கள் சிங்களம் தெரிந்தவர்கள், சாரதிகள், மேற்பார்வையாளர்கள், முகாமைத்துவ மேற்பார்வையாளர்கள், தொழிலாளர்கள், உதவியாளர்களுக்கு சமையலுக்கான ஆள்கள் (குடும்பமாக), இலவச உணவு, தங்குமிடம், சம்பளம் போனஸ், ஆயுள் காப்புறுதி, வேறு ஊக்குவிப்புகளும் உண்டு.

- 071865 2514, 071865 2510; 077 104 2510

## உணவு விற்பனை முகவர்கள் தேவை

எமது நிறுவனத்தின் அதி உயர் உணவு உற்பத்திகளை விற்பனை செய்ய உணவகங்களும் மற்றைய முகவர் நிறுவனங்களும் தேவை.

(C7721)(11,17)

**யாழ்பாடி**
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
**021 222 6868, 077 736 0353**

## காணிவிற்பனைக்கு

கனகராயன்குளம் வடக்கு, கண்டி வீதி அருகில் ( A-9 Road) கடைக் கட்டடத்தொகுதி அமைப்பதற்குரிய காணி உடன் விற்பனைக்கு உண்டு.

**076 857 3798, 077 871 5430**

## தினமும் கொண்டாட்டம்

விருந்தினர் விடுதி
**யாழ். ஒடியல் கூழ் - 150/=**
**இந்தியன் தம் புரியாணி -250/=**
**மதிய / இரவு உணவு**
**பிறைற் றைஸ் / நூடில்ஸ்**
**பைட்ஸ் மற்றும் மேலும் பல**

**யாழ்பாடி**

## மரண அறிவித்தல்

### அமரர் திரு.நாகலிங்கம் தயானந்தன்

**பட்டயக் கணக்காளர், முன்னாள் உதவி பொதுமுகாமையாளர் - மக்கள் வங்கி (வடமாகாணம்), யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்.**



தோற்றம் 07.12.1950 மறைவு 05.07.2018

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தயானந்தன் 05.07.2018 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் தவப்புதல்வனும், திரு.திருமதி கதிரவேலு - மகேஸ்வரி அம்மா தம்பதிகளின் மருமகனும், தனபூபதியின் அன்புக் கணவரும், அஞ்சனா, அனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தயாநிதி வரதராஜா, திருமதி தயாரதி ஆனந்தநாகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற Dr.கனகராஜர், திருமதி செல்வராணி திரவியராஜா, திருமதி லக்ஷ்மிதேவி சிவநாதன், திரு.கந்தஞானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.07.2018 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் , கந்தர்மடம், பழம்வீதி, 48/5 அவருடைய இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் முற்பகல் 10 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி, பிள்ளைகள்.**

(CS/18064) (11,17)

**077 166 8096, 077 950 6639**

## மரண அறிவித்தல்

### சண்முகம் திரேசம்மா

**(முன்னாள் வவுனியா வைத்தியசாலை ஊழியர்)**



பிறப்பு 26.06.1934 இறப்பு 05.07.2018

வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டசண்முகம்திரேசம்மா05.07.2018 காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு இறம்பைக்குளம் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**
**சூசைப்பிள்ளையார் குளம்,வவுனியா.**
**077 675 8966**



# ஆசிரியர்களுக்கும், வேலை செய்பவர்களுக்கும் ஓர் சிறந்த வாய்ப்பு!

UGC APPROVED University Grants Commission

## BSc-Education

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்பு, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படுகின்றன.

- காலம் : 1 வருடம்
- தகைமை : 3 வருட ஆசிரியர் சேவை

**ஆன்லைனில் கற்கும் வசதி**

தொலைதூரத்தில் வசிப்பவர்களுக்கு.

## MSc-Education

- காலம் : 1 வருடம்
- தகைமை : 10 வருட ஆசிரியர் சேவை

வகுப்புகள்:

சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில், கொழும்பு மற்றும் நீர்கொழும்பில் அமைந்துள்ள எமது கல்வி' நிலையங்களில் நடாத்தப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு

டிவின் 0714893740 சுரேஷ் 0763487674

# REACH THE PINNACLE OF SUCCESS!

## BBA BSc-IT

Duration: 1 Year

Entry requirements

HND or Advanced Diploma.
OR Equivalent Qualification accepted by the University. OR
3 Years Working experience in the Industry (Junior Executive Level)
3 Years Experience in Teaching

## MBA

Duration: 1 Year

Entry requirements

Bachelor's Degree OR Equivalent.
OR
5 Years Working experience in the Industry. (Executive Level)

## Ph.D DBA

Duration: 3 - 5 Years

Entry requirements

Bachelor's Degree,
Master's Degree with Experience



Divin 0714893740

Lakshika 0765304697

Hansi 0715364198

HOTLINE 011-7574500

AIMS EDU Since 1987 31 Years of Academic Excellence
Global knowledge local reach

**AIMS College**

33A, விஜயகுமாரதுங்க மாவத்தை கொழும்பு 5.
349/2, மெயின் வீதி, நீர்கொழும்பு.

www.aimscollege.lk
info@aimscollege.lk

ப்ரியமதா பயஸ்



# கிடைத்தற்கரிய உயிர் கொடையை காவல் செய்வோம்

## எண்ணங்களை சுய மதிப்பீட்டின் வழி வழிநடத்திச் செல்வோம்

தமிழ் சமூகத்தின் பொதுமைக்குள் அண்மைக்காலமாக தோற்றம் கொண்டுள்ள மிகப்பெரிய ஆபத்தின் அறிகுறியாக தற்கொலைகள் அமைந்துள்ளன. பிரச்சினைகளை பகுத்தறிந்து தீர்வினை நாடாது, எழுந்தமானமாக உருவம் கொள்கின்ற எண்ண வெளிப்பாட்டுக்கு தன்னிலையுள் விளக்கம் தந்து, அதற்கு வடிவம் கொடுத்து மரணம் தான் அதற்கான முடிவு என அருமந்த உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். உண்மையில் இந்த விடயம் சமூகப் பொதுமையுள் அங்கத்துவம் பெறுகின்ற ஒவ்வோர் தனிமங்களும் கொண்டுள்ள சமனிலையற்ற இடைத்தொடர்பின் இடைவிலகலை வெளிப்படுத்தி நிற்கிறது. பலவீனமான சமூக கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இதிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

### ஆயுளைப் பயனுற பேணுவோம்

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மரணம் தான் முடிவு என்ற செயற்போக்கு இல்லாதொழிக்கப்பட வேண்டும். சமூக வெளியில் சிலரது மரணம் வாழ்க்கைப் பயணத்துக்கான ஆரம்பத்தை தந்துள்ளது. சிலரது மரணம் குடும்ப நிலையில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. சிலரது மரணம் பல பேர்களை மனதளவில் பாதிப்படையச் செய்துள்ளது. இன்னும் சிலரது மரணம் ஒரு சமூகத்தின் இருப்பையே சிதைவடையச் செய்துள்ளது.

இந்த நிலையிலே யாரால் யாருக்கு, எப்போது எப்படி இறப்பு நிகழும் என்பதை நாம் கணக்கிட்டுக் கொள்ள முடியாது. ஆனால் நாமாகவே முடிவு செய்து உயிரை மாய்த்துக்கொள்வது தெரிந்தே நடக்கின்றது. இங்கு எமக்கான வாழ்க்கைக் காலம் மரணத்தோடு முடிவடைந்துவிடக்கூடாது. நாம் மரணத்தின் பின்பும் வாழ வேண்டும். நாம் பூமியில் வாழ்ந்த காலத்தில் செய்த நற்காரியங்கள் இதற்கான ஆரம்பங்களைத் தரும். ஆகையால் எமக்கென குறித்தொதுக்கப்பட்ட ஆயுள் காலத்தை பொருத்தமாக பயன்கொள்ள முயற்சிக்க வேண்டும். வலிந்து மரணத்தை வரவழைத்திடக்கூடாது.

### கிடைத்தற்கரிய உயிர்மம்

'வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கு இடமேது' என்று கவியரசர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார். இந்த உலகத்தில் நாம் அனைவரும் நீண்ட காலங்களுக்கு தங்கி இருக்கப் போவதில்லை. நாம் விரும்பினாலும் இவ் உலகில் மரணம் இன்றி தங்கியிருந்துவிட முடியாது. இத்தகு தன்மைகளை உடைய மனிதப் பிறப்பின் அர்த்தப்பாடுகளை பிறழ்நிலைக்கு உட்படுத்தக்கூடாது. கிடைத்தற்கரிய உயிர்மத்தை வலிந்து அழித்துவிடக்கூடாது.


இந்த உலகத்தில் யாருக்குத்தான் பிரச்சினைகள் இல்லை..? நூற்றுக்கு நூறு வீதம் காரியமாற்றுகின்ற நேர்மையான மனிதர்கள் எம்மத்தியில் எத்தனை பேர் உளர்..? அனைவருமே ஆறறிவு தாண்டி செய்யக்கூடாத காரியங்களைச் செய்துகொண்டு தான் இருக்கிறோம். வெளியே வேட முகம் தரிப்பவர்கள் அனைவரும் ஏதோவோர் பாவத்தை செய்தவர்களாகவே இருப்பர்.ஆனாலும் பொது வெளியின் பரம்பலில் அநீதிகளுக்கு எதிரானவர்கள் போல் கர்ஜனை செய்து கொண்டிருப்பர். ஆக, ஒருவருக்கொருவர் கீழ்நிலைப்பட்டு பணிவெய்தி நடந்துகொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை. எமக்கான ஆயுள்காலத்தை முழுமைபெறச் செய்ய வேண்டும். ஆணாக இருந்தால் என்ன, பெண்ணாக இருந்தால் என்ன அனைவருக்கும் ஆயுள் என்பதும், வாழ்க்கை என்பதும், மன உணர்வுகள் என்பதும் ஒரே விதமான வையாகவே அமைந்திருக்கும். எவரும் விதிவிலக்காகப் படைக்கப்படவில்லை.

### வாழ்க்கையின் அர்த்தங்களை புரிந்து கொள்வோம்

படித்தவனும், உயர் பதவியில் இருப்பவனும், பணம் படைத்தவனும் தாய்வயிற்றில் இயற்கையை நிராகரித்து உயிர்பெறவில்லை. அனைவருக்கும் ஒரே மாதிரியான பிறப்பும், ஒரே மாதிரியான இறப்புமே சம்பவிக்கிறது. இதுவே உலக நியதி. எந்தவொரு மனிதனும் உயிரிழந்து போனால் 'பிணம்' தான். அதை விடவும் அவனுக்கு சிறப்பான பெயர் ஏதும் வழங்கப்படுவதில்லை.

இத்தகு நிலையிலே எமதான எண்ண வெளிப்பாட்டுக்கு செயல்வடிவம் கொடுத்து உயிரைப் பறிகொடுக்க நினைப்பது தவறான செயற்கரியம். கணவன் மனைவி இடையேயான பிணக்கை எடுத்து நோக்கின், அங்கு 'யாராவது ஒருவருக்கு மரணம் சம்பவித்தால் என் இறப்பு சம்பந்தப்பட்டவர்களுக்கு துன்பத்தை தரும். அவர்களை நல்வழிப்படுத்தும். என் துன்பம் முடிவுறுத்தப்படும்.' என்ற காரணங்கள் மட்டுமே இழையோடி இருப்பதை கண்டுகொள்ள முடியும். இவை தாண்டி வேறு எந்தக் காரண காரியங்களையும் கூறிவிட முடியாது. ஒவ்வொருவரும் இது குறித்து சிந்திக்க வேண்டும். கோழை மட்டுமே எதிர்ப்புக்களை சந்தித்து வாழப் பயப்படுகிறான்.

தன் துன்பத்துக்கான தீர்வை பகுத்தறிந்து கண்டுகொள்ள முடியாது தவிக்கிறான். தற்கொலை என்பது கோழைகளுக்கு மட்டுமே மரணம். மாறாக அறிவாளிகளுக்கு அல்லது சவாலை எதிர்கொண்டு முன்னகர்ந்து செல்வோருக்கு மரணம் என்ற முடிவு எதிரியாகவே அறிவுரை தென்படும். இதன்வழி தன் வாழ்நாளை திறம்பட வழிநடத்திச் செல்பவனே வெற்றி பெறுகிறான். மரணத்தை வெல்கிறான். மரணத்தை வெல்வதுதான் சிறந்த வாழ்வு. இதனை எவரும் உணர்ந்து கொள்வதில்லை. 'பதவியில் இருப்பதும், பணம் சம்பாதிப்பதும், மாட மாளிகைகளில் குடியிருப்பதும், செல்வத்தில் திழைப்ப தும் தான்' இந்தப் பூவுலகில் சிறந்த வாழ்க்கையென எண்ணிக் கொள்கின்றனர். ஆனால், மரணத்தை வெல்வதும் அதனைப் பிற்போடுவதும்தான் இந்த உலகின் சிறந்த வாழ்க்கையாக அமையும்.



### பகுத்தறிவோடு செயற்படுவோம்

இந்த நிலையிலே விதி வலியது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். எமதான வாழ்க்கைப் பயணத்தை,தேவையை,கடமையை, ஆயுளை சிறந்த முறையிலே கட்டமைத்துக்கொள்ள வேண்டும். எண்ணங்களை சுய மதிப்பீட்டின் வழி வழிநடத்திச் செல்ல வேண்டும். அறியாமையில் இருந்து விடுதலை பெற வேண்டும். முடியும் என்ற செயலுறுதி அனைவரிடத்தேயும் வலிமை பெற வேண்டும். பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனை வெற்றி கொள்ள முயற்சி செய்யுங்கள். துயரத்தைத் தூர விலகியோட விடுங்கள். மற்றவர்களோடு மனம்விட்டு பேசுங்கள். சுக துக்கங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். என்றும் வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

> அனைவரும் ஏதோவோர் பாவத்தை செய்தவர்களாகவே இருப்பர்.ஆனாலும் பொது வெளியின் பரம்பலில் அநீதிகளுக்கு எதிரானவர்கள் போல் கர்ஜனை செய்து கொண்டிருப்பர். ஆக, ஒருவருக்கொருவர் கீழ்நிலைப்பட்டு பணிவெய்தி நடந்துகொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை. எமக்கான ஆயுள்காலத்தை முழுமைபெறச் செய்ய வேண்டும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யாழ். கோட்டைக்குள் படையினரை அனுமதியாதீர்!

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இராணுவத்தினருக்குக் காணி ஒதுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான முன்னாயத்தங்கள் நடக்கின்றன. இதுவரையில் கோட்டைக்குள் உள்ள காணிகளில் எவையும் இராணுவத்தினர் அங்கு முகாம் அமைப்பதற்காக ஒதுக்கப்படவில்லை என்று அரச நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தாலும், அத்தகைய ஒரு கோரிக்கைதரைப்படையினரால் முன்வைக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமானதே!

கோட்டைக்குள் படையினருக்கு நிலம் வழங்குவதற்குக் காட்டப்படும் எதிர்ப்பை வழக்கமான இன ரீதியான அரசியலின் பாற்பட்டு நோக்கத் தேவையில்லை. யாழ்ப்பாணக் கோட்டை பாதுகாக்கப்படவேண்டிய தொல்பொருள்சான்றுகளில் ஒன்று. போர்க் காலத்தில் அது அதிக அளவில் அழிவுகளைச் சந்தித்தது.ஆனால், போர் நிறைவுற்ற நிலையில், அதனை மறுசீரமைக்க டென்மார்க் அரசு பலகோடி ரூபா நிதியைச் செலவிட்டிருக்கிறது. அந்த உதவியுடன் மறுசீரமைக்கப்பட்ட கோட்டையே இப்போது கம்பீரமாகநகரின் மத்தியில் நின்றுகொண்டிருக்கின்றது. யாழ்ப்பாண நகரத்தின் அடையாளமாகவும் அது வளர்ந்து வருகின்றது.

ஐங்கோண வடிவில் அமைந்த யாழ்ப்பாணக் கோட்டை, போர்த்துக்கேயர்களால் 1618 முதல் 1621 வரையான காலப்பகுதிக்குள்தற்போதிருக்கும் இடத்தில்கட்டப்பட்டது. போர்த்துக்கேயத் தளபதி பிலிப் தே ஒலிவேராவின் ஆளுகையில் யாழ்ப்பாணம் அப்போதிருந்தது. 40 வருடங்கள் கழித்து 1658இல் ஒல்லாந்தர்கள் (டச்சுக்காரர்கள்) கோட்டையைக் கைப்பற்றினார்கள். அவர்களின் காலத்திலேயே ஐங்கோண வடிவில்கோட்டை விரிவாக்கப்பட்டது. 1680இல் அடித்தளக் கட்டுமானமும் 1792இல் வெளியமைப்பும் கட்டிமுடிக்கப்பட்டன. 1795இல் அது ஆங்கிலேயர்களின் பிடியின் கீழ் வந்தது. 1948இல் இலங்கையில் தமது அதிகாரப் பிடியை ஆங்கிலேயர்கள்கைவிடும்வரையில்அவர்களின்பிடியிலேயே அது இருந்து வந்தது. அதன் பின்னர் இலங்கை பொலிஸாரினதும் தரைப் படையினரதும் பிடியில் இருந்தது.

கோட்டையில் இருந்த இலங்கைத் தரைப் படையினருக்கு எதிராகக் கடுமையான முற்றுகைப் போர் ஒன்றை நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகள் 1990ஆம் ஆண்டு அதனைக் கைப்பற்றி முதற் தடவையாக அங்கு புலிக்கொடியை ஏற்றினார்கள். இதற்கு இடையில், அமைதிப்படை என்ற பெயரில் வந்து தமிழர்களைக் கொன்று அட்டூழியம் புரிந்த இந்தியப் படையினரும் யாழ்ப்பாணக் கோட்டையில் தங்கியிருந்தனர். இலங்கைப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கோட்டைக்குள் ஒரு சிறைச்சாலையும் இருந்தது. ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீர அங்கு சிறிது காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

இப்படிப் பல போர் வரலாறுகளை மட்டுமல்லாது, உணர்வுகளுடன் தொடர்புபட்ட வரலாறுகளையும் யாழ்ப்பாணக் கோட்டை கொண்டுள்ளது. போர்த்துக்கேயர்யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது இருந்த நல்லூர் ஆலயத்தை உடைத்து அதிலிருந்து கற்களை எடுத்துச் சென்று கோட்டையை அமைத்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. அதுபோன்றே தற்போதுள்ள கோட்டையின் வெளிச் சுவர்களில் யாழ்ப்பாணத்தின் பழம் பெரும் கல்வெட்டுக்கள் பலவும் அமுங்கிக் கிடக்கின்றன என்றும் சொல்லப்படுகின்றது. இதற்கும் மேலாக போர்த்துக்கேயருக்கு முன்னர் இந்த இடம் சோழர்களின் வணிக நிலையமாக இயங்கி இருக்கக்கூடும் என்கிற முன்வைப்புகளும் இருக்கின்றன. கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்வுகளில் சோழர்கால மட்பாண்டங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் மீட்கப்பட்ட மையும் கவனத்திற்குரியது.


எனவே யாழ்ப்பாணக் கோட்டை மேலும் மேலும் வரலாற்று ஆய்வுக்குஉட்படுத்தப்படவேண்டியஒருதொல்லியல்சான்று. யாழ்ப்பாணநகரின்தொன்மையையும்பெருமையையும்அறிய அந்த ஆய்வுகள் வழி வகுக்கக்கூடும். படையினருக்கு அங்கு நிலம் ஒதுக்கிவிட்டால் தொல்லியல் ஆய்வுகளுக்கு அது இடைஞ்சலாக மாறிவிடக்கூடும்.

அதேபோன்ற எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில்கணிசமானபங்கைஆற்றக்கூடியசுற்றுலாத்துறையிலும் கோட்டை ஒரு மையப் புள்ளியாக விளங்கும். இப்போதுகூட அது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாவிகளை அதிக அளவில் கவரும் இடமாகவே உள்ளது. எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தின் சுற்றுலாத்துறையை கோட்டையை மையமாக வைத்தேவிரிவாக்கவேண்டியிருக்கும். அப்படிவிரிவாக்குவது யாழ்ப்பாணத்தின்வரலாற்றையும்இனப்பிரச்சினைஉள்ளிட்ட தமிழர்களின்வரலாற்றையும், சுற்றுலாவிகளுக்கு புகட்டுவதாக அமையும். அத்தகைய பொருளாதாரப் பெறுமானமும்கூடிய ஒரு இடத்தில் படையினரை அனுமதிப்பதன் மூலம் இந்த வாய்ப்புகள் அனைத்துமே பெரிதும் பாதிக்கப்படும். எனவே கோட்டைக்குள் படையினர் மட்டுமல்ல, வேறு எந்தத் தரப்பினரும்அனுமதிக்கப்படக்கூடாது. அதுஒருசுற்றுலாவிகளுக்கான தொல்பொருள் நிலையமாகவே வளர்த்தெடுக்கப்படவேண்டும்.



# தலைவனுக்காக ஏங்கி நிற்கும் ஈழத் தமிழர்கள்

சேரலாதன்



ஈழத் தமிழரகளை வழி நடத்திச் செல்வதற்கு பிரபாகரனுக்கு நிகரானதொரு தலைவரே தேவையென்ற கருத்து தமிழர்கள் மத்தியில் நிலவி வருகின்றது. இன்று தமிழர்கள் எதிர்கொள்கின்ற அவலங்களுக்குச் சீரான தலைமைத்துவம் இல்லாமையே காரணமெனவும் அவர்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டனர்.

**அரசியல் தலைவர்கள் தமது இனத்தை முறைப்படி வழிநடத்திச் செல்ல வேண்டும்**

ஓர் ஆட்டு மந்தைக் கூட்டம் வழி தவறிச் சென்று ஆபத்தில் சிக்காமல் இருப்பதற்கும், ஒழுங்கான மேய்ச்சலைப் பெறுவதற்கும் அதை வழிநடத்திச் செல்லக் கூடிய திறமையான மேய்ப்பன் ஒருவன் வேண்டும். அவன் தவறுவிடுவானாகில் அந்த மந்தைக் கூட்டம் வழி தவறிச் சென்று சின்னாபின்னமாகிவிடும். இதைப் போன்று தான் ஓர் இனத்துக்கும் அதை வழிநடத்திச் செல்லக் கூடிய தலைவர் ஒருவர் அமைந்திருத்தல் வேண்டும். அத்தகைய தலைவர் ஒருவர்தான் தமிழர்களின் இன்றைய தேவையாகவுள்ளது.

தாம் தலைமை தாங்கி நடத்திய புலிகள் இயக்கத்தின் போராளிகளை ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், கொள்கைப்பற்றுள்ளவர்களாகவும், தமது உயிர்களை ஈகம் செய்யக் கூடிய அளவுக்கு இனப்பற்றுள்ளவர்களாகவும் வளர்த்தெடுத்தார் பிரபாகரன். உலகில் இருந்த போராளிக் குழுக்களில் புலிகள் இயக்கம் முன்னிலை வகித்தமைக்கு பிரபாகரனின் சிறந்த தலைமைத்துவமே காரணமாகும். ஒரு நாட்டினுள்ளே இருந்துகொண்டு அந்த நாட்டுப் படைகளுக்கு எதிராகப் போராடுவதென்பது சாதாரண விடயமல்ல. ஆனால் துணிவுடனும், மதிநுட்பத்துடனும் இதைச் சாதித்துக் காட்டிய அதிசய மனிதர் அவர்.

போர் காரணமாக அளவிட முடியாத துன்பங்களை மக்கள் எதிர்கொண்ட போதிலும் புலிகள் இரும்புக்கு ஒப்பான பாதுகாப்பு அரணாக விளங்கியதால் தீய சக்திகளின் அச்சுறுத்தல்களை அவர்கள் எதிர்கொள்ளவில்லை. எந்தவித அச்சமுமின்றி தமது அன்றாடக் கடமைகளைக் கவனித்து வந்தனர். ஆனால் இன்று தமிழர் பகுதிகளில் என்ன நடக்கின்றது என்பதை அனைவரும் அறிவார்கள்.

> இறுதிப் போர் ஓய்ந்து அமைதி நிலவுவதாகக் கூறப்படுகின்ற நிலையிலும் தமிழர்களின் அவலம் நீடிக்கவே செய்கின்றது. அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்.காது இழுபறியான நிலை காணப்படுகின்றது. இவற்றுக்குத் தீர்வு கிடைப்பதற்கான அறிகுறி எதையும் காண முடியவில்லை. தமிழர் தரப்பின் தலைமைகள் இவை தொடர்பாக ஆழ்ந்த கரிசனை காட்டுவதைக் காண முடியவில்லை. பதவிகளுக்காகச் சண்டையிடுவதிலேயே அவர்களது காலம் கழிந்து வருகின்றது.

**தமிழ்த் தலைவர்களது அண்மைக்காலச் செயற்பாடுகள் திருப்தி தருபவையாக அமையவில்லை**

தமிழ்த் தலைவர்கள் தமது மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவும், அவர்கள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காகவும் தீர்க்கதரிசனத்துடனும், இராஜதந்திரத்துடனும் நடந்து கொள்ளவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டாகும்.

இறுதிப் போர் ஓய்ந்து அமைதி நிலவுவதாகக் கூறப்படுகின்ற நிலையிலும் தமிழர்களின் அவலம் நீடிக்கவே செய்கின்றது. அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது இழுபறியான நிலை காணப்படுகின்றது. இவற்றுக்குத் தீர்வு கிடைப்பதற்கான அறிகுறி எதையும் காண முடியவில்லை. தமிழர் தரப்பின் தலைமைகள் இவை தொடர்பாக ஆழ்ந்த கரிசனை காட்டுவதைக் காண முடிய வில்லை. பதவிகளுக்காகச்சண்டையிடுவதிலேயே அவர்களது காலம் கழிந்து வருகின்றது. தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதிலும் அவர்கள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

வடக்கு மாகாணசபையின் அடுத்த முதலமைச்சர் பதவிக்கு இப்போதே போட்டி ஆரம்பித்துவிட்டது. மாகாணசபைத் தேர்தல் இந்த ஆண்டுக்குள் இடம் பெறுமென்ற எதிர்பார்ப்பு நிலவுவதால் இனிமேல் அவர்களின் கவனம் அதிலேயே ஆழ்ந்து கிடக்கப் போகின்றது. மக்களின் பிரச்சினைகளிலிருந்து அவர்கள் தூரவிலகி விடுவார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை.

**எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பயன்படுத்தி சம்பந்தனால் எதுவும் செய்ய முடிந்ததில்லை**

தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிப்பது தமிழர்களுக்குப் பெருமை தரக் கூடியதெனக் கூறுகின்றோம்.


ஆனால் இந்தப் பதவி தமிழர்களுக்குக் கிடைத்ததால் கிடைத்த நன்மைகள் எவையென்பதைப் பட்டியலிட்டுக் காட்ட முடியுமா? வெறும் பெருமை பேசிப் பேசியே காலத்தைக் கழித்தவர்கள் எமது முன்னோர்கள். அந்த இயல்பு இன்னமும் எம்மவர்களை விடாமல் தொற்றிக் கொண்டிருக்கின்றது.

இதை உதறித் தள்ளிவிட்டு இனியாவது நாம் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும் அதைப் போன்று தமிழ் மக்களுக்கென எதையும் செய்யாது வீரவசனங்களைப் பேசுகின்றவர்களும், தலைவர்களெனக் கூறிக்கொண்டு எம்மத்தியில் உலவிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பதவி என்று வந்துவிட்டால் இவர்கள் அதைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாய் நிற்கின்றனர்.

இத்தகையவர்களால் தமிழ் மக்களுக்கு எந்தவித விமோசனமும் கிடைக்கப் பேவதில்லை.

இன்றைய நிலையில் பதவிகளுக்கு மயங்காத, துணிவும் இராஜதந்திரமும் கொண்ட நேர்மையான தலைவர்களையே தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த விருப்பம் நிறைவேறும்போதுதான் அவர்களது துயர்களுக்கும் விடிவு கிடைக்கும்.

இந்துமதி



# அச்சமற்ற வாழ்க்கைக்கு மீளுவார்களா குடாநாட்டு மக்கள்?

யாழ். குடாநாடு மீண்டும் அமைதியை இழந்து வருகின்றது. சிறிது காலம் ஓய்ந்திருந்தது போன்று காணப்பட்ட வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடித்தனம், மீண்டும் தலை தூக்க ஆரம்பித்து விட்டது. புலம் பெயர்ந்து வாழ்கின்ற சிலரின் தேவைகளை நிறைவேற்றுவ தற்காகவும் வாள்வெட்டுக் குழுக்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றமை அதிர்ச்சிக்குரிய விடயமாகும்.

**சினிமாப் படப் பாணியில் இடம்பெறும் அடாவடித்தனச் செயற்பாடுகள்**

சினிமாப் படங்களிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் இடம்பெறுகின்ற அடாவடிக் குழுக்களின் அட்டகாசங்கள் போன்று இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் அமைதியை விரும்புகின்ற குடாநாட்டு மக்களை அதிர்ச்சியிலும் பீதியிலும் ஆழ்த்தி வருகின்றன. வாள் வெட்டுக் குழுக்களில் இளவயது இளைஞர்கள் அங்கம் வகிப்பதைக்காண முடிகின்றது. தமது இனத்தின் விடுதலைக்காக ஆயுதங்களை ஏந்திப்போராடித் தமது இன்னுயிர்களையே ஈகம் செய்த அந்த இளைஞர்களை நாம் இன்னமும் நினைவு கூருகின்ற நிலையில், இத்தகைய இளைஞர்களின் செயல்களை எண்ணிப் பார்க்கும் போது தாங்க முடியாத மனவேதனை ஏற்படுகின்றது.

போர் தந்த வலிகளிலிருந்து குடாநாட்டு மக்கள் முற்றாக விடுபடாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இன்றும்கூடப் பல பிரச்சினைகள் அவர்களைச் சூழ்ந்து காணப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் தீர்வு காண்பதற்கு அவர்களால் முடியவில்லை. அரசிடம் முறையிட்டும் பயனொன்றும் கிடைக்கவில்லை. தமது தலைவிதியை நொந்தவாறு வாழ்க்கையை ஓட்டவே இவர்களால் முடிகின்றது. இந்த நிலையில் வாள்வெட்டு, கொள்ளை, திருட்டு ஆகியவை இடம்பெற்று வருகின்றமை அவர்களைப் பொறுத்த வரையில் பனையால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாக மாறிவிட்டது.

**குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் அலட்சியத்துடன் செயற்படும் பொலிஸ் துறையினர்**

பொலிசார் கடமையுணர்வுடன் செயற்பட்டிருந்தால் அடாவடிக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியிருக்க முடியுமென்பது இங்குள்ள மக்களின் ஒருமித்த கருத்தாகவுள்ளது. இதற்கு வலுவூட்டுவதைப் போன்று வாள்வெட்டுக் குழுக்களுடன் தொடர்பு பேணி வந்த பொலிஸ்காரர் ஒருவருக்கு இடம் மாற்றம் வழங்கப்பட்டதாகத் தகவல் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் ஊழலும், மோசடிகளும் சகல துறைகளிலும் ஊடுருவியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதில் பொலிஸ் துறை மீது அதிகளவில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. பிரச்சினைக்குரிய 'அவன் கார்ட்' பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் தலைவரிடம் சுமார் 300 பொலிஸ் உயரதிகாரிகள் பணம் பெற்று வந்ததாகவும், இது தொடர்பான பட்டியல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் உள்ளதாகவும் பத்திரிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் பொலிஸ் துறை மீது மக்கள் நம்பிக்கை வைத்திருப்பார்களென. எதிர்பார்க்க முடியாது. பொலிஸ் அதிகாரம் வடக்கு மாகாணசபைக்கு வழங்கப்படும் வரையில் குடாநாட்டில் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப் படுமென எதிர் பார்க்கவே முடியாது.



**கட்டுப்பாடுகளை விரும்பாது தன்னிச்சையாகச் செயற்பட விழையும் குடாநாட்டு இளைஞர்கள்**

இன்றைய இளைஞர் சமுதாயம் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகத் தெரியவில்லை. அதிலும் குடாநாட்டு இளைஞர்கள் சற்று வித்தியாசமானவர்களாகவே நடந்து கொள்கின்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் வாள்வெட்டுக் குழுவினராக மாறியதன் பின்னணியை எப்போதோ ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும். காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கான பரிகாரங்களை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இங்குள்ள சமூகவியலாளர்களும், கல்விமான்களும், அரசியல் வாதிகளும் இதைச் செய்வதற்குத் தவறிவிட்டனர். இதன் விளைவைத்தான் குடாநாட்டு மக்கள் தற்போது அறுவடை செய்துகொண்டிருக்கின்றனர்.

தனிப்பட்ட விரோதம் மட்டுமல்லாது வேறு சிலரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் வாள் வெட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றதைச் சாதாரண விடயமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. அதிலும் புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் வாழ்பவர்களால் பணம் கொடுத்துக் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களால் இத்தகைய செயல்கள் இடம்பெறுகின்றதாகக் கூறப்படுகின்றமை ஆபத்தான தொன்றாகும். பணத்தைப் பெற்றுக் கொண்டு கொலை செய்யவும் தயங்காதவர்கள் நடமாடுகின்ற ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களிடம் அமைதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஒட்டு மொத்த தமிழர்களும் வெட்கித் தலைகுனிவதற்கு வழிவகுக்கும் இத்தகைய அடாவடித் தனங்களுக்கு இனியும் இடமளித்தால் அதன் பலாபலன்கள் மோசமான கட்டத்தை எட்டி விடுமென்பதைச் சொல்லத் தேவையில்லை.

சிறந்த பண்பாடு, கலாசாரம், கல்வி, மத நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்ட யாழ் குடாநாடு மக்களுக்கு அச்சத்தை எற்படுத்தும் வகையில் சிறு குழுவொன்று செயற்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அரசு மனம் வைத்தால் இந்த அவலத்துக்கு நிரந்தரமானதொரு தீர்வைக் கண்டிருக்க முடியும். ஆனால் அவலப்படுவது தமிழர்கள் தானேயென்ற அலட்சியம் காரணமாக அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதோ? என்ற கேள்வியும் எழாமலில்லை.

எது எப்படியாக இருந்தபோதிலும், குடாநாட்டில் இடம் பெறுகின்ற அடாவடிச் செயல்களுக்கு உடனடியாகவே முடிவு கட்டப்படல் வேண்டும். குடாநாட்டில் வாழ்கின்ற மக்களின் அச்சமில்லாத, அமைதியான வாழ்க்கைக்கு வழி வகுப்பது அரசின் மிக முக்கியமான கடமையாகும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# ஏமாற்றுப் பேர்வழிகள் குறித்து அவதானமாய் இருப்போம்

சிலநாள்களுக்கு முன்னர் வலிகாமம் பகுதிக்குட்பட்ட பிரதேசசபையொன்றின் உறுப்பினர் ஒருவரால் குடாநாட்டில் பழைய இரும்பு, பழைய பொருள்கள் வியாபாரம் செய்வோர் பிரதேச, நகரசபைகளிடம் தம்மைப் பதிவு செய்து அனுமதிபெற வேண்டும் எனக் கொண்டுவரப்பட்ட தீர்மானம், குறித்த சபையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய, மக்கள் நலனில் அக்கறையுள்ள ஒருவரின் சிந்தனையில் எழுத்து கருத்தின் செயல்வடிவம். இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஊர்காவற்றுறை பகுதியில் பழைய இரும்பு வியாபாரியொருவர் நீரிறைக்கும் இயந்திரமொன்றைத் திருடியபோது அப்பகுதி பிரதேச சபை உறுப்பினரால் இனங்காணப்பட்டு பிடிக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

இரும்பு வியாபாரிகள் மட்டுமல்லாது, சிறு வியாபாரிகள் மற்றும் பல நடமாடும் வியாபாரிகளால் பொதுமக்களுக்குப் பலவித தொல்லைகள் ஏற்படுகின்றன. வீடுகளை விட்டு அயலில் கோவிலுக்கோ, உறவினர் வீடுகளுக்கோ செல்வது கூடப் பாதுகாப்பற்றது என்ற நிலை ஏற்படுகிறது. எல்லோருமல்ல ஒரு சிலரது செயற்பாடுகளால் ஏற்படும் இத்தகைய அச்சத்தால் சகலரையும் அச்சத்துடனும், சந்தேகத்துடன் நோக்க வேண்டி உள்ளது.. ஒரு உதாரணமாக சில மாதங்களுக்கு முன்னர் ஒலிபெருக்கி பூட்டி வாகனத்தில் இரும்பு, தகரம், பழைய கொப்பி வாங்கப்படும் என அறிவித்து வந்த வாகனத்தை வீதியில் நிறுத்தி "பழைய போத்தல்கள் நெஸ்ரோமோல்ட் ரின்கள், கொப்பிகள் இருக்கின்றன, எடுப்பீர்களா?" எனக் கேட்டேன். அவர்களும் ஆம் என்றுகூறி வீட்டினுள் வர- இங்கேயே இருங்கள் எடுத்து வருகிறேன் எனக்கூறி பின்பக்கம் நான் சென்றபோது அவர்களும் என்னைப் பின்தொடர்ந்து வீட்டின் பின்புறம் வந்தார்கள்.
குறித்த பழைய பொருள்களை எடுத்துக்காட்டியதும் நான் கொடுத்த எந்தப் பொருளும் சரிவராது என கூறிவிட்டு. காணியில் காணப்பட்ட வாளிக்கம்பிகள் இரண்டையும், சில துண்டு இரும்புகளையும் அவர்களே எடுத்துக் கொண்டு பணமும் தராது சென்றார்கள். சரி ஓரிரு இரும்புகள் தானே என்று விட்டுவிட்டேன். ஆனால் அவர்களின் "எல்லாம் எடுப்போம்" என்ற முதற்பேச்சு மற்றவர்களை ஏமாற்றுவதாகவே பட்டது.
இதை எப்படி கருதுவது எனப் புரியவில்லை. எப்படியோ கிராமங்களில் குடியிருப்பு குறைந்த இடங்களில் இவ்வாறான வியாபாரிகள் தமது விபரங்களை உள்ளூராட்சிச் சபைகளில் பதிவுசெய்து அனுமதி பெறாமல் இவ்விதம் பொருள்களைப் பெற்று வருவது பொருத்தமானதாகப்படவில்லை.

*நா.துஷாந்,வரணி*

372

# நித்திய சுகம்

உடலே கோயில்

# புற்றுநோயை வெற்றி கொள்ளுதல்

கிரிசாந்தி இராஜசூரியர்

மருத்துவ உலகில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி மனிதர்களுடைய ஆயுள் எதிர்பார்ப்பில் அதிகளவு நீட்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் தற்கால ஓட்டத்தில் மனிதர்களுக்கும் உயிர்கொல்லி நோய்களுக்கும் இடையேயான போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய உயிர்கொல்லி நோய்களுள் புற்றுநோய் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. இந்த நோய்த்தாக்கமானது உலகமெங்கும்பல்வேறு வயதுப்பிரிவினரிடையே அதிகரித்து வரும் போக்கினையே வெளிக்காட்டியுள்ளது.

**ஆரோக்கியமாக வாழ எம்மை நாம் வழிப்படுத்துவோம்**

### விழிப்புணர்வு வேண்டும்

இலங்கையும் இதற்கு விதிவிலக்கானதல்ல. புற்றுநோய் அண்மைக்கால வரலாற்றின் அடிப்படைகளை கொண்ட ஒரு நோயல்ல. இது கி.மு 2250 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்தமைக்கான அடையாளங்கள் எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து பெறப்பட்ட மனித உடல்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளியாகியுள்ளது. புற்றுநோய் எந்த வயதுப் பிரிவினரையும் தாக்கவல்லது. எத்தகைய வாழ்க்கைத்தர நிலையிலுள்ளவர்களையும் தாக்கும் தன்மையுடையது. புற்றுநோய் தொடர்பில் விழிப்புணர்வு இல்லாத தன்மையே இந்த நோய்த்தாக்கம் அதிகரித்துவருவதற்கும், உயிரிழப்புகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகின்றது. இந்த நோய்த் தாக்கம் குறித்த விழிப்பு ணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது இன்றைய கால நகர்வின் தேவையாக உணரப்பட்டுள்ளது.

### புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணிகள்


புற்றுநோய் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் காரணமாக அமைகின்றன. அவை பௌதீக, இரசாயன, உயிரியல் மற்றும் பரம்பரை அலகு என வகைப்படுத்தப்படுகிறது. பௌதீக காரணிகளுள் சூரியக்கதிர்கள் மற்றும் 'யு.வி' கதிர்களால் ஆன தாக்கம் முதன்மையானது. இரசாயனக் காரணிகளுள் 'சிகரெட், பீடி, சுருட்டு' போன்றவற்றில் உள்ள நச்சுப்பதார்த்தங்கள் மற்றும் 'மதுபானம், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை' போன்றவை முக்கியமானவை. உயிரியல் காரணிகளுள் 'வைரஸ்கள் மற்றும் எப்ஸ்டீன் பார் வைரஸ், எயிட்ஸ் வைரஸ்' போன்றவற்றின் தாக்கம் பிரதானமானது. இவற்றுள் 'எச்.பி.வி' வைரஸ் கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய்க்குக் காரணமாக அமைகின்றது. இந்த வைரஸ்கள் முறைகேடான பாலியல் தொடர்பு மூலம் ஊடு கடத்தப்படுகின்றன. புற்றுநோய்களை ஏற்படுத்தும் காரணிகளுள் சில மனிதர்களால் கட்டுப்படுத்தக்கூடியனவாகவும், சில கட்டுப்படுத்த முடியாதனவாகவும் விளங்குகின்றன.

### கட்டுப்படுத்தக் கூடிய காரணிகள்

•புகைப்பிடித்தல் (சிகரெட், பீடி, சுருட்டு, புகையிலை)
•மதுபானம் அருந்துதல்
•முறைகேடான பாலியல் தொடர்பு
•வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலைப் பாவனை

இவை அனைத்தும் மனிதனால் கட்டுப்படுத்த இயலுமான காரணிகளாக விளங்குகின்றன. இத்தகைய பழக்க வழக்கங்களைத் தவிர்ப்பதன் ஊடே, இவை ஏற்படுத்துகின்ற புற்றுநோய்களின் தாக்கத்திலிருந்து எமைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

உதாரணமாக புகைப்பிடிப்பதனால் 'மூக்கு, வாய்க்குழி, குரல்வளை, தொண்டை, களம், நுரையீரல், ஈரல், சதையம், வயிறு, சிறுநீரகம், சிறுநீர்ப்பை, பெருங்குடல், சூலகம், கர்ப்பப்பைக்கழுத்து, எலும்பு, மச்சை' முதலான அவையவங்கள் பாதிப்படைந்து புற்று நோய்த் தாக்கம் ஏற்படும். மதுசாரப் பாவனையால் 'வாய், தொண்டை, குரல்வளை, களம், ஈரல், மலக்குடல் மற்றும் மார்பகம்' போன்ற அவயவங்கள் பாதிப்படைந்து புற்றுநோய்த்தாக்கம் ஏற்படும். 'வெற்றிலை, பாக்கு மற்றும் சுண்ணாம்பு' போன்றவற்றை உட்கொள்வதால் வாய் மற்றும் கள பகுதிகளில் புற்று நோய்த் தாக்கம் ஏற்படும்.



### வட மாகாணத்தில் புற்றுநோய்த் தாக்கம்


இலங்கையின் வடமாகாணத்தைப் பொறுத்த வரையிலே அதிகரித்துவரும் புற்றுநோய்த்தாக்கம் முறையே, 'வாய், தொண்டைக்குழி, மார்பகம், தைரொயிட் சுரப்பி, கர்ப்பப்பைக்கழுத்து, பெருங்குடல், நுரையீரல்' போன்ற அவயவங்கள் தொடர்பாகக் ஏற்படுகிறது. எனினும் புற்றுநோய்க்குரிய ஆரம்பநிலை அடையாளங்கள் தொடர்பில் அவதானமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நோய்த் தாக்கத்தை ஆரம் நிலையிலேயே கட்டுப்படுத்தலாம்.

### வாய்ப்புற்று நோய்

அதாவது, வாய்ப்புற்று நோயைப் பொறுத்தவரையில் வாயில் ஏதேனும் அசாதாரண வளர்ச்சி காணப்படுமிடத்து அது எத்தகைய நோவையும் ஏற்படுத்தாத பட்சத்திலும் மருத்துவ ஆலோசனையை உடனடியாக பெற வேண்டும். இதனூடே நோய்த்தாக்கத்தை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இதற்கு கண்ணாடியின் முன்பாக நின்று வாயை அடிக்கடி பரிசோதிக்க வேண்டும்.

### மார்பகப் புற்றுநோய்

இதேபோன்று மார்பகப்புற்றுநோயை 'மார்பிலுள்ள கட்டிகள், முலைக்காம்பினூடாக நீர்வடிதல், குழி விழுங்குதல், உள்ளிழுக்கப்பட்ட முலைக் காம்பு, தோலில் ஏற்படும் மாற்றங்கள்' போன்ற அறிகுறிகள் மூலம் அடையாளப்படுத்தலாம். குறிப்பாக 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மார்பகப் புற்றுநோய்க்கானதிரையிடலை இரண்டுமூன்று வருடங்களுக்கு ஒருதடவையேனும் 'மமோகிராம்' முறை மூலம் மார்பகப் புற்றுநோய் அறிகுறிகளே இல்லாத ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிக்கலாம்.



ஆயினும் இலங்கையில் உள்ள அரச மருத்துவமனைகளில் எத்தகைய சேவைகள் புற்று நோய்க்கான அறிகுறிகள் அல்லாத, குறித்த வயதுப்பிரிவுசார்ந்த அனைத்துப் பெண்களுக்கும் இன்னமும் வழங்கப்பட முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் 20 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப்பெண்களும் மாதமொருதடவையேனும் சுயமார்பகப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நோய் அறிகுறிகள் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து கொள்ளப்படுவதுடன், பொருத்தமான சிகிச்சை மூலம் நோயைக் குணமாக்கிக் கொள்ள முடியும்.

### கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய்

இது போலவே கர்ப்பப்பை கழுத்து புற்றுநோய், 'மாதவிலக்கு நின்ற பின்னான குருதிப் போக்கு, மாதவிலக்கின் போதான கடும் குருதிப்போக்கு மற்றும் துர்நாற்ற மான திரவப்பேரக்கு' போன்ற அறிகுறிகளால் அடையாளப்படுத்தப் படலாம். இந்தப் புற்றுநோய்க்குரிய திரையிடல் பரிசோதனை 'PAPsmear' எனப்படும். இந்தச் சேவை இலங்கையில் உள்ள ஒருசில அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளிலேயே காணப்படுகிறது. இதற்கு மாற்றீடான வேறு திரையிடல் பரிசோதனை முறைகள் மூலம் கர்ப்பப்பை கழுத்து புற்று நோயை அடையாளப்படுத்தும் முறையானது யாழ்ப்பாணம் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்தச் சேவை குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

### களப் புற்றுநோய்

மேலே குறிப்பிட்டது போல ஏனைய புற்றுநோய்களுக்கு ஆரம்ப அறிகுறிகள் உள்ளன. களப்புற்றுநோய்க்கு அறிகுறியாக உணவு விழுங்குவதில் ஏற்படுகின்ற சிரமங்கள் அமையலாம். குடல் மற்றும் குதப்புற்றுநோய்க்கு, 'மலச்சிக்கல், மலத்துடன் குருதி வெளியேறுதல், மலம் தார் போன்ற கரிய நிறத்துடன் காணப்படல், குருதிச்சோகை மற்றும் வயிற்று வலி' போன்றவை அறிகுறிகளாக அமையலாம். இவை தவிர பொதுவாக கூறுமிடத்து மேற்கூறிய அறிகுறிகள் தவிர்ந்து வேறு அறிகுறிகளாக, 'பசியின்மை, காரணமற்ற உடல் நிறைக் குறைவு, தொடர்ச்சியான காய்ச்சல், வீக்கங்கள் அல்லது கட்டிகள், தொடர்ச்சியான இருமல், சளியுடனான குருதிப் போக்கு மற்றும் அதிகாலையில் ஏற்படும் தலைவலி' போன்றவையும் ஏற்படலாம். இந்த அறிகுறிகள் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடிக்கும் பட்சத்தில் மருத்துவ ஆலோசனைகளை பெறுதல் நன்று. ஏனெனில் இவையும் புற்றுநோய் ஏற்படுவதற்குரிய ஆரம்ப அறிகுறிகளாக அமையலாம்.

### ஆரோக்கியமாக வாழப் பழகுவோம்

தற்காலத்தில் அதிகரித்துவருகின்ற புற்றுநோய்ப் பரம்பலானது ஒரு சாபக்கேடான வியாதியோ அல்லது சரும வியாதியோ அல்ல. இதனை உணர்ந்துகொள்வோம். புற்றுநோயின் தாக்கத்தில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். புற்றுநோய் காரணமாக பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரு சமூகமாக எம்மால் இயன்ற அனுசரணையை வழங்க முன்வருவோம். தமிழர்கள் ஒவ்வொருவரும் கருத்தில் எடுத்து செயலாற்ற வேண்டிய கடமையாக இது அமைந்துள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுசரணை வழங்குவோம். நோயுடன் போராடி குணமானவர்களை மெச்சுவோம். நோயினால் மரித்தவர்களைக் கனம் பண்ணுவோம். ஆரோக்கியமாக வாழ எம்மை நாம் வழிப்படுத்துவோம்.

*கட்டுரையாளர் : மருத்துவ கலாநிதி,*
*விசேட புற்றுநோய் மருத்துவ நிபுணர்,*
*பாதை புற்றுநோய் மருத்துவமனை, தெல்லிப்பழை.*

சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
08.07.2018



# சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த விஜயகலா

கட்டுரை

த.செல்வராசா

மகிந்த ஆட்சிக்காலத்தில் விஜயகலா எதிர்க்கட்சியில் இருந்தவர். இவரது நாடாளுமன்ற உரைகள் எப்போதும் ‘வானத்தால்போன சனியனை ஏணி வைத்துக் கீழே இறக்குவதுபோல’ வில்லங்கத்தை விலைக்கு வாங்குவதாகவே இருக்கும்.

நாடாளுமன்றில் உரையாற்றும்போது எதிர்த்தரப்பார் குறுக்கிட்டுக் கேள்வி கேட்டால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்கின்ற முன்னேற்பாட்டுடன் புத்திசாதுரியமாகப் பேசும் ஆற்றல் இருப்பது அவசியம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் யாரோ எழுதிக்கொடுக்கும் அறிக்கைகளை வாசிப்பவர்கள்போலவே உள்ளனர். எந்த விடயதானத்திலும் அதிக தொலைவு வரை சென்று அவர்கள் யோசிப்பதில்லை. குறுக்குக் கேள்வி ஒன்று எழுந்தால் குறுகிப்போகும் நிலையே இவர்களிடம் காணப்படுகிறது. இவ்வகையான தனது பேச்சாற்றலாலும் இதய சுத்தியில்லாமல் அதன்போது வாய்தவறி வந்துவிட்ட அவருடைய வார்த்தைகளாலும் தற்போது அல்லல்பட்டு நிற்கிறார் விஜயகலா மகேஸ்வரன்.



24


ஒதுக்கான கிராமமா, ஒதுக்கப்பட்ட கிராமமா? 30




27



‘பீலே பெர்த் ஒவ்; எலெஜெண்ட்’ 29

நாடாளுமன்ற உரையின்போது புத்திசாதுரியமாகப் பதிலளிப்பதில் இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் பிரித்தானியாவின் தலைமை அமைச்சராக இருந்த வின்சன் சேர்ச்சில் மிகவும் வல்லவராக இருந்தார். "இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்களில் ஐம்பது வீதமானவர்கள் கழுதைகள்'' என்று ஒரு தடைவை அவரது நாடாளுமன்ற உரையின்போது கூறிவிட்டார். உடனேயே அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொங்கியெழுந்து அவர் சொன்ன கூற்றை மீளப்பெறுமாறு அவரை வற்புறுத்தினர். உடனேயே வின்சன் சேர்ச்சில் "இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்களில் 50வீதமானவர்கள் கழுதைகள் அல்லர்" என்று கூறினாராம். அவரது இரண்டு கூற்றுக்களும், ஐம்பது வீதமானவர்கள் கழுதைகள் என்பதையே வலியுறுத்தின.



ஒரு தடைவை ஜெ.ஆர்.ஜெயவர்த்தன அனுராதபுரத்தில் வயலுக்குள் இறங்கி, ஏர் பூட்டி, உழவு செய்து ஒரு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். எப்போதும் வெள்ளை உடையுடன் காணப்படும் ஜெ.ஆர். வயல் சேற்றுக்குள் இறங்கி நின்றதைச் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதி ஒருவர் நாடாளுமன்றத்தில் கீழ் வருமாறு ஏளனமாகச் சுட்டிக்காட்டினார், "அரச தலைவர் அவர்களே! நீங்கள் வயலுக்குள் இறங்கிக் கலப்பையில் கை வைத்ததும் மாடுகள் குழம்பியதை அவதானித்தீர்களா?" அதற்கு உடனேயே ஜெ.ஆர். "ஆம், மாடுகள் குழம்பியதற்குக் காரணம் மாடு வெட்டுகின்ற உங்கள் கட்சிக்காரர் ஒருவர் அங்கு வந்ததாலே மாடுகள் குழம்பினவே தவிர, என்னைக் கண்டதும் அல்ல" என்று கூறியிருந்தார்.

**விழி பிதுங்கிய விஜயகலா**

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தின்போது (2010 - 2015) ஒரு தடைவை, அப்போது போக்குவரத்து அமைச்சராகவிருந்த குமாரவெல்கமவிடம் நாடாளுமன்றத்தில் வைத்து விஜயகலா மகேஸ்வரன், "நீங்கள் போக்குவரத்து அமைச்சர் என்றிருக்கிறீர்கள் கொழும்பு - யாழ்ப்பாண பஸ் வழித்தட அனுமதிகளை வழங்குவதில் பின்னடிக்கிறீர்கள். பொறுப்பின்றி நடந்து கொள்கிறீர்கள். மக்கள் பிரதிநிதியாகிய எனக்கு இது பற்றிக் கதைக்க- உரிமையிருக்கிறது" என்றிருக்கிறார். பேசும்வரைக் காத்திருந்த அவர், "கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்களே! யாழ்ப்பாணத்துக்குப் பஸ்கள் வழித்தடங்களுக்கு



அனுமதிப்பதில்லை என்கிறீர்களே. தனிப்பட்ட முறையில் தங்களுடைய கோரிக்கைக்கு ஏற்ப நான் எத்தனை 'றூட்'களைத் தந்துள்ளேன்?" என்று கேட்க, விஜயகலா பெட்டிப் பாம்பாகிப்போனார்.

**வீரசிங்கம் மண்டபத்தில் வீரம் பேசிய விதம்**

"சுழிபுரத்தில் ஆறுவயது மாணவி கொல்லப்பட்டதைத் தாங்க முடியாது. இதற்கு இறுதிமுடிவெடுக்க இந்த அரசால் முடியாது. விடுதலைப் புலிகள் இனி வந்தால்தான் இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும்" என வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் விஜயகலா குறிப்பிட்டது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தால் நாடாளுமன்றத்தையே ஒரு நாள் ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டது.

கொழும்பு சிறுவர் விவகாரம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால், தனது அமைச்சின் கீழாக, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள். சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் என்பதான குற்றங்களை விசாரித்து கடுமையான தண்டனைகள் வழங்குவதற்கு இயன்றளவில் வழிவகுத்துக் கொடுக்க முடியும். அந்த அதிகாரம் இலங்கையில் அவருக்கு உண்டு. தனது கடமையைச் சரிவரச் செய்யாது விடுதலைப்புலிகள் வந்து சாவுத் தண்டனை விதிக்கவேண்டும் என அவர் கூறுவது அவரது கடமையையும் பொறுப்பையும் தட்டிக் கழிப்பதாகவே உள்ளது. விடுதலைப் புலிகள் பாலியல் வன்புணர்வுக்கு அதி உச்சமான தண்டனையாகச் சாவுத் தண்டனையை விதித்தார்கள் என்பது உண்மை. ஆனால், அவர்களின் தேவை பற்றிய விஜயகலாவின் வார்த்தைகள் இதயசுத்தியுடன் வெளிவந்தவை அல்ல.

**புலிகள் எதிர்**

2002ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் தலையீட்டுடன் 'ஏ9' வீதி திறக்கப்பட்டு கொழும்பு - யாழ்ப்பாணப் பயணம் மீள ஏற்படுத்தப்பட்டபோது விஜயகலாவின் கணவரான மகேஸ்வரன் அந்தப் பாதையால் பயணிக்கக்கூடாது எனவும் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட முடியாதெனவும் புலிகள் தடைவிதித்திருந்தார்கள்.

2008ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி மகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்படும் வரை. தனது வியாபாரத்தில் அதிக நன்மையடைந்தார். 2006ஓகஸ்ற் 11இல் ஏ9வீதி முகமாலையில் பூட்டப்பட்டதன் பின் சிறிய ரக விமானம் ஒன்றை வாடகைக்கு அமர்த்திப் பயணிகள் ஆசனங்களில் இறுக்கமாகப் பெட்டிகளை அடுக்கி, சிகரெட்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்றதும் பலருக்கு ஞாபகம் இருக்கலாம்.

புலிகள் போராடிய காலத்தில் டக்ளஸ் தேவானந்தா மாத்திரமல்லாது மகேஸ்வரனும் விஜயகலாவும் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயம். ஆனால், தனது அரசியலுக்காகப் புலிகளைப் பேசு பொருளாக ஆக்கியிருக்கிறார் விஜயகலா. 2004ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தைக் குலைப்பதற்காக கருணா அம்மானை அந்த அமைப்பிலிருந்து பிரித்த ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியில் இருந்துகொண்டு புலிகளுக்குச் சார்பாகப் பேசியது என்பதே அவருடைய அரசியல் வாழ்வில் தற்போது எதிர் முரண் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

சிறுவர் விவகாரம் தொடர்பான மத்திய அரசின் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனால், தனது அமைச்சின் கீழாக, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள். சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் என்பதான குற்றங்களை விசாரித்து கடுமையான தண்டனைகள் வழங்குவதற்கு இயன்றளவில் வழிவகுத்துக் கொடுக்க முடியும். அந்த அதிகாரம் இலங்கையில் அவருக்கு உண்டு. தனது கடமையைச் சரிவரச் செய்யாது விடுதலைப்புலிகள் வந்து சாவுத் தண்டனை விதிக்க வேண்டும் என அவர் கூறுவது அவரது கடமையையும் பொறுப்பையும் தட்டிக் கழிப்பதாகவே உள்ளது.

**புலிகள் வந்தால் முதலில் கொல்லப்படுபவர்?**

விஜயகலாவைப் பொறுத்தவரை புலிகள் ஆட்சி செய்வதையோ, அதிகாரம் பெறுவதையோ விரும்புபவர் அல்லர். தனது அமைச்சின் கீழ் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடக்கும்போது மாத்திரம் திடீரெனப் புலிகள் கைத்துப்பாக்கியுடன் தோன்றிக் குற்றமிழைத்தவர்களைச் சுட்டுவிட்டுத் தூர ஓடினால்போதும் அவ்வாறு சுடவருகின்ற ஒரு புலிப்போராளிக்குப் புகலிடம் கொடுக்கும் நிலையில்கூட விஜயகலா இல்லை.

வித்தியா என்ற புங்குடுதீவு மாணவியின் கூட்டு வன்புணர்வுக்குப் பொறுப்பாக இருந்த சுவிஸ்குமாரை ஊர்மக்கள் கட்டிவைத்து அடித்தபோது அங்கு சென்ற விஜயகலா, அவரை அவிழ்த்து விடுமாறு கோரியதுடன் நின்றுவிடவில்லை. விரிவுரையாளர் வி.ரி. தமிழ்மாறனின் உதவியுடன் சுவிஸ்குமாரைப் பத்திரமாகக் கொழும்புக்கு அனுப்பியும் வைத்தார்.

புலிகளின் தேவையை இப்போது அவர் காலம் தாழ்த்தியாவது விளங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால், இந்த விடயத்தில் புலிகள் மீண்டும் வந்தால் முதலில் கொல்லப்படுபவர்கள் யாராக இருக்கும் என்பதையும் அவர் இனியாவது சிந்தித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இதயசுத்தியில்லாத வார்த்தை அது. வாய்தடுமாறி வந்துவிட்டதாக அவரே சொல்லியும்விட்டார்.

**இரண்டும் கெட்ட நிலை**

சிங்களப் பெரும்பான்மைக் கட்சியின் சின்னத்தில் தேர்தலில் நின்று வெற்றிபெற்று இராஜாங்க அமைச்சராக வந்தவர் விஜயகலா. அந்தக் கட்சியின் சட்ட திட்டங்களுக்கும் வரன்முறைகளுக்கும் ஏற்ப செயற்பட்டிருக்க வேண்டியவர் அதற்கு மாறாகச் செயற்பட்டதால் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க, விஜயகலா மகேஸ்வரனைத் தற்காலிகமாக அவரது பதவியிலிருந்து நீக்குமாறு அரச தலைவரிடம் கேட்டிருந்தார். அதன் பின்னர் விஜயகலா தானாகவே பதவியில் இருந்து விலகிக் கொண்டார். ஒரு பெரும்பான்மைக் கட்சி தனது பெரும்பான்மை மக்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஏற்பவே செயற்படும். அதற்காகத் தனது ஓர் உறுப்பினரை இழக்கவும் தயாராக இருக்கும். அது ஒரு பாரதூரமான விடயமும் அல்ல. தற்போதைய சூழலில் கட்சியின் பாதுகாப்பை இழந்த விஜயகலா, வாய் தவறி வந்துவிட்ட வார்த்தைகளால், தமிழ் மக்கள் மத்தியிலும் நன் மதிப்பைப் பெற்றதாக இல்லை.

**புலிகள் பற்றிப் பேசுவோருக்கும் முடிவு**

புலிகள் மீண்டும் வரவேண்டும் என்ற விஜயகலாவின் பேச்சு வழமையாகப் புலிகள் பற்றிப் பேசுகின்றவர்களையும் மௌனிக்க வைத்திருக்கிறது. விஜயகலாவுக்கு நடந்ததைச் சிங்களத் தலைவர்கள் இராஜதந்திர ரீதியில் அணுகியிருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். இனிமேல் யாரும் புலிகள் வரவேண்டும் என்று பேச முடியாதவாறு வாய்பூட்டுப் போடப்பட்டுள்ளது. அது சார்ந்து பணியாற்ற வேண்டிய குழுக்களும் களமிறக்கப்பட்டு இருக்கலாம்.

இதுவிடயத்தில் சிங்கள ஊடகங்கள் மிகவும் காத்திரமான பங்கை வகிக்கின்றன. விஜயகலா மகேஸ்வரன் தனக்குக் கிடைத்த பதவியை வைத்தே தமிழ்ப் பெண்களதும், சிறார்களதும் பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் 500நாள்களைக் கடந்துவிட்ட நிலையில் எந்தத் தீர்வும் இன்றிப் போராடி வருகின்றனர். விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக இருந்தால், புலிகளின் பெண்கள் படைப்பிரிவில் இருந்த பெண்களுக்கோ, போராட்டத்தின்போது அங்கங்களை இழந்தவர்களுக்கோ விஜயகலா உதவ முன்வந்திருக்கலாம். புலிகள் எழுச்சியடைந்து வந்தால்தான் நான் உரியவாறு கடமை செய்வேன் என்று அடம்பிடிப்பது சிரிப்பைத் தரமால் வேறு என்ன பலனைக் கொடுக்கும். எப்படியிருப்பினும் அவருடைய கூற்றில் உண்மையிருப்பதை மாத்திரம் சிலாகிக்கலாம். இதயசுத்தி இல்லாததால் கூற்றை எடுத்துக்கொண்டு விஜயகலாவை நாமும் தூக்கியெறிய வேண்டியதுதான்.

# லிபியா அகதிகளின் கூடாரம்



தொகுப்பு
பிரகாஸ்

அகதிகளின் கூடாரமாக ஒரு நாடு உள்ளது என்றால் அது லிபியாவேதான்.

சிரியா, ஈராக், பலஸ்தீனம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாகவும், ஆபிரிக்க நாடுகளில் நிலவும் பஞ்சம், வறுமை காரணமாகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக ஐரோப்பா நோக்கிச் செல்கின்றனர். அவ்வாறு செல்பவர்களின் முகாமாக லிபியாவே உள்ளது. அகதிகளில் பெரும்பாலானோர் முதலில் லிபியா சென்று பின்னர் அங்கிருந்து இத்தாலிக்குச் சென்று அதன் பின்னரேயே ஐரோப்பாவுக்குத் தப்பிச் செல்கின்றனர். சமீப நாள்களாக லிபியா பெரியதொரு பேபொருளாக மாறியுள்ளது. அந்த நாட்டில் இருந்து அகதிகளாகச் சென்றவர்களில் பெருமளவானோர் கப்பல் விபத்துக்களில் இறந்ததை அடுத்தே லிபியா மீண்டும் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஈர்த்து நிற்கிறது. ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும்போக்கைக் கொண்டுள்ளதாக லிபியா கூறிக்கொள்கின்ற போதிலும் இத்தாலி அதைச் சந்தேகமாகவே பார்க்கிறது.

லிபியாவில் அகதிகள் தங்கிவிட்டால் அவர்களின் பராமரிப்புச் செலவு அந்த நாட்டின் தலையிலேயே வந்து விழும். இதனால் அகதிகள் இத்தாலி நோக்கிச் செல்ல லிபியாவே அனுசரணை வழங்குகிறது என்ற கருத்துக்கள் இல்லாமலில்லை. இதனால் இத்தாலி பெரும் தலைவலியில் உள்ளது. ஏனெனில் லிபியாவில் இருந்து வரும் அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பு இத்தாலி மீது விழுந்துவிடும் அல்லவா..! அதுவே இத்தாலியின் தலைவலிக்கான காரணம். எது எப்படியோ அகதிகளின் மிகப்பெரிய கூடாரம் லிபியாதான்.

லிபியாவுக்கும் இத்தாலிக்கும்
பனிப்போர் வந்தாலும் வரலாம் பாருங்கோ...

## ரவுண்ட் த வேள்ட்

## மீண்டும் நச்சுவாயு!



பிரிட்டனில் ரஷ்ய முன்னாள் உளவு அதிகாரி மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட ரசாயனத்தைக் கொண்டு, மேலும் ஒரு தம்பதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தீவிரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

பிரிட்டன் குடியுரிமை பெற்று சாலிஸ்பரி நகரில் தங்கியிருந்த ரஷ்ய முன்னாள் உளவு அதிகாரியான செர்கி ஸ்கிரிபால் (66), அவரது மகள் யுலியா (33) ஆகியோர் மீது கடந்த மார்ச் மாதம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவர்களது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதற்கு ரஷ்யாதான் காரணம் என்று பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம்சாட்டின. ஆனால், அந்தக் குற்றச்சாட்டை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்தது. இந்த நிலையில், சாலிஸ்பரி நகரை அடுத்த அமேஸ்பரி கிராமத்தில் டான் ஸ்டுர்கெஸ் (44), சார்லி ரவுலி (45) தம்பதி மீது கடந்த வாரம் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவர்களது உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்டது. இதனிடையே, ஸ்கிரிபால் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட நோவிசாக் என்ற இரசாயனமே இந்த தம்பதி மீதான தாக்குதலுக்கும் பயன்படுத்தப்பட்டது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த இரசாயனம் ரஷ்ய ராணுவத்தால் கண்டுபிடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் தாக்குதல்கள்

சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கும் சிரிய அரச தரப்புக்கும் இடையிலான போர் மீண்டும் உச்சம் பெற்றுள்ளது. இம்முறை சிரியாவின் மேற்குப் பகுதியில் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

சிரிய அதிபர் அல் அசாத் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி சிரிய அரசுக்கு எதிராக ஆயுதக் குழுக்கள் இயங்கி வருகின்றன. சிரியாவின் பல பகுதிகளில் இந்த ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. சிரியாவின் மேற்குப் பகுதியில் உள்ள டாரா நகரம் கிளர்ச்சிக் குழுவின் சொர்க்கபுரியாக உள்ளது. பல நகரங்களில் கிளர்ச்சிக் குழுக்கள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் டாரா நகரம்தான் தற்போது அவற்றின் தலைமையகமாக உள்ளது. இவ்வாறிருக்க டாராவிலும் உச்சக்கட்டத் தாக்குதலை ஆரம்பித்துள்ளன சிரிய அரச படையும் ரஷ்யத் தரப்பும்.

டாராவில் கடந்த புதன்கிழமை மட்டும் சுமார் 600 வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று பன்னாட்டுத் தொண்டு நிறுவனமொன்று குறிப்பிட்டுள்ளது.

'சிரியா அழுகையின் நாடுதானோ...'





## அமெரிக்காவுக்கு பெரிய அடிதான்!


அமெரிக்காவின் நகர்வுகளோலோ, திட்டங்களாலோ, பொருளாதாரத் தடைகளாலோ எந்தப் பயனும் இல்லை என்று தெரிவித்துள்ளார் ஈரான் அதிபர் ரவுகானி.

அமெரிக்கா உள்ளிட்ட ஆறு பெரிய நாடுகளுடன் அணுவாயுதப் பரவல்த்தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது ஈரான். இதன்படி ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்காது. இதற்குப் பதிலாக ஈரானுடன் வர்த்த உறவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆறு நாடுகளும் மேம்படுத்தும் என்பது விதி.

ஆனால் ஒப்பந்தத்துக்கு மாறாக ஈரான் அணுவாயுதத் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது என்று குற்றம் சுமத்தியிருந்தார் ட்ரம்ப். இதன் தொடர்சியாக ஈரானுடன் அமெரிக்கா கொண்டிருந்த ஒப்பந்தத்தை அவர் முறித்துக் கொண்டார்.

போதாதென்று ஈரானுக்கு எதிராக வலுவான பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் அவர் திட்டமிட்டார். இதன்படி ஈரானுடன் கச்சா ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள நாடுகள் அந்தந்த ஒப்பந்தங்களைக் கைவிட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். ஆனால் இதற்கு ஈரான் கொடுத்துள்ள பதில் 'எந்தப் பயனும் இல்லை' என்பதே.

ஈரான் அமெரிக்காவைக் கண்டுகொள்ளாமல் இருப்பதிலும் ஒரு நியாயம் இருக்கவே செய்கிறது. ஈரான் நாளொன்றுக்கு சுமார் 25 லட்சம் கச்சா பெரல்களை ஏற்றுமதி செய்கிறது. அந்த நாட்டின்மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்தால் கச்சாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும். கச்சா உற்பத்தியில் சவூதி வல்லமை பெற்றது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஈரானின் சந்தையை சவூதியால் பிரதியீடு செய்ய இயலுமா என்றால் அதற்குரிய பதில் சந்தேகம் என்பதே.



இஸ்ரேல் இராணுவத்தினர் அண்மைக்காலமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுமார் 130 பலஸ்தீனர்கள் உயிரிழந்தார். இதைக் கண்டித்து காசா பகுதியில் பலஸ்தீனர்கள் போராடி வருகின்றனர். அவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் படையினர் அவ்வப்போது அத்துமீறல்களிலும் ஈடுபடுகின்றனர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது.

கவிதை

ஞா.கீர்த்தலோஜினி

# சிந்தை



சிறகு ஒடிந்த பறவையின்
சிறைவாசம் சிலவேளை நீங்கலாம்
சிந்தை குலைந்த
மானிடனின் வாழ்வு மீளுமா?

இல்லவே இல்லை
கருவறையில் எழுதப்பட்ட சுவடி
கல்லறையில் கட்டவிழ்ந்த நிலையில்
ஊனமாகிப் போகின்றது

இடிதாங்கும் இதயம் ஏனோ
இரக்கமற்ற உறவின் பிரிவைத்
தாங்க மறுக்கிறது?

வலுவின்றி நிற்கின்ற
கடிகார முள்ளுக்கும் கூட
சில கால ஓய்வு உண்டு
சிந்தை சிதைந்தவர்க்கோ இளைப்பாறுதல் இல்லை

உற்றான் இறப்பின்போதுகூட
உறையாத கண்ணீர்த் துளி
உள்ளமற்ற கயவர் நிமித்தம்
கரைதேடிப் பாய்ந்தோடுகிறது

சொத்தும் சொந்தமும்
உழைப்பால் தேடிக் கொள்பவை
சோகம் விதியின் விளையாட்டால்
மனிதர்களுக்குக் கிடைக்கின்ற பரிசு

விதியே
விலகிடவும், விடைபெற முடியாமலும்
விரக்தியால் விலங்கிட்டுக் கொள்கின்றனர்
விலையேறப் பெற்ற உயிர்க்கு

உணர்வும் உடலும்
உள்ளமதின் உந்துதலின்
செயற்பாட்டு வடிவம் என்பதை
மறவாதே மானிடா!

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்

# தாலி கட்டு



சிவகுருவுக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி. மகள் மனோகரிக்குப் பொருத்தமான சம்பந்தம் ஒன்று அமைந்து விட்டதில் உடல் புளகாங்கித மடைந்தது. உள்ளம் புல்லாங்குழல் வாசித்தது. இருக்காதா பின்ன!. எத்தனை செருப்புகள் தேய்ந்து அலைந்து அலுத்துப்போன நிலையில் அருமையாக அகப் பட்டுக்கொண்டதொரு சம்பந்தமல்லவா இது. சாதகப் பொருத்தங்கள் சாதகமாக அமைந்திருந்தன. மாப்பிள்ளை யின் பெயர் மகாலிங்கம். அத்தனைக்கும், அவர் ஓர் அரச உத்தியோகத்தன். நாவலடி நாவலர் வித்தியாலயத்தின் இரவு நேரக் காவலாளி. மகாலிங்கம் மகா புத்திசாலி என்று கேள்விப்பட்டிருக்கின்றார் சிவகுரு. அதை நிரூபிக்கும் வகையில் மகாலிங்கம் செயற்படப்போகின்றார். மனோக ரியைத் திருமணம் செய்துவிட்டு இரவுநேரக் காவலுக்குப் போய்விட்டால் இவர்களின் இல்லறம் நல்லறமாக அமைந் துகொள்ளாது என்ற கவலையும் சிவகுரு குடும்பத்தினரை வாட்டியது. ஆனால் மகாலிங்கம் அப்படிப்பட்டவரல்ல. மனைவியையும் அழைத்துக்கொண்டுஇரவு நேரக் காவல் கடமைக்குச் சென்று விடுவது என்று அவர் முடிவு கட்டிவிட் டார். கடமைக்குக் கடமை. இல்லறத்துக்கு இல்லறம். இனி யும் மகாலிங்கம் மகாபுத்திசாலிதான் என்பதை எவரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியுமா!

○ ○ ○ ○

மனோகரிக்குக் கடைவாய்ப் பற்கள் இரண்டும் தெத்தி. மண மகன் மகாலிங்கத்துக்குக் கால் கொஞ்சம் சொத்தி. வஞ்ச னையற்ற உடற் பொருத்தம்! மனாகரி அளவுக்கு அதிகமாக வாய் திறந்து சிரிக்காவிட்டால் அவளின் தெத்திப் பற்கள் எவருக்கும் தெரிய வராது.
அப்படிச் சிரிக்க வேண்டிய தேவை தான் என்ன! சிரிக்காது அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டியது தானே! அதேபோல் மாப்பிள்ளையும் கண்டபடி ஓடித்திரியாது அமைதியாக ஓரிடத்தில் குந்திக் கொண்டால் அந்த மனிதரின் சொத்தியும் வெளித்தெரிய வாய்ப்பில்லை. இனி இந்தச் சம்பந்தம் சம் பந்தமாக எதுவித பிரச்சினைகளுக்கும் இடமில்லை. இருந் தும், இல்லையென்றாமல், பிரச்சினையொன்று சிவகுருவின் மனதில் ஒருபுறம் நின்று அவ்வப்போது பயம் காட்டிக் கொண்டிருந்தது.
"எட சிவகுரு! உன்ரை பொட்டை மனோகரிக்குத் தாலியேற இப்போதைக்குப் பலனில்லை. நீ வேணுமெண்டால் பொறுத்திருந்து பார்! என்ரை சாத்திரத்தைப் பற்றி அறிஞ் சுகொள்வாய்"
சோதிடர் சோலைமலை இவ்வாறு ஒரு பேதி மருந்தைக் கடுக்காயில் அரைத்துக் குடுத்திருந்தார் சிவகுருவுக்கு. அவர் ஊரில் ஒரு புகழ்பூத்த சாஸ்திரி. அவருடைய சோதிடம் பொய்த்ததாக இதுவரை யாரும் கூறியது கிடையாது. ஆனால் இந்தத் திருமண விடயத்தில் அவரின் சோதிடம் பொய்த்துவிட்டதாகத்தான் கருதவேண்டியிருந்தது. திரும ணத்துக்கான ஏற்பாடுகள் யாவும் கனகச்சிதமாக ஒழுங்க மைக்கப்பட்டு விட்டன. இன்னும் சரியாக இரண்டரை மணி நேரத்துக்குள் மனோகரியின் கழுத்தில் தாலியேறத்தான் போகின்றது.
பொதுவாக இந்தக் காலத்தில் யாரும் இரவு நேரத்தில் கல் யாணங்களை வைத்துக் கொள்வதில்லை. ஆனால் சிவ குரு மாத்திரம் ஏதோ ஒரு மாறுதலுக்காக மகளின் திரும ணத்தை இரவு நேரத்தில் நடத்திவிடத் தீர்மானித்துவிட்டார். வயற்கரை முருகன் கோயிலில் தாலிகட்டு. நள்ளிரவு பன் னிரண்டு மணிக்குச் சுபமுகூர்த்தம்.

○ ○ ○ ○

"எடி! பவளம்! கோயிலடிக்குப் போறதுக்கு மணியன்ரை காரும் வந்துட்டுது. பங்கை! மினிபஸ்சும் வந்துட்டுது. இப்ப பெண்டுகள்தான் மினக்கேடுபோலை கிடக்குது. கெதியாய் வெளிக்கிடுங்கோ! டேய்! வினாசி! இந்தச் செகிடனோடை...! கெதியாய்ப்போய் வானிலை ஏறுங்கோடாப்பா!"
சுடுதண்ணி குடித்த நாய்க் குட்டியாக ஓடித்திரிந்து கொண்டி

ருந்தார் சிவகுரு. வயற்கரை முருகன் கோயில் மின்னொ ளியில் ஜெகஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நேரம் நள்ளிரவு பதினொரு மணி. தாலிகட்டப்போகும் சுபமுகூர்த்தத்துக்கு இன்னும் ஒரு மணித்தியாலம் இருந் தது. அதுவரைக்கும் தவில் நாதஸ்வரக் கலைஞர்களை வைத்து ஒரு கச்சேரி செய்தால் என்ன? அவர்களுக்குக் கொடுக்கப்போகும் பணத்துக்கு ஏதாவது வேலை வாங் கத்தான் வேண்டும். இது கிணத்தடி கிட்டினப் பிள்ளையா ரின் அபிப்பிராயம். தங்கராசனின் நடுவிலான் நடேசன் ஒலிவாங்கியைக் கொண்டுவந்து கலைஞர்களின் முன் னிலையில் வைத்துவிட்டான். நாதஸ்வரச் சக்கரவர்த்தி ஏதேதோ கீர்த்தனைகளை வாசித்துக் கொண்டிருந்தார். இல்லையில்லை வாசிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார். 'வாராயென் தோழி வாராயோ!' பாடலை ஒருமுறை ஊதி விடலாமென்று மனிதர் பாடாத பாடுபட்டார். ஆனால் அந் தப்பாடலை அவரால் சரியாக ஊதித் தள்ள முடியவில்லை. அவரின் கழுத்துப் பகுதிதான் வீங்கி வெடித்துவிடும்போல் பயம் காட்டிக் கொண்டிருந்தது. பாடல் மட்டும் வெளிவர வில்லை. பதிலுக்கு அவரின் நாதேஸ்வரத்திலி ருந்து தாரை தாரையாக வெளிவந்த அவரு டைய எச்சில் நேராக ஒலிவாங்கிக்குள் நுழைந்தது. அங்கிருந்து வயர் வழியாகப் பாய்ந்து வந்து ஒலிபெருக்கிப் பெட்டியில் வழிந்து கொண்டிருந் தது. எப்படி முயற்சி செய்தும் பாடல் மட்டும் வர வேயில்லை. எங்கேயோ ஒளிந்து கொண்டது. தவில் வித்துவான் தன்னையொரு தட்சிணா மூர்த்தியாகப் பாவனை செய்து கொண்டு எதை யும் பொருட்படுத்தாது தன்பாட்டுக்குத் தவிலை இழுத்து வைத்துக் கும்மோ கும்மேன்று கும்மிக் கொண்டிருந்தார்.

○ ○ ○ ○


'சரி! நேரமாச்சுது. மாப்பிள்ளையிட்டைத் தாலி யைக் குடுங்கோ இனிக்கட்டலாம்.'
ஐயர் சொல்லி வாய் மூடமுன்பு இதுவரை பளிச் சென்று ஒளிர்ந்து கொண்டிருந்த மின்குமிழ்கள் அத்தனையும் சொல்லாமல் கொள்ளாமல் சடு தியாகப் பணிப் புறக்கணிப்புச் செய்துதான் விட் டன.
'எடக்கோதாரி! பொறுத்த நேரம் 'கறண்ட்' நிண்டிட்டுது.'

அம்பலவாணர் அதிர்ந்து போனார்.
"அது இப்ப வந்திடும். பயப்பிடாதேங்கோ!"
ஆறுமுகம் வாத்தியார் ஆறுதல் பகிர்ந்தார்.
மின்சாரம் சொல்லியபடி வந்துதான் விட்டது.
"எட! இதென்ன இடியேறடாப்பா! தாம்பாளத்திலை வைச் சிருந்த தாலிக் கொடியைக் காணயில்லை"
பதறியடித்தார் பசுபதியப்பா. சிவகுருவுக்குத் தலைசுற் றிக்கொண்டு வந்தது. அனைவரும் பேய் அறைந்தவர்க ளாகக் காணப்பட்டனர். கலவரப்பட்டனர்.
"சரிசரி! இஞ்சை நிக்கிறவை எல்லாரும் எங்கடை இனச னங்கள்தான். இதுக்குள்ளை ஆரோ ஒராள் ஏதோ விளை யாட்டுத்தனமாய் அந்தத் தாலிக் கொடியை எடுத்து ஒளிச்சுப் போட்டுது போலை...! பரிசுகெட்ட வேலை! சரி போனது போகட்டும் நானிப்ப லைற்றுகள் எல்லாத்தையும் ஒரு ஐஞ்சு நிமிசத்துக்கு நிப்பாட்டுறன் தாலியை எடுத்தவை அதை இருட்டுக்கை எடுத்ததைப் போலை ஆருக்கும் தெரி யாமலே இருட்டுக்கை அதைத் தாம்பாளத்திலை வைச்சுவி டுங்கோ! அப்ப ஆர் எடுத்ததெண்டும் தெரிய வேண்டி வராது. ஆர் வைச்சதெண்டும் தெரியவராது. சரி நான் லைற்றை நாக்கப்போறன். எடுத்தவை நல்ல பிள்ளையாய் வையுங்கோ!"
சொல்லிய பசுபதியார் வெளிச்சத்தை அணைத்துவிட்டுச் சரியாக ஐந்து நிமிடங்கள் கழிந்து மீண்டும் மின்குமிழ் களை ஒளிரவிட்டார்.
"அடக் கடவுளே! இப்ப தாலி கிடந்த அந்தப் பாரமான பித்த ளைத் தாம்பாளத்தையும் காணயில்லை. ஆரோ அடிச்சுப் போட்டாங்களப்பா!" சிவகுருவர் கத்திக் குளறிச் சன்னதமா டினார். சோதிடர் சோலை மலையின் சோதிடக் கூற்றுக்கள் மனதில் கூற்றுவனாக வந்து வதைத்துக் கொண்டிருந்தன.



தொடர்

தாஸ் மாஸ்ரர்



# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

போகாம்பர போன்ற சிறைகளில் நீண்ட பல வருடங்களைக் கழித்துக் கொண்டிருக்கும் கைதிகளில் சிலர் சிறைச்சாலை ஊழியர்களை விஞ்சியவர்களாகவும், சிலவற்றைச் சாதிக்கக்கூடிய வல்லமையுடையவர்களாகவும் இருப்பதால், சிறைச்சாலை நிர்வாகத்தால் தணிக்கை செய்யப்பட்ட குறிப்பிட்ட செய்திகளை மட்டும் கொண்ட பக்கங்களைச் சில சிறைச்சாலை ஊழியர்களைக் கொண்டு சில தருணங்களில் சிறைக்குள்ளே கொண்டுவந்து விடுகின்றனர்.

பூஸா, களுத்துறை சிறைச்சாலைகளில் இருந்து வழக்குக்காகத் தமிழ் அரசியல் கைதிகள் 8பேர் வரையில் போகம்பரைச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டனர். இந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது நிர்வாகத்துக்குச் சற்றுப் பிரச்சினையாக இருந்திருக்கலாம். பிந்துனு வேவவில் சிங்களக் கைதிகள் தமிழர்களால் கொல்லப்பட்டிருந்தால் அதன் உடனடித் தாக்கத்தையும், குமுறல்களையும் இங்குள்ள நாமும் சுமக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால், அங்கு தமிழ்க் கைதிகளே கொல்லப்பட்டதால் சிங்களக் கைதிகளின் உணர்ச்சிகள் தூண்டப்படாமல் அல்லது கண்டு கொள்ளப்படாமல் விடுகின்ற ஒரு நிலை காணப்பட்டிருக்கலாம். அல்லது அவ்வாறான ஒரு வேலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்தி நடாத்தக்கூடிய ஜயாமார் (சண்டியர்கள்;) இல்லாதிருக்கலாம்.

❝ ❝ ❝

அன்று 26ஆம் திகதி.
மாலை நேரம்.
சிறைக்குள் பூட்டப்படுவதற்கான மணி அடித்தாயிற்று. நாம் எல்லோரும் எம்மைப் பூட்டிக்கொள்ளத் தயாராகிக் கொண்டோம். (சிறுநீர் கழிக்கும் வாளி, கை கழுவும் வாளி, குடிக்கத் தண்ணீர் எல்லாம் எடுத்து வைத்தோம்) 'லொக்கேசனுக்குப்' பொறுப்பான அதிகாரி திடீரென வந்து அறைக்குள் இருந்த எல்லாப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு 'டீ' பிரத்தியேகப் பிரிவில் இருந்து வெளியே வரச் சொன்னார். ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்க முடியாது. எங்கள் பகுதியில் இருந்த ஏனைய சிங்களக் கைதிகள் நாம் வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.
இராணுவம் அத்துமீறி ஊருக்குள் புகும்போது கைக்கு எட்டிய பொருள்களுடன் இடம்பெயருவதைப்போல ஒரு கையில் சாப்பாடு, கையில் இருந்த உடுதுணிகள், பாய், சிறுநீர் கழிக்கும் வாளிகள்

> இங்கு கடமையில் இருக்கும் அதிகாரி உள்ளே வந்ததும் மதிலில் உள்ள கதவை வெளிப் பக்கமாகப் பூட்டிவிடுவார்கள். ஒருவர் மட்டும் காவலில் இருப்பதால் திறப்பை அவரிடம் விட்டு வைப்பது ஆபத்து என்றும் அந்தப் பகுதிக்குள் போட்டுப் பூட்டப்படும் கைதிகள் எதையும் செய்யத்துணிவார்கள் என்றும் எதிர்பார்ப்புகளுண்டு.

எல்லாவற்றுடனும் நாம் அனைவரும் வெளிக்கதவுக்ருகில் வந்தபோது, அதி விசேட பாதுகாப்புக்காகத் தனியான சுற்று மதிலுடன் அமைக்கப்பட்டிருந்த 'மக்சிமம்' பகுதிக்குள் இருந்த கைதிகளை அவசர அவசரமாக வெளியே எடுத்துக் கொண்டிருப்பதை அவதானித்தோம். போகம்பரைச் சிறையில் பலகாலம் பழக்கப்பட்ட எங்களில் ஒருவர் அப்போது சொன்னார்,
"எங்களை 'மக்சிமத்துக்குள்' போடப்போறார்கள்" என்று 'மக்சிமம்' பகுதியில் ஏறத்தாழ 20அடி உயரமான மதில் சுவர் இருந்தது. அந்தச் சுவருக்கும் உள்ளே உள்ள கட்டடத்துக்குமான இடைவெளி 8அடிக்குள் தான் இருந்தது. அதற்குள் நின்று எதையும் வெளியே பார்க்கமுடியாது. அண்ணார்ந்து பார்த்த எனது அனுபவத்தில், வானத்தை நீள்சதுரத்தில் கண்ட நாள் அன்றுதான்.

❝ ❝ ❝

காற்றோட்டமில்லாத பகுதி. ஊள்ளே 10அறைகளும் 4அடி கொண்ட விறாந்தையும் பின்புறமாகக் கழிப்பறைகளும், குளிக்கும் தொட்டியும் இருந்தது. கட்டடத்துக்கு ஒரு கதவு மட்டும் தான் இருந்தது. அதைத் திறந்து உள்ளே போனாலும் ஒரு சிறிய அறையுண்டு. அதில் கரம் விளையாடும் வசதியும், கறுப்பு வெள்ளை ரீ.வி. ஒன்றும் இருந்தது. அதற்கு 'அன்ரனா' இல்லாததால் எந்த நேரமும் மழை பெய்வதுபோல புள்ளிகள் விழும். இடைக்கிடையில் தெளிவாகும் விம்பங்க ளைப் படம் என்று பார்ப்பதுண்டு.

5

இப்போது காற்றோட்டம் இல்லாத சூழல். ஒருவர் கதைத்தால் கூடச் சத்தம் வெளியில் போகாது. எதிரொலித்துக் கொண்டேயிருக்கும். யாராவது இரண்டு பேர் சேர்ந்து சிரித்தால் காவலுக்கு இருக்கும் சிறைச்சாலை ஊழியர் "கேகாண்ட எப்பா" (சத்தம் போடவேண்டாம்), "சத்த வெடி" (சத்தம் அதிகம்) என்று சிங்களத்தில் கத்துவான். கூட்டுக்குள் அடைபட்டிருக்கும் எங்களிடம் அதிகாரம் செலுத்துவது அவனுக்கு இலகுவாக இருக்கும்.
அதைவிட நாம் தமிழர் என்பதும், புலிச் சந்தேக நபர்கள் (சிறையில் சந்தேக நபர்கள் என்று ஏற்றுக்கொள்வதில்லை) என்பதும் சிக்கலான விடயம்.
இங்கு கடமையில் இருக்கும் அதிகாரி உள்ளே வந்ததும் மதிலில் உள்ள கதவை வெளிப் பக்கமாகப் பூட்டிவிடுவார்கள். ஒருவர் மட்டும் காவலில் இருப்பதால் திறப்பை அவரிடம் விட்டு வைப்பது ஆபத்து என்றும், அந்தப் பகுதிக்குள் போட்டுப் பூட்டப்படும் கைதிகள் எதையும் செய்யத்துணிவார்கள் என்றும் எதிர்பார்ப்புகளுண்டு. காலையில் திறந்து விட்டால் கட்டடத்துக்கும் மதிலுக்குமுள்ள நீள்சதுர முற்றத்தில் ஓடுவது, நடப்பது என ஒவ்வொருவரும் தமது உடல்நிலைக்கேற்ப உடற்பயிற்சி செய்வதுண்டு. எனது மனநிலை ஓடக்கூடியதாக இருக்கவில்லை. நானும் இன்னோர் ஆசிரியரும் (மலையகத்தைச் சேர்ந்தவர்) பலதையும் கதைத்துக் கொண்டு நடந்து திரிவதுண்டு. எனது குடும்பத்தைப் பற்றிய கவலை விழிப்பாக இருக்கும் எல்லா நேரங்களிலும் கனமான நினைவுகளைக் கொடுக்கும். எனது உடற்பாகத்தை விட இரட்டிப்புப் பாரத்துடன் மனது கனக்கும்.

❝ ❝ ❝

அந்த நாள் கழிந்தது.
'மக்சிமம்' பகுதிக்குள் பூட்டிய மறுநாள்.
27.10.2000ஆம் ஆண்டு காலை. போகம்பரை சிறைச்சாலை அத்தியட்சகர் வந்து எங்கள் அனைவரையும் கூப்பிட்டுக் கதைத்தார்.
"பிந்துனு வேவ சம்பவத்தை ஒட்டி இங்கு ஏதாவது பிரச்சினைகள் சிங்களக் கைதிகளால் வரக்கூடும் என்று எதிர்பார்த்துத் தான் இங்கு மாற்றியுள்ளேன். உங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவையும், பொறுப்பும் எனக்குண்டு. உங்களுக்கு ஏதாவது பிரச்சின்னகள் உண்டா?" என்று கேட்டார்.
"உங்களை உடனடியாகப் பழைய சிறைக்குத் திருப்பி அனுப்பியிருக்க என்னால் முடியும். ஆனால் உங்கள் வழக்குகளை முடிப்பது தான் நல்லது. உங்கள் தவணைகள் முடிய மீண்டும் உங்களைப் பழைய இடங்களுக்கு அனுப்புவோம்" என்றார்.
எனக்கும் அங்குள் ஒரு முஸ்லிம் நபருக்கும் களுத்துறை அல்லது பூஸாவுக்கு 'லொக்கேசன்' போடப்படவில்லை. அதுபற்றி அவரிடம் கூறினோம்.
"அறிவித்திருக்கிறோம் அங்கிருந்து அறிவித்தல் வந்ததும் அனுப்புவோம்" என்றார்.
ஒருவரை நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறையில் தடுத்து வைத்திருக்கும்போது அவரை அடுத்த தடைவ நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான காலப்பகுதி நீண்டதாக இருப்பின் ஏனைய வசதியுள்ள சிறைகளுக்கு மாற்றுவது சிறைச்சாலை நடைமுறையாகும். அதற்குச் சிறைச்சாலை ஆணையாளரின் அனுமதி பெறப்படல் வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் எங்கு சிறை வைக்கப்பட்டாலும் விரைவிலேயே களுத்துறை அல்லது பூஸா சிறைகளுக்குள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.
தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரை 'காலவரையறை அற்ற தடுப்புக் காவல் உத்தரவு' போடப்படுவதால் இந்த இரண்டு சிறைச்சாலைகளில் ஏதாவது ஒன்றுக்கு அனுப்புவதுதான் வழக்கம். (காலவறையற்ற தடுப்புக்காவல் பற்றிப் பின்னர் குறிப்பிடுகிறேன்).
'மக்சிமம்' பகுதியில் இருக்கும்போது காலை 9மணியளவில் 'டீ' பிரிவில் இருக்கும் கைதிகள் விளையாட்டு மைதானத்துக்கு வருவார்கள். அவர்கள் கதைக்கும் சத்தமும், பரபரப்பும் (கரப்பந்து) விளையாடும் சத்தமும் கேட்கும். அந்த நேரத்தில் இங்குள்ள அவர்களின் பழைய நண்பர்கள் சிலர் அங்குள்ள ஒரு சிறிய கால்வாய் மதிலில் வெளிச்சுவரில் கல்லால் தட்டுவார்கள். அதன் அர்த்தம் 'மக்சிமம்' பகுதியில் இருந்து கழிவு தண்ணீர் வெளியேறும் வாய்க்காலில் சிறிய ஓட்டைக்கு (இவ்விடத்தில்) ஒருவர் வந்து நிற்கிறேன். உங்களில் ஒருவர் வாருங்கள் என்று குறிப்பால் உணர்த்துவது. அல்லது அழைப்பது.
இங்குள்ள ஒருவர் தவழ்ந்து கொண்டு நிலத்தில் இருந்து முகத்தை வாய்க்காலில் பதித்து "யார் மச்சான்"? என்று கேட்க அங்கிருப்பவர் தனது பெயரைச் சொல்லி எமது பகுதியில் யாருடன் கதைக்க விரும்புகிறார் என்று கூறுவார். பின்னர் அவர் கூப்பிடும் நபர் வாய்க்கால் முகப்புக்குச் செல்வார். தொலைபேசியில் கதைப்பதுபோல மெல்லிய சத்தம் அந்த தூவரத்தின் ஊடாக வரும். ஒருவர் கதைத்து முடிய மற்றவர் கதைக்க வேண்டும். அப்போது தான் தொடர்பாடல் தெளிவாக, சரிவர அமையும்.
சிறைக்குள் உள்ள கழிவு தண்ணீர் போகின்ற சிறிய துவாரத்தைக் கூடப் பயன்பாட்டுக்குரியதாக மாற்றியது கைதிகளின் திறமையாகும். சிலவேளை சிறைச்சாலை ஊழியர்களில் யாராவது பார்த்துவிட்டால் கண்டிப்பார்கள்.

❝ ❝ ❝

ஒக்டோபர் 18ஆம் திகதிக்கும் நவம்பர் 4ஆம் திகதிக்கும் இடையில் எனது மாமனார் இரண்டு தடவைகள் என்னைச் சிறையில் வந்து பார்த்தார். பொலிசாரின் அனுமதியுடன் குற்றப்புலனாய்வுப் பொலிசாரின் முன்னிலையில் தான் கதைக்கவிடுவார்கள். எனது மனைவி அனுப்பிய கடிதம் கிடைத்தது. "மகன் உங்களது கைதைப்பற்றி அறியாமல் முற்றத்தில் ஓடித்திரிந்து விளையாடுவதைப் பார்க்க மிகவும் வேதனையாகவிருக்கிறது" என்று அவர் எழுதியிருந்தது என்னைச் சோகத்தில் ஆழ்த்தியது. நான் அவர்களில் இருந்து தொலைவாகத் தூக்கியெறியப்பட்டு இருந்தேன். போகம்பரை 'மக்சிமம்' பகுதியில் இருக்கும்போது நீள் சதுரக்
கிணற்றுக்குள் கிடப்பதுபோல இருந்தது.

❝ ❝ ❝

2000ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி.
அதிகாலை 4 மணி. ஒரு சிறைச்சாலை ஊழியர் எம் எல்லோரையும் எழுப்பினார். கையில் ஒரு சிறிய காகிதத் துண்டை வைத்திருந்தார். அதில் இருவரின் சிறைச்சாலை இலக்கம் எழுதப்பட்டிருந்தது. அவர்கள் இருவரையும் தவிர்ந்த (அவர்களுக்கு வழக்குக்கான தவணை அடுத்தவராமளவில் இருந்தது) ஏனையோர்களை பூஸா செல்வதற்குத் தயாராகுமாறு கூறினார். எல்லோரும் தீவிரமாக இயங்கினார்கள்.
எனக்குத் தலைசுற்றுவதும் விறைப்பதும்போல இருந்தது. "எனக்கு என்ன நடக்கப் போகிறது...?"

(தொடரும்)

தொகுப்பு
அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து

## கடலரிப்பு உக்கிரம்



அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தற்சமயம் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளது.
குறிப்பாக மீன்பிடித்துறைமுகம் அமைக்கப்பட்ட ஒலுவில் பிரதேசத்துக்கு அருகிலுள்ள நிந்தவூர் போன்ற சிலபகுதிகளில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளதால் கடல் மீன்பிடியாளர்கள், கரையோர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் கடற்கரையை அண்மித்து தென்னந்தோப்புக்களும் கடலரிப்பால் நாசமடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.
ஒலுவில் துறைமுக நிர்மாணத்தின் தாக்கமாக ஏற்பட்டுவரும் அயல்பிரதேச கடலரிப்பைத் தடுக்கத்தக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென மாவட்ட அரசியல்வாதிகள் அளித்த வாக்குறுதிகளின் நிலை என்னவென மக்கள் கொதிப்புடன் கேட்கின்றனர்.

***வாக்குறுதி தந்தவர்கள் அரசியல்வாதிகளல்லவா?***



## வெள்ளரிப்பழ பருவம்!

தென்கிழக்குப் பிரதேசத்தில் தற்சமயம் வெள்ளரிப்பழப் பருவம் ஆரம்பமாகியுள்ளதுடன் இந்தப் பழ விற்பனை மூலம் பலர் தினசரி வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.
குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த கல்லோயா குடியேற்றக்கிராமங்களில் வெள்ளரிப்பழச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.
நிலவும் கடும் வறட்சி காரணமாக மக்கள் பெருவியப்புடன் இந்தப் பழங்களை வாங்கி உண்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.
மோட்டார் சைக்கிள்களிலும் முச்சக்கர வண்டிகளிலும் பெருமளவு வெள்ளரிப் பழங்களைக் கொண்டு வந்து முக்கிய பிரதேசங்களில் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

***வெயிலின் கொடூரத்தைத் தணிக்கும் தாகசாந்திக்குரிய பழம் வெள்ளரி!***

## பக்தர்கள் படையெடுப்பு!



கதிர்காமத் திருத்தலத்தின் ஆடி வேல் விழா உற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி (ஜூலை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாக விருப்பதால் கிழக்கிலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பக்தகோடிகள் கதிர்காமம் நோக்கிப் பாதயாத்திரையாகப் பயணித்து வருகின்றனர்.
இவ்வாறு தனியாகவும் குழுவாகவும் தினமும் பெருமளவானோர் பாதயாத்திரையாக அம்பாறை மாவட்டம் ஊடாகக் கதிர்காமம் நோக்கிச் சென்றவண்ணமுள்ளனர்.
இதில் பெரும்பாலானோர் உகந்தை முருகன் ஆலயத்தையும் தரிசித்து அங்கிருந்து காட்டுப்பாதையூடாக கதிர்காமத்துக்கான பாதயாத்திரையை முன்னெடுப்பர்.

***பக்திமணம் கமழும் பரவசமிக்க பாதயாத்திரை இது!***

## கல்முனை நகர லயன்ஸ் கழகம்!



கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 2018/2019 நடப்பாண்டு இயக்குநர் சபையினரின் பதவியேற்பு வைபவம் கல்முனை எஸ்.எல்.ஆர்.மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.
கழகத்தலைவராக கே.அருள்ஞான மூர்த்தியும், செயலாளராக லயன் எஸ்.தைரியராஜாவும் பொருளாளராக பீ.ஜே.பத்திரனவும் பதவியேற்றனர்.
லயன் மாவட்ட ஆளுநர், லயன் எஸ்.சசேந்திரன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

## கொதிக்கிறார் பிரதிமேயர்!

கல்முனை மாநகரசபையில் முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதற்கு முட்டுக்கொடுத்து ஆதரவளித்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும் பிரதிமேயருமான காத்தமுத்து கணேஷ். அண்மையில் நடந்த மாநகரசபையின் மூன்றாவது மாதாந்தக் கூட்டத்திலே அவர் தனது மனக்கொதிப்பை வெளிப்படுத்தி உரையாற்றினார். பிரதிமேயரான தனக்கு இது வரை தனிவாகனம் சபையால் வழங்கப்படவில்லையென்றும் வசதிகள் செய்யப்படவில்லையென்றும் அவர் பொருமித்தள்ளினார்.

***கொதிப்பு அடங்குமா?***
***காலம் பதில் சொல்லும்!***

## துரிதப்படுத்துக!

கிழக்கு மாகாணத்தில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள 456 தொண்டர் ஆசிரியர்களுக்குமான நியமனங்களை இன்னும் இழுத்தடிக்காது உடன் வழங்க ஆவன செய்யுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவில் பிரதேசத்திலுள்ள பாடசாலை நிகழ்வொன்றில் கலந்து கொள்ள வருகைதந்த கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஜே.கே.ஜி. முத்து பண்டா ஆகியோரிடம் கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இந்தக்கோரிக்கையை நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

***கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத கையறுநிலை!***

## பயிற்சிப் பட்டறை!

நிந்தவூர் பிரதேச செயலக கலாசாரப்பிரிவு நோன்பு காலத்தில் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு நடந்தது.
பத்துநாள்கள்-பயிற்சிப்பட்டறையை பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்தியோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.
உதவி பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் தலைமையில் நடைபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாம் மற்றும் அரபு மொழிப்பாட பீடாதிபதி கலாநிதி எம்.எஸ். எம். மஸாஹிர் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.

***விடுமுறை காலத்தைப் பயனுள்ளதாக்கிய பிரதேச செயலக கலாசாரப் பிரிவுக்கு ஒரு சபாஷ்!***



சிறுகதை

# வேலி

மலரன்னை



பெரும் சுமையுடன் சைக்கிளைச் செலுத்தி வந்த விமலா, காமாட்சி மாமியின் கடை வந்ததும் வேகத்தை மட்டுப்படுத்தி, கால்களை நிலத்தில் ஊன்றி, கீழே இறங்கினாள். ஹாண்டிலில் கொளுவியிருந்த பிளாஸ்ரிக் வாளியை மெதுவாக இறங்கியவள் மறுபுறம் தொங்கிய கனதியான 'பாக்'கையும் கழற்றினாள். இதற்கிடையில் காமாட்சி ஓடிவந்து வாளியையும், 'பாக்'கையும் அவளிடமிருந்து வாங்கிக் கொண்டாள். நிதானமாகச் சைக்கிளை ஸ்ராண்டில் நிறுத்திய விமலா கரியரில் கட்டியிருந்த பெட்டியைக் கட்டவிழ்த்துத் தூக்கிக் கொண்டு கடைக்குள் நுழைந்தாள்.

"என்ன விமலா சாம்பார் வாளி பேய்க்கனமாயிருக்குது?" வழமையைவிட சாம்பார் கூடவே கொண்டு வந்திருந்தாள், விமலா. "மாமி இன்டைக்கு வெள்ளிக்கிழமை. கோயிலடிக்கு வாற சனங்கள் சாப்பாடு நிறையவே வாங்குங்கள் எண்டு நினைச்சன்"

சொல்லிக்கொண்டே பெட்டியைப் பிரித்துத் தோசையையும் இடியப்பத்தையும் எடுத்துக் கடையில் இருந்த கண்ணாடி அலுமாரிக்குள் அடுக்கத் தொடங்கினாள்.

"மாமி தோசையில ஐம்பதும் இடியப்பத்தில நூறும் வைச்சிருக்கிறன். அதுக்கு இவ்வளவு சாம்பாறும் வேணும்தானே"

சாம்பார் வாளியை அங்கிருந்த வாங்கிலில் வைத்தவாறே சொன்னவள் 'பாக்'கை எடுத்து அதற்குள்ளிருந்த சம்பல் பாத்திரத்தையும் சொதி வாளியையும் எடுத்து வெளியே வைத்தாள்.

'டாங்...டாங்..டாங்'

அதிகாலைப் பூசைக்குரிய ஆலய மணி ஓங்கி ஒலித்தது.

காமாட்சியும் விமலாவும் அம்மாளாச்சியை மனதில் துதித்துக்கொண்டார்கள்.

"அக்கா ஒரு பதினைஞ்சு இடியப்பம் கட்டித்தாங்கோ. பிள்ளைக்கு இரவெல்லாம் காய்ச்சல். ஒண்டுமே சாப்பிடுறானில்லை. இதையாவது குடுத்துப் பாப்பம்"

விமலாவின் கைகள் துரிதகதியில் இயங்கின. இடியப்பத்தைத் தனியான பொதியாகக் கட்டி, சொதியையும் சம்பலையும் வெவ்வேறு பொட்டலங்களாகக் கட்டி எல்லாவற்றையும் ஒன்றிணைத்து ஒரு 'சொப்பிங் பாக்'கில் போட்டுக் கொடுத்தாள்.

கல்லாவிலிருந்த மாமி கணக்குப் பார்த்துக் காசு வாங்கினாள். அவர்களது வியாபாரம் சுறுசுறுப்படைந்தது.

"விமலா அஞ்சு தோசை கட்டித்தா"

வாயிலிருந்து சிகரெட்டை எடுக்காமலேயே காந்தன் கேட்டான். சிகரெட் நெடி மூக்கைத் துளைக்க விமலா முகத்தைச் சுளித்தவாறே தோசைப் பார்சலைச் சுற்றிக்கொண்டிருந்தாள். காமாட்சி மாமியின் தூரத்து உறவினன் காந்தன். எனவேதான் விமலா தனக்கேற்பட்ட எரிச்சலை மாமிக்காகத் தாங்கிக்கொண்டாள். எரிச்சலுடன் அவள் நீட்டிய பார்சலை வாங்கும்போது காந்தன் வேண்டுமேன்றே அவளது கைகளில் உரசிக்கொண்டது மட்டுமல்லாமல் அவளது முகத்துக்கு நேரே வாயிலிருந்த புகையையும் ஊதிவிட்டான். கையால் புகையை விசிறியவாறு விமலா வாய்க்குள் புறுபுறுத்தாள்.

"இதுகள் என்ன காட்டுமிராண்டி ஜென்மங்களோ"

காசைவாங்கி எண்ணிக்கொண்டிருந்த மாமி அவனது செயலைக் கவனிக்கவில்லை. மற்றுமொரு வாடிக்கையாளர் உந்துருளியை நிறுத்திவிட்டு இறங்கி வந்தார்.

"ஹாய் கோபியண்ணை தோசையில வாங்கிக் கொண்டு போங்கோ. விமலாவின்ர கையால சுட்ட தோசை ஒரு தனி ருசிதான்"

விமலா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். காந்தன் கண் சிமிட்டுவதை அவள் அவதானித்துவிட்டாள். தனது கையைத் தொட்டதைத்தான் அவன் மறைமுகமாக சொல்லுகிறானோ என அவள் மனம் புழுங்கியது. விமலா தனது நெற்றியில் இட்டிருந்த குங்குமத்தைத் தொட்டுச் சரிசெய்து கொண்டாள். அதைக் கண்டும் காணாதவனாய்க் காந்தன் அப்பால் நகர்ந்தான்.

கிட்டத்தட்ட ஒன்பது மணித்தியாலங்களில் அவளது உணவு வகைகள் வழமையாக விற்றுமுடியும். சிலவேளைகளில் மிஞ்சியும்விடும். எஞ்சியவற்றை அவள் வீட்டுக்கு எடுத்துச் செல்வாள். தினமும் மாமிக்கு ஐம்பது ரூபாய் வாடகைப் பணமாகச் செலுத்தி விடுவாள்.

காமாட்சி மாமி தனிக்கட்டையாகவே வாழ்கிறாள். அவளது வாரிசுகள் அனைத்துப்பேரும் முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு உரமாகிப் போய்விட்டனர். அவள் நடத்திவரும் இந்தப் பெட்டிக்கடையின் வருமானம்தான் அவளது சீவியம். பாண், வாழைப்பழம் போன்றவைதான் அவளது கடையில் விற்பனைப் பொருள்கள். வேறு சிலர் வடை, றோல்ஸ் எனச் சிலவகை சிற்றூண்டிகளையும் கொண்டுவந்து வைப்பார்கள். அவற்றை விற்று ஈட்டும் இலாபம் அவளது தேவைக்குப் போதுமானதாக இருந்தது. கடைக்கு வந்து போகிறவர்களுடன் அவளுக்குப் பொழுதும் போய்விடுகிறது.

வழமைக்கு மாறாக அன்று எட்டரை மணிக்கே விமலா கொண்டுவந்து வைத்த பலகாரங்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன. எனவே அவள் வெறுமையான வாளிகளையும் எடுத்துக்கொண்டு நேரத்தோடு வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள்.

"மாமி நாளைக்கு நான் வர நேரஞ்செல்லும். யாரோ இருநூறு இடியப்பத்துக்கு ஓடர் குடுத்திருக்கினம். அதைக் குடுத்திட்டுத்தான் வருவன்"

காமாட்சிக்கு விமலா மீது பச்சாத்தாபம். மனதில் தோன்றியதை அப்படியே கொட்டிவிட்டாள்.

"ஏனடி பிள்ளை நீ தனியாய்க் கிடந்து கஷ்டப்படுறாய்?"

"இல்லை மாமி மாவைக் குழைச்சுக் கொடுத்தால் அவர் தட்டுகளில பிழிஞ்சு வைச்சிடுவார். நான் மளமளவென்று அவிச்சு இறக்கிப்போடுவன். அவருக்குக் கால் ஏலாதே தவிர தன்னால செய்யக்கூடிய வேலையளை எல்லாம் செய்து தருவார்" அவளது முக்தில் தோன்றிய பெருமிதத்தைக் காமாட்சி கவனித்துக் கொண்டாள். விமலாவின் கணவன் சாந்தன் தனது ஒரு காலை இழந்தவன். தொடைப் பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்டதால் செயற்கைக் கால்கூடப் பொருத்தமுடியாத நிலை. இந்த மண்ணை நேசித்ததால் இது அவனுக்குக் கிடைத்த பலன். என்றுதான் சொல்லமுடியும்.

வாயிலிருந்து சிகரெட்டை எடுக்காமலேயே காந்தன் கேட்டான். சிகரெட் நெடி மூக்கைத் துளைக்க விமலா முகத்தைச் சுளித்த வாறே தோசைப் பார்சலைச் சுற்றிக்கொண்டிருந்தாள்.

000

அன்று மாலை மறுநாள் உணவுத் தயாரிப்புகளுக்காக விமலா மா அரித்துக்கொண்டிருந்தாள். சாந்தன் அவளுக்கு உதவியாக வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தான். அதிகாலையில் எழுந்து உணவு தயாரிப்பதற்காக அவர்கள் எல்லாவிதமான முன்னேற்பாட்டையும் செய்து வைப்பது வழக்கம். மகள் கவியரசி முன்பள்ளிக்குப் போய்வந்த களைப்பில் உறங்கிக் கொண்டிருந்தாள். விமலாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த சாந்தன் கேட்டான்.

"விமலா! நானும் அப்போதையிலிருந்து பாக்கிறன். உம்முடைய முகத்தில ஏதோ கலவரம் தெரியுது. ஏனப்பா சீட்டுக்காசு ஏதும் குடுக்கவேண்டி இருக்குதே?"

சாந்தன் கேட்டதுதான் தாமதம். விமலா தனது மனதிலிருந்த ஆதங்கத்தையெல்லாம் கொட்டித்தீர்த்துவிட்டாள்.

"இல்லையப்பா, என்ரை மனத்தில் வேறை ஒரு பிரச்சினை. காமாட்சி மாமியின்ரை சொந்தக்காரப் பெடியன் ஒருவன் நித்தமும் வந்து கடையில காலைச்சாப்பாடு வாங்கிறவன். இப்ப ரெண்டு நாளாய்ப் பார்க்கிறன் அவன்ரை பார்வை சரியில்லை. இண்டைக்கு நான் சாப்பாட்டைக் கட்டிக் குடுக்க வேணுமெண்டே என்ரை கையில உரசிக்கொண்டு வாங்கிறான். அதுமட்டுமா.. சாப்பாடு வாங்க வாறவைக்கு விமலாவின்ர தோசை தனிருசி என்று விளம்பரம் வேற செய்யிறான். எனக்கு வந்த ஆத்திரத்தில கன்னத்தைப்பொத்திக் குடுத்திருப்பன். காமாட்சி மாமிக்காகப் பார்க்கிறன். தனக்கு அவன் தொட்டாட்டு வேலைகள் செய்து தாறவனெண்டு அடிக்கடி சொல்லுறது மனிசி. அதுக்காகத்தான் விட்டு வைச்சிருக்கிறன். என்ரை குணம் தெரியாமத் தம்பி கிடந்து அவதிப்படுறார்" பொழிந்து தள்ளியதில் மனப்பாரம் சற்றுக் குறைந்தது விமலாவுக்கு. அவ்வளவையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சாந்தன் அமைதியாகச் சொன்னான்

"விட்டுத்தள்ளும் உதையெல்லாம் போய் பெரிசு படுத்துறதே. நாங்கள் சரியாய் இருந்தால்சரி. இனிமேல் நீர் பார்சலைக் கட்டி மாமியிட்டக் குடும். அவா குடுக்கட்டும்".

கணவனின் அப்பாவித்தனமான பேச்சு அவளுக்குத் திருப்தியைத் தரவில்லை. சாந்தன் நல்ல உடல் வளத்தோடு இருந்திருந்தால்... இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பே இருக்காது. எல்லாம் அவங்கள் ஏவினஎறிகணையால வந்தவினை. எறிகணை வந்து விழுந்து வெடித்தபோது அதன் சிதறல் ஒன்று அவனது காலையல்லவா பதம்பார்த்து விட்டது. துண்டாடாமல் காயம் மட்டும் ஏற்பட்டிருந்தால் கால்தப்பியிருக்கும். ம்!... இனி அதைப்பற்றி யோசித்து என்ன பயன்.... நான் அவரது இதயத்தைத்தான் காதலித்தேன். அதனால்தான் காலை இழந்தி ருந்தாலும் அவரை நான் மனமார ஏற்றுக் கொண்டேன். இங்கிதம் தெரியாமல் அவளது நினைவுகள் எங்கெல்லாமோ போய்வட்டமடித்து வந்தன. எனினும் புரிந்துணர்வுடன் கூடிய அவர்களது இல்லற வாழ்க்கையில் அவள் திருப்தியையும் நிறைவையும் கண்டாள்.

000

மறுநாள்காலை அவள் கடைக்குவந்து சேர்ந்தபோது நேரம் ஏழு மணியாகிவிட்டிருந்தது. காமாட்சி சில வாடிக்கையாளர்களைக் காக்க வைத்திருந்தாள். அவசர அவசரமாக அவர்கள் கேட்டதை எடுத்துப் பொதியாக்கி விமலா கொடுக்கத்தொடங்கினாள். திடீரென எழுந்த சிகரெட் வாடை அவளது நாசியைத் துளைத்தது. "காந்தன் வந்திருக்கிறான்போல'' மனதுக்குள் நினைத்துக் கொண்டவள் நிமிர்ந்து பார்க்காமல் தனது வேலையில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தால்.

"விமலா! எனக்கு அஞ்சு தோசை, சம்பலைக் கொஞ்சம் கூடுதலாய் வைச் "சுக்கட்டு" பார்சலைக் கட்டிய விமலா பல்லை நெரு மியவாறே மாமியிடம் நீட்டி னாள். மாமி கையை நீட்டி வாங்குவதற்குள் காந்தன் எட்டி அவளது கையிலிருந்த பார்சலுடன் கையையும் சேர்த்துப் பிடித்தான்.

"சீ கையை விடடா ராஸ்கல்"

பாயும் புலியாகச் சீறினாள் விமலா. காமாட்சி பிரமை பிடித்தவள்போல் விக்கித்து நிற்க, எதிர்பாராத விதமாகச் சட்டென்று ஒரு முரட்டுக்கரம் காந்தனின் தோள் பட்டையை அழுத்திப்பிடித்தது. அந்தக் கோரப்பிடியிலிருந்து விலக முடியாதவனாய் ஸ்தம்பித்து நின்றான் காந்தன். கண் இமைக்கும் நேரத்தில் நடந்துமுடிந்த சம்பவத்தால் நிலை தளர்ந்துபோன விமலா நிமிர்ந்து பார்த்தாள். தோல்பட்டையிலிருந்து கரம் காந்தனின் கழுத்தைப் பிடித்து தன் பக்கமாகத் திருப்பியது. அந்த உருவத்தின் கக்கத்தினுள் சிக்குண்டு கிடந்த ஊன்றுகோலைக் கண்டு அதிசயித்துப் போனாள். விழிமூட மறந்து நின்றாள். நடந்த சலசலப்பில் பார்வையாளராக நின்று கொண்டிருந்த ஒருவன் வாய் திறந்தான். "எட... உந்தாள் பழைய கராட்டி மாஸ்ரரடா. ஒரு காலத்தில உந்தாளிட்டத்தான் எங்களில கனபேர் றெயினிங் எடுத்தவை".

கட்டுரை

பா.குமுதன்

# இந்தியாவில் இருந்து திரும்பும் ஈழ அகதிகளின் அவலம்!

அடக்கு முறைகள் காரணமாக 'அகதி' என்ற வார்த்தை தமிழரின் வாழ்வியலோடும் பின்னிப்பிணைந்துவிட்டது. ஈழத் தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் அதை அனுபவிக்காமல் இருக்கர். பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைச் செயற்பாட்டின் பிரதிபலிப்புகளால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை, அதனால் உருவான உள்நாட்டுப் போர் என்பன பல இலட்சம் தமிழர்களைப் புலம்பெயர் தேசங்களில் அகதிகளாகத் தஞ்சம் புக வைத்திருக்கின்றன. தமது வாழ்வை இழந்து, பூர்விக மண்ணை இழந்து, உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்த ஏதிலிகளின் உளச் சோகங்களை வார்த்தைகளால் வர்ணித்து விடமுடியாது. அவை கடந்த 30வருடங்களாகத் தமிழருடைய பொருளாதாரம், கல்வி, பண்பாடு போன்றவற்றில் ஒரு வித சிக்கல் நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அயல் நாடான இந்தியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகள்வரை ஈழத் தமிழர்களுடைய புலம்பெயர் வாழ்வுசக்கரம் அமைந்திருக்கின்றது. அந்தவகையில் தமிழர்களின் அகதிவாழ்வுடன் தொடர்புபட்ட முக்கிய நாடாக அயலிலுள்ள இந்தியா திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் உள்நாட்டு இடப்பெயர்வுகளுக்கு அப்பால் அநேக பயணங்கள் இந்தியா நோக்கி அமைந்திருந்ததை யாரும் மறுத்துரைக்கமுடியாது. தலைமன்னாரிலிருந்து வெறும் 30கிலோமீற்றர்கள் தூரம் என்பதால் அதிகமான மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்துப் பாதுகாப்பற்ற படகுப்பயணம் மூலம் இந்தியா நோக்கிச் சென்றிருந்தனர்.



**இந்தியாவை நோக்கிய அகதிவாழ்வு**

ஈழப்போராட்டம் ஆரம்பித்த காலப்பகுதியில் இருந்து 2009 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலம் வரை பெரும் எண்ணிக்கையிலான ஈழத் தமிழர்கள் தஞ்சம் தேடி இந்தியா நோக்கித் தமது பயணங்களை மேற்கொண்டிருக்கிறார்கள். பலர் கடல்பயணமாகச் சென்றுள்ளதுடன் சட்டரீதியாகவும் பலர் சென்றுள்ளனர். இன்றளவில் ஐரோப்பிய நாடுகளில் ஈழத் தமிழர்கள் பல இலட்சம் பேர் குடியேறி இருந்தாலும் அவர்களது ஆரம்பப் பயணம் இந்தியா நோக்கியதாகவே அமைந்திருந்தது. அதன் பின்னரே அவர்கள் மேற்குலகை நோக்கிப் பயணித்தனர். 1983ஆம் ஆண்டில் இங்கு ஏற்பட்ட கலவரம் முதல் 2009 வரை கிட்டத்தட்ட 3இலட்சம் அகதிகள் தஞ்சம் கோரி இந்தியாவின் தமிழகம் நோக்கிச் சென்றிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வு ஒன்று கூறுகிறது. அவர்களில் இரண்டு இலட்சம் பேர் இந்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகளின் உதவியுடன் மீண்டும் ஈழம் நோக்கித் திரும்பியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மீதமுள்ள ஒரு லட்சம் வரையிலானோர் இன்றுவரை தமிழ்நாட்டின் அகதி ம்காம்களில் பல வருட வாழ்வைக் கழித்தவண்ணம் இருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள 107அகதிகள் முகாம்களில் அண்ணளவாக 65ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர். அரசிடம் பதிவு செய்துவிட்டு 35 ஆயிரம் பேர் வரையிலானோர் முகாம்களுக்கு வெளியில் வசித்துவருவதாக இந்திய அரசின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அத்துடன் சட்டரீதியாகச் சுற்றுலா நுழைவிசைவு பெற்றுச் சென்று இந்தியாவில் வாழும் தமிழ் அகதிகளின் எண்ணிக்கைகள் இதற்குள் அடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. முகாம்களில் இருப்போருக்கு இந்திய அரசால் சில உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுவந்தாலும் அவை போதுமானவையாக இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நாடு திரும்புவதில் உள்ள சிக்கல்கள்**

2009ஆம் ஆண்டு போர் முடிவடைந்த காலத்துக்குப் பின்னர் இந்தியாவில் இருந்து 8ஆயிரம் வரையிலான அகதிகளே ஈழம் திரும்பியிருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அவற்றில் வவுனியாவில் 777குடும்பங்கள் மீள் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவைத் தஞ்சமடைந்த பலருக்கும் நாடு திரும்புகின்ற விருப்புகள் இருக்கின்றபோதும் தாயகத்தைப் பற்றிய அவநம்பிக்கைகள், அச்சநிலைகள் காரணமாக மக்கள் ஓர் இழுபறிநிலையைச் சந்தித்துநிற்கிறார்கள். அத்துடன் தாயகம் திரும்பியவர்களுக்குச் சரியான வசதிகள் செய்து கொடுக்கப்படாத கையறுநிலை என்பன மக்கள் ஈழம் திரும்புவதில் பல சந்தேகங்களை ஏற்படுத்தி நிற்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த தொடர் போராட்டங்கள், அரசியல் கைதிகளை விடுவிப்பதில் அரசின் மெத்தனப்போக்கு, மக்களின் காணிகள் விடுவிக்கபடாமை மற்றும் உள்நாட்டுக்குள் இடம்பெயந்தவர்களே இன்னும் முழுமையாக மீழ குடியமரமுடியாத நிலை என்பன இந்தியா சென்ற அகதிகள் ஈழம் திரும்புவதில் தடைகளை உருவாக்கி நிற்கின்றன.

அத்துடன் இந்தியாவிலேயே பிறந்து, வளர்ந்த புதிய தலைமுறையினர் அங்கேயே தமது வாழ்வை நடாத்த விருப்பம் தெரிவிக்கின்றனர். எனினும் குடியுரிமை பெறுவதில் உள்ள சிக்கல் நிலைமைகள் அவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ தாயகம் திரும்பியாகவேண்டும் என்ற நிலைமையைத் தோற்றுவித்து நிற்கின்றன. ஈழ அகதிகள் பலர் தமக்கு இந்தியக் குடியுரிமை தரப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைத்தாலும் இந்திய அரசு அதைச் சரியானமுறையில் பரிசீலிக்கவோ, வழங்கவோ முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நாடுதிரும்பிய அகதி ஒருவரின் மனதிலிருந்து**

இந்தியாவிலிருந்து நாடு திரும்பி வவுனியா கணேசபுரத்தில் வசிக்கும் சாந்தகுமாரி கூறுகையில், "2001ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து இந்தியாவுக்குப் போனம், சரியான கஸ்ரத்தின் மத்தியிலும் அங்கனேக்க சேர்த்து வைச்ச தோடு, நகைகள் எல்லாத்தையும் அடகு வைச்சுத்தான் சீவிச்சம், 2010இலை இந்தியாவிலை இருந்துவந்தம், எங்களுக்கு யாரும் ஒண்டுமே செய்யேல்ல, வந்து 10 வருசமாப் போச்சுது.

யாருமே வீட்டுத் திட்டம் தாறாங்கள் இல்ல, போய்க் கேக்குற நேரமெல்லாம் உங்களுக்கு வீடு வரும் எண்டு தான் சொல்றாங்கள். அமைச்சர் மாரிட்டையும் போய்க் கதைச்சம் அதுக்கும் பலனில்ல. இப்ப ஒரு மண் குடிசையிலதான் வாழ்க்கை ஓடுது. எலெக்சன் வரேக்க வந்தாங்கள், அதைத் தாறம், இதத் தாறம் எண்டு சொன்னாங்கள். ஒண்டுமே கிடைக்கேல்ல. இதைவிட இந்தியாவிலயே சீவிச்சிருக்காலம்போல கிடக்கு. வீடொண்டு கட்டுறதுக்கு யாராச்சும் உதவி செஞ்சியள் எண்ட புண்ணியமாப் போம்" என்று பல இழப்புகளைச் சந்தித்து மீண்டு வந்த நிலையிலும் கைவிடப்பட்ட தாய் தனது கரகரத்த குரலில் கூறுகின்றார். மீளத் திரும்பிய பல குடும்பங்களின் நிலையும் இதுவே.

**இலங்கை அரசின் பாராமுகம்**

நாடு திரும்புகின்ற அகதிகளுக்கு இலங்கை அரசால் வரவேற்புக் கிடைக்காமை யும் வசதிகள் செய்து கொடுக்கப்படாமையும் அகதிகள் மீண்டு வருவதில் இழுபறி நிலையை ஏற்படுத்தி நிற்கின்றது. இலட்சம் அகதிகளை வரவழைத்து அவர்களுக்கான வாழ்வாதாரக் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது இலகுவான விடயமாக இருக்கின்ற போதும், அரசின் பேரினவாத மனோநிலை அவர்கள் வருகை தருவதை விரும்பவில்லை என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கின்றது. தமிழர்கள் தமது பூர்வீகப் பிரதேசங்களில் இருந்து வெளியேறுவதன் மூலமே அவர்களின் தாயகக் கோட்பாட்டை இல்லாமல் செய்யலாம். அத்தோடு தமிழர்களின் நிலங்களை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை நிறுவி விடலாம் என்றும் எண்ணுகிற பேரினவாத அரசு, அகதிகள் திரும்பி வருவதில் அக்கறைப்படாது அரசு இதயசுத்தியுடன் செயற்படமாட்டாது என்பதும் யாவரும் அறிந்ததே?

அது மட்டுமல்லாமல் பல வருடங்களாக இடம்பெயர்ந்து சென்ற காரணத்தால் அவர்களுடைய காணிகள் பெரும் காடுகள் வளர்ந்து மனிதர்கள் வசிக்கமுடியாத நிலமை உருவாகி இருக்கின்றது. அவர்கள் மீண்டு வந்து தமது காணிகளை துப்புரவு செய்யும் போது இலங்கை அரசின் ஏவலின்பால் செயற்படுகின்ற வனவளத் திணைக்களம் அதற்குத் தடைகளை ஏற்படுத்துவதுடன் இது தமக்குரிய காணி என உரிமை கோரி நிற்கின்றமை பெரும் சிக்கலை ஏற்படுத்தி நிற்கின்றது.

மீறித் துப்பரவாக்கினால் சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலையும் காணப்படுகின்றது. போர் மற்றும் இடப்பெயர்வுகளால் தமது அடையாளங்களையும் உடைமைகளையும் இழந்து தவிக்கும் மக்களுக்கு 'வெந்த புண்ணில் வேல் பாச்சுவது'போல அரசின் செயற்பாடுகள் உள்ளமை திரும்பிய மக்களைப் பொறுத்த வரை ஏமாற்றமே.

ஈழ அகதிகள் விடயத்தில் இந்திய,இலங்கை அரசு மற்றும் வடக்குமாகாணசபை தமிழ் மக்களின்; பிரதிநிதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து அவர்களை மீள அழைத்துவருவதுடன் அவர்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்ப்பார்ப்பும்கூட



# ‘பீலே; பேர்த் ஓவ் எ லெஜெண்ட்’

2018ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி ரஷ்யாவில் களைகட்டியிருக்கிறது. பிரபல அணிகளின் எதிர்பார்ப்புக்களைச் சிதறடித்துப் புதிய முனைப்புக்கள் பலவற்றையும்கூடச் சில புதிய அணிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.
1950ஆம் ஆண்டு பிரேசிலில் நடந்த உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டியில், உருகுவேயிடம் பிரேசில் தோல்வியடைந்தது. அது வலி மிகுந்த தோல்வி. ஒட்டு மொத்த பிரேசிலும் சோகத்தில் மூழ்கியது. பீலேவுடைய தந்தை (சீ ஜோர்ஜ்) வானேலிச் செய்தியில் பிரேசில் தோற்றதைக் கேட்டுக் கண்ணீரோடு புலம்புவார்.
அப்போது சிறுவனாக இருந்த பீலே, தான் வளர்ந்து அந்தக் கோப்பையை நாட்டுக்காக வெல்வேன் என்று அவரிடம் சத்தியம் செய்வார். அந்தச் சத்தியத்தை அவர் எப்படி நிறைவேற்றினார் என்பதுதான் ‘பீலே, பெர்த் ஒவ் எ லெஜெண்ட்’ எனும் திரைப்படத்தின் கதை.

2016ஆம் வெளியான இந்தத் திரைப் படம் கால்பந்தை நேசிக்கும் இரசிகர்களுக்குப் பிடிக்கும். இந்தப் படம் கால்பந்து விளையாட்டின் அழகைத் தனியே பிரித்தெடுத்து எமக்குக் காட்டுகிறது. கால்பந்தை நேசிக்காதவர்களுக்கு அந்தப் படத்தில் இருக்கும் நடனம் பிடிக்கும். ஆம், பிரேசில் வீரர்களின் கால்பந்தாட்டம், நடனத்தைப் போன்றது.

**கறுப்பும் வெள்ளையும்**

1958ஆம் ஆண்டில் சுவீடனில் நடந்த உலகக்கோப்பைக் கால்பந்துப் போட்டி பிரேசிலைத் தலைகீழாக மாற்றியது எனச் சொல்லலாம். ஏனென்றால், 1950ஆம் ஆண்டிலும் 1954ஆம் ஆண்டிலும் பிரேசில் அடைந்த தோல்வி விளையாட்டைத் தாண்டி, ஒருவித அச்சத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது. இதனால், 1958ஆம் ஆண்டு உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் சுவீடனை பிரேசில் எதிர்கொண்டது, அதுவும் மகிழ்ச்சிக்குப் பதில் நடுக்கத்தையே பிரேசில்நாட்டவருக்கு ஏற்படுத்தியது.

2016ஆம் வெளியான இந்தத் திரைப் படம் கால்பந்தை நேசிக்கும் இரசிகர்களுக்குப் பிடிக்கும். இந்தப் படம் கால்பந்து விளையாட்டின் அழகைத் தனியே பிரித்தெடுத்து எமக்குக் காட்டுகிறது. கால் பந்தை நேசிக்காதவர்களுக்கு அந்தப் படத்தில் இருக்கும் நடனம் பிடிக்கும். ஆம், பிரேசில் வீரர்களின் கால்பந்தாட்டம், நடனத்தைப் போன்றது.

போட்டிக்கு முன்பாகச் சுவீடன் நாட்டில் பிரேசில் அணி அவமானப் படுத்தப்பட்டது, எள்ளி நகையாடப்பட்டது. அந்த இறுதிப் போட்டியை வெறும் விளையாட்டுப் போட்டியாக பிரேசிலும் கருதவில்லை. உலகமும் கருதவில்லை. ஆள்பவர்களுக்கும் அடிமை நாடுகளுக்கும் இடையேயான போட்டியாக, கறுப்பினத்தவருக்கும் வெள்ளையினத்தவருக்கும் இடையேயான போட்டியாக அது கருதப்பட்டது.



**ஒரு வீரர் பிறந்தார்!**

அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த போட்டியில் விளையாடிய பிரேசில் அணியில் 17வயது நிரம்பிய ‘எட்ஸன் அரான்டேஸ் டோ நஸ்கிமெண்டோ’ எனும் இளைஞர் இருந்தார். வாயில் நுழைய முடியாத பெயரைக் கொண்டிருக்கும் அந்த இளைஞரின் மறுபெயர் பீலே. இன்றளவும் மிகக் குறைந்த வயதில் உலகக் கோப்பைக் கால்பந்து இறுதிப்போட்டியில் விளையாடிய வீரரும் கோல் அடித்த வீரரும் அவர்தான்.
உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக அந்தப் போட்டிக்குப் பின் அவர் எவ்வாறு உருவெடுத்தார் என்பதை இந்தத் திரைப்படம் உயிர்ப்புடன் காட்சிப்படுத்தியுள்ளது. ஜெப் ஜிம்பால்ஸ்ட்டும் மைக்கேல் ஜிம்பால்ஸ்ட்டும் எழுதி இயக்கியிருக்கும் இந்தப் படத்தைத் தயாரித்தவர்களில் பீலேயும் ஒருவர். அது மட்டுமல்லாமல், ஒரு சிறப்புத் தோற்றத்தில் அந்தப் படத்தில் தோன்றி இரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தார் பீலே.

**விளையாட்டு முறை**

கால்பந்துப் போட்டியில் வெறுமனே வெல்வது மட்டும் பிரேசிலுக்குப் போதாது. எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அழகாக விளையாடி வெற்றிபெற வேண்டும். அந்த வெற்றியைத் தான் பிரேசில் வீரர்களும் இரசிகர்களும் எப்போதும் விரும்புவார்கள். அவர்களின் விளையாட்டு ஒரு வித மகிழ்ச்சியைப் பார்ப்பவர்களுக்குள் கடத்தும் மாயாஜாலத் தன்மையைக் கொண்டது. ‘ஜிஞ்கா’ என்றழைக்கப்படும் அந்த விளையாட்டு முறை, தலைமுறை தலைமுறையாக அவர்களிடம் நிலைத்திருப்பது.




அவர்களைப் பொறுத்தவரை கால்பந்து என்பது கோல் அடிப்பது அல்ல. அது எதிரணி வீரர்களின் கால்களுக்கு இடையே லாவகமாகப் பந்தைக் கடத்தி ஆடும் நடனம். பிரேசிலின் அந்த லாவக நடனத்துக்கு உலகெங்கும் இரசிகர்கள் ஏராளம். உலகக் கோப்பையில் பிரேசில் வெல்லாதா? என்ற ஏக்கம் இன்றும் கால்பந்து இரசிகர்களுக்கு இருப்பதற்கும் அந்த அணியின் மீதான மக்களின் ஈர்ப்புக்கும் பீலே என்ற அந்த இளைஞன் 1958ஆம் ஆண்டில் வெளிப்படுத்திய ‘ஜிஞ்கா’ ஆட்டம் முக்கியமான காரணம்.

**கலைஞர்களின் பங்களிப்பு**

வறுமையிலும் வெறுமையிலும் உழன்றுகொண்டிருந்த பீலேயின் ஆரம்ப கால வாழ்வை இந்தப் படம் நமக்கு விவரிக்கிறது. எல்லாச் சாதனையாளர்களையும் போல் பீலேயும் அவமானங்களையும் வேதனைகளையும் கடந்துதான் உயர்ந்த நிலைக்கு வந்துள்ளார். எனவே அவரது கதையைப் படமாக எடுப்பது அரைத்த மாவையே அரைப்பதுதான் என்றாலும் பீலேயின் ‘ஜிஞ்கா’ அவருக்கு மட்டுமல்ல இந்தப் படத்துக்கும் தனித்துவத்தை அளிக்கிறது.

பீலேயின் ஆட்டத்தில் இருந்த நளினத்தையும் வேகத்தையும் இந்தப் படம் அழகாகவும் அற்புதமாகவும் காட்சிப்படுத்தியுள்ளது. சிறுவயது பீலேயாகப் படத்தில் ‘லியோனார்டோ லிமா கார்வால்ஹோ’ நடித்துள்ளார். 17 வயது பீலேயாக ‘கெவின் டி பவுலா’ நடித்துள்ளார். இருவருமே நன்றாக நடித்திருந்தாலும், லியோனார்டோவின் நடிப்பே நம் மனதுக்கு ஏற்புடையதாக உள்ளது. பீலேவுடைய தந்தையாக நடித்திருக்கும் சீ ஜோர்ஜ், பிரேசிலின் புகழ்பெற்ற இசைக்கலைஞர்.

**இசை, ஒளிப்பதிவு**

இந்தப் படத்தின் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான். அவர் படத்துக்கு இசையமைக்காமல், கால்பந்துப் போட்டிக்கே இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவாளர் ‘மத்தேயு லிபடிக்’தான் இந்தப் படத்தின் உண்மையான நாயகன். முக்கியமாக, பீலேயின் ‘ஜிஞ்கா’வைத் தத்ரூபமாக அவர் காட்சிப்படுத்திய விதம் பிரமிப்பூட்டுகிறது.

பொதுவாக, வாழ்க்கைச் சரித்திரங்களைத் திரைமொழியில் அடக்குவது மிகவும் சவாலானது. ஏனென்றால், வாழ்க்கைச் சரித்திரத்தின் ஆச்சரியங்கள் பார்வையாளர்களுக்கு முன்பே தெரிந்தவையாக இருக்கும். பீலேயின் வாழ்க்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கும் இந்தத் திரைப்படத்தின் கதையிலும் புதிதாக ஆச்சரியங்கள் ஏதுமில்லை. ஆனால், அதை ஈடுகட்ட, பீலே எனும் உலகின் தலை சிறந்த கால்பந்து வீரரின் குருதியும் சதையுமான வாழ்வும் அவரின் ஜிஞ்காவும் பிரேசிலின் சம்பா நடனமும் உள்ளன. இந்தப் படம் பீலேவுக்கும் அவரது தந்தைக்கும் இடையிலான உறவை முதன்மையமாகக் கொண்டே எடுக்கப்பட்டுள்ளது.



2013ஆம் ஆண்டு செப்ரெம்பரில் படத்தின் ஆரம்பப் படப்பிடிப்பானது பிறேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில். ஆரம்பமாகி, 2014ஆம் ஆண்டின் பிற்பகுதி வரை நீடித்தது. படம் வெளியாகி எதிர்மறையான விமர்ச ணங்களையும் பெற்றது, திரைப்பட விமர்ச கர்கள், கதையில் உள்ள குறைபாடு களை சுட்டிக்காட்டி விமர்சித்தனர். ஆனாலும் படம் இன்று வரை பேசுபொருளாகவே உள்ளது. வாழ்க்கைப் பதிவானாலும் கலை நுட்பங்களும் இழையோடியுள்ளன. சினிமாவுக்கான உத்திகளையும் இயன்ற வரை உள்ளீர்த்து எடுத்துள்ளனர். உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றுவரும் இன்றைய சூழலில் கவனம் ஈர்த்திருக்கிறது இந்தப் படம்.

*தகவல் - தி ஹிந்து தமிழ்*

## காட்டுப் புலத்தில் காடைத்தனம்



கவிதைகள்

மானியூர்ரட்ணேஸ்

சுந்தர சுழிபுரத்தில்
அந்தோ ஓர் இழிசெயலாம்
எந்த எம் தூதன் அந்த
நந்தவனத்தை நாசம் செய்தான்?

வித்தியாவுக்கிழைத்த கோரங்கள்
சித்தங்கள் ஆறுமுன்
முற்றிடா முத்தொன்றை
முளைத்தெழும் வித்தொன்றை
பித்தர்கள் பிழிந்த வதை
நித்திலம் ஏற்குமோ?

பிஞ்சுப் பாலகி
வஞ்சமிலா நெஞ்சகி
விஞ்சிடும் அறிவழகி
மஞ்சமொழிச் சிட்டே – நீ
பஞ்சமா பாதகரை
தஞ்சமெனக் கொண்டது ஏன்?

சமாதானப் புறாவைக் காட்டக் கூட்டியவன்
எமனாகி உன்னில் ஏப்பம் விட்டானோ?

அந்தக் காட்டுப்புலக் காமுகருக்கு
வேட்டுக்கள் வைத்தாலும் வேதனை தீராது

பாலகப் பிஞ்சதன்
குரல்வளை திருகிய
இரணிய அரக்கரில் இனி
இரங்கங்கள் எதற்கு?

முத்துப் பாலகியின் மூச்சை முடக்கிய
பித்துப் பிசாசுகள்
இத்தரைக்கு இனி வேண்டாம்

நகரவாசிகள் சிலர்க்கு இந்த
நர(க) வேள்வி சிரமேற்படாது

காட்டுப்புலக் காடைத்தனத்தை
கருத்தில் கொள்ளாத சில
நாட்டுப்புற நாயகர்கள்
வோட்டுச் சீட்டுக்கேட்டு வருவர்

**சட்டம் திருத்தாத கெட்ட போதையதை**
**கொட்டமிட்டுக் கொக்கரிக்கும்**
**கட்டுக்கடங்கா கயவர்களை – தரை**
**மட்டமாக்கி மயானமிட**
**கட்டிளம் சந்ததிகள்**
**திட்டமிட்டுக் கரம் சேரின்**
**விட்டகலும் விளைவுகள் யாவும்!**



# ஒதுக்கான கிராமமா, ஒதுக்கப்பட்ட கிராமமா?

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்



எங்கட நிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வருகுது எண்டதை நினைக்க ஆத்திரமாத்திரமாயெல்லே வருகுது. வக்கிர புத்தியும் அதுக்குப் பாதுகாப்பும் கிடைக்கிறதாலைதான் உது கட்டுப்பாடேயில்லாம வளருது. அப்பிடிச் சொல்லி ஆற வேண்டியதைவிட என்னதான் செய்யிறது? வயதுபோன பொம்பிளையளே வாழமுடியாத நல்லதொரு காலத்தைத்தானே கையிலை கொண்டு திரியிறம். 'நல்லாட்சி' நல்லபடியா நடக்கிறதுக்கு இதுகள் தேவையெல்லே? அவன் ஞானசாரதேரோக்குப் பிறந்தது மாதிரியான ஞானமாவது எங்கட ஆக்களுக்குப் பிறக்க எல்லாக் கடவுளையும் கும்பிடுவம். வேற என்னத்தைச் சொல்ல? என்னத்தைச் செய்ய?

000

போன கிழமை றெஜினா எண்ட பிஞ்சின்ர கதையோட போட்டுது. பேப்பர்களிலையும் முன்பக்கத்துக்குக் காணக்கூடியதாயிருந்ததல்லே? பிறகு போராட்டங்கள், அறிக்கையள் எண்டுவலு ஆர்ப்பரிப்போடைபோச்சுது பாருங்கோ! காட்டுப்புலத்தை ஒதுக்கான கிராமம் எண்டதைவிட ஒதுக்கப்பட்ட கிராமம் எண்டும் சொல்லலாம். அதுக்குக் காரணங்கள் கனக்கக் கிடக்குதெண்டு பொன்னாலை ராசலிங்கம் சொன்னது சரிதான்.

அரச, தனியார் நிறுவனங்களின்ர மற்றது சமயக்காறரின்ர உத்தியோகத்தர்மார் எத்தினைபேர் இந்தக் கிராமத்திலை முழுநேரமாய் வேலைக்கெண்டு இருக்கினம்? அது கிட்டத்தட்ட கிராமத்துச் சனத்தின்ர மூண்டுநாலு பேருக்கு ஓராள் எண்டுதான் இருக்கும். ஆனால் கசிப்பு, கஞ்சா உட்பட்ட



போதைப் பழக்கங்கள், இளவயதுக் கலியாணம், பல தாரங்கள், முறைதப்பின உறவுகள் அதுவிதுவெண்டு சமூகத்துக்கு உதவாத அத்தனையும் உள்ள கிராமங்களிலை அதுவும் ஒண்டெண்டு சொல்லிப்போட்டு இருக்க முடியாதல்லே? இதுகளை மாத்திறதுக்கான யோசினையாவது ஏதாலுமிருக்கோண்டு தெரியாது.

அரசியல்வாதியள், அமைச்சர்மார், அதிகாரியள் ஆருமே அந்தக் குழந்தையின்ர கொலைக்குப் பிறகாவது அங்க போயிருக்கலாம். ஆனால், அப்பிடி நடக்கயில்லை. சனம் கொதி கொதியெண்டு கொதிச்சதாயல்லே பேப்பருகளிலை வந்தது. நான் முதல்ல சொன்ன மாதிரியான சமூகப் பிரச்சினையளாலையும் திட்டமிடாத வாழ்க்கை முறையாலையும் வறுமை கூத்தாடுகிற ஊரல்லே. அங்க போய் என்ன இலாபமெண்டு விட்டிருக்கலாம். "வித்தியா கொலையிலை சம்பந்தப்பட்டதுகள் பெரிய இடங்கள் எண்டதாலை எல்லாருமல்லே அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு முன்னுக்கு நிண்டவை" இது நானில்லை. கனகனின்ர கதை. காத்திகேசண்ணையும் அதைத்தான் சொல்லுறார்.

000

எல்லாருமிருந்தும் இல்லாத கிராமம். அங்ககூட சரியான தலைமைத்துவம் இல்லை. சொல்வழி கேக்கிற பழக்கம் பொதுவாயே எங்கட ஆக்களிட்ட இல்லைத்தானே. அங்கயும் அதுதான் நிலை. அந்தப் பிள்ளையின்ர கொலைக்கு நியாயம் கேட்டு ஒரு போராட்டத்தைக் கூடச் சரியாய் ஒழுங்கு செய்துகொள்ள முடியாத ஒரு சமூகமாயிருக்குது. கவலைதான். இதுகளை உணந்து சமூகத்துக்குள்ள தங்களையும் இணைக்கக்கூடியதாய் தங்களை மாற்றுகிற உணர்வையர்வது பெறவேணும். உப்பிடியே இருக்கேலாதல்லோ?

எதிர்ப்புப் போராட்டம் செய்யிறதிலைகூடச் சரியாச் செய்யக்கூடிய சரியான வழிகாட்டலோ, ஒத்துழைப்போ கிட்டாதளவுக்கு இருக்கிறது கவலைதான். போக்குவரத்தை மறிச்சு ஒரு எதிர்ப்போடை விழிப்பூட்டலையும் செய்யிறதைக்கூட வெறும் ஒரு காரைநகர் பஸ்ஸை மறிக்கிறதாலை செய்யேலுமோ எண்டு யோசிக்கயில்லை. சுழிபுரம் சந்தியிலை கூடுறதாலை வெளியுலகத்துக்குச் செய்தி எந்தளவு போகுமெண்டதைக்கூடக் கணிப்பிட முடியாமலிருந்ததைக் காணச் சரியான கவலையாயிருந்துது.

எங்கட ஆக்களின்ர பொறுப்புணர்ச்சி எண்டுறதுக்கு இது நல்ல உதாரணம். சிறுமி கொலைக்கு நீதிவேண்டியும் போதை எதிர்ப்புக்கும் எண்டுசொல்லி ஒரு கடையடைப்பும், கர்த்தாலும், பேரணியும் வெள்ளிக்கிழமை நடந்ததல்லே? அந்தப் பேரணிஅண்டைக்கு அத்தியாவசியப் பொருளுகள் விக்கிற எல்லாக் கடையளும் மூடியிருந்ததைக் காணக் கூடியதாயி ருந்துது. ஊர்வலம் ஏ.ஜி.ஏ ஒவ்பீஸ் நோக்கிப் போய்க் கொண்டிருந்த பாதையிலை சங்கானை பெருங் குடிமக்கள் தாகசாந்தி நிலையம் திறந்திருந்ததை எத்தினை பேர் பாத்திச்சினமோ தெரியேல்லை? மண்டிகைக் குளத்துக்கு முன்னாலை யிருக்கிற சாராயக்கடையைத்தான் சொல்லுறன். அது மட்டும் அண்டைக்குத் திறந்தி ருந்துது.

றிப்போட்டர்மார் ஆராவது படங்கிடமெடுக்கிறாங்களோ எண்டு பாத்தன். ஆனால், அவை முன்னாலை போய்நிண்டு முன்வரிசைக் காறரைத்தான் படமெடுக்கிறதிலை நண்டுவிட்டினம். ஆரோசிலர் பழைய பொற்காலத்தைத் திரும்பக் கேட்டதையாவது கவனிச்சுப் பெரிய எழுத்திலை போட்டாங்களே அது காணும். இந்த ஏற்பாட்டுக்காரர் செய்த ஏற்பாட்டுக் குறைபாட்டுக்கு இதுகும் ஓர் உதாரணம். இல்லையோ?

000

முதல்நாள் போராட்டத்துக்குப் பள்ளிக்கூடப் பிள்ளையளை அனுப்பேல்லையெண்டு அதிலை மெயின் றோட்டிலையிருக்கிற பெரிய பள்ளிக்கூடத்து அதிபரை வறுத்த ரீ.வீக்காரற்றை பொறுப்புணர்ச்சியை என்னவெண்டு சொல்ல. "பள்ளிக்கூடப் பிள்ளையை ஆற்றை பொறுப்பிலை, எப்பிடி இடைநேரம் வெளியாலை விடுகிறது எண்டுற விசயம் தெரியாத உங்களுக்கேன் சமூக அக்கறை?" எண்டு சீறின சின்னம்மாக்கான்ர கோவத்திலை நியாயமிருக்கோ இல்லையோ?

அந்தப் பிள்ளை தான் வதைபட்டுச் செத்து எங்களுக்குப் பெரிய செய்தியொண்டைச் சொல்லியிருக்கு. நாங்கள் எங்கட கிராம, பிரதேச மட்டச் செயற்பாடுகளுக்குக்கூடகச் சரியான ஒரு கட்டமைப்பில்லாம, சமூகத் தொடர்புகளில்லாம இருக்கிறம். எங்களை நம்பி, எங்களுக்காக, எங்கட வரிப் பணத்திலை ஊதியம் பெறுகிறவையாகட்டும், எங்கட வாக்காலை வாழ்க்கையை அனுபவிக்கிறவை, அறிக்கை விடுகிற்வையாகட்டும் அவை எங்களுக்கானதைக் கவனிச்சுச் செய்யவைக்கிற ஆளுமையான தலைமைத்துவத்தையும் அமைப்புகளையும் நாங்கள் ஆக்கிவைச்சிருக்க வேணும். பிள்ளையின் உயிர் போனதுக்குப் பிற்பாடாவது அதாலை கிடைச்சிருக்கிற படிப்பினையை விளங்கிக் கொள்ளுவமா?

facebook

# சின்னதா ஓர் அரட்டை

அரட்டை
மேரிகிரேஸ் வரதராஜன்

## சீமான் போராளிகள்

பிரபாகரனின் பின்னால் இளைஞர்கள் போனது போராடுவதற்காக. அவர் ஒரு சிறந்த தலைவர். பேச்சுக்களில் வீரம் பேசாமல் எதையும் செயலில் செய்து நிற்பவர். அவரோடு ஒட்டிநின்று படம் பிடித்து, அந்த ஒன்றையே வைத்து வாய்ப்பேச்சால் மேடை அரசியல் செய்கிற சீமானுக்குப் பின்னால் சகோதரத்துவம் என்கிற மாயையுடன் இறுகப் பிணைந்துவிட்டிருக்கிறார்கள் எமது ஈழத்து இளம் சந்ததியினர். அதுவும் புலம்பெயர்ந்த இளையவர்களே அதிகமாகக் கவரப்பட்டிருக்கிறார்கள். இங்கிருக்கும்போது அமைதி காத்த அவர்கள் அங்கு போனதும் சீமானின் கட்சியாகி விட்டனர்.

மேடைப்பேச்சால் உசுப்பேற்றப்பட்டு சீமானைத் தலையில் தூக்கிக் கொண்டாடுவதுடன் விட்டுவிடவில்லை. சிலர் பண உதவியும் செய்கிறார்களாம்! இனிச் சீமானைப் பிடிக்க முடியுமா? முரட்டுக்காளை, பாயும்புலி... ஐயய்யோ ஆயிரம் அவதாரங்கள்! 'தம்பி! உங்களிடம் இருப்பது கைத்தட்டும் இரசிகர்கள் தான்; என்னிடம் கருத்தியல் புரட்சி யாளர்கள் பல இலட்சக் கணக்கில் இருக்கிறார்கள்..!' என்று சீமான் கடைசியாக எடுத்துவிட்டிருக்கிற வாய்ப்பேச்சு முகப்புத்தகத்தில் பிரபல்யமாகி யிருக்கிறது.

என்னத்தச் சொல்ல. அவருடைய கருத்தியல் இரசிகர்களின் முகப்புத்தகப் பதிவுகளைப் பார்த்தால் சிரிப்பு மாத்திரம்தான் வரும்.




## கலா அக்கா பாவம்!

ஜேர்மனியருக்கு ஹிட்லர் ஒரு கடவுளாகவும் யூதருக்கு ஹிட்லர் எமனாகவும் இருந்தவன். எந்த யூதரையும் குழந்தையா னாலும் கிழவனானாலும் கண்ட இடத்தில் கொல்வதற்குச் சட்டம் பிறப்பித்தான். இங்கும் 'ஹிட்லரைக்' கொண்டுவருவது என்பது தமிழரைக் கண்ட இடத்தில் கொல்லவதற்கு சமமான ஒன்றுதானே?

குற்றம் நடுங்கும், தவறியும் நடந்துவிட்டால் ஊராருக்குத் தெரியுமோ? தெரியாதோ? அவர்களுக்கு தெரிந்துவிடும். தகுந்த தண்டனையும் கொடுக்கப்படும். எச்சரிக்கை விடுக்கப்படும். அது குற்றங்களைப்பொறுத்தது. சில சமயங்களில் தண்டனைகள் வழங்கப்பட்ட பின்னேதான் குற்ற வாளிகளின் குற்றங்கள் மக்களுக்கே தெரியவரும். இங்குள்ள பாதிப்படைந்த சிலர் கத்துகிறார்கள், இவர்களும் தமது இனத்துக்காக பாடுபட்டபடியால் ஹிட்டருக்கு ஒப்பானவர்கள்தானே என்று? ஹிட்லர் என்பவன் தன் இனத்துக்காக எந்த யூதனையும், எந்தச் சந்தர்ப்பத்திலும் கொல்ல உத்தரவிட்டான் ஆனால், இவர்கள் துரோகிகள் மற்றும் இராணுவத்தை மட்டுமே குறிவைத்தவர்கள், அத்துடன் சில குறிதவறிய தாக்குதல்கள் சிங்கள பொதுமக்கள் கொல்லப்படுவற்கு காரணமாகிற்றே தவிர எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஓர் இனத்தை கொன்றொழிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் இருந்திருக்கவில்லை. இதற்கான சிறந்த ஆதாதாரம் என்னவென்றால் யாழிலிருந்து 1990களில் முஸ்லிம்கள் வெளியேற்றபட்டனரே தவிர கொன்றொழிக்கப்படவில்லை.



தமிழனுக்குள்ளே காட்டிக்கொடுப்புகளும், துரோகங்களும் இருந்து அவை தண்டிக்கப்பட்டாலாம். அதுவே முஸ்லிம்களானால் கதையை நீங்கள் வேறாக்க மாட்டீர்களா என்ன?

முன்னே பார்த்தது சரித்திரம். இனிப் பார்க்கபோவது கொஞ்சம் தரித்திரம்தான். யாழ்ப்பாணம் நூலகம் உட்பட தமிழரின் சகல அழிவுக்கும் காரணமான ஒரு தேசிய கட்சிக்குக் கொடி பிடித்து அதன் அமைச்சு பதவிலிருந்து கொண்டு 'புலிகள் இருந்தால் குற்றங்கள் இருக்காது' என்ற கூற்றை ஆர்வக்கோளாரில் கூறியிருக்கிறார் (இந்தகூற்று முற்றிலும் உண்மை என்று எந்த குழந்தைக்கும் தெரியும் அது வேறு கதை). இப்படித்தான் சிலநாள்களுக்கு முன் ஊடகம் ஒன்றுக்கு தலைவர் இருந்தால் இந்த நல்லாட்சி அரசுடன் இணைந்து செயற்படுவார் என்று கூறியிருக்கிறார். இந்த இரண்டு கூற்றும் முரண்பாடானது?

உங்கள் அரசியல் பேச்சுக்கு இன்னும் புலிகள் தேவைப்படுகிறார்கள் என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். இவர் மட்டும் அல்ல இன்றைய நிலமையில் எல்லா அரசியல்வாதிகளின் அரசியல் பேச்சுப்பலம் என்பது புலிகள்தான் என்பது எல்லா மக்களுக்கும் ஏலவே தெரிந்த விடயம்தான்.



## சந்ததிகள் பரவட்டும் சரித்திரம்

1. எமக்காக மாத்திரம் போராடித் தமது உயிரை மாய்த்த கரும்புலிகளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 5ஆம் நாள் கடைப்பிடிக்கப்படும் நினைவு நாளே கரும்புலிகள் நாள்.
'2. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் தற்கொலைப் போராளியான மில்லர் தற்கொலைத் தாக்குதலை நடத்திய நாள்.
3. விடுதலைப்புலிகளின் முதல் தற்கொலைத் தாக்குதல் 1987ஆண்டு ஜூலை மாதம் 5ஆம் திகதி இலங்கை மில்லரால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இராணுவமுகாமின் மீது நடாத்தப்பட்டது.
4. கரும்புலிகளை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இந்த் தினத்தில் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு கரும்புலி மாவீரர்களுக்கு மலர் வணக்கம் செய்யப்படுகிறது.
5. தமிழ் மக்களின் உரிமைக்காக மாத்திரம் குரல்கொடுத்த விடுதலைப் புலிகள் மீது விமர்சனங்கள் பல இருந்தாலும், அவர்களைப்போல எதையும் எதிர்பாராது எமக்காக உயிரை மாய்ப்பதற்கு விமர்சகர்களால் முடியாது. அத்தோடு புலிகளை விமர்சிக்கும் அளவுக்குச் சிறந்தவர்கள் இங்கு எவருமில்லை.

பலரது முகப்புத்தகத்தகப் பங்கங்களிலும் இந்த ஐந்து வசனங்களும் தரம் ஒன்றில் கற்கின்ற பிள்ளைக்குப் புகட்டுவதுபோல இலகுவாக அனைவருக்கும் விளங்கும்படி எழுதப்பட்டுள்ளன. முகப்புத்தகத்தை நம்மவர்கள் இவ் விடயத்திலாவது சரிவரப் பயன்படுத்துகிறார்கள் என்பது மனதுக்கு நிம்மதியே!

**'வரலாறு முக்கியம் அமைச்சரோ!'**

## பிளாஸ்ரிக்குகளை தவிர்ப்போம்!


எங்கள் ஊர்களில், சொந்தக்காலில் நிற்பதற்கு ஆயிரம் தொழில்கள் உண்டு. எந்தக் கழிவையும் பொருளாக்கி, அதைப் பணமாக்கிப் பொருளீட்டும் தகுதியும், திறமையும் நிறையவே எமக்குண்டு. ஆனால் உழைப்பவர்களின் தொகைதான் அருகிவருகிறது. சுய உழைப்பால் உயரநினைக்கும் இந்த வாழைக் குலை சங்க உழைப்பாளிகளுக்கு நாம் அனைவரும் மரியாதை செய்வோம். அந்தப் பகுதியால் செல்லும்போதும், எந்தக் கைவினைப் பொருட் கண்காட்சிக்குப் போனாலும் நமது உற்பத்திகளை வாங்கிச் செல்வோம். சுற்றுச்சூழலுக்கும், எதிர்காலத்துக்கும் தீங்கில்லாத உற்பத்திகளுக்கு கைகொடுப்போம். பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்ப்போம்.



## ஸ்டாலின் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் வறுமையை ஒழிப்போம்.

பொதுசனம் ஐந்து முறை ஆட்சிக்கு வந்தகாலத்தில் வறுமையை மறந்து எருமை மேய்க்கப்போயிருந்தீர்களா?






# செம போத ஆகாதே

## இரசனையற்ற சில நல்ல கருத்துக்கள்

**கதை**
அதர்வா-மிஷ்டி இருவரும் காதலர்கள். தவறான புரிதலால் இவர்கள் பிரிகிறார்கள். காதலியைப் பிரிந்த சோகத்தில் போதையின் உச்சத்துக்குச் செல்கிறார் அதர்வா. 'ஒன்றை மறக்க இன்னொன்று' என்று அவரை வழிநடத்தும் நண்பர் கருணாகரன், தனிமையில் இருக்கும் அதர்வாவின் வீட்டுக்குப் பாலியல் தொழிலாளியை (அனைகா சோதி) அனுப்பி வைக்கிறார். அங்கு அனைகா மர்மமான முறையில் கொல்லப்படுகிறார். கொலையாளியைத் தேடி அதர்வா, பாலக்காடு செல்கிறார். எதற்காக இந்தக் கொலை நடந்தது? செய்தது யார்? கொலைப் பழியில் இருந்து அதர்வா மீண்டாரா? பிரிந்துசென்ற காதலி மிஷ்டி அதன் பிறகு என்ன செய்கிறார்? இதற்கெல்லாம் விடை சொல்கிறது மீதிப் படம்.




**பாத்திரங்கள்**
அதர்வா பாலக்காடு செல்லும்போது, இறந்தகால, அவரது காதல் காட்சிகள் திரையில் படர்கின்றன. ஆனால், இருவருக்குமான காதல் விடயங்கள் பெரிதாக ஈர்க்கவில்லை. அலுப்புத் தட்டவைக்கும் காட்சிகளுக்கு நடுவே கருணாகரனின் நகைச்சுவை சுவாரசியம். கருணாகரன், மனோபாலா, சேத்தன் கூட்டணி ஆரம்பத்தில் இரசிக்க வைக்கிறது. 2ஆம் பாதியில் ஜோன் விஜய், எம்.எஸ்.பாஸ்கர், ஆடுகளம் நரேன், யோகிபாபு என நடிப்புப் பட்டாளங்கள் இணைகின்றன. நகைச்சுவை கலந்த துறுதுறுப்புடன் ஜோன் விஜய் வில்லத்தனம் செய்தாலும், கதை ஓட்டத்துக்குப் பெரிதாகத் துணைபுரிய வில்லை.

**சில நல்ல கருத்துக்கள்**
'போதையில் எடுக்கும் முடிவு முற்றிலும் தவறாக முடியும்' என்ற நல்ல கருத்தைச் சொல்ல நினைத்திருக்கிறார் இயக்குநர் பத்ரி வெங்கடேஷ். காதல், நகைச்சுவை என நீளும் படத்துக்கு இடையே முக்கிய விடயமாக, தவறான சகவாசத்தால் ஏற்படும் சங்கடங்களையும் கதை தொடுகிறது. ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் ஒரு புதிய கதாபாத்திரத்தை, புதிய கதைப் பின்னணியோடு திரைக்கதைக்குள் கொண்டு வருகிறார் இயக்குநர். ஆனால் அந்தத் திருப்பம் போதுமான விறு விறு சம்பவங்களைப் பதிவு செய்யாமல் விலகிப் போய்விடுகிறது. இதனால், பல இடங்களில் கதை ஏனோதானோ என்று பயணிக்கிறது.

**இசை, ஒளிப்பதிவு**
யுவன் சங்கர் ராஜாவின் பின்னணி இசையும், கோபி அமர்நாத்தின் ஒளிப்பதிவும் ஆறுதல். அதர்வாவின் சொற்படி ஒவ்வொரு விடயத்தையும் கருணாகரன் செய்து முடிப்பது, மனோபாலா வீட்டுக்குள் வந்து போகும் ரகளைகள் இப்படிப் பல இடங்கள் இரசிக்கும்படி உள்ளன. ஆனாலும், பெண்ணின் சடலத்தை அறைக்குள் வைத்துக்கொண்டு படம் முழுக்க அவர் அரங்கேற்றும் நகைச்சுவைத்தனம் ஒரு கட்டத்தில் சலிப்பை ஏற்படுத்துகிறது.
வெளியே தெரிந்தால் என்ன நடக்குமோ? என, ஒரு பெண்ணை தன் அறைக்கு அழைத்து வரவே பயப்படும் நாயகன், எதிர்பாராதவிதமாகக் கொலைப் பழியில் சிக்குகிறார். அந்தச் சூழலில் பெரும் அதிர்ச்சிகரமாக இருக்கவேண்டிய அவரைச் சுற்றி நகைச்சுவை விடயங்களும், பதற்றம் இல்லாத சப்பைக் காட்சிகளும் இடம்பெறுவது கதையோடு ஒட்டவிடாமல் செய்கின்றன.

**பலவீனங்கள் பல**
காதல், அதனால் முளைத்த சண்டை, நகைச்சுவை, கொலை, கொலையாளியைத் தேடும் படலம் என முதல் பாதி சுவாரசியம் குறையாமலே நகர்கிறது. இதற்கெல்லாம் விடை காண்பதாக, மிரட்டலாக இருக்கவேண்டிய 2ஆம் பாதி பெரிய திருப்பங்கள் இல்லாமல் போனது தான் படத்துக்குப் பெரிய பலவீனம். குறிப்பாக, பணத்துக்காக மாறி மாறி நடக்கும் சண்டைகள், தேடல்கள் சரியாகக் கையாளப்படவில்லை. தற்போதைய காலகட்டத்துக்கு அவசியமான ஒரு நல்ல செய்தியை விறுவிறுப்பும் நகைச்சுவையும் கலந்து சொல்ல நினைத்த இயக்குநரின் முயற்சியைப் பாராட்டலாம். நகைச்சுவையில் செலுத்திய கவனத்தைக் கொஞ்சம் திரைக்கதையின் திருப்பங்களிலும், காட்டி இருந்தால், இரசனையான படமாகியிருக்கும்.



# 'மம்மா மியா! ஹியர் வி கோ எகய்ன்'

இசையும் காதலும் நகைச்சுவையும் கலந்து வெளியாகிக் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் சகல வயதினரையும் இரசிக்கவைத்த திரைப்படம் 'மம்மா மியா!'. இதன் அடுத்த பாகமாக, 'மம்மா மியா! ஹியர் வி கோ எகய்ன்' வருகிற 20ஆம் திகதியன்று வெளியாக உள்ளதாக அறிவிப்புகள் கிட்டுகின்றன.

**கதை**
எழில் கொஞ்சும் கிரேக்கத் தீவு ஒன்றில் விடுதிகளின் முதலாளியாக வருகிறார் ஒரு சீமாட்டி. அவர் தனது மகளுக்கான திருமண ஏற்பாடுகளை விமரிசையாகத் திட்டமிடுகிறார். அவருடைய நீண்டகாலத் தோழிகளும் நட்புகளும் ஒன்றுசேர, நாளொரு கொண்டாட்டமாகத் திருமண நாள் நெருங்குகிறது. அம்மாவை நெகிழ்ச்சியூட்ட மகள் ஓர் இரகசிய நடவடிக்கையை மேற்கொள்கிறாள். அம்மாவின் 'நாள் குறிப்புக்கள்' வாயிலாகத் தன் தந்தை என்று ஊகிக்க முடிந்த மூவரை திருமணத்துக்குச் சிறப்பு விருந்தினர்களாக வரவழைக்கிறாள். ஒரு காலத்தில் பிரபல பொப் பாடகியாக இருந்த சீமாட்டி தன் முன்னாள் தோழர்களை எதிர்பாராது சந்திப்பதும், அவர்களுக்கு மத்தியிலான நகைச்சுவைக் கொண்டாட்டங்களுமே மீதிக் கதை.


'மம்மா மியா!' என்ற இந்த இத்தாலியச் சொல்லுக்குத் தமிழில் 'அம்மாடி!' எனப் பொருள் கொள்ளலாம். 1999ஆம் ஆண்டில் இதே தலைப்பில் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பிரபலமான இசை, நாடகக் காட்சிகள் இன்று வரை தொடர்கின்றன.
இவை நட[illegible]தும் காத[illegible]




இதைத் தழுவியே 'மம்மா மியா!' முதல் பாகம் உருவானது.
தற்போது பத்தாண்டுகள் கழித்து வெளியாகும் 'மம்மா மியா! ஹியர் வி கோ எகய்ன்' திரைப்படம், இசைப் பாடகியின் இளம் வயதுக் கொண்டாட்டங்களில் சென்று மீள்வதால் இதிலும் இசை இரசிகர்களுக்கு விருந்து காத்திருக்கிறது.
முதல் பாகத்தின் அம்மா-மகள் ஜோடியான மெரில் ஸ்ட்ரீப் அமண்டா மற்றும் அமண்டாவின் உத்தேச அப்பாக்களான பியர்ஸ் பிரஸ்னன் உள்ளிட்ட மூவர் என முதன்மைக் கதாபாத்திரங்கள் அப்படியே இரண்டாம் பாகத்திலும் உண்டு. கதை, திரைக்கதை பங்கேற்புடன் படத்தை ஒ.எல். பார்க்கர் இயக்கி உள்ளார்.

தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்



அத்தியாயம் 21

# நின்னைச் சரணடைந்தேன்

அவசரப்பட்டோ, நகைச்சுவையாகவோ, எடுத்து எறிந்தோ கதைக்காது அமைதியாக, நம்பிக்கையுடன் பேசுகின்றாள் உஷா. அவள் கூறுவதற்கு எதிராக எதையும் கூற முடியவில்லை. உஷாவின் தாயாருடன் சென்று பிள்ளைகள் தங்கும் இடங்களை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த யசோதாவும் நிவேதாவும், "என்னக்கா புறப்படலாமா?" எனக் கேட்டனர்.

"எப்படி இருக்கு சிறுவர் இல்லம்?" என்றாள் உஷா.

"உண்மையில் வெளிநாட்டிலிருப்பதுபோன்று நல்ல வசதியாக, நீற்றாக வைத்திருக்கின்றீர்கள். உங்களுக்கு முகஸ்துதியாக இருக்கும். நாங்கள் சொல்வது உண்மை. புகழ்ச்சி இல்லை. உங்கள் சேவையை நாங்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது" என்று இருவரும் மாறிப் மாறி புகழ்ந்தனர்.

"உஷா நாங்கள் விடை பெறுகின்றோம்" என்று சுவேதா கூற அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

000

சிவகாமியின் முப்பத்தொராம் நாள். நினைவுநாளுக்கு வந்த சுரேசும், மனைவியும் அங்கே தங்கி நின்று உதவிகள் செய்தனர். நல்ல சிறப்பாக எல்லாம் நடைபெற்றன. யசோதாவும், நிவேதாவும் அன்று நடைபெற்ற நிகழ்வைக் கண்டு தங்கள் பிள்ளைகளோ, கணவன்மாரோ கலந்துகொள்ள முடியாது போனதை எண்ணி வருத்தப்பட்டனர்.

"நிவேதா எங்கள் அத்தைமார் தங்கள் பிள்ளைகளைக் கைக்குள் போட்டுக்கொண்டு செய்யும் அட்டகாசங்களையும் செல்லம்மா அத்தை தன் மகனை எப்படி வைத்திருக்கிறா என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். இப்படி ஓர் அத்தை எங்களுக்குக் கிடைக்க வில்லையே. அக்கா கொடுத்து வைத்தவள்" யசோதா கூறினாள்.

"அக்காவுக்குக் கிடைத்தது அத்தையல்ல. அம்மா மாதிரி ஓர் அம்மா, எங்களுக்கு கிடைத்த அத்தைமார் பணம் காக்கும் பூதங்கள் மனிதர்களல்ல" என்றாள் நிவேதா.

"என்ன அக்காவும், தங்கையும் இரகசியம் கதைக்கின்றீர்கள் முகத்தில் நாளைக்குப் பயணம் போகின்றகவலையும்தெரியுது" என்று கூறிக்கொண்டு வந்தான் ரவிசங்கர்.

"உண்மைதான் அத்தான் இஞ்சையிருந்த ஒரு மாதமும் ஒருநாள் போல ஓடிமறைந்து விட்டது. இப்படி ஒரு சந்தோஷத்தை அங்க காணமுடியாது. பணத்துக்காக ஆலாய்ப் பறக்கினம், பிறந்தநாள், கல்யாணம் என்று எப்போதாவது தான் கொண்டாட்டம்" என்றாள் யசோதா.

"என்ன செய்வது? எம் இனத்தின் தலைவிதி இப்படியாகி விட்டது. ஒருவர் வெளிநாடுபோய் அந்தக் குடும்பம் இங்கே காட்டும் பகட்டு வாழ்வைப் பார்த்து அங்கே போனவர்கள் படும் கஸ்ரங்கள் எல்லோர்க்கும் தெரிவதில்லை. சந்தோஷங்களை விற்று விட்டு உழைத்தால் தான் வாழலாம் என்றால் சிலவற்றை இழந்துதான் ஆக வேண்டும். எனது மூத்த மைத்துனர் சுவிஸில் தனி முயற்சியால் பிறருக்கும் வேலை வாய்ப்புகளைக் கொடுத்து நன்றாக உழைக்கின்றார். மற்றவரும் சுவிஸில் சிறுவயது முதலே இருக்கிறார். சொந்தமாகக் கடை வைத்து நல்ல நிலையிலுள்ளனர். என் சகோதரிகளுடைய ஒத்துழைப்பும் இருப்பதால் நன்றாக வாழ்கிறார்கள். சந்தோஷமாக வாழ்வதற்குப் பணம் ஒரு பிரச்சினையில்லை. நிவேதா மனம் தான் காரணம்" என்றான்.

"எங்களுக்கும் ஒரு குறையுமில்லை. இரண்டு வீட்டிலும் இரண்டு வில்லிகள் இருக்கிறார்கள். அவர்கள் தான் எமது சந்தோஷத்தைக் கெடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்" என்றாள் யசோதா.

"சுவேதா எல்லாவற்றையும் கூறியிருக்கிறாள். எல்லாம் இருந்தாலும் ஏதாவது ஒரு குறை இருக்கத்தான் செய்யும். அதை நாங்கள் தான் நிவர்த்தி செய்து, அனுசரித்து நடக்க வேண்டும். அத்தையின் இறப்பு சுவேதாவுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. உஷாவின் சிறுவர் இல்லத்தில் இருந்து ஒரு பிள்ளையைத் தத்து எடுக்க வேண்டும் என்று பிடிவாதம். நான் மறுத்து விட்டேன். இப்படி ஏதோ ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. எமது கையில் எதுவும் இல்லை. மனதைத் தளர விடாது உறுதியோடு இருக்கப் பழக்கப்படுத்தி விட்டால் துன்பம் எதுவும் எம்மை அனுகாது"என்று கூறினான்.

"உங்களைப் போன்ற ஒருவர் இப்படி ஆறுதல் கூற இருந்தால் எல்லோரும் நிம்மதியாயிருக்கலாம். அதற்கும் கொடுத்து வைக்க வேண்டும்"என்று கூறிச் சிரித்தாள் நிவேதா. அதுசமயம் சுரேஷ் அவ்விடம் வந்தான். அவர்கள் கதைப்பதை நிறுத்திவிட்டு,

"சுரேஷ் என்ன இண்டைக்கு ஒரே பிஸிபோல இருக்கு. இன்டைக்கும் இங்கே தங்கி நாளைக்கு வீட்டுக்குப் போகலாம் தானே"என்றான் ரவிசங்கர்.

"நீங்கள் போகச் சொன்னாலும் நான் போவதற்கில்லை. சுவேதா மேடம் ஏற்கனவே ஓடர் போட்டாச்சு. நான் அதற்காக வரவில்லை. உங்களிடம் ஒரு விடயம் கதைக்க வேண்டும். உங்களுக்கு எப்ப ரைம் கிடைக்கும் என்று கேட்கத்தான் வந்தன்"

"எப்ப வேண்டும் என்றாலும் கதைக்கலாம்" என்றான் ரவி.

"கதைக்கலாம் சோர்! நான் கதைக்கப் போற விடயம் கதைக்க வேணும். ஒவ்பீசில் நடந்த சில விடயங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது. சுவேதா மேடத்துக்கே தெரியாது. அவர்களிடம் சொன்னாலும் நம்பமாட்டார்கள். இந்த விடயத்தை நீங்கள் தான் ஹண்டில் பண்ண வேணும்"என்றான்.

"சரி! சுரேஷ் எனக்கு ஓரளவுக்கு விடயம் புரியுது. நான் அது பற்றி அன்றே சுவேதாவுக்கு மறைமுகமாகச் சொன்னேன். சுவேதா நம்ப மாட்டாள். முடிந்தால் நாளைக்கோ, மறுநாளோ ஈவினிங்போல கடைக்கு வர வாருங்கள் கதைக்கலாம்"என்று கூறினான்.

"ஓகே. சோர் நாளைக்கே வாறன். நீங்கள் நாளைக்குப் பயணம் தானே?" என்று யசோதாவை நிவேதாவையும் பார்த்துக் கேட்டான்.

"நாளைக்கு ஈவினிங் இஞ்சயிருந்து புறப்படுறாம். மறுநாள் மதியம்தான் பிளைட்"

"நல்லது பயணம் நன்றாக அமையட்டும்" என்று கூறி விடைபெற்றான் சுரேஷ்.

"இவர் பாரதூரமான விடயம் என்று ஏதோ கூறினாரே என்ன?" என வினாவினாள் யசோதா.

"இவர் அக்காவுடன் படித்தவர் அக்காவுக்குப் பிரச்சினை ஏதும் வந்து விடக் கூடாது என்று நினைக்கிறார். சுவேதாவும் இவர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறாள். இதுபோல சுவேதாவின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி நலன் பெறுகிற வேறு பலரும் அக்காவின் ஒவ்பீஸில் உள்ளனர். அவர்கள் மீது சுவேதா நம்பிக்கை வைத்துள்ளாள். சுயநலத்துக்காக நம்பிக்கை துரோகம் செய்பவர்களையும் நல்லவர்கள் என நினைக்கும் சுவேதா உண்மையான நேர்மையான நல்லவர்களை இனம் கண்டு கொள்ளாத அப்பாவியாயிருக்கிறாளே என்று தான் சுரேஷ் கவலைப்படுகிறார். அதுதான் விடயம்" என்றான்.

■■■

ஒரு பிக்கப் வாகனம் அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கியவர்களை சுவேதா ஓடிச் சென்று வரவேற்றாள்.

"பார்த்தீர்களா இதுதான் அக்காவின் நம்பிக்கைத் தெய்வம்"

"இவரா?" என்று இருவரும் ஒரே குரலில் கேட்டு அதிர்ச்சியுற்று நின்றனர்.

■■■

நம்ப நட நம்பி நடக்காதே என்று ஒருமுதுமொழி உண்டு. நம்ப நடப்பவர்கள் துரோகிகளாகவும் இருக்கக் கூடும். நம்பி நடப்பவர்கள் அப்பாவிகளாகவோ, ஏமாளியாகவோ இருக்க வாய்ப்புண்டு. நன்கு படித்துப் பட்டங்கள் பெற்றவர்களும் சரி படிப்பில்லாத பாமர மக்களும் சரி இதற்கு விதி விலக்கில்லை. எமது சமூகத்தில் இப்படி நிறையப் பேர் இருக்கவே செய்கின்றார்கள். இதற்கு அடிப்படைக் காரணங்கள் பொருளாதார நிலமை எனச் சிலர் கூறினாலும் பொருளாதார வலுவற்ற நேர்மையான மனிதாபமுள்ளவர்களிடம் இருக்கும் தன்னம்பிக்கையுமே முக்கிய காரணிகளாகும் என நினைத்துக் கொண்டிருந்த ரவிசங்கர் காலடி ஓசை கேட்டு நிமிர்ந்து பார்த்தான். சுரேஷ் நின்று

"ஹலோ வாருங்கள் மேலே போகலாம். அங்கே டிஸ்ரேபன்ஸ் இருக்காது கதைக்கலாம்" என்று எழுந்து மாடிக்கு அவனை அழைத்துச் சென்றான்.

"உட்காருங்கள் சுரேஷ். மிஸ்ரர் விஸ்வலிங்கம் பற்றித் தானே கூறப்போகின்றீர்கள்?"

"ஓமோம்! எப்படி உங்களால் முன் கூட்டியே தெரிந்து கொள்ள முடிந்தது"

"சுரேஷ் அண்டைக்கு அவர் எங்கட வீட்டுக்குப் 'பைல்'களுடன் வந்தபோதே புரிந்து கொண்டேன். பின்பு சுவேதாவுக்கு முதலில் நானே அவற்றைப் பார்வையிட்டேன். அவர் ஒரு சீனியர் ஒவ்பீஸர். அவரே ஒப்பமிட்டு அனுப்ப வேண்டிய கடிதங்களை வேலையில்லாதவராய் வீட்டுக்குக் கொண்டு வருகின்றார் என்றால் ஏதோ தவறாயிருக்கலாம் என்பது ஊகம். நான் சொல்வதில் தவறிருந்தால் சொல்லுங்கள்"

"நீங்கள் சொல்வதுதான் உண்மை. சுவேதா மேடம் அவர் டியூட்டியிலை கவனமுள்ளவர் என நினைக்கட்டும் என்பதுடன் தன்மீது எந்தத் தவறுமில்லை என்று காட்டிக்கொள்ளும் முன் எச்சரிக்கையாகும். முதலில் இந்தக் கடிதங்களைப் பாருங்கள். சுவேதா மேடம் ஒப்பமிடாது விட்ட கடிதங்களுக்கு மாற்று உருக்கொடுத்து தனது ஒப்புதல் அளித்தவை. இதற்கு அவருக்குச் சிறு தொகை கை மாறியிருக்கிறது. யாராவது பெட்டிஷன் அனுப்பாது விட்டால் பிரச்சினை அமுங்கிப் போகும். அப்படி வந்தால் சுவேதா மேடம் தான் பதில் சொல்லியாக வேணும். சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய ஒருவர் செய்யும் சில்லறைத்தனம் இது. நான் சொன்னால் மேடம் ஏற்க மாட்டார்கள். அதைப் பிறகு பார்க்கலாம் என்று தட்டிப் போடுவார்கள். எதற்கும் முன்கூட்டியே நீங்கள் அறிந்திருப்பது நல்லது என்பதற்காகவே இவற்றை கொப்பி எடுத்து வந்தேன். எனக்கு அவர் மீது கோபம் எதுவும் கிடையாது. நல்ல மனிதரானாலும் இப்படிப்பட்ட அற்ப குணங்களுமிருக்கே"என்றான்.

"சுரேஷ் இது பற்றிச் சுவேதாவிடம் நீரும் கூற வேண்டாம். நானும் கூறப்போவதில்லை. சுவேதாவே நம்பும் படியாய் ஒரு சிறு பரீட்சை வைத்துப் பார்த்தால் இவை காட்சிகளாக வரும். அப்போது தெரியும் அவருடைய சின்னத் தனங்கள் வாருங்கள் போகலாம்"என்று சுரேஷையும் அழைத்துக் கொண்டு கீழே வந்தான். அவனுடைய மேசை மீது இரண்டு கோப்பைகளில் தேனீர் அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்தது.

■■■

கனடாவுக்கு யசோதாவும் நிவேதாவும் சென்று விட்டனர். செல்லம்மாவும் தனது இல்லம் திரும்பிவிட்டாள். சமையல்காரப் பெண்ணும் சுந்தரமூர்த்தியும் வீட்டில் இருந்தாலும் சுவேதாவுக்கு அம்மா இல்லாத குறை பெரிதாய்த் தெரிந்தது. காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்து விட்டால் தனிமை அவளை வதைக்கும். அம்மாவின் ஞாபகம் செயற்பாடுகள் ஒவ்வொரு நிமிடமும் அவளைத் துன்புறுத்தும். ரவிசங்கர் எட்டு மணிக்குப் பின்பே வீட்டுக்கு வருவான். கடையில் இருந்து தாய் வீட்டுக்குப் போய் விட்டுத்தான் திரும்புவான். அவன் வீடு வந்து சேரும் வரை சிரித்துப் பேச எவரும் இல்லாத

தொகுப்பு

செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள் 16

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்குச் சென்ற பாடசாலைப் பரிசோதகர் ஒருவர் மாணவர்களிடம் கேள்வி ஒன்றைக் கேட்கிறார். மாணவர்களின் பதில் அவரை நையாண்டி செய்வதுபோல் அமைகிறது. ஆனால், அவர் பதற்றப்படவில்லை பொறுமையைக் கடைப்பிடித்து நிலைமையை ஆராய்கிறார்.

உத்தியோக மொழித் திணைக்களத்தில் உதவி ஆணையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றிருந்தவர் திரு அ.வி.மயில்வாகனம். அவர்தம் அனுபவத்தில் பெற்றிருந்த சுவையான சம்பவத்தை விளக்கு சஞ்சிகையின் இரண்டாவது சுடரில் (நவம்பர், 1993) தந்திருந்தார். ஆசிரியர்களின் கற்பித்தல் சார்ந்த சில செயற்பாடுகள் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்தும் வகையில் வெளிவருவதை இந்தச் சம்பவம் உணர்த்துகிறது.


அ.வி.மயில்வாகனம்

### பாடசாலை மேற்பார்வை

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது. பாடசாலைப் பரிசோதகராக நான் பதவியேற்றுச் சில மாதங்களே ஆகியிருந்தன. வழமை போல் முன்கூட்டியே அறிவித்து விட்டுப் புத்தளம் அரசினர் பாடசாலைக்குச் சென்றேன். வகுப்புகளுக்குச் சென்று மாணவர்களின் கற்றல் விவேகத்தை ஆரய்ந்தறிய முயன்றேன். இந்த வகையில் பரீட்சிப்பது அந்த நாள்களில் பரிசோதகரின் கட்டாய கடமைகளில் ஒன்று. முதலில் ஐந்தாம் வகுப்புக்குச் சென்றேன். மாணவர்களின் பொது அறிவைக் கணிப்பதற்காக அவர்களுடன் உரையாடிய பின்னர் மிகவும் இலகுவான ஒரு கேள்வியைக் கேட்டேன். "நீங்கள் எந்த மாகாணத்தில் வாழ்கிறீர்கள்?" யாருமே பதில் சொல்லவில்லை.

## நினைவில் நிலைப்பது



**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

### மாகாணம் எது?

"எமது நாடு ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான மாகாணங்கள் திசைகளின் அடிப்படையில் பெயரிடப்பட்டிருக்கின்றன. அப்படியான ஒரு மாகாணத்திலேதான் புத்தளம் இருக்கிறது. அந்த மாகாணத்தின் பெயர் என்ன?" என்று சொல்லிக் கேள்வியை நான் மேலும் விளக்கினேன்.

எவரிடமிருந்தும் பதில் வரவில்லை. ஆசிரியரைப் பார்த்தேன். அவர் மௌனமாக நின்றிருந்தார். வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒருவராவது பதில் சொல்லுவார் என்று எதிர்பார்த்த ஆசிரியரின் பார்வையிலும் மாணவர் மீதான கோபம் தெரிந்தது.

"அடுத்த வகுப்பைப் போய்ப் பார்த்துவிட்டு உங்களிடம் திரும்ப வருவேன். இந்தக் கேள்விக்குரிய பதிலை அப்போது நீங்கள் சொல்ல வேண்டும்" எனக் கூறிக் கொண்டே வகுப்பிலிருந்து வெளியேறினேன்.

கண் பார்வைக்குள் தெரியும் அடுத்த வகுப்பிலுள்ள மாணவர்கள் முன் சென்று சிறிது நேரம் அவர்களுடன் உரையாடி அவர்களின் திறமைகளைக் கணிப்பிட்ட பின்னர் ஐந்தாம் வகுப்புக்குத் திரும்பி வந்தேன். மறக்காமல் முன்னர் கேட்ட அதே கேள்வியைக் கேட்டேன்.

### மட மயில்வாகனம்

"மட மயில்வாகனம்"

'பட்'டென்று பதில் வந்தது.

எனக்குத் 'திக்' கென்றது. எனது பெயர் மயில்வாகனம்!

எனினும் என் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேறொரு மாணவனிடம் அதே கேள்வியைக் கேட்டேன். அவனிடமிருந்தும் 'மட மயில்வாகனம்' என்றே பதில் வந்தது.

மேலும் சில மாணவர்களிடம் கேட்டேன் அதே பதில்தான்.

மாணவர்கள் அனைவருமே தாம் எண்ணியபடி சரியான பதிலையே சொல்லி விட்டோம் என்ற நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டனர். அவர்களின் குரலில் ஒருவித அப்பாவித் தனமும் தொனித்தது.

### ஆசிரியரின் பார்வை

அங்கே நின்றிருந்த வகுப்பு ஆசிரியரைப் பார்த்தேன். ஆசிரியரின் பார்வையில் ஒருவகைப் பயம் தெரிந்தது. சற்று உடல் சோர அவர் நின்றிருந்தார்.

நான் ஆசிரியர் மீது வினாவைத் தொடுப்பதற்கு முன்னதாகவே "சேர்! நான் இப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை! சரியான பதிலைத்தான் சொல்லிக் கொடுத்தேன்!" என்றார் அப்பாவித்தனமாக. மாணவர்களின் பதிலால் அவர் சற்றே நிலைகுலைந்து போனார். அவருடன் சிறிது நேரம் உரையாடிய பின்னர் உண்மை என்னவென்பதைப் புரிந்து கொண்டேன். அவர் சரியான பதிலைத்தான் மாணவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். நான் அடுத்த வகுப்பில் இருந்தபடியால் சற்று மெதுவான குரலில் "வடமேல் மாகாணம்" எனச் சொல்லிய சொற்கள் மாணவர்களின் காது களில் வேறு வகை யாக ஒலித்திருக்கின்றன. அதை நெட்டுருச் செய்த மாணவர்கள் எனது கேள்விக்கான விடையான வடமேல் மாகாணம் என்பதற்குப் பதிலாக 'மட மயில்வாகனம்' என்பதாய் உரத்துச் சொல்லி விட்டார்கள்.

### எனது உணர்ச்சி

மாணவர்களின் பதிலைக் கேட்டவுடன் நானும் முதலில் உணர்ச்சி வசப்பட்டு அதிகார வர்க்கத்துக்கு உரிய ஆத்திரத்துடன் விடயத்தைப் பெரிதுபடுத்தி முறைப்பாடு, விசாரணை எனத் தொடர்ந்திருந்தால் நானே மேலும் அவமானப்பட்டிருப்பேன்.

ஒரு கணம் நான் கற்பனை பண்ணிய என்னை அவமானப்படுத்தும் விதத்தில் கூறிய அந்த வார்த்தைகளை அகில இலங்கைக்கும் அறிவித்து ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கும் கைங்கரியத்தை நானே செய்திருப்பேன்.

### பாடசாலைகளில் கேலி பேசுதல்

இந்த உண்மைச் சம்பவத்தை விளக்கி நவம்பர் 1993ஆம் ஆண்டில் வெளியாகிய விளக்கு தந்த இந்தக் கட்டுரையானது, மாணவர் தமது சிந்தனைக்கும் பலவேளைகளில் அவர்தம் கருத்தில் எடுத்துக் கொண்டு சொல்லும் வார்த்தைகளுக்கும் நடுவே நகைச்சுவை பொதிந்து இருப்பதை அவதானிக்கலாம். அத்தகைய ஒரு சம்பவத்தையே

அ.வி.மயில்வாகனம் தமது அனுபவப் பகிர்வாகத் தந்திருந்தார். இந்தக் கட்டுரை விளக்கு வாசகர்கள் பலரது கவனத்தையும் ஈர்த்தது. மாணவர்கள், ஆசிரியர்கள் மீதும் ஆசிரியர்கள், மேலதிகாரிகள் மீதும் கொண்டிருக்கும் வெறுப்பு, விருப்புக் காரணமாக வெளிப்படும் வார்த்தைகள் பலரையும் ஆத்திரம் அடையச் செய்யினும் அவை சுவைபட எடுத்துரைக்கப்படும்போது நகைச்சுவையாகின்றன. பாடசாலைகளில் ஒருவருக்கு ஒருவர் மறைவாகக் கேலி பேசுவது வழக்கம். இவ்வகைச் செயற்பாடுகளின் மூலம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் முரண்பாடுகள் விளைவதும் உண்டு. எவற்றையும் மனதளவில் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் பண்புடைய ஒருவர் உயர்ந்தவர் ஆகிறார்.

(தொடரும்)




கவிதை

ரஜ்னீஷ்

அலையின் பாதைவழி
துணிக்கைகள் அதிர்ந்தால்
நெட்டலையாம்
கடல் மேல் எழும்
செங்கதிரவன்போல்
செங்குத்தாய் அதிரின்
குறுக்கலையாம்

விஸ்வரூபம் கொண்ட
காளியின் கை
வளையல்கள்போல்
நீண்ட சிலிங்கியாம்
தனைச் சுருக்கி நகரும்
மண்புழுபோல்
நீண்ட காற்றேனும்
பாம்பு வழி
சுருக்கமும் விரிவும்
அழுதைக் கடத்திடுமாம்

நீட்டிய கயிறினில்
நீந்தும் சக்தியால்
வாடிய மலர்
உயிர் கொண்டதுபோல்
ஊரும் துடிப்பொன்று

ஊர ஊடகம் தேவையில்லை
நடமாட உடலொன்று
தேவையில்லை
இறைபோல் வாழும்
மின்காந்த அலைகள்
எவ்வகை
இவ்வகை சேர்ந்திடுமோ

மின்காந்தப் புலங்களெனும்
துடுப்புகள் போட்டிவை
கடக்கும்
கோடிக் கடல் தூரம்

புலங்களைப்
புரிதல் கடினமன்று
கண் முன் நிகழும்
காட்சியல் மட்டும்
உணர்ச்சிகள் எழுகிறதா?
நினைவாய்க் கனவாய்
அவை வரும்போதும்
உணர்ச்சிகள் எழுவதன்றோ

துணிக்கைகள் ஏதும் அற்ற
தூயவெளியிலும்
அவற்றின் நிழல்போல்
புலங்கள் நிற்குமடா
நிழல்களின் அதிர்விலும்
சக்தி பாயுமடா
அதிர்வின் திசையல்
நாமங்கள் கூடுமடா

*(சிவனின் நடனத்துக்கான பார்வதியின் பதில் நடனம் –லாஸ்யம்)*

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

# நாடாளுமன்றத்தைக் குலுக்கிய நான்கு வார்த்தைகள்

யாழ்ப்பாணம்-வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற அரசதலைவர் மக்கள் சேவை நிகழ்வின்போது இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆற்றிய உரையில் வெளியிடப்பட்ட நான்கு வார்த்தைகள் பெரும் பூகம்பமாக மாறி, ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வானேறி, நாடு முழுவதும் இரவோடிரவாகப் பரந்து அடுத்த நாளில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வையே அதிர்ந்து குலுங்க வைத்துவிட்டன.

அந்த வார்த்தைகள் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியினர், பதினான்கு பேர்கள் கொண்ட அணி, அரச தரப்பினர், மக்கள் விடுதலை முன்னணியினர் என எவரையும் விட்டுவைக்காமல் கொதித்தெழ வைத்துவிட்டன.

பாதுகாப்புப் பிரதியமைச்சர் ருவான் விஜயவர்த்தனா அவை உண்மைக்குப் புறம்பானவை என்றும் அதற்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களில் ஒருவரான பைசல் முஸ்தபா அது கட்சியின் கருத்தல்ல எனத் திட்டவட்டமாகத் தனது மறுப்பை வெளியிட்டார். ஜே.வி.பியின் விஜித ஹேரத் தேசத்திடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென முழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி விஜயசேகரா விஜயகலாவை நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற வேண்டுமெனப் பொங்கியெழுந்தார்.



பெண்ணின் வேதனையைப் பெண்களாலேயே உணரமுடியும். நாம் அச்சமின்றி நிம்மதியாக வாழ வேண்டுமானால் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அது கட்சியின் கருத்தல்ல என்றும் விஜயகலா மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு அரச தரப்பினர், விஜயகலா பேசியிருந்த வார்த்தைகள் தேசவிரோதமானவை என்ற பாணியில் பேச, ஐக்கிய தேசியக் கட்சி அதற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையெனவும் வலியுறுத்த நாடாளுமன்றத்தில் அமளிதுமளி தொடர்ந்தது.

### விசாரணைகளும் குழப்பங்களும்

இந்த நிலையில் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் அரசமைப்பின் ஏழாவது விதிக்கு விரோதமானதா என்பது தொடர்பாக சபாநாயகர் ஆராய்ந்து அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், மகிந்த அணியினரோ, விமல் வீரவன்ச அணியினரோ அடங்கிப் போகவில்லை.

தொடர்ந்து குழப்பங்களை விளை வித்ததுடன் ஒரு கட்டத்தில் செங்கோலையும் தூக்க முயன்றனர். ஆனால், நாடாளுமன்றச் சேவகர்களின் தலையீட்டால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. எதுவுமே செய்ய முடியாத நிலையில் சபாநாயகர் நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தினார். அரை மணிநேரம் கழித்து மீண்டும் சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டபோது சமாந்தரமாகக் குழப்பமும் தொடங்கி விட்டது.

வேறுவழியின்றிச் சபாநாயகர் சபையை அடுத்தநாள் வரை ஒத்திவைத்தார். நான்கு வார்த்தைகள், செயலல்ல. வாயிலிருந்து வெளியேறிய வெறும் வார்த்தைகள் ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தின் கதவுகளை இழுத்துப் பூட்ட வைத்துவிட்டனவென்றால், அந்த வார்த்தைகள் அவ்வளவு வலிமை வாய்ந்தவையா என எண்ணத் தோன்றுகிறது.

### சக்தி மிக்க வார்த்தைகள்

'புலிகள் மீண்டும் உருவாக வேண்டும்' இவைதான் அந்தச் சக்தி வாய்ந்த வார்த்தைகள். இந்த வார்த்தைகள் நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தியதுடன் நின்றுவிடவில்லை. சபைக்கு வெளியேயும் பல பிரதிபலிப்புக்களை ஏற்படுத்தின. வடமேல் மாகாணசபை உறுப்பினர்கள் இந்த வார்த்தைகளைக் கண்டித்து கறுப்புப் பட்டியணிந்து சபை அமர்வில் கலந்துகொண்டிருந்தனர். சிஹல உறுமய உட்பட மூன்று சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புக்கள் விஜயகலா மீது முறைப்பாடு செய்துள்ளன. இவை தொடர்பாக விசாரிக்கும்படி சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பொலிஸ் மா அதிபர் பணிப்புரை ஒன்றை வழங்கியுள்ளார்.

### விஜயகலாவுக்கான ஆதரவு அணி

இந்த நான்கு வார்த்தைகளாலும் தமது கட்சி பேதங்களை மறந்து பல தரப்பினரும் ஒன்று சேர்ந்துள்ள வேளையில் மனோ கணேசன் மட்டும், "விஜயகலாவின் கோபம் நியாயமானது" என அடித்துக் கூறியுள்ளார். அதே போன்று சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவும் விஜயகலாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளார். முதலமைச்சர் விக்னேஸ்வரனும் விஜயகலாவின் கூற்று நியாயமானது எனச் சில ஆதாரங்களுடன் கூறியுள்ளார். அதாவது புலிகளின் காலத்தில் சூரியன் அஸ்தமமான பின்பும் ஒரு பெண் நகைகள் அணிந்தபடி பயமின்றி வீதியால் போகும் நிலை இருந்ததென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எந்தவித கருத்தையும் வெளியிடவில்லை.

இறுதியில் திருமதி விஜயகலா தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்பு தனது இராஜாங்க அமைச்சர் பதவியைத் தானே துறந்துள்ளார்.

### விஜயகலா விடயத்தில் மாத்திரம் ஏன் கவனம்?

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுப் பின் பிணையில் விடுவிக்கப்பட்ட கலகொட அத்த ஞானசார தேரர் நடத்திய ஊடக சந்திப்பில் 'ரணில் விக்கிரமசிங்க ஒரு தந்திரமான நரி என்றும் - பிரபாகரன் அதைச் சொல்லும்போது தாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் இப்போது தாங்கள் பிரபாகரனின் கூற்றை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார். மேலும் ரணிலோ, மஹிந்தவோ, மைத்திரியோ நாட்டை ஆளும் தகுதியற்றவர்கள் எனவும் தெரிவித்திருந்தார்.

ஞானசாரர் பிரபாகரனைப் புகழ்ந்துரைத்தது பற்றி தற்சமயம் விஜய கலாவுக்கு எதிராக துள்ளிக் குதிப்பவர்கள் எவரும் வாயைத் திறக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'நீதியரசர் பேசுகிறார்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகள் காரணமாகவே உருவானதெனவும், அது தோற்கடிக்கப்பட்டாலும் அதன் நியாயத்தை யாரும் மறுத்து விட முடியாதெனவும் தெளிவாகவே தெரிவித்திருந்தார். அங்கு உரையாற்றிய வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் பிரபாகரனின் இலட்சியம் மழுங்கடிக்கப்படக் கூடாது எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் சம்பந்தர் பற்றியோ, விக்னேஸ்வரன் பற்றியோ எவரும் கண்டனக் குரல்களை எழுப்பவில்லை. ஏன் திருமதி விஜயகலாவுக்கு எதிராக இவ்வளவு பெரும் எதிர்ப்பு என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகும்.

### விஜயகலா பேசிய உரையின் சாரம்சம் இதுதான்

'ஒரு ஆறுவயதுச் சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் பின் கொல்லப்பட்டிருக்கிறாள். ஒரு பெண் கணவனின் முன்னிலையில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாள். பெண்ணின் வேதனையைப் பெண்களாலேயே உணரமுடியும். நாம் அச்சமின்றி நிம்மதியாக வாழ வேண்டுமானால் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாக வேண்டும். ஒரு அரசியல்வாதியின் செல்வாக்கிலேயே பல மதுக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இன்று பல குற்றங்களுக்குப் போதையே காரணமாயுள்ளது' எந்தவொரு தமிழரைப் பார்த்தும் இந்த உரையில் ஏதாவது தவறு உள்ளதா? என்று கேட்டால் ஒரு சிறு தவறும் இல்லை என்றே பதில் வரும். ஏன் இதயசுத்தி உள் மாற்றினத்தவர்களும் தவறில்லை என்றே சொல்வர். பொலிஸாரின் நடவடிக்கைகளில் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

### அரசு மீது நம்பிக்கை அற்றதன் வெளிப்பாடே இது

மல்லாகம் சகாய மாதா கோயிலில் இடம்பெற்ற சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிடால் உயிரிழந்தார். காயப்பட்டவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற பொது மக்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சூடு நடத்திய பொலிஸ் அதிகாரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கொக்குவிலில் பல்கலைக்கழக மாணவர்கள் மேல் துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட சந்தேகநபர்களில் மூவர் அரச தரப்புச் சாட்சியாக மாற்றப்பட்டுப் பிணையில்வி டப்பட்டுள்ளனர். புங்குடுதீவு மாணவி வித்தியா கொலையின் முக்கிய சந்தேக நபர் கொழும்புக்குத் தப்பியோடுவதற்கு உதவியதாகப் பொலிஸ் அதிகாரி தேடப்பட்டு வருகிறார். காரைநகரல் சிறுமி ஒருத்தி கடற்படைச் சிப்பாய் ஒருவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட வழக்கில் சந்தேகநபர்


இல்லாமல் வேறு நபர்கள் அடையாள அணி வகுப்புக்கு நிறுத்தப்பட்ட சம்பவமும் அம்பலத்துக்கு வந்திருந்தது. எத்தனையோ கொலைக் குற்றங்கள் தொடர்பானவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. பல கொலைக் குற்றவாளிகள் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டனர். இப்படியான நிலையில் மக்கள் எப்படிப் பொலிஸாரை நம்ப முடியும்? நீதியையும், அமைதியையும், அச்சமின்மையையும் விரும்பும் ஒருவர் விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக வேண்டுமென விரும்புவதில் என்ன பிழை?

விஜயகலாவைக் குற்றவாளியாக்கி விரல் நீட்டுவோர் விடுதலைப் புலிகள் காலத்தைப்போன்று சட்டவிரோதச் செயல்களை ஒழிக்கமுடியுமென உத்தரவாதம் செய்ய முடியுமா?

அந்த நாலு வார்த்தைகளைக் கண்டு துள்ளிக் குதிக்கும் பேர் வழிகள் கொலை, களவு, பாலியல் வன்புணர்வு, வாள்வெட்டுக்கள் போன்ற சட்டவிரோதக் குற்றங்களை இல்லாதொழிப்பார்களா? அது சாத்தியமில்லை? ஏனெனில் அவர்களில் பலரும்தான் இப்படியான குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளுக்கு முகம் கொடுப்பவர்கள். எப்படியிருப்பினும் இவர்கள் தங்கள் எதிர்ப்பின் மூலம் அந்த வார்த்தைகளின் வலிமையை ஏற்றுக்கொண்டு விட்டனர் என்பதே உண்மை.

அறிவியல்

வினோஜா நாதரூபன்



# குறுக்கலைகளும் நெட்டலைகளும்

பொதுவாகவே அலைகள் இரண்டு வகைப்படும். இயந்திர அலைகள், மின்காந்த அலைகள். அலைகளை நாம் இன்னொரு வகையிலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். குறுக்கலைகள், நெட்டலைகள்.

**குறுக்கலைகள்**

இரண்டு அல்லது மூன்று மீற்றர்கள் நீளமுள்ள கயிற்றை எடுத்து அதன் ஒரு முனையை உங்கள் வீட்டிலுள்ள ஒரு தூணில் கட்டவும். கயிற்றைக் கிடையாக நன்கு இழுத்துப் பிடித்துக்கொண்டு. ஒரு முறை மாத்திரம் இலேசாக மேலும் கீழும் குலுக்கவும். இப்பொழுது கயிற்றில் ஒரு கிடையான 'எஸ்' வடிவம் (ஆங்கில எழுத்து) தோன்றும். அது உங்கள் கையிலிருந்து தூணை நோக்கி நகரும்.

உங்கள் கைகளுக்கு அருகில் உள்ள பகுதியை 'அ' என்று பெயரிடுவோம். தூணுக்கு அருகில் உள்ள பகுதியை 'இ' என்று பெயரிடுவோம். நீங்கள் கயிற்றை 'அ' என்ற பகுதியில் குலுக்குகின்றீர்கள். அதாவது இயக்க சக்தியைக் கயிறுக்குக் கொடுத்தீர்கள். அப்பொழுது 'இ'ப் பகுதி இயக்கமின்றி, நிலையாக இருந்தது. சிறிது விநாடிகளிலேயே 'இ'ப் பகுதி மேலும் கீழும் குதிக்கின்றது. இயங்குகின்றது. அப்படியென்றால் அது இயக்க சக்தியைப் பெற்றிருக்கின்றது. நிச்சயமாக 'அ'ப் பகுதியைத் தவிர வேறு எங்கும் இருந்து இயக்க சக்தியை அது பெற்றிருக்க வாய்ப்பில்லை. அப்படியென்றால் 'அ'ப் பகுதியில் கொடுக்கப்பட்ட சக்தி 'இ'ப் பகுதியை அடைந்துள்ளது.

ஆனால் கயிறு 'அ'விலிருந்து 'இ' நோக்கி நகரவில்லை. மாறாக நிலைக்குத்தாகவே கயிறு வழிநெடுகிலும் அசைந்தது. சக்தி 'அ'விலிருந்து 'இ'க்குப் பயணித்திருக்கின்றது. சக்தி கிடையாகப் பயணிக்கின்றது. ஆனால் அந்த சக்தியைக் கடத்தும் ஊடகத்தின் துணிக்கைகள் நிலைக்குத்தாக அசைகின்றன. அதிர்கின்றன. இவ்வாறு அலையில் சக்தி கடத்தப்படும் திசையும், அந்தச் சக்தியைக் கடத்தும் துணிக்கைகளின் அதிர்வுத் திசையும் ஒன்றுக்கொன்று செங்குத்தானதாக அமையும் என்றால் அந்த அலைகளைக் குறுக்கலைகள் என்போம். பூகம்பத்தின்போது உருவாகும் அலைகளில் சில அலைகள் குறுக்கலைகள் ஆகும். ஒளி அலைகள், வானொலி அலைகள் முதற்கொண்ட அனைத்து மின்காந்த அலைகளும் குறுக்கலைகள் ஆகும். இந்த இடத்தில் உங்களுக்கு ஒரு சந்தேகம் வரவேண்டும். வருகிறதா?. குறைந்தது இயற்பியல் படிக்கும் மாணவர்களுக்காவது வரவேண்டும். யோசியுங்கள், பின்பு சொல்கிறேன்.





மின்காந்தஅலை

**'ட' - செங்குத்து**

'ட' வடிவில் இரண்டு கோடுகளோ, திசைகளோ இருந்தால் அதைச் செங்குத்து என்போம். செங்குத்து என்றால் கிடைத் திசையும் நிலைக்குத்துத் திசையும் மட்டும் அல்ல. உங்கள் கைகளில் உள்ள இந்தப் பத்திரிகையை நீங்கள் உங்களுக்கு விரும்பிய கோணத்தில் பிடியுங்கள். நிலைக்குத்தாய்ப் பிடிக்கலாம், அல்லது கிடையாகப் பிடிக்கலாம். இல்லை ஒரு மூலையில் பிடித்து சாய்வாகப் பிடிக்கலாம். நீங்கள் எப்படிப் பிடித்தாலும் பத்திரிகையின் நீளமான பக்கம் வழியுள்ள திசைக்கும், அகலமான பக்கம் வழியுள்ள திசைக்கும் இடையில் உள்ள அமைப்பு செங்குத்தாகவே இருக்கும். 'ட'னாவை நீங்கள் எப்படித் திருப்பிப் போட்டாலும், அதன் இரண்டு கோடுகளுக்கும் இடையேயான கோணம் மாறாது. செங்குத்து என்றால் தொன்னூறு பாகைகள். பாகைகள் என்பது கோணங்களை அளக்கப் பயன்படும் அலகு. இரண்டு கோடுகளுக்கிடையேயான கோணம் தொன்னூறாக ('ட' போன்று) இருந்தால் அதுவே செங்குத்து.

**நெட்டலைகள்**




சிலிங்கி

சக்தி பயணிக்கும் பாதையிலேயே ஊடகத்தின் துணிக்கைகள் அதிரும் என்று வைத்துக்கொண்டால் அவை நெட்டலைகள் ஆகும். நெட்டலைகளைக் கயிற்றில் உருவாக்க முடியாது. அவற்றை உருவாக்க சிலிங்கி என்ற நீண்ட, மெல்லிய இசுருளி வில்லைப் பயன்படுத்துவோம். படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று சிலிங்கியைக் கிடையாக நீட்டி வைத்து விட்டு அதன் ஒரு முனையை ஒரு முறை அதிரச் செய்கின்றீர்கள் . அதாவது அதன் ஒரு முனையை மிகவும் வேகமாக முன்னுக்கும் பின்னுக்கும் அசைத்து நெருக்கத்தையும் ஐதாக்கத்தையும் கொடுக்கிறீர்கள் . இந்த நெருக்கங்களும் ஐதாக்கங்களும் சிலிங்கியின் ஆரம்பப் புள்ளியோடு நின்று விடாமல் சிலிங்கியின் முழு நீளமும் நிகழ்வதை நீங்கள் காணலாம். கயிற்றில் நிகழ்ந்ததுபோலவே சக்தி ஆரம்ப முனையிலிருந்து மறுமுனைக்குச் செல்கின்றது. அதே நேரம் கயிற்றுத் துணிக்கைகள்போல் அல்லாது சிலிங்கியின் துணிக்கைகள் சக்தி செல்கின்ற பாதை வழியேயே அதிர்கின்றன. நெட்டலைகளுக்கு மிகச்சிறந்த உதாரணம் ஒலி அலைகளாகும். நீர் அலைகள் மிகவும் குழப்பகரமானவை. ஏனெனில் நீர் மூலக்கூறுகள் சக்தியின் பாதை வழியிலும் அதிரலாம். செங்குத்தாகவும் அதிரலாம்.

**ஞாபகம் வருகிறதா?**

சந்தேகம் வருகிறதா? எனக் கேட்டிருந்தேன். அதற்கு முதல் ஒன்றை ஞாபகப் படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். தாம் பயணிப்பதற்குத் துணிக்கைகளின் உதவி தேவைப்படுபவை இயந்திர அலைகள். துணிக்கைகளின் உதவியின்றிப் பயணிப்பவை மின்காந்த அலைகள். இதைப் பலமுறை முந்தைய கட்டுரைகளில் பார்த்திருக்கிறோம்.

இன்று துணிக்கைகளின் அதிர்வுத் திசை எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பொறுத்தே குறுக்கலைகள், நெட்டலைகள் என வகைப்படுத்துகிறோம் என்று பார்த்தோம். மின்காந்த அலைகளைக் குறுக்கலை களுக்கு உதாரணமாகவும் சொன்னோம். ஆனால் துணிக்கைகளின் உதவியே தேவையற்ற மின்காந்த அலைகள் எப்படிக் குறுக்கலையாகவோ, நெட்டலையாகவோ இல்லை நீர் அலையைப்போல் இரண்டும் கெட்டலையாகவோ இருக்கமுடியும் என்று உங்களுக்குச் சந்தேகம் வரவில்லையா? அந்தச் சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும் என்றால் நாம் புலங்கள் என்ற ஒன்றைப்பற்றிப் புரிந்துகொள்ள வேண்டும்.

**புலங்கள்**


நீங்கள் பண்ணைப் பூங்காவில் ஒரு சீமெந்துக் கதிரையில் ஓய்வெடுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள். உங்களைச் சுற்றி பரந்தவெளி. அப்பொழுது உங்களிடம் கடன் வாங்கிய ஒருவர் உங்களுக்கு எதிரில் வருகிறார். உங்களைக் கண்டவுடன் கண்டும் காணதவர்போல் வந்தவழியே திரும்பிப் போய்விடுகிறார்.

இதே அவர் உங்கள் பின்னாலிருந்து வந்திருந்தாலும் இல்லை பக்கவாட்டில் வந்திருந்தாலும் உங்களைக் கண்டவுடன் திரும்பியிருப்பார். மின்னேற்றங்கள் ஒன்றின் மீது மற்றொன்று தொடுகையில்லாமலேயே விசையைப் பயன்படுத்தக் கூடியன.

ஒரு குறித்த மின்னேற்றத்தைச் சுற்றிய இடங்களில் இன்னொரு மின்னேற்றத்தை வைத்தால், வைக்கப்பட்ட அந்த மின்னேற்றம் எந்தத் திசையில் எத்தகைய வேகத்தோடு தப்பித்து ஓடுமோ அதைக் குறிப்பிடும் ஒரு கற்பனைக் களமே புலம். இதில் நேரேற்றம் நீங்கள் எனக்கொண்டால், உங்களிடம் கடன் வாங்கியவர் உங்களை வெவ்வேறு இடங்களிலிருந்து அணுகும்போது எத்திசைகளில் தப்பித்து ஓடுவார் என்பதை அதிலிருந்து வெளிப்படுகின்ற புலக் கோடுகள் குறிக்கின்ற.

அதேநேரம் இடையிலுள்ள விசையின் அளவைக் கோடுகளின் நெருக்கம் குறிக்கும். தூரம் செல்லச் செல்லக் கோடுகளுக்கிடையிலான இடைவெளி அதிகரிப்பதை நீங்கள் அவதானிக்கலாம். இதனால் தூரத்தோடு விசை நலிந்து போகின்றது என்று நாம் புரிந்துகொள்கிறோம். நியூட்டனின் மூன்றாம் விதிப்படி முதல் மின்னேற்றம் வைக்கப்பட்ட மின்னேற்றத்தின் மீது செலுத்திய விசைக்குச் சமமான விசையை, வைக்கப்பட்ட மின்னேற்றமும் முதல் மின்னேற்றத்தின் மீது எதிர்த் திசையில் செலுத்தும். அதனால் முதல் மின்னேற்றமும் நகர்ந்திருக்க வேண்டும். ஆனால் பின்பு எமது புலம் எனும் வரைபடம் இடியப்பச் சிக்கல் ஆகிவிடும். (இப்பொழுதே நூடுல்ஸ் மாதிரித்தான் இருக்கின்றது). இதைத் தடுப்பதற்காக வைக்கப்படும் மின்னேற்றம் மிகச்சிறிய அளவினதாக இருக்கவேண்டும் என்று வரைவிலக்கணப் படுத்துகிறோம். மேலும் நேரேற்றமும் நேரேற்றமும் ஒன்றையொன்று தள்ளும். அதேபோல் மறையேற்றமும் மறையேற்றமும் ஒன்றையொன்று தள்ளும். ஆனால் நேரேற்றமும் மறையேற்றமும் ஒன்றையொன்று ஈர்க்கும். ஆதலால் வைக்கப்படும் மின்னேற்றம் நேரேற்றமாக இருக்கவேண்டும் எனவும் வரையறுக்கிறோம்.

மின்புலம்



உங்களிடம் கடன் பெற்றவர் இன்னொருவரின் தலையிலும் மிளகாய் அரைக்க ஆசைப்படுகிறார். அந்தக் கொடையாளியோ பூங்காவில் உங்களுக்கு எதிர்ப்புறத்தில் இருக்கிறார். இப்பொழுது இவர் உங்களிடம் இருந்து விலகி அதேநேரம் அவரை நோக்கி நகரமுற்படுவார்.

அதுபோல் எதிர்ப் புறங்களில் வைக்கப்பட நேரேற்றமும் மறையேற்றமும் இணைந்து மின்புலத்தை உருவாக்கும். இதுபோலத்தான் காந்தப்புலமும். இங்குள்ள நேரேற்றம் மற்றும் மறையேற்றத்துக்குப் பதிலாக அங்கு காந்தத்தின் வட துருவமும் தென் துருவமும் திகழும். மின்காந்த அலைகள் துணிக்கைகளின் அதிர்வுக்குப் பதிலாக இந்த மின்புலக் கோடுகள் மற்றும் காந்தப் புலக்கோடுகளின் அதிர்வைப் பயன்படுத்துகின்றன. இந்த அதிர்வுகள் சக்தி பயணிக்கும் திசைக்குச் செங்குத்தாக அமைவதால் மின்காந்த அலைகள் குறுக்கலைகள் வகையைச் சேர்கின்றன.



கட்டுரை

ஞானாம்பிகா

# கதை கேளீர்...

தொண்டைமானாறு - செல்வச் சந்நிதியில் திருவிழாச் சமயம். கோயிலுக்குத் துணிகள் கட்டி அலங்கரித்துவிட்டு இரவு நடையில் வந்தபோது, பொண்ணொருத்தி கூறினாள், "நீங்கள் வீட்டுக்குப் போவதற்கு நான் குறுக்கு வழி காட்டுகிறேன்" என்று. அந்தப் பெண்ணுடன் பல மணி நேரங்களாகப் பற்றை பற்றையாகச் சுற்றியபின்பு அந்தப் பெண்ணைக் காணவில்லை. ஒரு மாதிரியாகத் தெருவுக்கு வந்து கதிரிப்பாய் எனுமிடத்தில் கடை வைத்திருந்த வல்லிபுரம் செல்லத்துரையிடம் கேட்டார், "என்னுடைய வீடு எங்கே?"
கேட்டவருக்குக் கன்னத்தில் பளார்!
மூளைக் குழப்பம் போனது.
நடந்ததைக் கூறினார் கடைக்காரரிடம். அது மோகினி என்றார் கடைக்காரர்.
இந்தச் செய்தி அன்றைய பத்திரிகை ஒன்றில் வந்தது. படித்துவிட்டு, அப்போது கதிரிப்பாய் கடைக்குப் பக்கத்து வீட்டில் இருந்த நான், உடனும் சென்று செல்லத்துரையின் மனைவியான ஆசிரியையிடம் கேட்டேன், "செய்தி உண்மையா?" என்று. "உண்மைதான்" என்றார். இது மோகினிப்பேய்!

■ ■ ■

ஒரு சமயம் தண்ணீர்த் தாங்கியின் கீழிருந்த திருகியைத் திருப்பியபோது கையில் பல்லி ஒன்று விழுந்தது. பஞ்சாங்கம் பார்த்ததில் பெரும் இறப்பு என்றிருந்தது. நான்கு உயிர்கள் விபத்தில் சாவு!

இழவு வீட்டுக்கு உணவு சமைத்துப் பொதி செய்தாகிவிட்டது. சரி புறப்படுவோம் என்றபோது பல்லி 'டிக் டிக்' என்றது. சமைக்கத் தொடங்கும்போது சொல்லியிருக்கலாம் சரி என்ன செய்வது? உணவைக் கொண்டுபோய்க் கொடுத்தாயிற்று. வீடு திரும்பும்போது இருட்டி விட்டது. டிரக்ரர் வாகனத்துக்கு வெளிச்சம் இல்லை. இடைவழியில் வந்த லொறி ஒன்றுக்கு வழிவிட்டபோது பாதை அவ்விடத்தில் சற்றே பள்ளம். அருகே வயலில் விழுந்தது டிரக்ரர். லொறிக்காரர் சாரதிக்கு ஏச்சும் கொடுத்து டிரக்ரரையும் வீதியில் ஏற்றிவிட்டனர். டிரக்ரரில் தாயும் இரண்டு பிள்ளைகளும். நல்லவேளை காயங்கள் ஏதுமில்லை.
பல்லிசொற் பலன்!

■ ■ ■

கைரேகை நிபுணர் கூறினார், "பிளேக் மாக்கற்றில் அகப்படும் சாத்தியம் உள்ளது கவனமாக இருக்கவேண்டும்" என்று. அப்படியே அகப்பட்டுப் பணம் கட்டும்படியும் ஆனது.
கைரேகை வித்தை!

■ ■ ■

ஐயருக்கும் கோயில் மேற்பார்வையாளருக்கும் இடையில் பிரச்சினை. ஐயர் கூறினார், "உன்னைப் பத்து நாளுக்குள் முடிப்பேன்" என்று.
மேற்பார்வையாளரை நாய்கள் பிறாண்டுவதுபோன்று கனவுகள் வரத்தொடங்கின. சூனியம் என்று சூட்டியாயிற்று. பின்பு ஐயர் மன்னிப்புக்கேட்டுக் கேயிலுக்கு வரும்படி கூறினார். எதிர்மந்திரம் கூறியபடியே இருந்தார்.

"நான் செய்த வினை என்னைச் சேரட்டும்" என்று சொல்லும்படி கூறினார். மேற்பார்வையாளர் அப்படியே கூறவும், ஐயரின் வீடு எரிந்து, அவருடைய பிள்ளை காரில் அடிபடவும் சமமாக இருந்தது நேரம்.
சூனியம்!

■ ■ ■

மாட்டு வண்டில்களில் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்கு மாலை நேரம் போனபோது, வல்லை வெளியில் ஒரு கிழத்தி மங்கிய இருட்டுள் அப்பம் சுட்டுக் கொண்டிருப்பதை வண்டிலில் உள்ள ஒருவர் கவனித்தார். பயத்தில் பேசாமலிருந்தார். தூரம் போனதும் மற்றவரிடம் கேட்டார், "ஏதேனும் கண்டீரா?" என்று. "இல்லை" என்றார் அவர். "நான் அங்கு ஒருவர் அப்பம் சுடுவதைப் பார்த்தேன்" என்றார்.
"அப்படியா! எல்லோரது கண்களுக்கும் பேய், பிசாசு தென்படாது கண்டியளே"
வல்லைவெளி முனி!



■ ■ ■

துன்னாலையில் பையனைக் காணவில்லை. தேடித் திரிந்து தற்செயலாக மேலே பார்த்தபோது, பனை வட்டில் பையன்!
"இறங்கி வா" என்றபோது இறங்கி வந்தான். அவனுக்குப் பனை மரம் ஏறத் தெரியாதாம்!
பனையேறிப்பேய்!

■ ■ ■

இவைகள் எல்லாம் அந்தக்காலத்தில் நடந்தவை. சமகாலத்தில் அல்ல. முந்திய யுகங்களில் கடவுள்கள் பலரும் நடமாடித் திரிந்தனர். கலியுக மனிதர்களுக்குக் கடவுளை நேரே பார்க்கத் தென்பில்லை. சூரியனை நேரே பார்க்கவே கண்கள் கூசுகின்றனர். கோடி சூரியப் பிரகாசமுள்ள கடவுளை நாம் கண்களால் பார்க்க முடியுமா? போய்களும், பிசாசுகளும் கூடத் துவக்குச் சூடுகளுக்குப் பயந்தோ, என்னவோ கண் காணாமல் போய்விட்டனபோலும்!
நல்ல விடயம்தான்.
சமகாலத்தில் கடவுள் எதையும் நிலுவையில் விடாது உடனுக்குடன் தண்டனை கொடுக்கிறார். ஏனெனில், கலியுகம் அழியப்போகிறது. அழிவில் குற்றவாளிகளைத் தேடிப்பிடிக்க முடியாதே?
முற்பிறப்பில் செய்த வினை என்ன என்று தெரியாமல் தண்டனை அனுபவிக்கிறானாம்! முற்பிறப்பில் தண்டனையைக் கொடுக்க நேரமில்லைப்போலும். நிலுவையில் விட்டிருக்கிறார்கள். அரசியலிலும் இப்படிப் பல நிலுவைகள் இருக்கின்றன. கைதிகளின் விசாரணை, காணாமல் செய்யப்பட்டவர்கள், நீதிமன்றில் முற்படுத்த நேரமில்லை. இப்படிப் பல.
கடவுளும் அரசியலும் ஒன்றையொன்று பார்த்துக் 'கொப்பி'யடிக்கின்றனபோலும்!



■

## இறுமாப்பு...



ஓலைக் குடில் அதில்
ஓரிரு ஓலைகள்
ஒடிந்து தொங்க
இன்னமும் இருக்கிறாள்
இறுமாப்பை இறுகப் பொத்தியபடி

கைக்கூலிக்குத் தனை வருத்தி
கால் வயிறு மட்டும் நிரப்பி
பெற்றவைக்காய் பெரும்பாடு பட்டு
பெருமையுயர்த்தி வைத்தவள் - இன்று
இறுமாப்புடன் இருக்கிறாள்
இயற்கை ஒன்றே போதும் என்று

'முதியோர் இல்லம்'
மூத்தவனின் முதல் முடிவு
பின்னவனுக்கும் பிடிப்பு அதுவே

தலைவன் இல்லாக் காலம்
தாங்கிய தன் குடிசை
சாவு வரைபோதும் என்று
தனித்து விட்டாள் அதனோடு

கனலாய்ப்போன கனவுகளை
கையுக்குள் அடக்கி
காற்றோடு கதைபேசி
இன்னமும் இருக்கிறாள்
இறுமாப்புடன் ஒருத்தி...

கவிதை

வேலணையூர் தனு

## விடியலுக்கு வழி சமைப்போம்...

பிஞ்சுகளைப் பாழாக்கும்
பஞ்சமா வஞ்சகர்க்கு
கொஞ்சமும் இரக்கமின்றி
கொடுக்கவேண்டும் கொடுந் தண்டனை
மிஞ்சவிட்டால் அஞ்சமாட்டார்
மிருகத்தனமாய் அழித்திடுவார்!

பால்மணம் மறந்தறியா
பச்சிளம் பாலகியை
இச்சைக்கு அடிமையாக்கி
உலகைவிட்டு அனுப்பினரே!
அச்சமின்றி அநியாயமாக
துடி துடிக்கக் கொன்றீரே!
அக்கா, தங்கையுடன் பிறக்கவில்லையா?

என்ன பாவம் செய்தது அந்தப் பிள்ளை?
முற்பகலில் செய்தவினை
பற்பகலில் உனைச் சூழ்ந்ததோ?
தர்மம் என்றும் அழிந்திடாது
போதைக்கு அடிமையானால்
பாதை மாறிப்போவீர்கள்

கீதை உபதேசம்
கிறிஸ்துவின் போதனைகள்
போதிமாதவன் அல்லாவின்
பொன்மொழிகள் பொய்த்திடுமோ?

பிணம் தின்னும் கழுகுகள்போல்
பிணம் தேடி அலைகின்றீர்
மனிதம் அழிந்த பின்னர்
மதியிழந்து வாழ்ந்தென்ன பயன்?
சாவுகள் மலிந்த பூமியாக
தொடர்ந்திடும் எம் வாழ்வு
விழித்திடுவோம் எழுச்சி கொள்வோம்
விடியலுக்கு வழி சமைப்போம்!



கவிதை

அபீர்ராஜன் அன்ரனி பீற்றர்

# வெளிச்சத்துக்கு வந்ததும் வரவேண்டியதும்!

கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

புலனாய்வுப் பத்திரிகைத்துறை அல்லது பத்திரிகைத்துறைப் புலனாய்வு என்பது இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இன்னமும் குழந்தை நிலைவரத்திலேயே இருக்கிறது. சாதாரண பத்திரிகைத்துறைப் பணியிலிருந்து இவ்வகையான புலனாய்வுடன் கூடிய பத்திரிகைப்பணி முற்றிலும் வேறுபடுகிறது. சில காலங்களுக்கு முன்னா் 'சனல்4' என்னும் வெளிநாட்டுத் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்ட காணொலிகள், இலங்கையைப் பாடாய்ப் படுத்தியிருந்தன. அண்மையில் 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்ட, அந்த வகையான மற்றொரு செய்தி பட்டையைக் கிளப்பியிருக்கிறது. குறித்த செய்தியால் அதிகம் அருட்டப்பட்டிருப்பவர், நாட்டின் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவே.

**தலையால் தண்ணீர் குடித்த கதை!**

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி அரச தலைவர் தேர்தல் ஒன்றை இலங்கை எதிர்கொண்டிருந்தது.



2014ஆம் ஆண்டின் பிற்பகுதி தொடக்கம் 2015ஆம் ஆண்டின் ஆரம்ப நாள்கள் வரை இலங்கையர் அனைவரையும் ஒருவகையான பரபரப்புப் பீடித்திருந்தது. அந்தப் பரபரப்புக்கான காரணம், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட இரண்டு வேட்பாளர்களைப் பற்றியதாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராகக் களமிறங்கியிருந்த மகிந்த ராஜபக்ச, தனது மூன்றாவது பதவிக் காலத்தைத் தக்க வைப்பதற்கான போட்டியில் தனது பலத்தை நிரூபிக்கக் காத்திருந்தார். அவருக்கு எதிராகப் பொது எதிரணி வேட்பாளராகக் களமிறங்கியிருந்தவர், அப்போதைய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன. அரசியலரங்கில் உச்சக்கட்டப் பரபரப்பைக் கொடுத்திருந்த அந்தத் தேர்தலில், நடந்தது என்ன? முடிந்தது என்ன? என்பதெல்லாம் கடந்து போன விடயம். ஆனால், அந்தத் தேர்தலில் தனது கதிரையைத் தக்கவைப்பதற்காக மகிந்தவும் அவரது ஆதரவுப் பட்டாளமும் எவ்வாறெல்லாம் தலையால் தண்ணீர் குடித்திருந்திருக்கிறார்கள் என்பவை அடுத்தடுத்து வெளிச்சத்துக்கு வந்த வண்ணமிருக்கின்றன. வாக்காளப் பெருமக்களை வசீகரிக்க, பணத்தை வீசியெறிந்து எடுத்த நடவடிக்கைகள், அதற்குப் பின்னால் இயங்கியவர்கள், அதனுடைய தொடர்ச்சிகள் என்பன கண்டறியப்பட்டு வருகின்றன. அதிலும் அப்போதைய அரசதலைவருக்கான கதிரையை அணி செய்து கொண்டிருந்த மகிந்த, அரச, பௌதீக மற்றும் மனித வளங்களை முறைகேடாகப் பயன்படுத்தி, தனது கனவை நனவாக்க எடுத்த முயற்சிகள் சந்திக்கு வந்த வண்ணமிருக்கின்றன.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதிய 'தி ஐலண்ட்' பத்திரிகை, 'ட்ரான்பரன்சி இன்டர்நஷனல்' அமைப்பின் தகவலை மேற்கோள் காட்டி வெளியிட்ட செய்தியின்படி, அன்றைய நிலைவரத்தில் குறித்த அமைப்பு, 170 வரையான தேர்தல் முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்களிடமிருந்து பெற்றிருந்தது. அவற்றில் தேர்தல் இலஞ்சமாகப் பணம் மற்றும் பொருள்கள் பகிரப்படுதல், அரச பணத்தைப் பயன்படுத்திச் செய்யப்படும் தேர்தல் விளம்பரங்கள், அரச பேரூந்துச் சேவைக்குச் சொந்தமான பேரூந்துகளைத் தேர்தல் வேட்பாளருக்காகப் பயன்படுத்தப்படுதல், அரச ஊடக நிறுவனங்களின் பக்கச் சார்பான நடவடிக்கைகள், அரச அலுவலர்கள் தேர்தல் பரப்புரை வேலைகளுக்காக ஈடுபடுத்தப்படல், இராணுவத்தினர் தேர்தல் பரப்புரைகளுக்காகப் பணிக்கமர்த்தப்பட்ட முறைப்பாடுகள் எனப் பலவற்றைச் சுட்டிக்காட்டி யிருந்தது.

**அமெரிக்கப் பத்திரிகை வெளிக்கொணர்ந்தது!**

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையும் அண்மையில் அம்பலப்படுத்தியிருப்பதும் அவ்வாறான ஒன்றையே! கடந்த அரச தலைவர் தேர்தல் காலப்பகுதியில் சீன நிறுவனமொன்று மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைகளுக்காகப் பணத்தை இறைத்திருப்பது புலனாய்வுப் பத்திரிகைத்துறை ஊடான அறிக்கையிடல் மூலம் வெளிக்கு வந்திருக்கிறது. தனியார் வங்கி ஒன்றின் மூலம் பரிமாறப்பட்ட 7.6மில்லியன் அமெரிக்க டொலருக்குக் குறையாத பணம், எவ்வாறு எல்லாம் தேர்தல் செலவுகளுக்குப் பங்கிடப்பட்டது என்பதையும் புட்டுக்காட்டியிருக்கிறது அந்தப் புலனாய்வுச் செய்தி அறிக்கை. தேர்தல் நடைபெறுவதற்கு 10நாள்கள் மட்டுமே இருக்கையில், சுமார் 3.7மில்லியன் அமெரிக்க டொலர் பணம் காசோலைகளாக வழங்கப்பட்டிருக்கிறது. 6இலட்சத்து 78ஆயிரம் அமெரிக்க டொலர் பணம், தேர்தல் பரப்புரைகளுக்கான 'ரீசேர்ட்' மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 2இலட்சத்து 97ஆயிரம் அமெரிக்க டொலர் பணம், ஆதரவாளர்களுக்கு அன்பளிப்புகள் மற்றும் பெண்களுக்கான சேலைகள் வாங்குவதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. மற்றொரு 38ஆயிரம் அமெரிக்க டொலர், மகிந்தவுக்குச் சார்பான பிக்கு ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது.



**செலுத்தப்படாத கட்டணம்!**

இலங்கை அரச பேரூந்துச் சேவைக்குச் சொந்தமான பேரூந்துகளை அரச தலைவர் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக மகிந்த ராஜபக்ச பயன்படுத்தி அதற்காகச் செலுத்தப்படாத கட்டணக் கணக்கான 143மில்லியன் ரூபாய் தொடர்பில் வழக்கு ஒன்று இடம்பெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை கொழும்பு உயர் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த வழக்கில், எதிராளி தரப்பான மகிந்த உள்ளிட்டவர்கள் தமது பதிலளிப்புகளை மேற்கொள்வதற்காக வருகிற ஒக்டோபர்10ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**நீர்கொழும்பில் நடந்த தேர்தல் பேரணி**

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல் பரப்புரைக் காலத்தில் நடந்த மற்றொரு பொதுநிதி களவாடல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம், அண்மையில் குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்கிறது. நீர்கொழும்பு கடல் நீரேரி அபிவிருத்தி திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் என்னும் போர்வையில் தேர்தல் விதிமுறை மீறி தேர்தல் தினத்துக்கு அண்மையில் நடந்த நிகழ்வில், அரச நிதி வாரி இறைக்கப்பட்டிருந்தது.

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சுமார் 12மில்லியன் ரூபா, குறித்த அரசியல் கூட்டத்துக்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன், குறித்த கூட்டத்தை நடத்துவதற்காகப் பெற்றுக்கொண்ட சேவைகளுக்காகச் சரியான விதிமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. குறித்த பணத்தில் 8.92மில்லியன் ரூபா மேடை அமைப்புக்காகச் செலவு செய்யப்பட்டிருக்க, 1.25 மில்லியன் ரூபா, குறித்த கூட்டத்துக்கு வந்த ஆதரவாளர்களுக்கு வழங்குவதற்கான தொப்பி மற்றும் ரீசேர்ட்டுகள் கொள்வனவு செய்யப் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது. இதைவிட 1.09மில்லியன் ரூபா, மேசை நாள்குறிப்பேடுகள் அச்சடிப்பதற்காகக் கரைக்கப்பட்டிருக்கிறது.

சில் துணி விவகாரம், அரச தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடக நிறுவனங்களில் மைத்திரிபாலவினது விளம்பரங்களுக்கு அனுமதி மறுத்தமை, பசில் ராஜபக்சவின் கலண்டர் விவகாரம் போன்ற தேர்தலோடு தொடர்புபட்ட மேலும் பல சட்டமீறல் சம்பவங்கள் வெளிச்சத்துக்கு வந்தாலும், இன்னும் பல கிளறப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. இதற்கப்பால் ஏ.ஆர் சிறிசேன என்றொரு தோற்றத்தால் ஒன்றுபட்ட மனிதனைக் களத்தில் இறக்கி, திஸ்ஸ அத்தநாயக்கா மூலம் ஒரு போலி ஆவண நாடகத்தை ஆடிச் செய்த் கூத்துக்களையும் இங்கே நினைவுகூரவே வேண்டும். இந்தப் பின்னணியில் அடுத்த அரச தலைவர் தேர்தலுக்கான பிரேரிப்புக்கள் தொடர்பில் அதிகம் அலட்டத் தொடங்கியிருக்கிறார்கள். அதுவும் மகிந்தவின் ஆசீர்வாதத்துடன் வரவுள்ள வேட்பாளர் தொடர்பிலான பிரேரிப்புக்கள் அநேகம், அதீதம்.

கடந்த தேர்தலில் மில்லியன் ரூபாய்களை அறம்புறமாக முறைகேடான வழிகளில் செலவழித்தது மாத்திரமல்லாமல், தனது மூன்றாவது பதவிக்காலத்தை நிச்சயப்படுத்துவதற்குத் தன்னாலான காரியங்களை முழுமூச்சாக நடத்தியிருந்தார் மகிந்த ராஜபக்ச. எனினும், மக்கள் மைத்திரிபாலவின் மீது காட்டியிருந்த அதீத விருப்பு, ராஜபக்சவின் கனவைத் தகர்த்திருந்தது.

மகிந்தவை மீண்டும் அரியணை ஏற்றுவதற்குச் சீனா ஒத்துழைப்பு வழங்கியது என்பதைத் தற்போது இருதரப்புகளும் (சீனா மற்றும் மகிந்த) நிராகரித்திருந்தாலும், வலுவான ஆதாரங்களுடனேயே தனது செய்தியறிக்கையை வெளியிட்டிருப்பதாக வாதிடுகிறது 'நியூயோர்க் ரைம்ஸ்'. 2020ஆம் ஆண்டு ஆட்சிக் கனவில் திளைத்திருக்கும் மகிந்த, அதை நோக்கிய தனது காய்களை வெற்றிகரமாக நகர்த்தி வருகிறார் என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஆனால், அதை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருக்கும் கூட்டரசுத் தரப்பு, உள்வீட்டுக் குத்துவெட்டுக்களால் வலுவாக இல்லாத நிலைமை வெளிப்படையானதே. இதுவே, மேலே சொன்ன வகை வகையான பொதுநிதி மோசடிகளுக்கும், சீனாவுக்கு நாட்டை அடகு வைக்கும் கைங்கரியங்களுக்கும் 2020ஆம் ஆண்டில் மீண்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கலாம். அதற்கான எச்சரிக்கை மணியின் பொத்தானை அழுத்திச் சென்றிருக்கிறது 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் புலனாய்வுச் செய்தி.

கட்டுரை

முருகேசு சச்சிதானந்தம்

# இஞ்சை இனி இருக்க ஏலாது...!

கடந்த 11.1.2018 அன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் யாழ்.மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் விஜித குண ரட்ண தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் யாரென்று தேடிப்பார்த்தால், யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்களாகக் காணப்படுகின்ற வாள் வெட்டு, போதைப் பொருள் கடத்தல், பாலியல் வன்புணர்வு, குழுவாகச் சென்று தாக்குதல்கள் நடத்துவதுபோன்ற காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்து இளைஞர்களின் அம்மாக்களும், அப்பாக்களும்தான். உயர் கல்வி கற்ற தமது பிள்ளைகளின் பட்டமளிப்பு விழாவுக்குக் கௌரமாகச் சென்று பங்கு பற்றிய யாழ்ப்பாணத்துச் சமூகம், குற்றச் செயல்களுக் காக அன்றைக்கு அங்கு அழைக்கப்பட்டிருந் தது. பொலிஸ் நிலையத்துக்குப் போவதைக் கௌரவக் குறைவாக நினைத்த ஒரு சமூகம், தனக்குப் பிரச்சினை என்றால், மட் டும் அதில் கலந்துகொள் வதும், இல்லாவிடில் 'நமக் கென் சோழி' என்று ஒதுங் கிக் கொள்வதுமான ஒரு சமூகம் பொலிசாரின் அழைப்பின் பேரில் அங்கு செல்லவேண்டி ஏற்பட்டது.



யாழ்ப்பாணத்திலே ஆறுவயதுப் பாலகி தொடக்கம் 60வய துப் பாட்டிவரை பாலியல் வன்பு ணர்வுக்கு உள்ளா கும் நிலை மிகச் சாதாரணமாகிவிட் டது. இது விடயத் தில் வயது முதிர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் அதுவும் மக்களால் தெரிவு செய்யப்பட் டவர்கள் நடவ டிக்கை எடுத்தா தாக இல்லை. யாரும் கொல்லப்ப டலாம், யாரும் வண்புணர்வுக்கு உட்படுத்தப்பட லாம் என்ற அனும தியை இந்த மூத்த தலைவர்கள் வ்ழங்கிவிட்ட தையே அவர்களின் மௌனம் எடுத்துக் காட்டுகிறது.

### "இவற்றை புள்ளையுமா?"

அங்கு அழைக்கப்பட்ட பெற்றோர்கள் படித்த குலத்தினராகவும், கல்வி மான்களாகவும், கௌரவ மான குடும்பத்தைச் சேர்ந் தவர்களாகவும் இருந்தார் கள். யாழ். நகர், மானிப் பாய், கோப்பாய், சாவகச் சேரி, கொடிகாமம், சுன்னா கம் பொலிஸ் பிரிவு களில் குற்றவாளிகள் பட்டியலில் உள்ளவர்களின் பெற் றோர்களாகவே இவர்கள் இருந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்து "இவற்ற பிள்ளையுமா?" என்று ஏங்கவும் செய்தார்கள்.

இன்றும்கூட பல தமிழ் ஆய்வாளர்கள் இலங்கை யின் தலை யாழ்ப்பாணம், யாழ்ப்பாணமே எல்லாவற் றையும் தீர்மானிக்கும் சக்தி கொண்டது, தென் னாசியாவில் வடக்குக் கிழக்கின் புவியியல் முக்கி யத்துவத்தை வைத்தே இன்றும் பல விடயங்களைச் சாதித்து விடலாம் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். அவர்களைப் பின்பற் றித் தமிழ் அரசியல் வாதிகளும், தமது பங்குக்குக் கருத் துத் தெரிவிக்கின்றனர். ஆனால், அந்தப் புவியியல் முக்கியத்துவமும், புகழும் இன்றைக்குத் தலைகீழாகி தமிழருக்குத் தூக்குக் கயிறாக ஆகிவிட்டதை யாரும் புரிந்துகொள்ளவில்லை.

### போதை கடத்தும் போக்கு உருவாகின்ற விதம்

மத்திய அமெரிக்க நாடுகள், பசுபிக் சமுத்திரத்தில் முக் கிய புவியியல் மையத்தைக் கொண்டிருக்கின்றன. இதில், நிக்ரகுவா, எல்சல்வடோர், கொஸ்ரோறிக்கா, பனமா, குவாட்டமாலா, பெலிஸ் ஆகியன கெமினிசச் சிந்தனையால் கவரப்பட்ட நாடுகளாக இருந்தமையால், கருத்து ரீதியாக முதலாளித்தவத்துக்கு எதிரான நாடுக ளாக இருந்தன. ஆனாலும் போதைப் பொருள் கடத்தும் முக்கிய நாடுகளாக வட அமெரிக்காவின் தலைமையில் அவை மாற்றப்பட்டன. சிறந்த கொமினிசத் தலைவர்கள் பலர் போதைப் பொருள் கடத்தல் மூலம் கோடிக்கணக் கில் பணம் சம்பாதிக்கும் நிலையும் கொமினிசத்தைக் கொச்சைப்படுத்தும் அல்லது கேள்விக்குறியாக்கும் நிலையும் ஏற்பட்டது.

இதைப்போன்றதொரு சூழல் 2010ஆம் ஆண்டுக்குப் பின்பு யாழ்ப்பாணத்துக்கு ஏற்பட்டது. மன்னார் இதன் முக்கிய இடத்தை ஆரம்பத்தில் பெற்றது. அரசியல்வா திகள் சிலர் தமது அரசியல் தேவைகளுக்கு அதிகளவு பணத்தை அள்ளி வீசுவதற்காகக் ஹெரோயின் கடத்த லில் ஈடுபட்டனர். அத்தகைய அரசியல்வாதியின் ஒருவ ரின் சகோதரர் இந்தியாவில் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை அநுபவிக்கும் அளவுக்கு இந்தக் கடத்தல் விவகாரம் முக்கியம் பெற்றது.

அபின், கஞ்சா கடத்தலில் ஆரம்பத்தில் ஈடுபட்ட பகுதி யாக இருப்பது வல்வேட்டித்துறையே. இந்தப் போதைப் பொருள்கள் தென்னிலங்கைக்குக் கடத்தப்பட்டனவே தவிர வடக்கில் அவை பாவிக்கப்படவில்லை. ஒரு பிரபல கடத்தல் காரனுக்காகவே ஆனையிறவு தடை முகாம் பகுதியில் இரும்பக் கூர்கள் பொருத்தப்பட்ட முக்கோ ணக் கற்கள் தடைக்காக வைக்கப்பட்டன. (அவற்றில் சில தற்போதும் காணப்படுகின்றன) அதன் பிறகும் கூட 'ஏபோட்டி'க் கார் ஒன்றில் ரயர்களைக் கழற்றி ரயில் தண்ட வாளத்தின் மீது பயணிப்பதற்கு ஏற்ற வகையில் அதை வடிவமைத்து கடத்தல் செய்ததாகக் கூறப்படுகிறது.

### இந்திய இராணுவ முற்றுகையின்போது கடத்தல்

இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டி ருந் தபோது போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை யாழ்ப்பாணத்தில் தலையெடுத்தது. இதை அறிந்த விடுதலைப்புலிகள், மிகவும் பிரயத்தனப்பட்டு அந்தக் கடத்தல்காரர்களையும், பாவிப்பவர்களையும் தேடித் தேடிச் சுட்டார்கள். அந்த நிலை அன்று கட்டுப்படுத்தப் பட்டிருக்காவிட்டால், 1987ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலேயே யாழ்.குடாநாட்டில் இன்றுள்ள சூழல் ஏற்பட்டிருக்கும். மீண்டும் அந்தச் சூழல் 2010ஆம் ஆண்டின் பின்பான காலப்பகுதியில் வலுவடைந்து காணப்படுகின்றது.

### கடத்தலின் பின்னாலுள்ள கைகள்

இந்தப் போதைப்பொருள் காரர்களின் கை ஓங்குவதற்கு வெளிநாடுகளில் வாழ்கின்ற ஒரு சில தமிழர்களினதும், இந்திய மீனவர்களினதும், செல்வாக்கு உதவி புரிவதை அறிய முடிகிறது. இலங்கைக் கடற்படையும் வட பாகத் தில் இந்தப் போதைப் பொருள்களைக் குவிப்பதற்கு அனுசரணை வழங்கி வருகிறது என்று கூறலாம்.

யாழ்ப்பாணம் போதைப் பொருள் கடத்தலின் மையமாக வந்துவிட்டது என்பதற்குச் சுண்டிக்குளம், பருத்தித் துறை, காங்கேசன்துறை, மயிலிட்டி, இளவாலை, தீவுப் பகுதிகள், பூநகரி, மன்னார், புத்தளம் ஆகிய பகுதிகளில் கேரளக் கஞ்சா, ஹெரோயின், போன்றவை கைப்பற் றப்பட்டமையையும், அவை யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதி நோக்கிச் செல்லுகின்ற பல வாகனங்களில் கைப்பற்றப்பட்டதையும் வைத்து முடிவெடுக்கமுடியும்.

### புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் இது துரிதம்

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக் குப் பின்னர் போதைப் பொருள் பாவிக்கும் நபர்கள் யாழ்ப்பா ணத்தில் அதிகரித்து வருகின்ற னர். இதன் முக்கிய இலக்காகப் பாடசாலை மாணவர்களும், பாடசாலையை விட்டு அண்மை ஆண்டுகளில் வெளியேறியவர் களும் பயன்படுத்தப்படுகின்ற னர். அதிலும் வசதி படைத்த குடும்பங்களின் பிள்ளை கள் அதிகமாக இதை நாடு கின்றனர் அல்லது உள் ளீர்க்கப்படுகின்றனர். இத்த கையவர்களின் பெற்றோர் களே இந்த வருட ஆரம்பத் தில் யாழ்.பொலிஸ் நிலை யத்துக்கு அழைக்கப்பட்ட வர்கள்.



வடபுலத்தின் புவியியல் மையம் தமிழீழத்துக்குச் சாதகமானது எனத் தமிழர் கள் நம்பியிருக்கும் நிலை யில் அந்தப் புவியியல் மையமே தமிழர்களை அச் சுறுத்தும் நிலைக்கு மாற்றப் பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. ஒரு பிரதேசத்தின் இயற்கையான புவியியல் முக்கியத்துவம் எப்போதும் போல இருந்தாலும் அது யாருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது என்பதும் முக்கியமானது. அந்தக் கோணத்தில் பார்த்தால், தமிழ் மக்களின் வாழ்வியல், பொருளாதார மேம்பாடு, கல்வி மேம்பாடு, ஒழுக்க விழு மியங்கள் போன்ற பலவுக்கும் ஒவ்வாத சூழலாக இந்தப் புவியியல் அமைவு மாற்றப்பட்டுவிட்டது.


### யாழ்ப்பாணத்தில் எதையும் செய்யலாம்

யாழ்ப்பாணத்திலே ஆறுவயதுப் பாலகி தொடக்கம் 60வயதுப் பாட்டிவரை பாலியல் வன்புணர்வுக்கு உள் ளாகும் நிலை மிகச் சாதாரணமாகிவிட்டது. இது விடயத் தில் வயது முதிர்ந்த தமிழ் அரசியல்வாதிகள் அதுவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்தாதாக இல்லை. யாரும் கொல்லப்படலாம், யாரும் வண்புணர்வுக்கு உட்படுத்தப்படலாம் என்ற அனும தியை இந்த மூத்த தலைவர்கள் வழங்கிவிட்டதையே அவர்களின் மௌனம் எடுத்துக் காட்டுகிறது.


இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் 'பச்சை மண் ணும் சுட்ட மண்ணும் ஒருபோதும் ஒட்டப்போவதில்லை' எனக் கூறிச் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழமுடியாது என்றார்கள் தமிழ்த் தலைவர்கள், 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்துடன் இந்த நாடே வேண்டாம் சிங்கள வர்களுடன் இருக்க முடியாது என நாட்டை விட்டே தமி ழர்கள் வெளியேறினர். ஆனால், சிங்களவர்கள் ஒன் பதுபேர் ஒன்றுகூடி அவர்கள் இனத்தில் ஒரு பாடசா லைப் பிள்ளையை வன்புணர்ந்ததாக இதுவரை பதிவு இருப்பதாகத் தெரியவில்லை. இப்படியிருக்க, பண்பாடு பற்றிப்பேசுகிற தமிழர்களுள் சொந்த, பந்தங்களே ஒன் றுகூடி ஒரு பெண்ணை வன்புணர்ந்தது இங்கே பதிவா கியிருக்கிறது.

தமிழர்களாலேயே தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியே றும் நிலை ஏற்பட்டுவிட்டது. "இஞ்சை இனி இருக்க ஏலாது" என்று தாம் எதிர்பார்த்த மாதிரி இங்கு இனிமேல் தாம் வாழமுடியாது என்ற முடிவுக்குப் பலர் வந்து விட்ட னர். இது தமிழரைத் தமிழரே வெறுக்கும் நிலை. இந்த நிலை ஏற்படவேண்டும் என்பதற்காகவே சிங்களத் தலைவர்கள் நீண்ட காலம் கரத்திருந்தார்கள். அவர்க ளது காத்திருப்பு தற்போது மிகச் சிறப்பாக நிறை வேற் றப்பட்டுள்ளது. தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளி யேறவேண்டும் என்பதே சிங்களத் திட்ட மிடலாளர்களின் மூலோபாயம் ஆகும்.

தமிழர்கள் ஒரு வன்முறைச் சமூகமாகிற்று, படித்த, பண் பாடான குடும்பங்களில் இருந்தே அடாவடித்தனங்கள் எழுந்துள்ளதே தற்போதைய உண்மை. இனி யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்படும் பெற்றோர்க ளின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கும் வாய்ப்பே அதிகமாக இருக்கும் என்று நம்பலாம். ■



சி.டினேஸ்ராஜ்,
தரம் - 3,
யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிஸன் வித்தியாலயம்.



றொ.றொகேஸ்,
தரம் - 9A,
மு/பாலிநகர் மகா வித்தியாலயம்

# நல்ல எண்ணங்களும் நல்ல பழக்கங்களும்



அபிநயா இப்போதெல்லாம் புத்தகங்கள் வாசிப்பதில் அதிக கவனம் செலுத்தி வருகிறாள். அதிகமாக அவளைக் கதைப் புத்தகங்களே கவர்கின்றன. கதைகளை வாசிப்பதனூடாக அவள் தனது வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பித்துவிட்டாள். அப்போது மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசனின் கதை ஒன்று அவள் கண்ணுக்கு அகப்பட்டது.

ஒருநாள் பள்ளியிலிருந்து வந்த சுட்டிச் சிறுவனான தோமஸ் அல்வா எடிசனின் கையில் ஒரு கடிதம் காணப்பட்டது. அந்தக் கடிதத்தை அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் எனத் தனது வகுப்பு ஆசிரியர் கூறியதாகச் சொல்லிய படியே அதைத் தாயிடம் கொடுத்தான். அந்தத் தாய் கண்ணீரோடு சத்தமாகத் தனது மகனுக்குக் கேட்கும் படி கடிதத்தைப் படித்தாள்.

"உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்கத் திறமையான ஆசிரியர்கள் எங்களிடம் இல்லை. அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்குக் கற்பிப்பது நல்லது" என்று அவள் உரத்து வாசித்தது அவனுக்கு நன்றாகவே கேட்டது. புளகாங்கிதம் அடைந்தான்.

அதன் பின்னர் எடிசன் மீதான தாயின் கவனத்திலும், கையாளுகையிலும் மிகுந்த தன்மை காணப்பட்டது. எடிசனை அவர் சரிவரக் கட்டமைத்தார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயார் இறந்துவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராக, கண்டுபிடிப்பாளராக ஆனார். உலகமே பார்த்து வியந்து நின்றது. இப்படி இருக்கையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய பொருள்களை எடுத்துத் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது, அவர் தன் அம்மாவிடம் முன்பொரு முறை பள்ளியிலிருந்து கொண்டு வந்து கொடுத்த கடிதம் எதேச்சையாகக் கண்ணில்பட்டது. ஆவலுடன் அதை எடுத்துப் படித்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது. "மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்."


இதைப் படித்த எடிசன் அழுதார். தனது நாள்குறிப்பேட்டில் "மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்" என்று குறித்து வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையின் மூலம் அபிநயா இரண்டு விடயங்களைப் புரிந்து கொண்டாள். எம்மீதுள்ள எதிர்மறையான சிந்தனைகளை எப்படி நேர் சிந்தனையாக மாற்றி வெற்றி கொள்வது என்பதற்கும் பிள்ளைகளின் மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது என்பதற்கும் எடிசனின் தாயார் செய்த காரியத்தை மிகச் சிறந்த உதாரணமாகக் கருதினாள். அத்தோடு பிள்ளைகளின் குழப்படிகளை யாராவது சுட்டிக் காட்டும் பட்சத்தில் அதைப் பிள்ளைகளுக்குக் காட்டிக் கொள்ளத்தேவையில்லாமல் போகலாம். ஆனால் அதன்பிறகு அத்தகைய விடயங்களில் விழிப்பாக இருந்து அவர்களுக்கு நற் பழக்கங்களைப் பழக்கவேண்டியதும் பெற்றோர்களின் கடமை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

## நான் அரசதலைவரானால்

நான் அரச தலைவரானால் இனம், மதம், மொழி என்று வேறுபாடுகள் பார்க்காமல் எல்லோரையும் சமமாகப் பார்ப்பேன். வேலை இல்லாத மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவேன். வீடுகள் இல்லாது முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பேன். வீதிகள் இல்லாதிருக்கும் கிராமங்களுக்கு வீதிகள் அமைத்துக் கொடுப்பேன். விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் செய்ய உதவுவேன். உடமைகள் இல்லாதிருக்கும் மக்களுக்கு உடமைகளை அளித்து உதவி செய்வேன். மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கி உதவி செய்வேன். என்னால் இயன்றவரை மக்களுக்கு உதவிசெய்வேன். மீன்பிடித்துறை அதற்கான உபகரணங்களை செய்து கொடுப்பேன். பாமர மக்களுக்குச் சிறுகைத் தொழில் பேட்டைகளை அமைத்து வேலையை வழங்குவேன். நாட்டில் சாந்தி, சமாதானத்தை நிலை நிறுத்துவேன். வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்படும்பொருள்களைத்தடைசெய்வேன். உள்ளூர் உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தெங்குப்பொருள்கள், பனம்பொருள்களை வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்வேன். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தத் திடசங்கற்பம் கொள்வேன். நான் நாட்டுக்கும் மக்களுக்கும் தொடர்ந்து சேவைகளைச் செய்வேன் என உறுதி அளிக்கிறேன்.

*ஜெ.பவதாரணி.*



## சிட்டுக் குருவி சிட்டுக் குருவி...

சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
பட்டுச் சிறகைத் தாறியா - அந்த
எட்டா வானில் பறக்கும் வித்தை
கற்றுத் தர வாறியா

உயர உயர எழுகின்றாய்
உயர்ந்த இடத்தில் அமர்கின்றாய்
அயராது என்றும் உழைக்கின்ற
ஆற்றல் எங்கு பெற்றாயோ?

திக்கில் எங்கும் பறக்கின்றாய்
தீனி பொறுக்கிக் கொறிக்கின்றாய்
பக்கம் வந்து உன் சிறகை
பரிசாய் எனக்குத் தாறீயோ

*வேலணையூர் சுரேஷ்*

## ஈழத்தவர் வரிசையில்...

## மு. தளையசிங்கம்



யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் பிறந்த தளையசிங்கம் இளம் வயதிலேயே சிந்தனையாளராகவும் சமூகப்போராளியாகவும் அறியப்பட்டவர். ஆசிரியராகப் பணியாற்றினார். ஆரம்பத்தில் புனைகதைகளையும் இலக்கிய விமர்சனங்களையும் எழுதினார். பின்னர் மெய்யியல் ஆய்வுகளை நோக்கிச் சென்றார். மானுடகுலத்தின் அறிவார்ந்த பரிணாமத்தைப்பற்றிய கருத்தாக்கங்களை உருவாக்கினார்.


1956ஆம் ஆண்டிலிருந்து அவர் மறைந்த 1973ஆம் ஆண்டு வரை எழுதியிருக்கிறார். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள் எனத் தரமான இலக்கியப் படைப்புகளைத் தந்துள்ளார். தமிழின் முக்கியமான மீபொருண்மைச் சிந்தனையாளர்.

மார்க்சிய ஈடுபாடுள்ளவராக இருந்த தளையசிங்கம் பின்னர் சர்வோதய இயக்கப் போராளியானார். 1966ஆம் ஆண்டில் தனது ஆன்மீக குருவான ஸ்ரீ நந்தகோபாலகிரியை இரத்தினபுரியில் சந்தித்தார். அது அவரை அரவிந்தரை நோக்கிக் கொண்டுசென்றது. புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு மாற்றலானார்.


1968ஆம் ஆண்டில் சர்வோதய இயக்கத்தை ஆரம்பித்துத் தனது சமூகப் பணிகளைப் பரவலாக்கும் கருவியாக அரசியலைப் பயன்படுத்தும் நோக்கத்தில் குறுகிய கால அரசியல் பிரவேசம் செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகக் கடுமையாக உழைத்தார். [illegible]ம் ஆண்டில் புங்குடுதீவு கண்ணகையம்மன் கோவிற் கிணற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் நன்னீர் பெறும் பொருட்டு இவர் நடத்திய போராட்டத்தின்போது காவற்துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். பின்னர் நோய்வாய்ப்பட்டு 1973ஆம் ஆண்டு மறைந்தார்

தளையசிங்கம் தனது காலகட்டத்தை,'தற்காலம்' ஒரு புது யுகத்தை நோக்கி மாறிக்கொண்டிருக்கிறது. நாம் இரு உலகங்களுக்கிடையே கிடந்து போராடிக் கொண்டிருக்கிறோம். ஒன்று செத்துக் கொண்டிருக்கிறது மற்றது பிறக்க முயன்றுகொண்டிருக்கிறது' அதற்கேற்ப உருவாக்கிய தனது கலைப்பார்வையைப் பிரபஞ்ச யதார்த்தம் என்று சொன்னார். முற்போக்கு, பிற்போக்கு என்பவற்றை விமர்சித்தார். நற்போக்கு என்பதனூடாகத் தன்னை அடையாளப்படுத்தினார்.

"ஈழத் தமிழ் இலக்கிய விமர்சகர்களுள் தளையசிங்கத்தையே பெரும் சிந்தனையாளராக இனம் காணவேண்டும்" என்பது எழுத்தாளர்கள் பலரும் ஏற்றுக்கொண்டுள்ள விடயம். புதுயுகத்துக்கான இலக்கியத்தை தளையசிங்கம் 'மெய்யுள்' என அழைத்தார். அதை ஒரு மாதிரி வடிவில் தானே எழுதியும் பார்த்தார். ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, முற்போக்கு இலக்கியம், போர்ப்பறை, புதுயுகம் பிறக்கிறது, கலைஞனின் தாகம், மெய்யுள், ஒரு தனி வீடு என்பன தளையசிங்கத்தின் நூல்கள்.



## வழிகாட்டுவோம்



# ‘சர்கார்’ க்கு வந்த சோதனை

## புகைப்பிடிப்பது போன்ற சுவரொட்டி நீக்கம்

விஜய் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'சர்கார்'. இந்த படத்தின் சுவரொட்டிகள் கடந்த மாதம் வெளியாகின. இந்தச் சுவரொட்டிகளில் விஜய்புகைபிடிப்பதுபோன்றகாட்சிகள் இடம்பெற்றன. ரசிகர்களிடையேநல்லவரவேற்புகிடைத்தாலும், அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்களிடம் எதிர்ப்புகள் கிளம்பின.

இந்த நிலையில் புகைபிடித்தபடி விஜய் இருக்கும் படங்களை உடனே இணையதளங்கள், சமூகவலைதளங்கள்மற்றும்பொது வெளியில் இருந்துநீக்கவேண்டும்என்றுபொதுசுகாதாரத்துறை நடிகர் விஜய் மற்றும் இயக்குநர் முருகதாசுக்கு துண்டுபிரசுரம் ஒன்றைஅனுப்பியது. உடனடியாகநீக்காவிட்டால்அவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

மேலும்புகைபிடிக்கும்பழக்கத்தைஒழிக்கஅரசுமேற்கொள்ளும் முயற்சிகளுக்குதிரைத்துறையினரும்ஒத்துழைப்புதரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ், தனது சமூக வலைத்தள பக்கத்தில் இருந்து 'சர்கார்' படத்தின் முதலாவது சுவரொட்டியை நீக்கியுள்ளது.

## twitter

பிளாக் லைட்@BlackLightOfI

பிறருக்குக் கொடுத்து வாழும்
எண்ணத்தைக் கெடுத்து விட்டதே,
இந்த குளிர்சாதன பெட்டி
எனலாம்.!

சிலந்தி™@nandhu_twitts

கடைபிடிக்க வேண்டிய
அனைத்துக்கும்...
தடை பிடிப்பதே சமூக
சீர்கேடுகளுக்கு
முதன்மையானவை..!



# அலெக்சாண்டர்

மாமன்னன் அலெக்சாண்டர், உலகநாடுகள் அனைத்தையும் தன் காலடியில் கொண்டு வந்த மாபெரும் அரசன். தன்னுடையவெற்றிப்பயணத்தைமுடித்துவிட்டுநாடுதிரும்பினான். தன்தாயின்முகத்தைப்பார்க்கஆவலுடன்விரைந்தான். ஆனால் கிரீஸ் நாட்டுக்குப் போகும் வழியிலேயே நடக்கக்கூட இயலாத அளவுக்குக்கொடும்நோய்க்கு ஆளானான். தன்னுடைய பணம், படைகள், கொள்ளை அடித்த சொத்துக்கள் யாவும் அர்த்தமற்றுப் போனதை அவன் உணர்ந்தான். அந்த நிமிடம் அவனுடைய வாழ்க்கையில் மிகவும் அர்த்தமிக்கது; அவனுடைய வெற்றிகளைக் காட்டிலும் மகத்தானது இறப்பின் அழைப்பை உணர்ந்த அவன் உதவியாளர்களுக்குத் தன்னுடைய கடைசி ஆசைகளை மூன்று கட்டளைகளாகப் பிறப்பித்தான்.

ஒன்று: தான் இறந்த பின் தன்னுடைய சவப்பெட்டியை தன்னுடைய உடற்பயிற்சியாளர்கள் மற்றும் போர்ப் பயிற்சியாளர்கள்தான் சுமந்துசெல்ல வேண்டும்.

இரண்டு கல்லறைக்குத் தன்னுடைய சவப்பெட்டி செல்லும் வழி எங்கும் நாடுகளை வென்றதன் மூலம் சம்பாதித்த தங்கம், வெள்ளி, வைரம் போன்ற விலையுயர்ந்த கற்களைப் புதைக்க வேண்டும்.

அவன் தன்னுடைய கடைசி ஆசையாகக் கூறியது "ஏன்னுடைய இரண்டு கைகளும் சவப்பெட்டிக்கு வெளியில் திறந்த நிலையில் இருக்கும்படி தொங்கவிடப்பட வேண்டும்.

முதலில் சொன்ன கட்டளைக்குக் காரணம் "இந்த உலகில் சாவில் இருந்து ஒருவனை யாராலும் தடுக்க இயலாது" என்பதை உணர்த்தி, இரண்டாவதாகச் சொன்னது "எவ்வளவோ செல்வத்தைக் குவித்தும், நாடுகளை வென்றும் கடைசியில்எதுவும்கூடவராது" என்பதைஉணர்த்திமூன்றாவதாக சொன்னது "வெறும் கையோடு வந்தேன்... வெறுங்கையோடுதான்செல்கிறேன்" என்றுஎன்வாழ்வின் தத்துவத்தை உலகம் புரிந்துகொள்ள வேண்டும் " என்பதற்காக என்றாராம் அவர்.

## இது என்னம்மா நடுவில கொஞ்சம் முடியைக் காணோம்...



## சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | | | |
| | 6 | | 3 | | | | 8 | |
| 4 | 1 | 5 | 6 | | | | | |
| | | 8 | 5 | | | | | |
| 6 | 5 | | 7 | | 9 | | 2 | 3 |
| | | | | | 6 | 7 | | |
| | | | | | 3 | 8 | 1 | 4 |
| | 2 | | | | 1 | | 3 | |
| | | | 9 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 8 | 9 | 6 | 7 | 4 | 5 | 3 |
| 3 | 4 | 9 | 8 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 5 | 6 | 7 | 2 | 4 | 3 | 9 | 8 | 1 |
| 7 | 3 | 2 | 1 | 9 | 6 | 8 | 4 | 5 |
| 8 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 2 | 6 |
| 6 | 1 | 4 | 5 | 8 | 2 | 7 | 3 | 9 |
| 4 | 7 | 3 | 6 | 2 | 9 | 5 | 1 | 8 |
| 9 | 5 | 6 | 4 | 1 | 8 | 3 | 7 | 2 |
| 2 | 8 | 1 | 7 | 3 | 5 | 6 | 9 | 4 |

நேற்றைய விடை

## திருட்டுப் பூனை



காவல் பலிக்கவில்லை
தினமும் பால் திருட்டு
துடிக்கும் மீசையில் கர்வம்
கண்களில் குவியும் குரூரம்
உடம்பில் புரளும் முறுக்கு
உனக்கு நான் எதுவாகத் தெரிகிறேன்
எலியாகவோ அல்லது எதிரியாகவோ

## பொண்ணுங்க கிட்ட பொய் சொன்னா கண்டுபிடிச்சிடுவாங்க...



## உண்மையைச் சொன்னா நம்ப மாட்டாங்க...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மை தரும். விலகிச் சென்ற உறவினரும் அன்புடன் நெருங்குவர். தொழில் வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும்.

**இடபம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** வழக்கத்திற்கு மாறான திடீர் பணி குறுக்கிடலாம். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும்.

**கடகம்:** முக்கிய பணிகளை பிறர் பொறுப்பில் தர வேண்டாம். எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு அவசியம். பணவரவு சுமார்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மையைப் பின்பற்றுவீர்கள். பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில் வியாபாரத்தில் விற்பனை உயர்வால் ஆதாயம் அதிகரிஅகும்.

**கன்னி:** சிலர் உங்களிடம்கொடுத்த வாக்குறுதியை மீறி நடப்பர். பொறுமை காப்பது நல்லது. தொழில் வியாபாரம் வளர்ச்சிபெற விடாமுயற்சி தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். பயணத்தில் கூடுதல் கவனம் வேண்டும்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும்.

**விருச்சிகம்:** சுயகவுரவம் நிலைநாட்டுவதில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். வருமானம் சீராக இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்தஆதாயம்கிடைக்கும். நிலுவைப்பணம் வசூலாகும்.

**கும்பம்:** சொந்தப்பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற்ற தாமதமாகும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** யாருக்கும் தகுதி மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். முக்கிய செலவுக்கு கடன் பெற நேரிடலாம்.

# தினமும் ஒரு குவளை பப்பாளி ஜூஸ்.. நன்மைகளோ ஏராளம்



பப்பாளியில்பல்வேறு மருத்துவ குணங்கள்நிறைந்துள்ளதால் இதனை தினமும் உட்கொள்வது ஆரோக்கியமான வாழ்க் கைக்கு வழிவகுக்கிறது.

- பப்பாளியில் ஏராளமான நார்ச்சத்து இருப்பதால் குடலில் உள்ள டாக்சின்களை வெளியேற்றுகிறது. அத்துடன் குடல் புற்றுநோய் வராமலும் பாதுகாக்கிறது.
- அதுமட்டுமின்றி சமிபாட்டுக்கும் உதவுகிறது. மலச்சிக்கல் பிரச்சினைக்குத் தீர்வாகிறது.
- உயர் குருதி அழுத்தம் உள்ளவர்களுக்கு சிறந்த பழமாகும். மேலும் குருதி நாளங்களுக்கு சத்துக்களை வழங்குகிறது.
- தினமும் குடித்து வருவதன் மூலம் நுரையீரலில் உள்ள நச்சுக்கள் வெளியேறி சுவாச பிரச்சினைகளால் வராமல் பாதுகாக்கிறது.
- மேலும் சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகள் வருவதை தடுக்கலாம்.
- இதிலுள்ள பாப்பைன் என்ற நொதியினால் இறந்த கலங்கள் வெளியேற்றப்பட்டு சருமம் பொலிவடைகிறது.

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1200 | 1000 |
| நண்டு | 600 | 500 | 600 | 500 |
| கணவாய் | 800 | 800 | 1000 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 900 | 1000 | 1200 |
| சீலா | 500 | 500 | 600 | 400 |
| விளை | 600 | 500 | 600 | 800 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 250 | 250 | 400 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 250 | 300 | 300 | – |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 600 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |

# மணத்தக்காளி வயிற்றில் ஏற்படும் புண்களைக் குணப்படுத்தும்



மணத்தக்காளி இலை சிறிது இனிப்புச்சுவையும், குளிர்ச்சித்தன்மையும் கொண்டது. சருமம் தொடர்பான பல நோய்கள் வராமல் கட்டுபடுத்தும் ஆற்றல் கொண்டது. இதில் விற்றமின் இ, டி அதிக அளவில் உள்ளன. நார்ச்சத்து மிகுந்தது. இந்தக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால், வயிற்றில் ஏற்படும் புண்களைக் குணப்படுத்தும்.

மணத்தக்காளிக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டு வந்தால், இருமல், இளைப்பு பிரச்சினை குணமாகும். வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தும் சக்தி மிகுந்தது இந்தக் கீரை. சிறுநீர், வியர்வையைப் பெருக்கி உடலில் உள்ள கெட்ட நீரை வெளியேற்றும். மணத்தக்காளி இலைச்சாற்றை 35 மி.லி வீதம் நாள்தோறும் மூன்று வேளைகள் உட்கொண்டுவந்தால், சிறுநீரைப் பெருக்கும்; உடலில் நீர் கோத்து ஏற்படும் வீக்கம், உடல் வெப்பம் ஆகியவற்றைக் குணப்படுத்தும்.

மணத்தக்காளிக் கீரை வாய்ப் புண்களைக் குணமாக்கும் அருமருந்து. இதன் பச்சை இலைகளைத் தேவையான அளவு நெய் சேர்த்து வதக்கி, துவையல் செய்து, சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டுவர வாய்ப்புண் குணமாகும். வெறும் பச்சை இலைகளை, நாள் ஒன்றுக்கு ஐந்துமுறைகள் நன்றாக மென்று சாற்றை விழுங்கினாலும், வாய்ப்புண் முழுமையாக குணம் ஆகும்.

மூட்டுப் பகுதியில் ஏற்படும் வீக்கங்கள் காரணமாக அவதிப்படுபவர்கள், மணத்தக்காளி இலைகளை வதக்கி, மூட்டுப் பகுதியில் ஒத்தடம் கொடுத்தால், நல்ல பலன் கிடைக்கும். மணத்தக்காளிக் காயை வற்றல் செய்து, குழம்புக்குப் பயன்படுத்தலாம். இதன் இலை, வேர் ஆகியவற்றை குடிநீர் செய்து அருந்துவது நோயற்ற வாழ்வைப் பெற உதவும்

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 140 | 80 | 80 | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 220 | 120 | 140 | 200 |
| பாகல் | 280 | 260 | 280 | 240 |
| க.கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 160 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 |
| தக்காளி | 280 | 260 | 260 | 260 |
| வாழைக்காய் | 40 | 80 | 80 | 50 |
| கீரை | 40 | 15 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| ப.மிளகாய் | 200 | 300 | 450 | 300 |
| புடோல் | 120 | 80 | 120 | 120 |
| கோவா | 120 | 200 | 180 | 160 |
| வெண்டி | 100 | 90 | 120 | 100 |
| போஞ்சி | 320 | 250 | 280 | 260 |
| லீக்ஸ் | 240 | 260 | 280 | 360 |
| தேங்காய் | 70 | 70 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 130 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 150 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| கறிமிளகாய் | 280 | 320 | 280 | 240 |
| கரட் | 280 | 300 | 280 | 360 |
| முருங்கைக்காய் | 300 | 700 | 500 | 300 |

# பாகற்காயில் உள்ள விற்றமின்கள்!

பாகற்காய் என்ற பெயரைக் கேட்டாலே முகம் சுழிக்க ஆரம்பித்து விடுவோம். ஆனால் பாகற்காயில் உள்ள விற்றமின்கள் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மிகவும் நல்லது. இது குருதியில் உள்ள சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவும்.

**நன்மைகள்**

நீரிழிவைப் போக்கும். தொடர் இருமல், சளி பிரச்சினை உள்ளவர்கள் அடிக்கடி உணவில் பாகற்காயை சேர்த்துக் கொள்ளலாம். வயிற்றில் உள்ள புழுக்களை அழிக்கும். கோடையில் உண்டாகும் உடல்சூட்டைத் தணிக்கும்.

**கசப்புத்தன்மை**

பாகற்காயில் உள்ள கசப்புத்தன்மையை ஒருபோதும் வெளியே நீக்கிவிட முடியாது. ஆனால் இவ்வளவு ஆரோக்கியம் நிறைந்த பாகற்காயை சாப்பிடாமல் இருக்க முடியுமா?...

கசப்பை நீக்கமுடியாவிட்டால் என்ன?கசப்புத்தன்மையே தெரியாமல், முற்றிலும் கசப்பைக் குறைத்து நம்மால் பாகற்காயை சமைக்க முடியும். பாகற்காயின் கசப்பைக் குறைக்க பல வழிகள் உண்டு.

பாகற்காயை மெல்லிய வட்டமாக நறுக்கிக் கொண்டு அதில் சிறிது உப்பு மற்றும் புளித்தண்ணீர் தெளித்து சிறிது நேரம் ஊறவைக்க வேண்டும். அதன்பின் அதில் சேர்க்கப்பட்ட உப்புநீர் தனியே பிரிந்திருக்கும். அதை மட்டும் வடித்துவிட்டு சமைத்தால் கசப்பு போய்விடும்.

மொறுமொறு பாகற்காய் வறுவல் சிலருக்குப் பிடிக்கும். மிக மெல்லிய வட்ட வடிவ துண்டுகளாக பாகற்காயை நறுக்கி, அதை நன்கு பிழிந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஜூஸை வெளியே எடுத்துவிடுங்கள். அதன்பின் மசாலா சேர்த்து வறுத்தால் இன்னும் கொஞ்சம்அதிகமாக சாப்பிடத் தோன்றும். சாறு பிழிந்தபின் கட்டாயம் மீண்டும் பாகற்காயை கழுவிவிட்டு தான் சமைக்க வேண்டும்.



மெலிதாக நறுக்கிய பாகற்காயை அரை மணிநேரம் புளி தண்ணீரில் ஊறவைத்து பின் சமைத்தால் புளிப்பு இருக்காது.

பாகற்காயை சமைப்பதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பு, நன்கு கொதிக்கும் தண்ணீரில் சிறிது உப்புடன் சேர்த்து பாகற்காயையும் 2 முதல் 3 நிமிடங்கள் வரை வேகவையுங்கள். ஓரளவு வெந்தபின், வெந்நீரை வடிகட்டிவிட்டு, குளிர்ந்த நீரில் அலசிவிட்டு சமைக்க ஆரம்பிக்கலாம்.

மிக மெல்லிய துண்டுகளாக பாகற்காயை நறுக்கிக் கொண்டபின், கொட்டைகளை நீக்கிவிட வேண்டும். அதன்பின் 2 தேக்கரண்டி ஆலிவ் ஆயில் சேர்த்து சிறிது பிரட்டிவிட்டு சிறிது நேரம் கழித்து சமைக்கலாம். தேவைப்பட்டால் ஆலிவ் ஆயிலுடன் சிறு சிறு துண்டுகளாக பூண்டு அல்லது வெங்காயத்தையும் நறுக்கிப் போடலாம். இது சமைக்கும்போது கசப்புத்தன்மையை நீக்குவதோடு சுவையையும் கூட்டும்.

பாகற்காயை சமைக்கும்போது சிறிது சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்துக் கொண்டால் கசப்பு குறைவாகத் தெரியும்.

மெலிதாக நறுக்கிய பாகற்காயுடன் உருளைக்கிழங்கு, சீஸ் ஆகியவற்றைச் சேர்த்து சமைத்தால் கசப்பு இருக்காது.

அசைவம் சாப்பிடுபவர்கள் சிறிது வெங்காயம், நல்லெண்ணெய், உப்பு, மஞ்சளுடன் சிறிது நேரம் பாகற்காயை ஊறவிட்டு, பின் கறியுடன் சேர்த்து சமைத்து சாப்பிடலாம்.


வினிகரையும் சர்க்கரையையும் சம அளவு கலந்து நன்கு கொதிக்க விட்டு, பின் அந்த கலவையை பாகற்காய் சமைக்கும்போது ஊற்றலாம்.

புளிக்காத மோரில் சிறிது உப்பு சேர்த்து அதில் பாகற்காயை ஊறவைத்து சிறிதுநேரம் கழித்து சமைத்தால் ஏறக்குறைய காயின் கசப்புத்தன்மை குறைந்துவிடும்.

மேற்கண்ட எல்லா குறிப்புகளிலுமே பாகற்காயின் கொட்டைகளை நீக்கிவிடுவது மிக முக்கியம்.

பாகற்காயின் தோலை நன்கு சீவி விட்டு, பின் உப்பு மற்றும் மஞ்சள் கலந்த நீரில் நன்கு ஊறவிட்டு, ஊறிய பின் அலசி, நறுக்கி சமைக்கவும்

# இது புதுசு



பெண்களுக்கான காதணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# எழுதப்படாத வடுக்கள்

கவிதை

சி.வினித்

நினைவுக் குப்பையில் மாறாத வடுக்களாய்
முள்ளில் பயணித்த முள்ளிவாய்க்கால் பயணம்

சொந்த மண் மறந்து சொந்தங்கள் மறந்து
மாட்டு வண்டியில் இராக்கால யாத்திரை

ஏகாந்தப் பொழுதினிலே குண்டு வெடி ஓசைகள்
குருவிக் கூடுகள் குலை நடுங்கிப் போனதுவே

கனகதைபேசும் பனங்காற்றும் குருதி வெடில்
அடித்து கொற்றம் கொண்டு வீசியதே

காதோரம் கிபிரின் பூகம்ப ஓசைகள்
கானமாய் ஒலித்ததுவே ஒப்பாரிப்பாடல்கள்

சுண்டிக்குளப்பள்ளியும் சிதைவுற்றுப் பறந்ததுவே
கல்வி கற்ற தேனிகள் சிறகொடிந்து துடித்தனவே

உப்பில்லாச்சோறும்பாழானபருப்புக்கறியும்தறப்பாளில்வீடும்
என்ன குற்றம் புரிந்தோம்?? இந்த நரக வேதனைக்கு

வண்ணப் பறவைகளாய் சுற்றித்திரிந்த நாம் - பாதாள
வங்கறுக்குள் சிறகொடிந்து கிடந்தோமே
எல்லைக்குச் சென்ற மன்னவனோ கொல்லைப் புறத்தில்
செத்துப்போய் கிடந்தானே மீன் பிடிக்கச் சென்ற
என் தலைவன் நேவிக்கு இரையானானே

தேங்காயும் சீனியும் கனவான புதிராச்சே
மருந்துகளும் மருத்துவமும் அரிதான வளமாச்சே

பால்குடிப்பாலகனும் பாலுக்கு அழுதானே
பாலூட்ட மனமிருந்தும் தேகத்தில் பாலற்று அழுதாளே

மூச்சிழந்த தாயவளின் முலைமுட்டி அழுதானே
மரணித்த தந்தையவன் உரோம மெத்தையில் உருண்டானே

நச்சுக்காற்றும் புற்றுநோயாய் மாறியதே
ஏ.எல் படித்தவன் வைத்தியானானானே

வேர்த்திளைத்த தன்மகனின் முகம்பார்த்து
சீலைத் தொங்கல் உதறினாலோ அது கிழிந்த
துளைவழியே அண்டத்தை பார்த்தாளே

செஞ்சிலுவைச் சங்கத்தின் கஞ்சிக்கு இளம்பிஞ்சு
வரிசையில் நின்றானே வெயிலின் கொடுமைக்கு

அவன் என்ன விதிவிலக்கா???

வீரத்தமிழணங்காள் வெறிகொண்டு கதறினாளே
முப்பாட்டன் செய்த பாவம்தான் வாளால் வருடுகிறதோ??

கப்பலேந்தி மாதாவும் குருடாகிப் போனாளோ??? வற்றாப்பளைக்
கண்ணகியும் செவிடாகிப் போனாளோ??? நந்திக்கடலும்
சிவப்பாக மாறியத??? புனிதம் எல்லாம் தொலைதூரம்
சென்றதுவோ???

வானும் அழுதது காற்றும் கதறியது கடலும் கத்தியது
நம் கூடுகுலைந்த காட்சி கண்டு - என்றும் மறவாத
பசுமரத்தாணியாய் என் இதயத்தில்



## சொற்சிலம்பம் போட்டி இல: 530

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | |
| ■ | | ■ | 13 | | ■ | | ■ |
| 14 | | 15 | | ■ | 16 | | 17 |
| | ■ | 18 | | | | ■ | |
| 19 | | | | ■ | 20 | | |

அனுப்புபவர் பெயர்:..................................................

முழுமையான தபால் விலாசம்: ..................................

..................................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. வம்சம்
4. ஓர் இடைச் சொல்
6. மதிப்புடையவன்
7. தமிழர்களின் வார்த்தைகளிலும் இப்போது இது வேண்டும்
9. அதிகார நிலை
11. உறுதி
12. இணக்கம் தெரிவி
13. ஓர் தொழில் உபகரணம்
14. ஆலயங்களில் இது வருவது நல்லதல்ல
16. பிரிவு
18. கவிச்சக்கரவர்த்தி
19. பொல்லாத்தனத்தில் ஒன்று
20. உன்மத்தம்

### மேலிருந்து கீழ்

1. செய்தி
2. எரியும் செயற்பாடு
3. நாள்
4. மகிழ்வு
5. சிரசில் எழுதப்பட்டது
8. ஒரு திசை
10. தங்களுக்கு
12. நெஞ்சில் கபம் பிடிப்பது
13. இது பிடித்தால் பிடியை விடாது
14. இது பழுத்தால் வௌவால்களுக்கும் விருப்பம்
15. பகுதி
16. பலதைச் சுட்டுவது
17. தைரியம் / வெற்றி

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 528 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அனுமதி (4)தும்பு (6)கனவான் (7)சாகரம் (9)பசளி (11)மையம் (12)அம்மி (13)செடி (14)பாசி (16)அன்பன் (18)கடும் (19) கனிதல் (21)புயல் (22)காவியம்

**மேலிருந்து கீழ்**
(1) அஞ்சாமை (2)மகரம் (3)தினம் (4)துன்பம் (5)புரளி (8) கயவன் (10)சமிபாடு (12)அடி (13)சென்னி (15)சிம்மம் (16)அம்பு (17)பகல் (18)கல்வி (20)தகா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.530**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (18.07.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 528 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
தம்பையா யோகராசா,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி

**2 ஆம் பரிசு**
K.K. வேகாவனம்,
வித்தியானந்தா கல்லூரியடி,
முள்ளியவளை.

**3 ஆம் பரிசு**
செல்வி மதுவந்தி முகுந்தன்,
புலவர் வீதி, நாவலி வடக்கு,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
து.மாணிக்கவாசகர்,
வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

**5 ஆம் பரிசு**
திருமதி இராஜமுத்து மஞ்சுளா,
பிரதேச வைத்தியசாலை,
அச்சுவேலி.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.யூஜினா மரியா,
இல.85/4 கார்மல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

செ.பாலசுந்தரம்,
இல.352 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ச.பிரஷானி,
முகாமைத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

சொற்சிலம்பம் போட்டி இல.530 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 22.07.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 528 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**08.07.2018 முதல் 15.07.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*



## மேடம்

சுக்கிரன், புதன், சூரியன், குரு நற்பலன் தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாமதமான செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். வாகன பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல் கேட்டு நடப்பர். குடும்பத்தில் வெகு நாள் இருந்த பிரச்சனையின் தீவிரம் குறையும். அதிக நிபந்தனையுடன் பணக்கடன் பெற வேண்டாம். மனைவியின் அன்பு நெகிழ்ச்சியை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற கூடுதல் பயிற்சியை மேற்கொள்வர்.

## இடபம்

ராகு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. எவரிடமும் அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டாம். தம்பி, தங்கை ஓரளவு உதவுவர். சிலருக்கு வீடு, பணியிடம் மாற்றுகின்ற எண்ணம் ஏற்படலாம். பிள்ளைகளின் அறிவாற்றல், செயல்திறன் வளர உதவுவீர்கள். பகைவரால் உருவான கெடு செயல் பலமிழக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் மதிப்பு மரியாதை தருவர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் பணவரவு சீராகும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் குடும்ப எதிர்கால நலன் பற்றி கணவரிடம் பேசுவர். மாணவர்கள் படிப்பில் மேம்பட தேவையான பயிற்சி மேற்கொள்வர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, சந்திரன் அனுகூலபலன் தருவர். தொடர்பில்லாத பணிகளை தவிர்ப்பதால் மன அமைதியை பாதுகாக்கலாம். உடன்பிறந்தவர் கருத்து பேதம் கொள்வர். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற உதவுவீர்கள். ஒவ்வாத உணவு தவிர்க்கவும். மனைவி உங்கள் மீது அபரிமிதமான நம்பிக்கை கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். உபரி பணவரவு சேமிப்பாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த நிதியுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப செலவுகளில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் நண்பர் உதவியால் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.

## கடகம்

சந்திரன், சனீஸ்வரர், சுக்கிரன் ஓரளவு நற்பலன் வழங்குவர். மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும். பணிகள் உரிய காலத்தில் நிறைவேறும். தம்பி, தங்கை வாழ்வு வளம்பெற உதவுவீர்கள். பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மை தரும். உடல் ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை தேவைப்படும். மனைவி உங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வார். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் சலுகை கேட்பதில் நிதானம் வேண்டும். பெண்கள் உறவினர்களின் நன் மதிப்பை பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் அதிக தரத்தேர்ச்சி கிடைக்கும்.

## சிங்கம்

செவ்வாய், கேது, சூரியன், சுக்கிரன் அதிகளவில் நன்மை தருவர். செயல்கள் எளிதாக நிறைவேறும். வாழ்வில் அதிர்ஷ்டகரமான நன்மை கிடைக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். புதிய வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. பிள்ளைகள் உங்கள் சொல்லை வேதமென ஏற்றுக்கொள்வர். எதிர்ப்பாளரால் உருவான கெடுசெயல் பலமிழக்கும். மனைவி அதிக பாசத்துடன் உதவுவார். வீட்டுக்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து தாராள பணவரவு கிடைக்கும். அரசு சார்ந்த உதவி பெறலாம். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பும் சலுகையும் பெறுவர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் அளப்பரிய நற்பலன் வழங்குவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீட்டில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். வாகனத்தில் பராமரிப்பு பணச்செலவு கூடும். பிள்ளைகள் பெற்றோரின் பரிபூரண அன்பை பெறுவர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் அன்பான வார்த்தை மனதில் நம்பிக்கையை தரும். தொழில், வியாபாரத்தில் அரசு உதவி புதிய முயற்சியால் கிடைக்கும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்பட்டு முன்னேறுவர். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் நன்றாக படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.

## துலாம்

சனீஸ்வரர், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். புதியவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். முக்கியமான பணி எளிதாக நிறைவேறும். புதிய வாகனம் விரும்பியபடி வாங்கலாம். பிள்ளைகள் படிப்பு வேலையில் மனப்பூர்வமாக ஈடுபடுவர். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். சத்தான உணவு உண்பதால் உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி குடும்ப விவகாரங்களில் பிடிவாத குணத்துடன் நடந்து கொள்வார். சுற்றுலா பயணத்தில் மாற்றம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணிபுரிவர். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க கூடாது.

## விருச்சிகம்

செவ்வாய், கேது, சுக்கிரன் அனுகூல பலன் தருவர். கடந்தகால நற்செயலுக்கு புகழும் நன்மையும் தேடி வரும். வீடு, வாகனத்தில் சில மாற்றம் செய்வீர்கள். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். சொத்து தொடர்பான ஆவணங்களை கவனமுடன் பாதுகாக்கவும். நண்பருடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் இடையூறுகளை சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை கூடும். பணியாளர்கள் நிர்வா கத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் கணவரின் அன்பில் சந்தோஷ வாழ்வு நடத்துவர்.

## தனுசு

புதன், குரு, சுக்கிரன் சுபபலன் தருவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். பணிகள் எளிதாக நிறைவேறும். வீட்டில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பிள்ளைகள் பெற்றோரிடம் அதிக அன்பு கொள்வர். வழக்கு விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். வெளியூர் பயணத்தில் மாற்றம் இருக்கும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து லாப விகிதம் கூடும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் நன்றாக படித்து நண்பர்க்கும் உதவுவர்.

## மகரம்

சூரியன், சந்திரனால் ஓரளவு நற்பயன் கிடைக்கும். பொது இடங்களில் சூழல் . உணர்ந்து பேச வேண்டும். உடன்பிறந்தவர் அதிக அன்பு பாராட்டுவர். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். முக்கியமான செயல் நிறைவேற இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். பிள்ளைகளை நல்வழி நடத்துவதில் இதமான அணுகுமுறையை பின்பற்றுங்கள். பணக்கடன் பெறுவதில் நிதானம் பின்பற்ற வேண்டும். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் கடின உழைப்பு நற்பயன் தரும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

## கும்பம்


ராகு, புதன், குரு, சனீஸ்வரர் ராஜயோக பலன்களை வழங்குவர். குடும்ப உறுப்பினர் தரும் ஆதரவு மனதில் ஊக்கம் தரும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வாகனப்பயணத்தில் இனிய அனுபவம் பெறுவீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். நோய் தொந்தரவு குறைந்து ஆரோக்கியம் மேம்படும். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் ஆர்வமிகு செயல்களை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாற்று திட்டம் புதிய வளர்ச்சி பாதையை உருவாக்கும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் செயல்பட வேண்டும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பரால் உதவி உண்டு.

## மீனம்

செவ்வாய், கேது, சுக்கிரன், சந்திரன் அளப்பரிய நற்பலன் வழங்குவர். நண்பர்களின் உதவி கிடைக்கும். புதிய திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவீர்கள். வாகனப் பயணம் எளிதாக அமையும். பிள்ளைகள் அறிவாற்றல் செயல் திறனில் மேம்படுவர். பூர்வபுண்ணிய நற்பலன் பல்வேறு ஆதாயங்களை பெற்றுத்தரும். விவகாரங்களில் சுமுக தீர்வு உருவாகும். மனைவி கருத்து ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சியை தரும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர் பணி இலக்கை சிறப்பாக நிறைவேற்றுவர். பெண்கள் குடும்பநலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

# நீதியரசர் எதிர் சட்டத்தரணியல்ல

## பொருள்கோடல் எதிர் நடைமுறைப்படுத்தல்



கட்டுரை

சி. தவராசா

வடமாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிராக முன்னைய அமைச்சர் டெனீஸ்வரனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கைத் தொடர்ந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவானது, சர்ச்சைகளை உருவாக்கியிருக்கிறது. விமர்சனங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறது.

ஊடகங்கள், இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் குறித்த வழக்குத் தொடர்பாகவும், இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பாகவும், வெளியாகிய கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது இந்த வழக்கு எந்த அடிப்படையில் தொடரப்பட்டது? எந்தக் காரணிகளின் அடிப்படையில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது? இடைக்காலத் தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவை? மற்றும் அரசமைப்பில், குறிப்பாகப் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில், இவ்விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகள் எனப்பல விடயங்களில் சரியான தெளிவில்லாமல் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. விமர்சனங்கள் யாவும் அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கப்பட்டுள்ளனவே தவிர, சட்ட ரீதியாக அணுகியிருக்கப்பட வில்லை.

### புரிதலற்ற விமர்சனங்கள்

இந்த வழக்கின் அடிப்படை விடயங்களைப் புரிந்து கொள்ளாமல் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் ஆளுநரிடமே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், முதலமைச்சரிடமிருந்த அதிகாரங்களை இந்த வழக்கின் மூலம் ஆளுநருக்கு வழங்க வழிவகுத்துள்ளதாகவும், விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. மாகாண் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக இலங்கை அரசமைப்பின் பிரிவு 154F(5)இல் எவ்வாறு கூறப்பட்டுள்ளதோ (ஆளுநர் பிரதான அமைச்சரின் ஆலோசனை மீது அந்த மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களிலிருந்து ஏனைய அமைச்சர்களை நியமித்தல் வேண்டும்.) அதே போன்ற ஒரு ஏற்பாடுதான் மாநில சட்டசபை அமைச்சர்களை நியமிப்பது தொடர்பாக இந்திய அரசமைப்பின் பிரிவு 164(1) இலும் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏனைய அமைச்சர்கள் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநரால் நியமிக்கப்படுவர்.).

பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் எவ்வாறு அமைச்சர்களின் நியமனம் தொடர்பாக மட்டும் குறிப்பிடப்பட்டு அவர்களை நீக்குவது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லையோ, அதேபோன்றுதான் இந்திய அரசமைப்பிலும் மாநில சட்டசபை அமைச்சர்களை நீக்குவது தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### இந்தியாவில் இது ஒரு பிரச்சினையாக எழவில்லை

இந்தியாவின் 29மாநிலங்களுக்குரிய சட்டசபைகளிலும் அமைச்சர்களை நியமிப்பது மற்றும் நீக்குவது தொடர்பான விடயங்கள் சுமுகமாகத்தான் நடைபெற்று வருகின்றன. இந்த விடயம் தொடர்பாக அரசமைப்பையோ அல்லது ஆளுநரின் அதிகாரத்தையோ எவரும் குறை கூறியதாக இல்லை. ஆதலால் இந்த விடயம் தொடர்பில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் குறை இல்லை என்பதை விமர்சகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் இந்தக் குறிப்பிட்ட பிரிவை நடைமுறைப்படுத்துவதில் விட்ட தவறே இங்கு விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டியது. அதன் நடைமுறைப்படுத்தலை முறையாகச் செய்திருந்தால் இவ்வளவு பிரச்சினைகளும் தோன்றியிருக்காது.

### முதலமைச்சர் குறிப்பிட்டவை

இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் (29.06.2018) பின் முதலமைச்சரால் 1.7.2018இல் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்பில் 'மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இந்த வழக்கைக் கேட்க உரித்து இல்லை என்றால் இடைக்காலத் தடைக் கட்டளையையும் பிறப்பிக்க உரித்து இல்லை என்று ஆகின்றது...'

'மேன் முறையீட்டு நீதிமன்றம் இந்த ஆட்சேபனைக்குப் பதில் தராது இடைக்கால நிவாரணங்களை வழங்கியிருந்தால் அது தவறாகவே அமையும்.' எனவும் 'நீதிமன்றத்தின் அடிப்படை அந்தஸ்தே கேள்விக்கிடமாக்கப்பட்டிருக்கும்போது, அந்த ஆட்சேபனைக்கு விடையளிக்காமல் தமக்கு அந்தஸ்து இருப்பதுபோல் இடைக்காலத் தடைக்கட்டளையைப் பிறப்பிப்பது சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாது.' எனவும் குறிப்பிட்டு, இறுதியில் 'தீர்மானத்தின் பிரதி வராமல் எதுவும் கூறமுடியாதிருக்கின்றது' எனவும் நாசூக்காகக் கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளை தொடர்பாக விமர்சித்திருக்கும் முதலாவது பிரதிவாதியான முதலமைச்சர், கட்டளையைப் பார்த்துவிட்டல்லவா அது தொடர்பான தனது கருத்தை வெளியிட்டிருக்க வேண்டும்? தனது ஊடகக் குறிப்பில் கட்டளை தொடர்பான விமர்சனங்களை முன் வைத்துவிட்டு 'தீர்மானத்தின் பிரதி வராமல் எதுவும் கூறமுடியாதிருக்கின்றது' என்று கூறியிருப்பது வேடிக்கையானதே.

முன்னாள் நீதியரசரான முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல், மேல்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இந்த வழக்கை விசாரிப்பதற்கும், இடைக்காலத் தடைக்கட்டளை பிறப்பிப்பதற்கும் உரித்து உண்டா? இல்லையா? என்பது தொடர்பாகவும், அவ்வாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டதன் மூலம் நீதிமன்றத்தின் அடிப்படை அந்தஸ்தே கேள்விக்கிடமாக்கப்பட்டிருக்கின்றதா என்பது தொடர்பாகவும் மேல்முறையீட்டு நீதியரசர்களான ஜானக டி சில்வா மற்றும் திருமதி கே. விக்கிரமசிங்க ஆகியோர் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை இந்த வழக்கின் பின்னணியுடன் சேர்த்துப் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும்.

### வழக்கின் பின்னணி

வடமாகாண அமைச்சர்களுக்கு எதிராகக் கிடைக்கப்பெற்ற குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக 2016ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் முதலமைச்சரால் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணைக் குழுவின் அறிக்கை 2017ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் அமைச்சர்களான பொ. ஐங்கரநேசன், த. குருகுலராஜா ஆகியோர் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் எனவும், ஏனைய இரண்டு அமைச்சர்களான பா. டெனீஸ்வரன், வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை மாகாண சபையில் சமர்ப்பித்த முதலமைச்சர், அறிக்கை தொடர்பான தொடர் நடவடிக்கையாகக் குற்றம்சாட்டப்பட்ட இரண்டு அமைச்சர்களும் பதவி விலக வேண்டுமென்றும் ஏனைய இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக மீண்டும் விசாரணை நடாத்தப்படும் என்றும் அதுவரை அவர்களைக் கட்டாய விடுப்பில் செல்லுமாறும் கோரியிருந்தார்.

முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு அமைய பொ. ஐங்கரநேசன், த. குருகுலராஜா ஆகியோர் தங்களது பதவி விலகல் கடிதங்களைக் கொடுத்தனர். அமைச்சர் சத்தியலிங்கம் தான் பதவி விலகத் தயாராக இருப்பதாகக் கடிதத்தை அனுப்பியிருந்தார். அமைச்சர் டெனிஸ்வரன் பதவி விலகல் கடிதத்தைக் கொடுக்காது தொடர்ந்து பணியாற்றினார். 22.8.2017 அன்று நடைபெற்ற அமைச்சர் சபைக் கூட்டத்தில் கூட அவர் பங்கெடுத்திருந்தார். இந்தச் சூழ்நிலையில் டெனிஸ்வரனுக்கு முதலமைச்சரால் 20.8.2017 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் 'உங்களை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குவதற்கு முடிவெடுத்துள்ளேன். ஆதலால் தங்களது சகல அலுவலக ஆவணங்களையும் உடனடியாகத் தங்கள் செயலாளரிடம் கையளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்' என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை தனது அமைச்சுக்குப் புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என்பதை அறிந்த டெனிஸ்வரன் அதை ஆட்சேபித்து 23.8.2017அன்று முதலமைச்சருக்குப் பிரதியிடப்பட்டு ஆளுநருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனாலும் அவரது அமைச்சுப் பொறுப்புக்கள் க. சிவநேசன், அனந்தி சசிதரன் மற்றும் முதலமைச்சருக்கிடையில் பகிரப்பட்டு சத்தியப் பிரமாணமும் எடுக்கப்பட்டன.

அதன்பின்னர் டெனிஸ்வரனின் 23.8.2017ஆம் திகதிய கடிதத்துக்குப் பதிலளித்த முதலமைச்சர், அரசமைப்பின் பிரிவு 154F(5) மற்றும் இன்ரெர்பிறெரேஷன் ஓர்டினன்ஸ்' பிரிவு 14F ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ளவும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தப் பின்னணியில் டெனிஸ்வரனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கின் சாராம்சமானது, அரசமைப்பின் பிரிவு 154(F)5 இக்கு அமைய ஓர் அமைச்சரை நியமிக்கும்போது ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனைப்படியே செயற்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அமைச்சர்களை நீக்குவது தொடர்பாக அங்கு எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆதலால் முதலமைச்சரால் தான் பதவி நீக்கப்பட்டமையும் மற்றும் தான் அமைச்சராக இருக்கும்போது வேறு இருவரை அந்தப்பதவிக்கு நியமித்தமையும் தவறானதாகும், என்றமைந்தது.

இந்த வழக்கு மேல் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது முதலமைச்சரால் டெனிஸ்வரனுக்கு அனுப்பப்பட்ட கடிதம் (அவரைப் பதவி நீக்கியதாக) ஓர் அரசியல் ரீதியான விடயப்பாடே அன்றி நிர்வாகச் சட்ட விதிகளுக்குட்பட்டவை அல்ல எனக் கூறி வ்ழக்கை விசாரிப்பதற்கு நீதிமன்றம் மறுத்திருந்தது. இதை ஆட்சேபித்து டெனிஸ்வரன் உயர் நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு வழக்கைப் பதிவு செய்திருந்தார். அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, வழக்கை மேல் நீதி மன்றத்தில்



விசாரிப்பதற்கு எதிர்த்தரப்புச் சட்டத்தரணிகள் இணங்கியதன் அடிப்படையில் அதை வேறு இரண்டு மேன்முறையீட்டு நீதிபதிகள் முன்னிலையில் விசாரிக்கும் வண்ணம் உயர் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்தக் கட்டளையின் அடிப்படையிலேயே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் இந்த வழக்கு மீள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது. டெனீஸ்வரனினது மனுவில் பிரதிவாதிகளாக முதலமைச்சர் மற்றும் தற்போதைய அமைச்சர்களான க. சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், ஞா.குணசீலன், க.சிவநேசன், முன்னைய அமைச்சர் ப. சத்தியலிங்கம் மற்றும் ஆளுநர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ள னர்.

மனுவில் கோரப்பட்ட முக்கிய விடயங்களாவன:

1) தான் தொடர்ந்து அமைச்சராக இருப்பதற்கு எதிராளிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளை நீக்குவதற்கான இடைக்கால உத்தரவு.

2) முதலமைச்சரால் டெனிஸ்வரனுக்கு அனுப்பப்பட்ட 20.8.2017 திகதிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடை செய்யும் வண்ணம் இடைக்கால உத்தரவு.

3) தனக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சுப் பதவிகளை முதலமைச்சர் உட்பட மூன்று அமைச்சர்களுக்குப் பிரித்து வழங்கிய வர்த்தமானி அறிவித்தலை இடை நிறுத்தும் இடைக்கால உத்தரவு.

முதலமைச்சரின் சட்டத்தரணிகளால் இந்த வழக்குத் தொடர்பாக மூன்று ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

1) பொருள்கோடல் (Interpretation) தொடர்பான விடயங்கள் உயர் நீதிமன்றத்தால் மட்டுமே விசார ணைக்குட்படுத்தப்பட வேண்டுமென அரசமைப்பின் பிரிவு 125இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரிவு 154F(5) தொடர்பான் பொருள்கோடல் குறித்த வழக்கில் தேவைப்படுவதால், வ்ழக்கை விசா ரிப்பதற்கு இந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் இல்லை.

2) வழக்கு முறைப்பாட்டின் இணைப்புகள், மூல ஆவணங்களாக அல்லது உறுதி செய்யப்பட்ட பிரதிகளாக அமைந்திருத்தல் வேண்டும். அவை அவ்வாறு அமைந்திருக்கவில்லை.

3) எந்த நபரினது அதிகாரச் செயற்பாட்டைத் தடுக்க வேண்டுமோ அல்லது நிறுத்த வேண்டுமோ அல்லது அவ்வாறான அதிகார செயற்பாட்டின் மூலம் நன்மை பெறுபவர் யாரோ அவர்கள் மட்டுமே பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அந்த அடிப்படையில் ப. சத்தியலிங்கத்தின் பெயர் நீக்கப்படல் வேண்டும். பிரதிவாதியான முதல மைச்சரின் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது பரிந்துரைகளைப் பின்வருமாறு கூறியுள்ளது:

(46ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிற்றுக்கிழமை 08 /ஜூலை /2018

# நீதியரசர் எதிர்...

(45ஆம் பக்கத் தொடர்ச்சி)

(1) அரசமைப்பின் பிரிவு 154F(5) இக்குரிய பொருள்கோடல் தொடர்பான விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்க விடயத்துக்குரியது அல்ல என்ற ஆட்சேபனை தொடர்பாக நீதிமன்றம் பரிந்துரைக்கையில்;

அரசமைப்பில் கூறப்பட்டுள்ள ஒரு விடயம் தொடர்பாக வெவ்வேறு முரணான கருத்துக்கள் முன்மொழியப்படும் போதுதான், அவ்விடயம் தொடர்பான பொருள்கோடல் தேவைப்படுகின்றது. இங்கு அப்படியானதொரு நிலை ஏற்படவில்லை.

இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள விடயம் அரசமைப்பின் பிரிவு 154F(5) இன் நடைமுறைப்படுத்தல் தொடர்பான தேயொழிய (Application) பொருள்கோடல் (Interpretation) தொடர்பானதல்ல. ஆதலால் இந்த விடயத்தைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டு. இது தொடர்பாக முன்னைய நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் சட்ட ஆவணங்கள் ஆகியவற்றை நீதிமன்றம் சான்றாகப் பகிர்ந்துள்ளது.

(2) மூல ஆவணங்கள் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற ஆட்சேபனை தொடர்பாக நீதிமன்றம் பரிந்துரைக்கையில்;

டெனிஸ்வரனுக்கு முதலமைச்சரால் அனுப்பப்பட்ட இரண்டு கடிதங்களும் மூல ஆவணங்களாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனையவை டெனீஸ்வரனால் ஏனையோருக்கு எழுதப்பட்ட கடிதங்களின் பிரதிகள் ஆகையால் மூல ஆவணங்கள் தம்மால் சமர்ப்பிக்க முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும், அதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட வர்த்தமானிப் பதிப்புக்கள் அரச இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால், இலத்திரனியல் பரிமாற்றச் சட்டத்துக்கு அமைவாக அவை ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

(3) ப. சத்தியலிங்கத்தின் பெயர் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டது தொடர்பாக நீதிமன்றம் பரிந்துரைக்கையில்:

அவரது பெயர் நீக்கப்பட்டாலும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ள விடயங்களுக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்ற காரணத்தால் அந்தக் கோரிக்கை நீதி மன்றத்தால் நிராகரிக்கப்படுகின்றது.

பிரதிவாதிகளின் மூன்று ஆட்சேபனைகளும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிலையில், மனுதாரரான டெனீஸ்வரனால் முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளையும் நீதிமன்றம் ஏற்று அதற்கான கட்டளையைப் பிறப்பித்துள்ளது. இந்த வழக்கை நீதியரசர் எதிர் சட்டத்தரணி என்று பார்க்காமல் பொருள்கோடல் எதிர் நடைமுறைப்படுத்தல் (Interpretation v Application) என்று நோக்கினால் பல விடயங்களில் தெளிவு கிடைக்கும்.

*கட்டுரையாளர் எதிர்க்கட்சித் தலைவர்,*
*வட மாகாணசபை*






விளையாட்டு

பிரகாஸ்

# டோனி 37

இந்திய அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய நட்சத்திர வீரருமான டோனி நேற்றுத் தனது 37ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். டோனி கொண்டாடினார் என்பதை விட கோடிக்கணக்கான அவரது ரசிகர்கள் கொண்டாடினர் என்று சொன்னால் அது மிகையாகாது. 'கப்டன் கூல்' என்று செல்லமாக அழைக்கப்படும் டோனிக்கு உள்ள ரசிகர் பட்டாளம் மிகிகப் பெரிது. இந்தியாவில் மட்டுமல்லாமல் இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் என்று ஆசிய நாடுகள் முதல் ஐரோப்பிய நாடுகள் வரையில் வியாபித்துள்ளது அந்தப் படை. ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் என்று எங்கு பார்த்தாலும் நேற்று 'டோனி' புகழாரங்கள்தான். அவர் சாதித்தது மலையளவு இருக்கும்போது கொண்டாடத்தானே செய்வார்கள் அவரின் ரசிகர்கள்.




# ஜாம்பவான்களுக்கு என்னாயிற்று!!!

உலகக்கிண்ண கால்பந்துத் தொடர் ரஷ்யாவில் கோலாகமாக நடைபெற்று வருகிறது. முழுக்க முழுக்க அதிர்ச்சிகரமானதாகவே இந்தத் தொடர் அமைந்துள்ளது. ஜாம்பவான்கள் என்று சொல்லப்படும் அணிகள் ஒன்றின் பின்னர் ஒன்றாக உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியுள்ளன. கிண்ணத்தை வெல்லப்போகும் அணிகள் என்று கருதப்பட்டவற்றின் வெளியேற்றத்தால் அதிர்ச்சியில் உறைந்துள்ளது கால்பந்தாட்ட உலகம்.



தகுதிச் சுற்றில் வெளிப்படுத்திய மோசமான ஆட்டத்தின் காரணத்தால் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறாமலேயே வெளியேறியது இத்தாலி. அதைத் தொடர்ந்து காலிறுதிக்கு முதல் சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது நடப்புச் சம்பியன் ஜேர்மனி. ஆர்ஜென்ரீனா, போர்த்துக்கல், ஸ்பெய்ன் என்பன காலிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறின. இந்த வரிசையில் தற்போது பிரேசிலும் இணைந்துள்ளது. அந்த அணி காலிறுதியில் பெல்ஜியத்திடம் தோல்வியடைந்து அரையிறுதிக்குத் தகுதி பெறாமல் வெளியேறியுள்ளது. ஜாம்பவான் அணிகள் எல்லாம் காலிறுதியுடன் வெளியேறியுள்ளதால் பிரேசில் அணி கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்பு அதிகம் என்றே கருதப்பட்டது. ஆனால் பிரேசிலின் பயணத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது பெல்ஜியம். பிரேசிலின் வெளியேற்றத்தை அடுத்து தற்போது கிண்ணம் வெல்லக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளதென்றால் அது பிரான்ஸுக்குத்தான். பிரான்ஸுக்கு அடுத்த படியாக பெல்ஜியம், இங்கிலாந்து அணிகளுக்கும் வெற்றிவாய்ப்பு அதிகம் என்றே கருத்துக்கணிப்புக்கள் குறிப்பிடுகின்றன.




# செரபோவா பேரதிர்ச்சி!

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறி பேரதிர்ச்சி தந்துள்ளார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரிய செரபோவா. ஊக்கமருந்துச் சோதனையில் தோல்வியடைந்து இரண்டாண்டுத் தடைக்குப் பின்னர் களம் திரும்பிய செரபோவா இன்று வரையில் முக்கிய கிண்ணம் எதையும் கைப்பற்றவில்லை. "விம்பிள்டன் தொடரில் என் மீதான விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பேன்" என்று அவர் தெரிவித்ததாலும், தொடர் ஆரம்பதற்கு பல் நாள்களுக்கு முன்னரேயே இங்கிலாந்தில் முகாமிட்டுப் பயிற்சி மேற்கொண்டதாலும் அவர் மீது ஏகப்பட்ட எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேறியுள்ளார் செரபோவா. பேரதிச்சி தரக்கூடிய விடயமாக அது அமைந்தது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்தத் தொடருக்காக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த மைதான நுழைவாயில் பலரதும் கவனத்தை வெகுவாகவே ஈர்த்திருந்தது. (ம)




# காயமடைந்தார் பும்ரா

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பும்ரா காயமடைந்தார். அவருக்குப் பதிலாக தாக்கூர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியில் அறிமுகமானது முதல் தொடர்ச்சியாக விளையாடிவந்தார் பும்ரா. அவ்வப்போது ஓய்வு வழங்கப்பட்டு அவரது உடற்தகுதி சீராகக் கண்காணிக்கப்பட்டு வந்தது. இவ்வாறிருக்க அவர் காயமடைந்தமை தற்போது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அணி தற்போது இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை எனவே பும்ரா அணியில் இருந்து விலகியமை இந்திய அணிக்குப் பெரும் பின்னடைவே.

எனினும்பும்ராவின் காயத்தை விரைவில் குணப்படுத்தி அவரை டெஸ்ட் தொடரில் களமிறக்குவோம் என்று அறிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

இந்தவாரக் கருத்தாளர்

# ஆதியாகிய தமிழ்...



திரு. மேழிக்குமரன்
(எழுத்தாளர், சின்ன புதுக்குளம், வவுனியா)

"பழைய கதை பேசிப் பயனில்லை" என்று கூறும் இளைஞர் சமுதாயம் நிலைத்து நிற்கும் புதிய ஆவணப்பதிவுகளைத் தமிழுக்குத் தோற்றுவிக்க வேண்டும். அதுவரை தமிழினதும், தமிழரதும் பழைய திறன்களை எமது இளைய சமுதாயம் அறிந்துகொள்வதே சாலச்சிறந்தது.

உலகமொழிகள் 7ஆயிரத்து 102என ஐ.நா. தகவல் தருகிறது. அவற்றுள் ஆறு மொழிகள் மிகப் பழமையானவை. தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், கீப்புறு, சீனம் ஆகியவையே அந்த ஆறு. அவற்றில் தமிழ்மொழியே இன்றுவரை நின்று நிலைத்து நிற்கிறது. உலகில் உள்ள செம்மொழிகள் எட்டு. பழைய செம்மொழிகள் ஐந்து. மூத்த செம்மொழியாகத் தமிழே விளங்குகிறது. இயல்பாகத் தோன்றிய இயன்மொழியான நம் தமிழ் மொழிக்குப் பதினாறு பண்புகள் உள்ளன. நம் தமிழ் மொழி பல்வகைச் சிறப்புகளை ஒருங்கேயுடையது. உலகமொழிகள் 7ஆயிரத்து 102இல் 14ஆவது இடத்தில் தமிழ் உள்ளது.

உலக மொழிகள் பலவற்றுக்கு எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியன உண்டு ஆனால் தமிழ் மொழிக்கு மட்டும்தான் பொருளுக்கு இலக்கணம் உண்டு. ஆகையால்தான் தமிழை ஐந்திலக்கணம் என்றனர். பொருளிலக்கணம் ந்த முறையை 'இறையனார் அக்ப்ருள்' எனும் நூல் வழி அறியலாம். அகத்திணையையும் புறத்திணையையும் பகுத்துத் தந்தது தமிழ்.

அந்தக் கால மக்கள் வீர வாழ்க்கையையும் கொடைச் சிறப்பையும் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்றாகத் திகழ்வது பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமாகும். பிற மொழிகளில் இல்லாத அளவுக்குத் தமிழில் மலையளவு அறநூல்களும், அகநூல்களும் உள்ளன. ஆழ்ந்து, அகன்று தேடினாலும் திருக்குறள்போல் வேறு மொழிகளில் அறநூலுண்டோ?.

இற்றைவரை அதிகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட வாழ்வியல் நூல் திருக்குறள் மட்டுமே. கடந்த ஆண்டு அது அரபி மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் திருக்குறளை மட்டுமல்லாது இன்னும் 15வரையான நூல்களை எழுதியுள்ளார். தொல்காப்பியம் தொடங்கி பன்னூறு இலக்கிய இலக்கண நூல்கள் வேற்று மொழிகளில் இல்லாத அளவுக்குத் தமிழுக்கு வளம் சேர்த்திருக்கின்றன.

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான் என்பதற்கு ஐந்து பெண்பிள்ளைகள் பெற்றால் அரசனும் ஆண்டி என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதுவல்ல அதன் பொருள். ஆடம்பரமாய் வாழும் தாய், பொறுப்பில்லாமல் வாழும் தந்தை, ஒழுக்கமற்ற மனைவி, துரோகம் செய்யும் உடன் பிறந்தோர், சொல்பேச்சு கேளா, அடங்காப் பிள்ளைகள், என்று ஐந்தும் பெற்றால் அரசனும் ஆண்டி என்பதே உண்மை. ஆறுமுக நாவலர் இலகு இலக்கணநூல் எழுது முன்பு தொல்காப்பியம் முதல் மாறன் அலங்காரம்வரை 22இலக்கணநூல்கள் தமிழுக்கு அழகுசெய்துள்ளன. திராவிட மொழிகளில் மிகப் பழமையான மொழி என்றுகூடத் தமிழைத் தானே அடையாளங்கண்டிருக்கிறார்கள்!

கவிதை

பா.பொன்நிலவன்



## மறுமலர்ச்சிக்காய்...!

பண்பாட்டில் தலையாகி
ஒழுக்கத்தில் மலையாகி
கற்றவர்கள் நிறைந்த
கலைகளின் காப்பிடமாய்
திகழ்ந்து போயிருந்த
யாழப்பாண மண்...!
யார் கண் பட்டதுவோ
எவர் சூழ்ச்சி செய்ததுவோ
கஞ்சாவின் வாழ்வியடாய்
கயவர்கள் கூடாரமாய்
இழிசெயலின் பிறப்பிடமாய்
சுயமிழ[illegible] போய்க்கிடக்கு...!
பிஞ்சு[illegible]க்கு
மரணத்[illegible]ழங்கி
[illegible] மீது
[illegible]ண்புணர்வு செய்து
யாசகப் போர்வைதனில்
கொலைவெறி நிகழ்த்தி
நீங்கள் சாதிக்க
நினைப்பதென்ன
சாக்கடைகளே...!
கோவிலிலே திருட்டு
பள்ளியிலே கற்பழிப்பு
பண்பாட்டின் வாழ்விடத்தில்
பாதகங்கள் அரகேற்றம்
நாடெங்கும் செய்திகளில்
நம்மூரின் பயங்கரங்கள்
எல்லோரும் ஒன்றிணைந்து
கயவர்களை களை[illegible]தால்
மீண்டும் மலர்வு பெறு[illegible]
அழகான யா[illegible]



## ஈழ நிலம்

உனது நிலமா
இது? அல்லது
உன் பாட்டனின்
நிலமா?

ஆண்டாண்டு காலமாய்
எமது பாட்டன், பூட்டன்
முப்பாட்டன் ஆண்ட நிலம்

ஆளுக்கு ஆள்
ஆங்காங்கே
எல்லைகளைப்
போடுகிறீர்கள்
இது என்ன
உங்கள் சொத்தா?

அவரவர் விருப்பில்
எல்லை போட
இது ஒன்றும்
அநாதை நிலமல்ல
எம் அன்னை பூமி

யாராகிலும்
எமது நிலம்
எமக்கே சொந்தம்
அதைப் பங்குபோட
யாரும் எண்ண வேண்டாம்

எம் வியர்வையையும்
குருதியையும் ஊற்றி ஊற்றி
வளப்படுத்திய தேசம்

யாரென்று நினைத்தாய்
எம்மை? வந்தேறு குடிகளா?

ஆள்பவரே...
எம் நிலத்தை
ஆள நினைப்பவரே
கவனமாகக் கேளுங்கள்
இது ஒன்றும்
அநாதை நிலமல்ல
எமது ஈழநிலம்

கவிதை

வல்வைக் கமல்



# திருப்தியற்ற சினிமா




விபத்தொன்றில் தனது தந்தையை இழக்கும் இளைஞன், 2அடிக்குத் தொலைவான பார்வையும் தெரியாமல்போக இக்கட்டான நிலையில் இருக்கிறான். ஆனாலும் மனம் தளராது அவன் கொலைக்குற்றவாளியைக் கண்டுபிடித்துப் பழிவாங்குவதே 'MR சந்திரமௌலி'.

**கதை**

குத்துச்சண்டைவீரர் கவுதமின் முழு உலகமும் அவர் அப்பா கார்த்திக் தான். அப்பாவின் அன்பால், அரவணைப்பால், ஊக்கத்தால் குத்துச்சண்டையில் சாதிக்கிறார். அடுத்தடுத்த இலக்குகளைத் தொட்டு பெங்களூருக்கு ஒரு போட்டியின் நிமித்தம் சென்று வெற்றிக் கிண்ணத்துடன் திரும்பும் கவுதம் அன்றைய நாள் நள்ளிரவில் தனது தந்தை கார்த்திக்குடன் ஒரு விபத்தில் சிக்குகிறார். அதில் கார்த்திக் இறக்கிறார். கண் பார்வைக் குறைபாட்டுடன் கவுதம் மட்டும் உயிர் பிழைக்கிறார். சில நாள்களுக்குப் பிறகு நடந்தது



விபத்து அல்ல, கொலை என்று கவுதமுக்குத் தெரியவரக் குற்றவாளிகளைத் தேடும் முனைப்பில் இறங்குகிறார். கவுதம் எப்படிக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கிறார், யார் அந்தக் குற்றவாளி, ஏன் கார்த்திக் கொல்லப்பட்டார், குற்றவாளியைக் கவுதம் என்ன செய்கிறார், வாடகை வண்டிக்கும் இந்தக் கதைக்கும் உள்ள தொடர்பு என்ன போன்ற கேள்விகளுக்கு அலுப்புடனும் சோர்வுடனும் பதில் சொல்கிறது 'MR சந்திரமௌலி'.

**பாத்திரங்கள்**

குத்துச்சண்டை வீரருக்கான உடல் மொழியில் கவுதம் கார்த்திக் சரியாகப் பொருந்துகிறார். அப்பா மீதான அன்பின் நிமித்தத்தை, அவரின் இழப்பைத் தாங்க முடியாத வலியை, ரெஜினா காஸண்ட்ரா மீதான காதலை அழகாக வெளிப்படுத்துகிறார்.

கார்த்திக் பொறுப்புள்ள அப்பா கதாபாத்திரத்தைக் கண்முன் நிறுத்துகிறார். மகனுடன் கொண்ட தோழமை உணர்வு, ஊக்கம் கொடுத்து வளர்ப்பது, பழைய பொருள்களின் மீதான பிடிமானத்தோடு இருப்பதைக் காரணங்களால் விளக்குவது எனக் கொஞ்சம் மிகைத் தன்மையோடும் நடித்திருக்கிறார்.
அப்பா -மகன் உறவில் செயற்கைத்தன்மையே இழையோடியது. நாயகன் கவுதம் கார்த்திக்குடன் படம் முழுக்க வரும் கதாபாத்திரத்தில் ரெஜினா காஸண்ட்ரா வந்து போகிறார். 'ஏதேதோ ஆனேனே' பாடலில் அதீத கவர்ச்சி காட்டும் ரெஜினா மருத்துவமனைக் காட்சியில் உடைந்து அழும்போதும் மட்டும் குறையில்லாமல் நடித்திருக்கிறார். வரலட்சுமி சரத்குமார் மனதில் நிற்கும் பாத்திரத்தில் தேர்ந்த நடிப்பை வழங்கியிருக்கிறார்.
சந்தோஷ் பிரதாப் கதாபாத்திரத்துக்கான நோக்கத்தை மிகச் சரியாக நிறைவேற்றுகிறார். மைம் கோபி வழக்கமும் பழக்கமுமான நடிப்பை நல்கி இருக்கிறார். சதீஷ், ஜெகன் ஆகிய இருவர் இருந்தும் சிரிப்பதற்கு சிரமப்படவேண்டியிருக்கிறது. அகத்தியன், மகேந்திரன், விஜி சந்திரசேகர் ஆகியோர் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. வரலட்சுமி-கார்த்திக் நட்பு ரசிக்க வைக்கிறது.

**இசை, ஒளிப்பதிவு**

ரிச்சர்ட் எம்.நாதனின் ஒளிப்பதிவும், சாம் சி.எஸ் இசையும், பின்னணியும் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. பரீட்சை நிலையத்தில் மைக்ரோபோன், 'ப்ளூடூத்' மூலம் நகல் செய்த ஓர் 'ஐ.பி.எஸ்' அதிகாரியின் செயலை நினைவுகூர்ந்து அதை திரைக் கதைக்கான முக்கியத் திருப்பமாக மாற்றியதில் சுபாஷ் பெறுகிறார் இயக்குநர் திரு.

**பலவீனங்கள் பல**

காட்சித் தொகுப்பு முறையைக் கொஞ்சம் மாற்றியமைத்து அப்பா-மகன் உறவுக்கான நீளத்தைக் கத்தரித்து வாடகை வண்டியின் பின்புலத்தைத் தீவிரப்படுத்தி கூர்மையாக்கியிருந்தால் 'சந்திரமௌலி' ஓரளவுக்காவது எடுபட்டிருக்கும்.
வாடகைக் கார் ஓட்டுனர்கள் செய்யும் குற்றங்கள், அதற்கான பின்புலம் என்று மிகச் சரியாகக் கதையைக் கட்டமைத்த இயக்குநர் அதற்கான காட்சிப்படுத்துதலில் முதிர்ச்சியற்ற தன்மையைக் கையாண்டிருக்கிறார். இதனால் படம் பலவீனம் அடைகிறது. ஓடாத காரை வைத்து நகைச்சுவை என்ற பெயரில் எடுக்கப்பட்ட காட்சிகள் இரசிகர்களிடம் எந்த விதத்திலும் எடுபடவில்லை. கவுதம் கார்த்திக்-ரெஜினா சந்தித்துக்கொள்ளும் காட்சி அரதப் பழசு. இவர்கள் காதலில் எந்த அழுத்தமும் இல்லை. கார்த்திக் கவுதம் முதன்முதலாக திரையில் இணைந்து நடித்திருக்கிறார்கள். அது எந்தப் புதுமையையும் நிகழ்த்தாமல் சாதாரணமாகவே கடந்து போகிறது.
நிஜத்திலுள்ள அப்பா மகனைக் காட்சிகளிலும் அப்படியே நடிக்கவைத்து புதுமை புகுத்த முயற்சித்திருக்கிறார் இயக்குநர் திரு. அத்துடன் விளையாட்டு, நகைச்சுவை என்ற கோணத்தில் படம் எடுக்க நினைத்து நகைச்சுவை கொலை கலந்த படத்தைக் கொடுத்திருக்கிறார். அதில் நகைச்சுவை எடுபடாதது சோகம்தான்.

## தமிழரைக்....

யாழ்ப்பாணம், ஜூலை 8

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று 500ஆவது நாளை எட்டியது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். 108 தேங்காய்கள் உடைத்தனர். கற்பூரச் சட்டி ஏந்தி வழிபாடு நடத்தினர். 'தமிழர்களைக் காக்குத் தெய்வமே, எங்கள்பிள்ளைகளை மீட்டுத்தா' என்றும் அவர்கள் கோசம் எழுப்பினர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்த பின்னர்,, வவுனியா மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டம் ஆரம்பித்தனர். அவர்களது போராட்டம் நேற்று 500ஆவது நாளை எட்டியது.
நல்லூர் ஆலயத்தில் நேற்றுக் காலை உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தினர்.
'500 நாள்களாகியும் அரசு தீர்வு வழங்கவில்லை. அரசை நாங்கள் நம்பத் தயாராகவில்லை. அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையும்தான் நாங்கள் நம்பி இருக்கின்றோம். இனியும் காலத்தை இழுத்தடிக்காமல் பன்னாட்டுச் சமூகம் எங்கள் விடயத்தில் தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் எமக்குத் தேவைஇல்லை. நாங்கள் உயிரோடு கையளித்த பிள்ளைகளைத்தானே எங்கே என்று கேட்கின்றோம். அரசு ஏன் மௌனம் சாதிக்கின்றது' இவ்வாறு போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கேள்வி எழுப்பினர்.

அடையாள உணவு தவிர்ப்பில் பங்கேற்றிருந்த தாய் ஒருவர், பட்டதாரிகள் போராட்டம், காணி விடுவிப்புக்கான போராட்டம் என்று எல்லாவற்றையும் நாம் போராடித்தான் பெறவேண்டும் என்றால் எங்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எதற்கு?
எங்கள் போராட்டங்களில் பங்கேற்கவேண்டாம் என்று அரசியல்வாதிகளைத் துரத்தினாலும் அவர்களுக்கு ரோசம் வரவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மாத்திரம் எங்களைப் பற்றி பேசினார். ஆனால் அவரும் இப்போது ஏனையோருடன் சேர்ந்துவிட்டார். நாங்கள் தெருவில் சாகும்போது அவர்கள் வந்து எங்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாது - என்றார்.
இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் மலர்தூவி அகவணக்கம் செலுத்தினர்.
(5,114)

**கடைக்கட்டடத்துடன் சேர்ந்த காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, தனங்கிளப்பில், கேரதீவு வீதியில் (A32) கடைக் கட்டடத்துடன் சேர்ந்த 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 157 6609**

(C7233/15/18)

**நெதர்லாந்து, ஜேர்மனி மொழிக்கல்வி**

எம்பஸி பரீட்சைகளுக்கான நெதர்லாந்து டச் (Dutch) மற்றும் ஜேர்மன் டொச் (Deutsch) மொழிகள் வெளிநாட்டில் இருந்து வந்த திறமை மிக்க ஆசிரியரால் நல்லூரில் கற்பிக்கப்படுகின்றது. பிரத்தியேக வகுப்புக்கள் தங்கள் இல்லங்களுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு - 076 3231 513**

**No.75, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்**

## வேலையாள்கள் தேவை

பின்வரும் இடங்களில் அமைந்துள்ள புடவையகங்களுக்கு வேலையாள்கள் தேவை.

1) நெல்லியடி : ஆண், பெண்
2) சாவகச்சேரி : ஆண்
3) வவுனியா : ஆண்
4) கணக்காளர் : ஆண்

(புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள, பழக விருப்பமுடையவர்கள்) இன்று (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு நேரில் வரவும்

இல.14, நவீன சந்தை, சாவகச்சேரி.

தொடர்பு: 021 227 1999, 077 009 8327

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.06.2018 சனிக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராசா குமாரசுவாமி

(சுவர்னா பேக்கரி உரிமையாளர், வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (09.07.2018) திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு பணிவாகவேண்டுகிறோம்.

கதிரமலை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## காணி தேவை

யாழ்.நகரப்பகுதியில் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. தரகர் தேவையில்லை.

077 436 2897 (CS/1293)(11,17)

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய. சம்பளம் - 25,000/-

T.P: 077 391 4471

## தேவை

யாழ். நகரில் இயங்கிக்கொண்டிருக்கும் உணவகம் ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.

*றொட்டி தயாரிப்பாளர்
*உணவு பரிமாறுபவர்
*காசளர் - பெண்

தொடர்பு - 077 261 9590

## வாடகைக்கு

உருகொடவத்தையில் களஞ்சிய சாலை வாடகைக்கு. 12500 சதுர அடி Tea Exporters Any Type of Stock Movements 20'40'45' கண்டனைர் வந்து போகும் வசதி வாகனம் நிறுத்தும் வசதி. வேலையாள் குவாட்டஸ் காரியாலயம் வசதி.

Ashrsff - 077 340 0581 (ACO/265)(11,17)
i6rahimashraff@yahoo.com

## பெயர் மாற்றம்

கொடிகாமத்தைச் சேர்ந்த நல்லதம்பி சிவறேகா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை நல்லதம்பி பவித்ரா என பெயர் மாற்றம் செய்வதோடு. இது தொடர்பான சகல ஆவணங்களிலும் இனிமேல் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பவித்ரா

## TONERS விற்பனைக்கு

HP/ Epson/ Canon/ Lexmark மற்றும் சகலவிதமான Comportable & Original Toners, Cartridges & Ribbons என்பனவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

* Replacement warranty தரப்படும்.

85A 1250
35A 1250
12A 1250
78A 1250
36A 1250

தொடர்பு - 077 308 4336, 011 232 7187 (ACO 267/11/17)

## காணிவிற்பனைக்கு


யாழ்ப்பாணம், கண்டி றோட், A9 பாதையில் நெடுங்குளம் சந்திக்கு அருகில் 5 பரப்பு, 4 பரப்பு, 4¾ பரப்பு வெற்றுக்காணிகள் விற்பனைக்கு உண்டு.

யாழ்ப்பாணம், அரியாலை கனகரெத்தினம் றோட், சந்தியில் உள்ள மலர்மகள் வீதியில் கிணற்றுடன் கூடிய 4 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு Mob No : 077 213 1276, 076 461 0006, 077 607 8888

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 17 . 12 . 1939



மறைவு 08 . 06 . 2018

கடந்த 08.06.2018 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பொன்னையா சிற்றம்பலம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (08.07.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடமியன், வரணி.
077 923 1738 (IN/7226)(11,17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 05 . 2009



மறைவு 06 . 07 . 2018

### அக் ஷயன்

(தரம் : 4 மாணவன் - நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நடராசா நந்தகுமார் (அஞ்சலகம், யாழ்ப்பாணம்), சசிகலா தம்பதியரின் அருமை மகன் அக் ஷயன் 06.07.2018 வெள்ளிக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - கமலபூசணி தம்பதிகள் மற்றும் காலஞ்சென்ற நாகராசா - சரஸ்வதியம்மா தம்பதிகள் ஆகியோரின் ஆசைப் பேரனும், லக் ஷிகாவின் (தரம் : 7 - யா/இந்து மகளிர் கல்லூரி) பாசமுள்ள தம்பியும், நடராஜமுதலி, சசிக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், சிவாஜினி - முருகமூர்த்தி தம்பதியரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (08.07.2018) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல் : குடும்பத்தினர்.

077 371 9462, 076 882 5984, 077 115 7684




**We need someone with all the Skills to deliver outstanding IT Support in Kilinochchi.**

The first IT company in Sri Lanka to earn ISO 20000 certification, Eureka Technology Partners delivers world-class managed IT services to clients around the globe.

### IT SUPPORT SPECIALIST

**An ITIL & ISO 20000 Environment • Multiple Platforms • A World Class IT Company**

We are currently in the process of recruiting highly motivated, IT savvy individuals for our Continuous Service and Technical Improvement teams. Should you join us, you'll have the opportunity to shadow our experienced professionals and learn on the job as well as through our in-house technical trainings. You'll also be exposed to world-class remote management tools.

**Qualifications & Experience:**

- Bachelor's Degree in IT
- Level 01 Remote/Onsite Technical Support for Clients
- Analyzing and Resolving End User Workstation Problems including Network Printers
- Provide End User Training where required
- Windows Desktop, Remote/On desk Maintenance
- Maintenance of Vendor Contracts and SLAs of Devices & Services
- Exposure to a Desktop/Server Environment
- Exposure to Cloud & Virtualization technologies
- Basic knowledge of Linux and Windows Server technologies
- Good Decision-making, Communication, Documentation and English Writing Skills

*If you think you have what it takes and would like to join our team, please logon to http://careers.eureka.lk and upload your CV without delay.*

EUREKA TECHNOLOGY PARTNERS

Eureka Technology Partners (Pvt.) Ltd
3rd Floor, 321 Galle Road, Colombo 03, Sri Lanka
T : +94 11 2564277 | F : +94 11 2564278 | W : www.eurekamsp.com

# நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை திருவிழா புதிய ஆலயத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாட்டம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா புதிதாக கட்டி எழுப்பப்பட்ட ஆலயத்தில் நாளை மறுதினம் கோலாகலாமாகக் கொண்டாடப்படுவது பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது. அமெரிக்காவில் தன் கல்வியை நிறைவு செய்து மன்னார் மறைமாவட்டம் திரும்பி நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய தற்காலிக பங்குத்தந்தையாகச் செயற்படும் செபமாலை அன்ரன் அடிகளார் இந்தத் திருவிழா பற்றி உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரிய காந்தியின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதிக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, "இந்தப் பங்கில் ஒரு குறுகிய காலம் மட்டுமே தற்காலிக பங்குத்தந்தையாக பணியாற்றியுள்ளேன். நான் கொண்டாடும் முதல் திருவிழாவும் இறுதி திருவிழாவும் இதுவாகும். திருநாள் முடிந்தவுடன் புதிய பங்குத் தந்தையாக யூட் குறூஸ் அடிகளார் பொறுப்பேற்பார். புதிய ஆலயத்தில் கொண்டாடப்படும் முதல் திருவிழா என்கின்ற வகையில் 2018ஆம் ஆண்டு திருவிழா முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆண்டு நடைபெறும் முக்கிய விடயம் என்னவென்றால் வழமை போல் நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய கொடியை மட்டும் ஏற்றி திருவிழா கொண்டாடாது துணைப்பங்குகளின் 7 கொடிகளையும் இணைத்து 8 கொடிகளை ஏற்றி திருவிழா கொண்டாடுகிறோம் என்பதாகும்" என்றார்.




### ஏழு துணைப் பங்குகள்

மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்னதாகவே யாழ் மறைமாவட்டத்தின் கீழ் நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் 13 கிராமங்களின் ஆலயங்களை இணைத்த ஒரு பெரிய பழைய ஆலய பங்குத்திருச்சபையாக திகழ்ந்திருக்கிறது. தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் இந்த நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயமானது அச்சங்குளம் புனித சூசையப்பர் ஆலயம், ஆவணம் புனித கார்மேல் அன்னை ஆலயம், உமனகரி புனித நீற்றம்மாள் ஆலயம், ஒலிமடு புனித யூதாததேயு ஆலயம், நானாட்டான் அடைக்கல அன்னை ஆலயம், பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய ஏழு ஆலயங்களை துணைப்பகுகளாகக் கொண்ட ஒரு பங்குத்திருச்சபையாக இருக்கிறது.

### ஆரம்பகால கத்தோலிக்க வரலாறு

16ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை நாட்டிற்கு வந்த போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தை கோவைக் குருமாரின் உதவியுடன் மன்னார் பிரதேசத்தில் பரப்பினர். மன்னார் மண்ணில் கத்தோலிக்கம் மிக வேகமாகப் பரவியது. போர்த்துக்கேயரின் ஆட்சியின் இறுதிக்காலத்தில் இலங்கை நாட்டை கைப்பற்றிய ஒல்லாந்தர் தமது புரட்டஸ்தாந்து மத்தை மன்னார் மண்ணில் பரப்ப முயற்சித்து ஏற்கனவே கத்தோலிக்க மக்களான மன்னார் கத்தோலிக்க மக்களை துன்புறுத்தியும் கத்தோலிக்க ஆலயங்களை இடித்தும் வேதகலாபனை செய்தனர். இந்த வேதகலாபனையில் இருந்து தப்புவதற்காக கத்தோலிக்க மக்கள் தாம் வழிபட்ட ஆலய திருச்சொருபங்களை தம்முடன் எடுத்துக் கொண்டு இரவிரவாக அடர்ந்த காட்டுப்பகுதிக்கு தப்பி ஓடினர். ஓடிச்செல்லும் வழியில் திருச்சொருபங்களை மரப்பொந்துகளிலும் ஆழமான மணற்கிடங்குகளிலும் தாட்டு விட்டு தப்பிச்சென்றனர்.



இவ்வாறே ஆரோக்கிய அன்னை ஆலய திருச்சொருபத்தை கொண்டு சென்றவர்கள் அன்னை திருச்சொருபத்தை ஒரு பள்ளத்தில் தாட்டு விட்டு சென்றுள்ளனர். இவர்களால் திரும்பி வந்து திருச்சொருபத்தை எடுக்க முடியவில்லை.

### பெயர் சொல்லி அழைத்த அசரீரி

பலகாலம் கடந்தபின் ஆரோக்கிய அன்னை ஆலய திருச்சொருபத்தை மறைத்து வைக்கப்பட்ட பள்ளத்தின் அருகாமையில் ஒரு ஒற்றையடிப்பாதை உருவாகியுள்ளது. அந்தப் பாதை வழியாக வங்காலையில் இருந்து நானாட்டான் பகுதிக்கு மீன் வியாபாரம் செய்பவர்கள் கங்காணி தீவுக்கு வந்து பள்ளி மோட்டை, வாழ்க்கைபெற்றான் கண்டல், பொன்தீவு கண்டல் முதலிய ஊர்களில் மீன் வியாபாராம் செய்து வந்தனர். அவர்கள் தற்போது அன்னையின் ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்குச் சற்று வடகிழக்குப் பக்கமாக உள்ள ஆலமர நிழலிலும் அதற்கு சற்று வடமேற்குப் பக்கமாக உள்ள புளிய மர நிழலிலும் இருந்து ஓய்வு எடுத்துச் செல்வது வழக்கம். ஒரு நாள் வங்காலை கிராமத்தை சேர்ந்த மீன் வியாபாரி ஒருவர் அவ்வழியால் சென்ற போது அவரது பெயர் சொல்லி அழைப்பது போன்ற ஒரு குரலை கேட்டார். குரல் வந்த பக்கம் சென்று பார்த்த போது கிடங்கில் மாதாவின் சொருபம் இருப்பதை கண்டு அதனை பத்திரமாக எடுத்து ஆலமரத்தடியில் ஓர் இடத்தை செப்பனிட்டு அன்னையின் சொருபத்தை வைத்துவழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார். பின்னர் வங்காலை மற்றும் நானட்டான் பகுதி மக்களின் உதவியுடன் அன்னையின் சொருபம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் கொட்டில் கோவில் ஒன்று அமைக்கப்பட்டது. அருகில் ஒரு கிணறும் கட்டப்பட்டது. அன்னையின் புகழ் வேகமாக பரவத் தொடங்கியது. பக்தர்கள் அன்னையை தேடி வந்து வழிபட்டு கிணற்றில் தம் காணிக்கைளைப் போட்டு கிணற்றில் குளித்து நோய்களில் இருந்து குணம் பெற்று வந்தனர். இன்றும் அந்தக் கிணறு அங்குள்ளது.

### யானையின் அட்டகாசமும் அழிவும்

ஒரு தடவை ஒரு மதம் பிடித்த யானை அவ்வழியாக வந்து அன்னையின் ஆலயம் அமைந்திருந்த பகுதியை சேதப்படுத்தி அன்னையின் ஆலயம் அமைந்திருந்த ஆலமரத்தின் கிளைகளையும் முறித்து சேதப்படுத்தியது. பின்னர் அன்னையின் ஆலயத்தை தாண்டிச் சென்ற யானை ஆலய வளாகத்தில் இருந்து கூப்பிடு தூரம் சென்றதும் இறந்து போனது. இந்தச் சம்பவமானது மக்கள் மத்தியில் பயத்தையும் அன்னை மட்டில் பக்தியையும் அதிகரித்தது. நீர்கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட மேரி என்ற பெயர் கொண்ட சிங்கள பெண்மணி இந்த ஆரோக்கிய அன்னையின் புகழை பற்றி அறிந்து இங்கு வந்து நீண்டகாலமாக பிள்ளைப் பேறின்றிருந்த குறையை தீர்க்குமாறு நம்பிக்கையோடு வேண்டினார். இவரின் வேண்டுதல் கேட்கப்பட்டு ஒரு ஆண்டில் பிள்ளைப்பாக்கியம் பெற்றார். அவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர் தன் குழந்தையுடன் திரும்பி வந்து பங்குத்தந்தையை சந்தித்து அன்னையின் ஆலயத்தை பெரிதாக கட்டுவதற்கு தேவையான பண உதவியும் பொருள் உதவியும் செய்தார். ஆலயத்திற்கு மணி பலவர்ணக் கண்ணாடிகள் கொழுக்கி ஓடு என்பவற்றை அன்பளிப்பாக வழங்கினார்.

> ஒரு நாள் வங்காலை கிராமத்தை சேர்ந்த மீன் வியாபாரி ஒருவர் அவ்வழியால் சென்ற போது அவரது பெயர் சொல்லி அழைப்பது போன்ற ஒரு குரலை கேட்டார். குரல் வந்த பக்கம் சென்று பார்த்த போது கிடங்கில் மாதாவின் சொருபம் இருப்பதை கண்டு அதனை பத்திரமாக எடுத்து ஆலமரத்தடியில் ஓர் இடத்தை செப்பனிட்டு அன்னையின் சொருபத்தை வைத்து வழிபாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

### புதுமைகளும் காட்சிகளும்

ஆரோக்கிய அன்னையின் மூன்று புதுமைகளுடனான மூன்று காட்சிகள் இன்றும் பேசப்படுகின்றன. அதில் முதலாவது, நாகப்பட்டினத்தருகே வேளாங்கண்ணி என்னும் சிற்றூரில் அண்ணாப்பிள்ளைத் தெருவில் உள்ள சிறு குளக்கரையில் ஒரு ஆலமரம். நாகை என்ற இடத்திற்கு பால் கொண்டு சென்ற ஒரு சிறுவன் களைப்பாற அந்த மரத்தடியில் அமர்ந்தான். அன்னை குழந்தையுடன் தோன்றி அச்சிறுவனிடம் குழந்தைக்குப் பால் கேட்டாள். சிறுவன் கொடுத்து மெய் மறந்து நின்றான். பின்னர் சிறுவன் தன்னுணர்வு பெற்று எழுந்து நாகைக்கு நடந்தான். காலம் தாழ்ந்து வந்ததற்கும் குறைந்துள்ள பாலுக்கும் மன்னிப்புக் கோரி பாத்திரத்தைத் திறந்தான். பால் குறையவில்லை மாறாக நிறைந்து வழிந்தது. அந்தக் குளமே இப்பொழுது மாதா குளம் என்று அழைக்கப்படுகிறது .

இரண்டாவது காட்சியும் புதுமையும் இப்பொழுதுள்ள மாதா குளத்துக்கும் கோயிலுக்கும் இடையில் இருந்த நடுத்திட்டு என்னும் இடத்தில் நடந்தது. முடவனான சிறுவன் மோர் விற்றுக் கொண்டிருந்தான். ஒரு நாள் திடீரென பேரழகியான ஒரு தாயையும் குழந்தையையும் கண்டான். மோர் கேட்ட அந்த தாய்க்கு மோர் கொடுக்க இருவரும் பருகினர். மேலும் நாகைக்குச் சென்று நல்ல மனிதர் ஒருவரிடம் கூறி தனக்கொரு ஆலயம் அமைத்திடுமாறு அம்மாது அவனைக் கேட்டாள். முடவன் தயங்கினான். தன இயலாமையை எண்ணி வருந்தினான். எழுந்து நட என்றாள் அன்னை. முடவன் எழுந்தான் நடந்தான், ஓடினான். நாகைக்குச் செய்தியை அறிவித்தான். அன்னை தந்த சிறுவனின் அற்புத உடல்நலம் அனைவர் காதிலும் எட்டத் துவங்கியது. அந்த அன்னையை ஆரோக்கிய மாதா என்று அழைத்து வணங்கினர் பதினேழாம் நூற்றாண்டில் ஒரு போர்த்துக்கேயக் கப்பல் சீனாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்த போது வங்கக் கடலில் புயலால் தாக்குண்டது. கப்பலோட்டிகள் தாயே நலமுடன் கரை சேர்த்தருளும். ஆலயம் ஒன்று அழகுற அமைப்போம் என்று நேர்ந்து கொண்டனர். பேய்க் காற்று ஓய்ந்தது. மரக்கலமும் வேளாங்கண்ணிக் கரை போய் சேர்ந்தது. அந்த இடத்தில் அன்னைக்கோர் ஆலயம் எழுப்பினர். அது தான் இன்று அழகுற எழுந்து நிற்கும் புனித ஆரோக்கிய அன்னை திருத்தலமாகும். நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை தொடர்ந்தும் தம் அருள் வரங்களைப் பொழிந்து பாதுகாப்பாராக.

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

▼ கருமைநிறம் ▼ கரும்புள்ளி ▼ பருக்கள் ▼ பருவந்த அடையாளம் ▼ வைற்றிங் கிறீம் பாவித்துப் பருவந்த அடையாளம் ▼ உதட்டுக் கருமை ▼ கை, கால் முதுகு கருமை நீக்கும் அற்புத கேர்பல் கிறீம் மேலும் ▼ முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் ▼ காய்கள் (உண்ணிகள்) அகற்றும் கிறீம் கருமை நிறம் நீக்கும் குளிசை என்பன பெற்றுக் கொள்ளலாம்.

பாவித்து 15 நாள்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்.

பதிவு இல: 16168 077 210 6155

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

▼ எடை கூட வேண்டுமா? ▼ கணச்சூடா? ▼ பலகீனமா?
▼ ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?
▼ மார்பு கூட்ட வேண்டுமா? ▼ உடல் குறைபாடுகளா?

▸▸ விலை 6000/- ▸▸ 9000/- ▸▸ 24000/- (3 மாதத்துக்குரியது)

100% பக்க விளைவுகளற்ற ஆயுள்வேத ஔடதம். உங்கள் அழகிய தோற்றத்தைப் பெற

பதிவு இல: 16168
077 210 6155 (CS/17828)(11,17) 221, நாவலர் றோட், யாழ்.

## வேலையாள் தேவை

**Rapid Pick Taxies Enterprise (Private) Limited**

சகலருக்கும் சேவை - சகலருக்கும் வருவாய்

வவுனியாவில் முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு பெண் வேலையாள்கள் தேவை. நேர்முகத் தேர்வுகள் 09.07.2018 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நடைபெறும்.

▸▸ க.பொ.த.சாதாரணதரம் (O/L)
▸▸ க.பொ.த.உயர்தரம் (A/L) படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(CS/18052)(11,17)

**076 443 5299, 077 799 4445**
No. 27/A, UC Cross Mannar Road, Vavuniya.


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வினாசித்தம்பி ஆச்சிமுத்து

ஆண்டுகள் நான்கு சென்றிடினும்
மறைந்திடுமோ உன் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன்சிரிப்பைக்காண
விழியோரக் கண்ணீருடன்
காத்திருக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி


பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

தோற்றம் 22.07.1932 மறைவு 08.07.2014

கற்பக்குனை, உடுவில் வடக்கு, உடுவில்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 03 . 11 . 1936



உதிர்வு 08 . 06 . 2018

கடந்த 08.06.2018 இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு

**அமரர் அம்பலவாணர் நடராசா**

(ஓய்வுநிலை இ.போ.ச. சாலைப்பரிசோதகர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (08.07.2018) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

கடந்த 08.06.2018 அன்று மரணச்செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும், தபால், தொலைபேசி, இணையம் மூலம் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cs.18074) (13,17)

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. **குடும்பத்தினர்.**


**அதிர்ஷ்ட கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 304
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.07.07

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 80,682,525/-

வெற்றி இலக்கங்கள்
12 17 27 60 Z

தொ.பே: 011 4067002 / 0114067062 Web: www.dlb.lk
SMS: DLB இடைவெளி LOT இடைவெளி AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

இலங்கை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## மீண்டும் எமது மண்ணில் உதயமாகிறது

(Govt Regd International, VE/IND/33&WI A 83347)

வாணி சர்வதேச திருமணசேவை நிலையம் 47 வருடங்களுக்கு மேலாக சேவைபுரிந்து நாட்டின் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த அலுவலகம் மீண்டும் எமது நாட்டில் இன்னும் திருமணமாகாதவர்களுக்கு பதிவு (ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு) கட்டணம் இலவசம். உள்நாடு, வெளிநாட்டு, அரச, தனியார் மணமக்கள் விவரங்கள் எம்மிடம் உண்டு. VIMB 077 522 1132, 077 310 7291, வாணி 077 285 4626 கிளை அலுவலகங்கள் வெள்ளவத்தை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

V.T.BALAN SHOE PALACE, No.136, BAZAAR STREET, VAVUNIYA.

## முகாமையாளர் வெற்றிடம்

**CORAL PALM**

தகைமைகள்

- விவசாய பீட பட்டம் அல்லது தொடர்பான..
- 3 வருட அனுபவம் - விவசாய துறை.
- புதுமுறை தொழில் நடைமுறை செயல் திறன்.
- புரட்சிகர செயல் உட்புகுத்தல்.
- பராமரிப்பு அனுபவம்.

- ஊதியம் பேசி தீர்மானிக்கப்படும்.
- சலுகைகள் உண்டு.

விபரங்களை அனுப்பவும். Email : hr@coral.lk

அழையுங்கள் : **077 238 9579**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

உங்கள் பட்டதாரிக் கனவினை நனவாக்குகின்றோம்...

FAST TRACK DEGREE PROGRAMME

பட்டதாரிக்கற்கை பிரிவுகள்

- BA in English
- BA in Education / Teaching
- BBA in Management
- B.Sc in Computer Science
- B.Sc in Nursing
- B.Sc in MLS
- B.Sc in Psychology
- B.Sc in Civil Engineering / QS

UGC Approved
IAU Approved

ஆரம்பம் 14.07.2018

மேலதிக விவரங்களுடன் தொடர்புகளுக்கு,
021 450 8489, 076 918 4821
E - Mail : degreepgrm@gmail.com

## வேலைவாய்ப்பு

A/L சித்திபெற்ற உங்களுக்குப் பிரபலம் வாய்ந்த வங்கியின் ஊடாக வேலை செய்ய ஓர் அரியவாய்ப்பு

### வெற்றிடங்கள்

- Business Development Officer
- Executive
- Assistant Manager




- Training Period - 15000/= - 25000/=
- After Training - 55000/= - ++++
- EPF / ETF

(CS/18077)(11,17)

**Contact No:- 077 356 6835**


## டெனீஸ்வரன்...

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமை சட்டமுரணானது என்று தெரிவித்து பா.டெனீஸ்வரன், முதலமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்ற இடைக்கால உத்தரவை வழங்கியது.

இந்த இடைக்கால உத்தரவை இடைநிறுத்தி வைக்குமாறு முதலமைச்சர் தரப்பில் தற்போது சின்னத்துரை சுந்தரலிங்கம் பாலேந்திரா சட்ட நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றில் ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றில் நாளை திங்கட் கிழமை டெனீஸ்வரன் வழக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன்போது பிரதிவாதிகளை முன்னிலையாகுமாறு மன்று கடந்த தவணை கட்டளையிட்டமை குறிப்பிடத்தக்கது. (5,105)


### காணி விற்பனைக்கு

யாழ். கண்டுக்குளியில் மூன்று முன்னணி பாடசாலைக்கு அருகில் கிணறு, மாநகர சபையின் தண்ணீர் வசதி, மின் இணைப்பு, பயன்தருமரங்களுடன் கூடிய சுற்று மதிலுடன் 5 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

T.P: 077 149 0552, 011 268 3406, 071 400 1144

### வீடு நாள் வாடகைக்கு உண்டு

கஸ்தூரியார் றோட்டில் அமைந்துள்ள வீடு நாள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

T.P: 077 2639 037

### வீடு வாடகைக்கு

பலாலி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 021 0001

### வேலை வாய்ப்பு

Sierra Construction Ltd க்கு MEP Engineering Trainess / Civil Engineering Trainess/ Supervisor தேவைப்படுகிறார்கள். இவர்கள் களுத்துறை / அனுராதபுரம் / கோட்டை - கொழும்பு / கொம்பனித்தெரு கட்டட வேலைத் தளங்களிற்கு நியமிக்கப்படுவர். தகுதியானவர்கள் பின்வரும் மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கவும்.

Clusterl_CV@sierra.lk

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- சமையலாளர்
- ரொட்டி, அப்பம்
- உணவு பரிமாறுபவர்

உடன் தேவை. தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 076 7714 963

### விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடும், காணியும் 3 1/2 பரப்பில் அமைந்த வீடும் காணியும் 2 1/2 பரப்பில் அமைந்த வீடும், காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 723 2535

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பூச நட்சத்திரமும், 2 ஆம் பாதமுடைய கிரகபாவம் 41 உம் 2 இல் சூரியன் செவ்வாயும் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு - 077 2146 513

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் இருக்கும் 2 அறை (இணைந்த குளியலறை) யுள்ள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 113 8513

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை. (Sales man) ஆண், பெண் இருபாலாரும் முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

வயது - 18 - 35 வரை

தொடர்பு - 077 777 8073, 021 221 7575

### தேவை

உலக பிரசித்தி பெற்ற தனியார் பாதுகாப்பு நிறுவனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராக சேர ஒரு சந்தர்ப்பம். 18 - 60 வயதுக்குட்பட்ட ஆண் / பெண், சம்பளம் 40,000/- மேல். வைத்தியசாலைகள், பாடசாலைகள், 5 ஸ்டார் ஹோட்டல்கள், வீடுகள், தொழிற்சாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை எல்லா மாவட்டங்களிலும். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். பணம் அறவிடப்படமாட்டாது.

077 340 4222, 011 273 9837

## வான்...

முதலமைச்சரின் தற்போதைய ஒவ்வொரு பயணத்தின்போதும் அவரது தனிப்பட்ட உதவியாளருக்கும் சேர்த்து 58ஆயிரம் ரூபா மாகாண சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்புக்குச் சென்றுவருவதற்கு வானூர்தியைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வடக்கு மாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி இருந்த போது முதலமைச்சர் பெற்றுக் கொண்டிருந்தார். அதனடிப்படையிலேயே அவர் தனது வானூர்திப் பயணங்களை மேற்கொள்கிறார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதவியேற்ற தொடக்கத்தில் வாகனத்திலேயே கொழும்புக்குச் சென்றுவந்து கொண்டிருந்தார். அப்போது வடமாகாண ஆளுநராக இருந்தவரான மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தான் கொழும்புக்கு வானூர்தி மூலம் சென்றுவருவதனால் முதலமைச்சரும் மாகாண நிதியைப் பயன்படுத்தி வானூர்திப் போக்குவரத்தை மேற்கொள்ளலாம் என்று அனுமதி வழங்கினார்.

இதையடுத்து 2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டுகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் 48 தடவைகள் வானூர்தி மூலம் கொழும்புக்கு சென்று வந்துள்ளார். இதற்காக 22 லட்சத்து 61ஆயிரம் ரூபா பணம் ஹெலிருவர்ஸ் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் 11 தடவைகளும், 2015ஆம் ஆண்டில் 13 தடவைகளும், 2016ஆம் ஆண்டில் 15 தடவைகளும் 2017ஆம் ஆண்டில் 9 தடவைகளும் முதலமைச்சர் கொழும்பு சென்று வந்துள்ளார். இவ்வாறு பயணித்த 48 தடவைகளும் தன்னுடன் ஓர் உதவியாளரையும் அழைத்துச் சென்றுள்ளார். அவ்வாறு அழைத்துச் சென்ற உதவியாளரின் போக்குவரத்துக்கும் மாகாண சபையின் நிதியே வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் வானூர்தி மூலம் சென்றுவருவதற்கு ஆளுநர் வழங்கிய அனுமதியில் அவர் உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வதற்கும் அனுமதிக்கப்படுவதாகக் குறிப்பிடப்படவில்லை. அவரது பாதுகாப்புக்காகப் பாதுகாவலர் ஒருவர் அவரோடு செல்வது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே என்கிறபோதும் ஒவ்வொரு தடவையும் அவர் தனது தனிப்பட்ட உதவியாளரையே இவ்வாறு அழைத்துச் சென்றிருக்கிறார் என்று உதயன் அறிந்தான்.

2014, 2015ஆம் ஆண்டுகளில் இருவழிக் கட்டணமாக 35 ஆயிரம் ரூபாவீதம் பணம் செலுத்தப்பட்ட நிலையில் 2016ஆம் ஆண்டு முதல் 58 ஆயிரம் ரூபா வீதம் பணம் செலுத்தப்படுகின்றது. இலங்கையில் உள்ள 9 மாகாணங்களில் வேறு எந்த மாகாண முதலமைச்சரிற்கும் இதுபோன்ற சலுகை தற்போதுவரையில் வழங்கப்படுவது கிடையாது. (உ-105)

## தமிழ்...

தது. இந்த நிலையில் ரெலோ அமைப்பு அதற்கு முன்னதாக ஓகஸ்ட் 25ஆம், 26ஆம் திகதிகளில் கட்சியின் தேசிய மாநாட்டை மட்டக்களப்பில் நடத்தத் தீர்மானித்துள்ளது.

ரெலோவின் பொதுக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 2 நியமன ஆசனங்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்தது. ஓர் நியமன ஆசனத்தை, இரண்டரை ஆண்டுகளுக்கு ரெலோவுக்கு வழங்க இணக்கம் காணப்பட்டிருந்ததாகவும், அந்த ஆசனத்தை வழங்குமாறும் ரெலோ அமைப்புக் கோரி வருகின்றது. ரெலோ அமைப்பின் கோவிந்தம் கருணாகரனுக்கே அந்த ஆசனம் வழங்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் நியமன ஆசனத்தை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கத்துக்கு வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சி இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை.

கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக கிளைகளைப் பலப்படுத்தி இளைஞர் அணி, மகளிர் அணி என்பவற்றை உருவாக்குவது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5,26)

## கட்சித்...

சனை வழங்கியுள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு அனைத்துத்தரப்புகளுக்கும் தலைமை அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் இறுதி நிலைப்பாடு தொடர்பிலும் அறிந்துகொள்ளுமாறும் தலைமை அமைச்சர் சபாநாயகருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவைச் சந்தித்து டிசெம்பரில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சருக்கு தலைமை அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபைஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் மாகாணசபைத் தேர்தலை எந்தமுறையில் நடத்துவது என்பதில் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## சிலையை...

நாவலர் சிலையைச் சேதமாக்கிய குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'முச்சக்கரவண்டியில் மதுபோதையில் வந்த இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஆறுமுகநாவலர் சிலைக்கு கல் வீசினர். இதனால் சிலை சேதமடைந்தது. கிராம அமைப்புக்களினால் எங்களிடம் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அமைவாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்' என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (5,110)

## ஆவணங்களை...

தற்காக நடமாடும் சேவை பூநகரி மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளதாக, தேசிய நல்லிணக்க அரசகரும மொழிகள் அமைச்சின் மேலதிக செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆவணங்களைத் தொலைத்தவர்கள் மற்றும் புதிதாகப் பெற்றுக் கொள்ளவுள்ளவர்கள் இந்த நடமாடும் சேவை ஊடாகப் பயனடைய முடியும். போர் இடம்பெற்ற பிரதேசத்தில் வாழ்பவர்கள் அதிகமானோர் தமது அன்றாட தேவையுடைய அனைத்து ஆவணங்களையும் தவறவிட்ட நிலையிலேயே உள்ளனர். அவர்கள் நடமாடும் சேவையின் ஊடாக அதிக பயனைப் பெறமுடியும். நடமாடும் சேவையில் 21 திணைக்களங்கள் பங்கேற்கவுள்ளன.

தேசிய நல்லிணக்க அரசகரும மொழிகள் அமைச்சின் பிராந்திய அலுவலகம் கிளிநொச்சி தொண்டமான்நகரில் எதிர்வரும் 30ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. (5,105)

## வடக்கு...

வால் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஊடகப் பிரிவு நேற்று அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசு கணக்குகள் குழுவால் இலங்கை முழுவதும் 9 மாகாண சபைகளிலுள்ள மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சிறப்புச் செலவின அலகுகள் உள்ளடங்கலாக 260 நிறுவனங்கள் முதன்மைச் செயலாற்றுகைச் சுட்டிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டபோது 35 நிறுவனங்கள் 93 இற்கு மேற்பட்ட அதியுயர் செயலாற்றுகை மட்டத்தை அடைந்துள்ளன. வடமாகாணத்தைச் சேர்ந்த 15 நிறுவனங்கள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது மாகாண சபைக்கு 2015ஆம் ஆண்டில் ஏழு தங்க விருதுகள் கிடைத்தன. 2016ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் 15 தங்கவிருதுகள் கிடைக்கவிருக்கின்றன.

எதிர்வரும் ஆண்டுகளில், வடமாகாண சபையின் அனைத்து நிறுவனங்களும் தங்கள் வினைத்திறனான செயற்பாட்டின் மூலம் எமது மாகாணத்தின் அபிவிருத்திக்கும், வினைத்திறனான நிர்வாகத்துக்கும் பங்காற்றவேண்டுமெனக் கோரி நிற்பதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

தலைமைச் செயலர் செயலகம் 100 புள்ளி, பிரதித் தலைமைச் செயலர் பணியகம் - நிதி 99 புள்ளி, முதலமைச்சரின் அமைச்சு - உள்ளூராட்சி 99 புள்ளி, மாகாண தொழிற்துறைத் திணைக்களம் 98 புள்ளி, மாகாண சுதேசமருத்துவ சேவைகள் திணைக்களம் 98 புள்ளி, மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் 97 புள்ளி, மாகாண இறைவரித் திணைக்களம் 96 புள்ளி, பிரதி தலைமைச் செயலர் பணியகம் - திட்டமிடல் 96 புள்ளி, மாகாண விவசாய அமைச்சு 95 புள்ளி, மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் 95 புள்ளி, மாகாணக் கட்டடங்கள் திணைக்களம் 95 புள்ளி, பிரதித் தலைமைச்செயலர் பணியகம் - பொறியியல் 95 புள்ளி, மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் 94 புள்ளி, மாகாண சுகாதார அமைச்சு 93 புள்ளி, பிரதி தலைமைச் செயலர் பணியகம் - ஆளணியும் பயிற்சியும் 93 புள்ளி என்பன கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆளுநரின் செயலகம் சம்பந்தமான குறிப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது, காசோலைகள், காசுக்கட்டளைகள் கிடைத்தமை சம்பந்தமான பேரேடு காலத்துக்குக் காலம் பேணப்படவில்லை. 2016ஆம் ஆண்டுக்கான செயலறிக்கை தலைமைச் செயலருக்கு உரிய தினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவில்லை. பயன்பாட்டுக்குத் தகுதியற்ற வாகனங்கள் ஆறு மாதங்களுக்கு மேலாக விற்பனைக்கு விடப்படவில்லை. மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்கள், சேதங்கள் பற்றிய இழப்புக்கள் சம்பந்தமான பதிவேட்டில் சில சமயங்களில் உள்ளேற்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. மாகாணப்பொது அலுவலர்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளில் காணப்பட்டமிகுதிப் பணம் ஓராண்டுக்கு மேலாகப் பாவிக்கப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. சட்டப்படி வருடாந்தம் கூட்டப்படவேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 3 கூட்டங்களும் கூட்டப்படவில்லை.

மற்றும் பல திணைக்களங்களின் குறைகள் பற்றிய அவதானிப்புக்கள் 2016ஆம் ஆண்டின் நாடாளுமன்றக் கணக்குகள் குழுவால் வழங்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (5)

## கட்டுவனில் ...

யாழ்ப்பாணம், ஜூலை 8

மக்களை அச்சுறுத்தும் வகையில் வீதிகளில் வாள்களுடன் நடமாடிய மூன்று பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து இரண்டு உந்துருகளும் மீட்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, கட்டுவன் பகுதிகளில் நேற்று இரவு 7.30 மணியிலிருந்து 8.15 மணி வரை வீதிகளில் உந்துருகளில் வாள்களுடன் இளைஞர்கள் சிலர் நடமாடினர். மக்களை அச்சுறுத்தும் வகையில் வாள்களைத் தூக்கிக் காண்பித்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் பொதுமக்கள் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். காங்கேசன்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளனர். கட்டுவன் சந்தியில் 5 உந்துருளிகளுடன் வாள் வெட்டுக் குழுவினர் நின்றனர். அவர்களைப் பொலிஸார் கைது செய்வதற்காக விரட்டினர். ஒருவர் உந்துருளியைப் போட்டுவிட்டு தப்பிச் சென்றார். ஏனையோரில் மூன்று பேர் தப்பிச் செல்லும்போது பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர். பொலிஸாரிடம் கைதாகியவர்கள் மூவரில் இருவர் அளவெட்டி தெற்கைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றையவர் இளவாலை வசந்தபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (5,26)

## நல்லாட்சி...

கருமங்கள் இந்த ஆட்சியில் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

சமூகநலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சால், வடக்கு மாகாணத்தில் பயனாளிகளுக்கு மரக்கன்று வழங்கும் நிகழ்வு திருநெல்வேலியில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும். ஏனைய மாகாணங்களுடன் இந்த மாகாணங்களை ஒப்பிடவேண்டாம். ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியின் இரண்டு மடங்கு நிதி ஒதுக்கப்படவேண்டும்.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர்தான் மக்களுக்குத் தேவையான பல நல்ல கருமங்கள் நடைபெற்று வருகின்றன. மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவாக மாதம் 3 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நாம் கொண்டுவந்த நல்லாட்சி அரசு எமக்குச் சார்பாகச் செயற்பட்டுவருகின்றது. 30 ஆண்டு காலமாக இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் மீட்கப்பட்டு வருகின்றது. அரசகாணிகள் பல உள்ளன. அவற்றை இந்தப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுத்து மாமரச் செய்கையினை ஊக்கப்படுத்த முடியும்.

எமது பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும் போது அல்லது எமக்கான உரிமைகளை நாம் கேட்கும் போது தெற்கில் உள்ளவர்கள் எம்மைப் புலிகளாக - இனவாதிகளாகப் பார்க்கின்றனர். மக்களுக்காகவே நான் அமைச்சுப் பதவியைத் துறந்தேன். எத்தனை பிரச்சினை வந்தாலும் அதனை எதிர்த்து நின்று அகிம்சை வழியில் போராடுவேன் - என்றார். (5,7)

## விஜயகலாவின்...

முடிகிறது. அரசமைப்பை மீறும் வகையில் விஜயகலா மகேஸ்வரன் கருத்துக்களை வெளியிட்டுள்ளாரா என்று ஆராய்ந்து பார்க்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய சட்டமா அதிபருக்கு கடிதம் ஊடாக அறிவிப்பு விடுத்துள்ளார்.

விஜயகலாவின் சர்ச்சைக்குரிய உரை அரசமைப்பை மீறும் வகையில் இருக்கும் பட்சத்தில் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு காணப்படுகிறது.

சட்டமா அதிபரின் அறிவிப்பின் பின்னர் கட்சித் தலைவர்களின் கருத்தை கோருவதற்கு சபாநாயகர் முடிவு செய்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விடுதலைப் புலிகளை மீள உருவாக்க வேண்டிய சூழல் ஏற்படுமென விஜயகலா மகேஸ்வரனின் உரையின் ஒரு பகுதி இருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டே இவருக்கு எதிராக தென்னிலங்கை அரசியல்வாதிகளால் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## களத்தில்...

தும பண்டார அடுத்த வாரம் இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வார காலத்தினுள் கொலைகள், வன்புணர்வு, வாள் வெட்டு, வீடுகள் மீது தாக்குதல், களவுகள், கொள்ளைகள் என்று வன்முறைகள் திடீரென அதிகரித்துள்ளன. மக்கள் வீடுகளில் இருப்பதற்கே அச்சமான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் வன்முறைகளையடுத்து வடக்கின் வேறு மாவட்டங்களிலிருந்து பொலிஸார் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார யாழ்ப்பாணத்துக்கு நேரடியாகப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின் போது அதிகரித்துள்ள வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அவர் ஆராயவுள்ளார். (5,8)

# தட்டெறிதலில் தங்கம் வென்றது ஹாட்லி

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவில் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி தங்கப்பதக்கம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி இடம்பெற்றது. ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 49.81 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
ஹாட்லிக் கல்லூரியின் பி.மிதுசன் 41.92 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கத்தையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கே.அட்சயன் 35.53 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)

*800 மீற்றர் ஓட்டம்*

## தேராவில் தமிழ் வித்தி. வென்றது தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் முல்லைத்தீவு தேராவில் தமிழ்வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வி.டனிசிகா 2 நிமிடங்கள் 34 செக்கன்கள், 80 மில்லி செக்கன்களில் ஓடி தங்கப்பதக்கம் வென்றார்.
வலிகாமம் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செயத ஜெ.கிருசாந்தினி 2 நிமிடங்கள் 36 செக்கன்கள் 60 மில்லி செக்கன்களில் ஓடி வெள்ளிப் பதக்கத்தையும், வவுனியா மடுகந்த தேசியப் பாடசாலையைப் பிரதிநிதித்துவப்படுத்திய எம்.டி.எஸ்.விலாசினி 2 நிமிடங்கள் 41 செக்கன்கள் 90 மில்லி செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)

12 வயதுப்பிரிவு 100 மீற்றர் ஓட்டம்

# கிளிநொச்சி ம.வி வென்றது தங்கம்




யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தயாலயத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.அருணவி 15 செக்கன்களில் இலக்கை அடைந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கம் வென்றார்.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப்பிரதிநிதித்துவம் செய்த பி.லக்சனா 15 செக்கன்கள் 30 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப்பதக்கத்தையும், மடுபெரியபண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெ.நியோமி வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)

## இன்றைய மோதல்கள்

*தாச்சித் தொடர்*

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிதத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாந்தை விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது.

*கூடைப்பந்தாட்டம்*

யாழ்ப்பாணம் கூடைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*துடுப்பாட்டம்*

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்று சென். பற்றிக்ஸ்: கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

## முருங்கன் ம.வி சாதித்தது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான நீளம் பாய்தலில் முருங்கன் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.அனுசலா தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் 5.29 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து அவர் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினார்.
மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.அபிசா 5.02 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், மன்னார் சென்.சேவியர் பெண்கள் பாடசாலையைப்பிரதிநிதித்துவம் செய்த ஜெ.ஜெனிஸ்ரா 4.91 மீற்றர் நீளத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)

# 20 வயதுப் பெண்கள் 800 மீற்றரில் கிளிநொச்சி ம.வித்தி தங்கப்பதக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 8
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் தங்கப்பதக்கம் வென்றது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம செய்த ரி.டென்சிகா 2 நிமிடங்கள் 33 செக்கன்கள் 30 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்துத் தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினார்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.டிலக்சனா 2 நிமிடங்கள் 36 செக்கன்கள் 50 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப்பதக்கத்தையும், யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.ஆன் 2 நிமிடங்கள், 37 செக்கன்கள், 90 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-23)

# பிரேசிலும் வெளியே!

## பெல்ஜியம் 'இலகுவாக' அரையிறுதிக்குத் தகுதி பெற்றது








உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பிரேசிலை வீழ்த்தியது பெல்ஜியம். தொடரில் இருந்து பிரேசில் வெளியேற பெல்ஜியம் அரையிறுதிக்குள் அடி வைத்தது.

இந்த ஆட்டத்தில் பிரேசில்தான் ஆதிக்கம் செலுத்தும் என்றவாறாக அமைந்தது கருத்துக்கணிப்பு. பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றில் வெளியான கருத்துக் கணிப்பில் 55 வீதமான வாக்குகள் பிரேசில் வெற்றிபெறும் என்றவாறாகவே பதிவாகியிருந்தன. எனினும் ஆட்டத்தின் ஆரம்பம் முதல் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது பெல்ஜியம்.

13ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்துக்கு மூலை உதையொன்று கிடைத்தது. பிரேசில் அணியின் பெர்னான்டினோ பந்தை கோல் கம்பத்துக்கு மேலாகத் தட்டுவதற்கு முயன்றபோது அது அவளின் தோளில் பட்டுக் கோலானது. ஆக, பிரேசில் தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொண்டது. இந்தக் கோல் பதிவாகி அடுத்த சில நிமிடங்களில் பிரேசில் அணியின் நெய்மர், மார்செலோ, காஸ்மிரோ மூவரும் கோல்களைப் பதிவுசெய்வதற்காக கடுமையாக முயன்றனர். எனினும் வாய்ப்புக்கள் எதுவும் கோலாகப் பதிவாகவில்லை.

31ஆவது நிமிடத்தில் கெவின் டி புருனே பெல்ஜியத்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது பெல்ஜியம்.

இரண்டாம் பாதியிலும் பெல்ஜியத்தின் ஆதிக்கம் நீண்டு நிலைபெற்றது. 76ஆவது நிமிடத்தில் அக்ஸ்ரோ பிரேசிலின் முதலாவது கோலைப் பதிவு செய்தார். பிரேசிலின் கோல் பதிவானதைத் தொடர்ந்து மைதானமே பெரும் அல்லோலகல்லோலப்பட்டது. பெல்ஜிய ரசிகர்களின் முகங்களில் அச்சம் எதிரொலிக்கத்தான் செய்தது. இரண்டு அணிகளும் தொடர்ந்து சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. மாற்றங்கள் எதுவும் பதிவாகவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பெல்ஜியம்.



பிரேசிலுக்கு நேற்று அதிர்ஸ்டம் இல்லாத நாள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த அணி 27 உதைகளை பெல்ஜியத்தின் கோல் கம்பங்களை நோக்கி உதைத்திருந்தது. அவற்றில் ஒன்பது உதைகளை பெல்ஜியத்தின் பொக்ஸ் பகுதிக்குள் வைத்து மேற்கொண்டது. எனினும் அந்த அணியால் வெற்றி பெற முடியவில்லை.

பந்துடைமையிலும் பிரேசில்தான் அதிகபட்சம். அந்த அணி 59 சதவீதமான பந்துடைமையையும், பெல்ஜியம் 41 சதவீதமான பந்துடைமையயும் கொண்டிருந்தன. அதேநேரம் 521 பந்துப்பரிமாற்றங்களை பிரேசில் மேற்கொண்டது. பெல்ஜியம் 374 பந்துப்பரிமாற்றங்களை மட்டுமே கொண்டிருந்தது. பிரேசிலுக்கு 8 மூலை உதை வாய்ப்புக்கள் கிடைத்தன. பெல்ஜியத்துக்கு நான்கு மூலை உதைகளே கிடைத்தன. இவ்வாறாக அனைத்து வகையிலும் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்த பிரேசில், தோல்வியடைந்து வெளியேறியமை பெரும் சோகமே. (ம)

# இந்தியாவுக்கு தக்க பதிலடி!

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி20 ஆட்டத்தில் அபார வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு தக்க பதிலடி கொடுத்தது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கோக்லி 47 ஓட்டங்களையும், டோனி ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும், ரெய்னா 27 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் வில்லி, போல், பிளங்கட், ரசிட் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைக் குவித்தது. கேல்ஸ் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 28 ஓட்டங்களையும், மோர்கன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், பாண்டியா, சாகல் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். கேல்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)

# அரையிறுதியில் இங்கிலாந்து

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து அணி.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தும் சுவீடனும் ஒன்றையொன்று எதிர்த்துப் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முதல் 30 நிமிடங்களிலும் கோல் எதுவும் பதிவாகவில்லை. 30ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து அணியின் ஹரி முதலாவது கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது இங்கிலாந்து.

58ஆவது நிமிடத்தில் டெலி அலி இங்கிலாந்தின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் வேறெந்த மாற்றமும் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி. இங்கிலாந்தின் கோல் கம்பங்களை நோக்கி மொத்தமாக 7 உதைகளை சுவீடன் மேற்கொண்ட போதிலும் கோலெதையும் பதிவுசெய்ய இயலவில்லை. (ம)



## பணியாளர் தேவை

- வரவேற்பாளர் (Receptionist)
- அலுவலக உதவியாளர்கள் (Office Assistant)

வேலை பழகி வேலை செய்ய விரும்புபவர்கள்.

மூர்த்தி டிஜிற்றல்
யாழ்ப்பாணம். 077 2247 428

## கடை விற்பனைக்குண்டு (22 பேர்ச்)

யாழ்.நகர் K.K.S. வீதியில் விசாலமான கடை விற்பனைக்குண்டு. 4 களஞ்சிய அறைகள். 3 தங்கும் அறைகள். கிணறு. 3 பேஸ் மின்சாரம் மற்றும் பின்பாதை வழி வசதிகளுடன் உண்டு.

**077 741 7525**

## காணி விற்பனைக்கு

பளை A9 வீதியில் 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. (5 ஏக்கராகவும் பிரித்து விற்கப்படும்.)( ஏக்கர் 2.5 millian)

தொடர்பு - 071 6055 905
077 291 5823

## Vacancy Available

SB Travels And Tours (Pvt) Ltd நிறுவனத்துக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.( System தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)

**077 108 3481** (N/7217) (11,17)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த மூல நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 58 உடைய அரச உத்தியோகம் புரியும் மணமகளுக்கு அரச, தனியார் தொழில் புரியும் மணமகன் தேவை.


**077 948 5383** (CS/16018) (11,17)

## பெண் உடற்பயிற்சி நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.

யாழ். நகர்ப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள பெண்களுக்கான உடற்பயிற்சி (GYM) நிலையத்திற்கு பெண் பயிற்சியாளர் தேவை. (physical Education) உடற்பயிற்சியில் ஆர்வம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

- 077 025 0339


# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 03 . 1941

மறைவு 08 . 07 . 1993

## அமரர் சிதம்பரி மகேந்திரம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்

ஐயையோ! ஐ ஐந்து ஆண்டுகள் உருண்டதோ
நெஞ்சகத்தை நிறைத்து நிற்குதுமதன்பின் துயர்
விஞ்சு நீர்கொண்டு விழிவழி கசிந்ததோ
ஆண்டுபல கடந்தாலும் ஆண்டவன் – அடியிணைந்த உம் நினைவு கடவாது
அன்பின்பதியே! பாசமிகு தந்தையே
எங்குதான் வாழ்ந்தாலும் எத்தேசம் சென்றாலும்
உயிர்தந்து உத்தமராய் உயர்த்திய உங்களை
அப்பன் சிவனாய் துதித்தே உய்ந்திடுவோம்.

நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்


## FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 14.07.18 சனி 1 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி.
021 320 2973
ஆரம்பம் :16.07.18 மாலை 3.30 மணி.

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## கணினி வடிவமைப்பாளர்கள் தேவை

Photoshop, CorelDraw பரீட்சய மாணவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு -
076 189 8534
ஈஸ்வா
டிஜிற்றல் அச்சகம்.
461, K.K.S. Road,
Jaffna.

## கடை விற்பனைக்கு

117 ஆம் இல யும்மா மொஸ்க் லேன் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருக்கும் 1.33 குழியும் 0.75 பேர்ச்சும் 19 sq.m உடையதுமான கடைத்துண்டு விற்பனைக்குண்டு.


**076 319 7319**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

A Different Shopping Experience
Daily Food City

# அத்தியாவசியப் பொருட்களுக்கு நம்பமுடியாத விலைக்கழிவு

* Minimum Bill நிபந்தனை இல்லை



90/=
சீனி 1KG



100/=
பருப்பு 1KG




190/=
கடலை 1KG




SAVE 315/=
1975/=
~~2290/=~~
Abbott Ensure Life Vanilla Flavour 400g




SAVE 26/=
299/=
~~325/=~~
Nestomalt 400g

T.P :- 0774308010
0212224600

July 09 வரை மட்டும்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.dfc.lk/maps
No. 273, Aadiyapatham Road,
Kokuvil East, Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.